உ

கடவுள் துணை

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியம்-௭௱.

அ' கூ-ரு இவை

திருத்தணிகை

ஆறுமுகதேசிகரவர்களால்

பார்வையிடப்பட்டு,

—:o:—

ஆதிபுரி

இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

சென்னை நாராயணமுதலிவீதி 52-வது நெ-வீடு.

உ

கடவுள் துணை.

திருச்சிற்றம்பலம்.

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியம் - எ௱.

## பாயிரம்.

### கடவுள்வணக்கம்.

எண்சீர்க்கழிநெடில விருத்தம்.

திருவளர்மூலாதார *முன்னோன்பாதம்
செப்புசுவாதிஷ்டான 0 வேதன்பாதம்
மருவுமணிப்பூரகஞ்சேர் ‡ மாயன்பாதம்
மன்னுமநாகத வுருத்ரவண்ணன்பாதம்
உருவளர்விசுத்தி மகேச்சுரன்றன்பாதம்
உண்மையோடாக்கினையின் சதாசிவன்றன்பாதம்
குருவளருநாதாக்கள் பாதம்போற்றிக்
கூறுகிறேன்வயித்தியகுருசூக்ஷந்தான்பாரே.

---

## நூல்.

பாரப்பாபெருநூல்தான் மூன்றுகாண்டம்
பாடினேன்னதைக்குறக்கி யேழுநூறு
சேரப்பாவாதமொடு ஞானமார்க்கஞ்
செப்பரியவயித்தியமு மஷ்டகர்மம்
ஆரப்பாவனைவிவர மாகச்சொன்னூர்
அறியாதமாந்தரிதையறிவீர்நன்றாய்
நேரப்பாசாருக்குருவுந் திறந்துசொன்னேன்
நிகழ்த்தரியநூல்களுக்குத் திறவுகோலே. க

திறவுகோலாகவேதான் பாடிவைத்தேன்-செப்பரியசித்தரென்னை யேச்சிக்கொண்டு, மறைவின்றிவெட்டவெளி யாகச்சொன்னூர்-மகத்தானபிரமமுனி யென்றேயெண்ணி, உறவாடிநூல்வாங்கி யொளித்தார்சித்தர்-ஓம்காகோமோசம்வந்த தென்றுசொல்லித் திறமாகஅவருடனேதர்க்கம்பேசிச்-செயலாகநூல்வெளியாய் வாககினேனே. உ

---

* முன்னோன் விநாயகன், 0 வேதன்-பிரமன், ‡ மாயன் விஷ்ணு.

வாங்கியேயுலகத்தோர் பிழைக்கமைந்தா-வளமானசரக்கினங் க
ட்டிணமுகைகூட, தாங்கியேநீற்றினமாத் திரைசெந்தூரம் - தயங்காத
லேகியங்கள் இருதுக்கற்பம், காங்கியேதிராவகமும செயநீர்பற்பம்-
களங்கோடுதைலங்கள சூரணங்கள், பாங்கியேகியாபூப்போக் குட
னெல்லாம்-பண்பாகக்கருக்குருவு முறைக்கக்கேளே. ௩

கருவென்னபூமியிட நாதம்விட்டால்- காணரிதுவாதமொடு வயித்
தியஞ்செய்ய, கருவென்னபூமியிட நாதம்பூநீர்-கானல்மிகு முவர்க்கா
ட்டிற்குடிசைகட்டி, கருவென்னதைமாசி பங்குனியிலெல்லாங்-காத்
திருந்தேயுவர்ப்பூவை வாரிவந்து, கருவென்னபாண்டத்தி லிட்டுமை
ந்தா-கனமாகச்சுத்தசலந் தன்னைவாரே. ௪

வார்த்துமேகலக்கியர்தத் தெளிவைவாங்கி -வாமானபுத்தோட்டி
ல்மகிழ்ந்துவாரு, வார்த்துமேரவிதனிலேகாயவைத்து-மறுபடியுஞ்சு
த்தசலந்தெளித்துப்பாரு, வார்த்தவுடன்புத்தோட்டி லிறக்கிலுப்பா
ம்-மறுபடியுஞ்சுத்தசல முன்போல்வாரே, வார்த்துமேதெளிவிறுத்
துரவியிற்காய-வைத்துநன்றாய்ப் பத்துமுறைவளமாச்செய்யே. ௫

செய்தபின்னரின்னமொரு சூட்சங்கேளு-சிறப்பாகமுன்போலச் ச
லத்தைவிட்டுப்,பெய்தவுடன்பாண்டத்திற் றமர்தான்போட்டுப்-பெ
ட்டுடனே * கதம்பைவைத்துக்கீழேசட்டி, நெய்யவேவைத்துநடுக்
கதம்பைமூக்கு- நிற்கவேபத்திரமாய் வைத்துமூடு, துய்யவேகதம்ப
யிடமூக்கால்மிக்க-சுத்தசலமாசின்றி யிறங்கும்பாரே. ௬

*கதம்பை-பரும்புல்லின்றாள் அல்லது வைக்கோற்றாள்வைக்கவும்.

இறங்கியதோர்சலமதனை ரவியிற்காய்த்து- எடுத்திடவேவாதத்து
க்காதியுப்பாம், அறங்கியேயிதைவிட்டுப் பூநீர்வாரி-யப்பனேகரைத்
ததனைக் காய்ச்சிக்காய்ச்சி, இறங்கிடுகல்லுப்புச் சுண்ணம்பிட்டு-எ
ண்ணமிட்டுச்சவர்க்காரமாச்சுதென்று,உறங்கியேபார்த்ததிலே ஒன்
றுங்காணு-தோகோகோ கெட்டலைவார்வாதிதானே. ௭

அலையாதேமுப்பூவின் குணத்தைக்கேளும்-அதியாங்கல்லுப்புப்
படிதான்ரண்டு, சிலையான அமுரிவிட்டுக் கரைத்துநன்றாய்த்- தெளி
விறுத்துரவிதனிலே வைக்கிலுப்பாம், மலைடாதேயிப்படியேமுறை
தான்பத்து-வாங்கியேபிரமாந்தக கல்லுச்சுண்ணம், அலையாதேபடி
யொன்று பாண்டத்திட்டு-அதில்வாரு *ஏறலென்றசிப்பிநீரே. ௮

* ஏறல்-கிளிஞ்சல்,

சிப்பிநீர்வார்த்ததனைக் கரைத்துநன்றாய்த்-திறமாகரவியிலிட்டு ப்படருமுப்பூ,ஒப்புறவாயுப்பதனைப் பின்னுகங்களு- உத்தமனேபத் துமுறைதப்பாதேசெய், செப்பியேமுப்பூவும் வளரும்பாரு சித்தர் செய்யுமுறையிதுதான் செய்யொண்ணாது, அப்பியேமுப்பூவைககல வத்திட்டு-ஆட்டுவாய்முன்சிப்பி நீரில்காணே. ௯

காணவேஆட்டியதைவில்லைதட்டி-காம்பிரமாய்ரவியுலர்த்தி யோ ட்டிலிட்டு, பூணவேசீலைசெய்து புடத்திற்போட்டு-புனிதமாயெடுத் துமுன்போற்கல்வத்திட்டு, தோண வபாட்டிவில்லை தட்டிககாய்த் துத்-துரிதமாயோட்டினிலிட்டோடுமூடி, காணவே *குக்குடத்தி ன்புடந்தான்போடு-கனமாகமுப்பூவும கட்டிப்போச்சே. ௰

*குக்குடபுடம்-கோழியளவுபுடம்.

போச்சென்றமுப்பூவும்வாதமாச்சு- புகழானவயித்தியத்துக் காதி யாச்சு, ஆச்சமென்றவயித்தியங்கள்செய்யும்போது- அறைகின்றேன் லேகியங்கள்தைலமீறாய், வாச்சென்றகட்டினங்க ளுருக்கினங்கள்-ம கத்தானநீற்றினமாத் திரைசெந்தூரம், கூச்சென்றவிமமுறைகள் செ ய்யும்போது-குருவிலொருகாசெடைதான் போட்டுச்செய்யே. ௧௧

காசெடைதான்குருப்போட்டுச் செய்தாயானால்-கண்காணுதோடு மடா நோய்கள்யாவும், கூசாதேவாதியென்றால் செய்வான்பாரு- கூ றுகெட்டவயித்தியனே செய்யப்போறான, வாசியேமுப்பூவைச்செ யாவிட்டால் மைந்தனேபூநீரு என்றபோது, தேசியேபதினாறு தரந் தான்சுத்தி செய்தபின்புவயித்தியத்தைச்செய்துபாரே. ௧௨

செய்திடவேதீராத நோய்தானுண்டோ-செப்புகிறேன்முப்பூவின் வேதைமார்க்கம், செய்திடவேமுப்பூவைக்கல்வத்திட்டுச்- சேர்த்திடு நீயடரு *வெள்ளைவர்க்கம்பாலும், செய்திடவேயிரண்டுமொன்றாய் ப்-பீங்கானிட்டுச் செயலாகச்சூடனுருமாசுபோடு,ஐப்துடனேயொ ருசாமம்ரவியில்வைக்க- அப்பனேமுறிந்துவும் சலமுமாமே, ௧௩

* வெள்ளைவர்க்கம் வெள்ளெருக்கப்பால்,

சலமானகடுங்காரச் செய்யநீர்விட்டுச் சார்ந்தரைததுமுப்பூவின் வில்லைதட்டி,உலரவேரவிதனிலேகாயவைத்து- ஓட்டிலிட்டுமேலோ டுமூடல்செய்து, கலவானகுக்குடத்திலிட்டுவாங்கிக்- கசக்காதேமூன் றுமுறையரைத்தரைத்து, அரைவேமூன்றுதரம் போட்டுவாகநு- அழியாதசவர்க்காரச்சுண்ணமாச்சே, ௧௪

சுன்னமென்னசவர்க்காரவழலைதொட்டுச்-சொல்லுகிறேன்கடுங்காரக்குருவதாக, தன்னமென்ற * நாதவிந்துமுதற்றரந்தான்-அல்லாட்டால் இரண்டாவதல்லான்மூன்று, பன்னமென்றநோயில்லாச் சிவந்தமேனி-பார்த்துநீநாதத்தைதளாவகுவாங்கு, கன்னதொருநாதந்தா நிறக்கவேண்டின்-கற்பூரச்சிலாசத்துச் சுண்ணம்பண்ணே. ௧௫

பண்ணியேதாம்பூல மருந்தச்சொல்லு-பரிவானமனவெல்லந்தேங்காயூட்டு, நண்ணியேநாதமது இறங்குமெத்த - நலமானபீங்கானில் வாங்கிக்கொண்டு, உண்ணியேசலமாகக் கற்பூரம்போடு-உன்னுடையவிர்தொருகா செடைதான்சேரு, அண்ணியேமுறிந்ததுவுஞ் சலமாய்ரிற்கும்-அதிலிடவுமருந்துவகை யறையக்கேளே, ௧௬

அறைகிறேன்வீரமொன்று புனுகுபூரம்-அப்பனே * குருவண்டுவுரமுழுசூதம், கறையான ஆறுபுள்ளி வண்டின்முட்டை o கருநாவிவகைவகைக்குப் பணந்தான் தூக்கு, உறையாகப்போட்டதிலே போட்டுமததி-யுத்தமனேகைப்பட்டால வெந்துநீறும், கறையாதேசுச்சியிட்டுமத்தித்தப்பா-கதிரோன்முன்வைத்தெடுத்துக்கருதிக்கேளே;()

* குருவண்டு-துவரஞ்செடியி லிருக்கிறவண்டு

o கருநாவி-கறுப்புநாபி,

கருதியேசவர்க்காரந் தூட்டியாட்டிக்-கசகாதேவில்லைதட்டி ரவியில்வைத்து, அருதியேரவிதனிலேயிட்டுவாங்கி * ஐந்துகண்ணகுகைக்குள்ளேவைத்துமூடு, சுருதியேபதின்மேலே சுண்ணச்சீலை-சுற்றிரவிமுகந்தனிலே யுலர்த்திப்பின்பு, பருதிமோபத்தெருவிற் புடத்தைப்போடு-பக்குவமாயாறவிட் டெடுத்துவாங்கே, ௧௮

* ஐந்து சுண்ணக்குகை கடலைரச்சுண்ணம், சிலிற்சிறசுண்ணம், குக்குடச்சுண்ணம், வலம்புரிச்சுண்ணம்,வெள்ளைக்கற்சுண்ண, ஐந்துங்கூட்டிககுகைசெய்தல்,

வாங்கியேமுன்னிரா லரைத்துக்கட்டி--வாகானசுண்ணாம்புக் குகையில்வைத்துப், பாங்கிபேமுன்போலப்புடைத்துப்போடு-பதறுமலாறவிட்டெடுத்துவாங்கு, ஆங்கியேயெடுத்ததனைக் கல்வததிட்டு-அப்பனேமுன்போற்று னரைத்துப்போடு, காங்கியேயிப்படியே யனாத்தரைத்துக்-கைம்முறைபாணயந்துதரங் கணக்காய்ப்பேடே. ௧௯

போட்டெடுக்கவழலைபென்ற சுண்ணமாச்சு - புகலுதற்குநாவுண்டோ பவுண்டோசொல், காட்டுமுன்னே கந்தகாரமணந்தக்கேளு

ளகமென்றபரிசுண்ணம் வீரச்சுன்னம், ஆட்டுமேபூரதத்தின் சுண்ண
மேபோடு- அழகானசாரமொடு சீனச்சுண்ணம், தீட்டுமென்ற வகைவ
கைக்குக் காசெடைதான்-சேர்த்துசெப்புமுன்னீரா லரைத்துவில்லை
தட்டே, ௨௰

வில்லைதட்டிரவிதனிலேயுலரவைத்து-வேதித்துக் கடுஞ்சுண்ணக்
குகையிலிட்டு,தொலலையெதுமில்லையப்பா சுண்ணச்சீலை-சுற்றியேகு
க்குடநற் புடத்தைப்போடு, எல்லையற்றவிசனுக்கு மெட்டாவித்தை
யேகாந்தவெளியாகச் சொன்னேன்சொன்னேன், கல்லோடுமண்மரங்
களுருவிப்பாயுங்-காட்டுமுன்னேயண்டரண்டம் வேகும்பாரே, ௨௧

வேகுமடாநவலோக நவரத்னங்கள்-விஷமானபாஷாணம் * அறு
பானன்கும், வாகுபெறும்லவணவகை யிருபத்தைந்தும்-மைந்தனே
o யுபரசங்கணூற்றிரண்டுபத்தும, பாகுமேசொன்னதொருசரக்கெல்
லாந்தான்-படுமுன்னேகட்டாயாங் கருக்குருவுமாகும்,பாகுமேதுரிசி
யதுவெந்துநீரும் படுமுன்னேநவாச்சாரங் கட்டிப்போமே, ௨௨

* அறுபானன்கு-௬௪-பாஷாணம்

o உபரசங்கள்-௱௨௰,

போமென்றசவார்க்காரச் சுன்னந்தொட்டுப்-போட்டிடவே சூதம
துவிரைந்துபோகும், ஆமென்றவழலைதொட்டுச் சுன்னங்கோடி-யழ
கனகட்டினமுருக் கிலைங்கள்கோடி, தேனென்றமெழுகோடி களங்கு
கோடி செயநீராந்திராவகமுமதனிற்கோடி, கோனென்ற செந்தூரக்
குளிகைகோடி-கொள்ளையோ கொள்ளையதில்வாதந்தானே. ௨௩

வாதந்தான்முன்பின்னாய்ச் சொல்லிவிட்டு-மறைந்தாரேநாதாக்கள்
ரிஷிகள்சித்தர், வேதந்தான்முடிவுபடா வுப்பாய்நின்ற-வேதாந்தவழ
லையைத்தான் வெளியாய்ச்சொன்னேன், தீதறவேவெளிதோன்றச்
சொன்னேனென்று - சித்தரெல்லாமென்மேலே சண்டைசெய்தார்,
வாதாடியவருடனே வலமாய்ப்பேசி- வாங்கினன்காணுலகத்தோர் பி
ழைக்கவென்றே. ௨௪

உலகத்தோர்பிழைக்கவென்று சொன்னேனப்பா-உத்தமர்க்காம் க
ர்மிகளுக்கு தவாதிநூல், உலகத்தோர்பாஷாண்டி மெத்தவுண்டு-உ
த்தமனேவயிற்பிழைக்க வேடங்கொண்டு, உலகத்தில்வேதாந்த குரு
நானென்று - ஓகோகோவாய்ப்பேய்ச்சல் மிரட்டுவார்கள், உலகத்
தைக்குடிகெடுத்துப் பொருள்பறித்து-ஒன்றுமில்லையெனச்சொல்லி
யலைவார்பாரோ, ௨௫

அலைந்தலைந்துமண்ணில்செடி பூண்டுந்தேடி-பறுபத்துநாற்சரக்கு
ஞ்சுட்டுசுட்டு, அலைந்தலைந்துதிரிந்தாலுமவாதங்காணா- அம்பாத்தி
னெறிகாணக்கசடரப்பா, அலைந்தலைந்திந்தவண்ணஞ் சுட்டுச்சாவார்
அப்பனேகோடானகோடிமாந்தர்; அலைந்தலைந்துவாதமொடு ஞா ன
முண்டு அறிந்திட்டபெரியோர்கள் சொல்வார்கேளே, உசு

சொல்வதுதான்சிவயோகியானுற்கேளு- சுந்தரமாஞ்சற்குருவை வ
ணங்கிப்போற்றி, அல்லுபகலற்றமர்ந்தசோதிதன்னை-யாழ்ந்துமனம்
பூரணமாயறிவோடுன்னு, வல்லமைகள்பேசாதேயறிவாய்நில்லு- வா
மியென்றவாலைபைத்தா ணிதமும்போற்று, கல்வியறிவுடைய பெரி
யோர்தம்பாதம்-காத்திருந்தால்வாதமுறை காட்டுவாரே. உஎ

காட்டுவார்வாதமொடு ஞானமார்க்கங்-கரைகாணவைட்டாங்கம்யோ
காங்கந்தான், காட்டினல்குருதொட்டே காட்டவேண்டுங் கைம்மு
றையுஞ்செய்ம்முறையுங் காணவேண்டும், சாட்டியில்லாப் பம்பரம்
பே லாசான்சொல்லச் சாத்திரத்தைப்பார்த்தாலும்வருமோவாதம்-
காட்டமிலாசான்சொல்லா லன்றிமாந்தர்-கோடிநூல்பார்த்தாலுங் கி
ட்டாதென்னே- உஅ

என்னவேகுருத்தேடி வாதம்பாரு- இல்லாட்டாலெந்நாலைக் குரு
வென்றெண்ணு, பன்னவேபதனமாய் வைத்துப்போற்று-பக்குவமா
ய்வங்கமுதல்வாசியாகுங், கன்னவேஞானங்கம் வேதாங்கம்பார்-கை
ம்முறையாஞ்சவர்ககார வழலைச்சுன்னம், என்னவேகருக்குருவும்வெ
ளியதாக ஈந்திட்டேன்கண்ணாடிமுகம்போற்காணே. உகூ

கண்ணாடிமுகம்போலக் காணுமுள்ளங்-கைக்கனிபோற் றோன்று
றுமடா விந்நூல்வஞ்சம், புண்ணணபயல்களுக்குத் தோன்றாதப்பா
பொருளறியாமூடருக்குக் க ட்டொண்ணாது, பண்ணணபண்ணிறி
யார்நூலீயாதே, பழையதங்கமென்றிதனைப் பதனம்பண்ணு, விண்
ணணபேர்களுககே யீந்தாயானல், விண்ணிலிடிவிழுந்துதலை வெடிக்
குந்தேறே. ௩௰

தேறுதவாதமென்னவயித்தியம்பாரு-செப்பரிதுவைத்தியநாற் பி
ரமவித்தை, கூறுன நூலறிந்து திறமாய்ச்செய்தால்- கூறவொண்ணா
வாதத்துக் கொவ்வுமொவ்வும், ஆராயாதிதைவிட்டு வாதம்பார்ப்பா
ரதனாலேசெய்துநாம் பிழைப்போமென்றே, ஓராமல்பலகூட்டங் கூ
டிநீயும் உள்ளாசைகொண்டலைந்தால் வாதம்வீணே. ௩௧

வர்தந்தான்மனமடங்கி யறிவுக்குள்ளே - மற்றொருவரறியாமன் மவுனமாகப், போதந்தான்மனமென்ற வாய்வுதீட்சை-புகழானவார மென்னுந் தீட்சையோடு,வேதந்தான்முடிவதுபோல் வாதஞ்செய்து விள்ளாதேபூசைக்குங் கற்பத்திற்கும், கோதின்றிப்பரதேசிக் கன்ன மிட்டுக்-கோயில்குளஞ்சாலைகட்டி யிருந்திடாயே. ௫௨

இருந்தியாதுலகத்தில் வாழ்ந்தாயானால் எண்மேலேகுற்றமில்லை சாபமெய்தும், இருந்திட்டகாபத்தர் லெய்தும்ரோகம்-இதனாலேகே டுகெட்டு அலைவாய்நீயும், பிரிந்திட்டதேவியிட பூசைசெய்நீ-பிரற்ற தேசாராய வெறிகொள்ளாதே, மருந்திட்டமனமதுபோல்மதிகொள் ளாதே-வளமானசரக்குவகை சொல்லக்கேளே. ௫௩

சொல்லுகிறேனிலப்பனையு *முத்தக்காசுஞ் சுயமானசிவன்வே ம்புதண்ணீர்மிட்டா, நல்லவொருவிலாமிச்சை வில்வவேரும்- நன்னா ரி 0 குமரிவேரமுக்கராவேர், ஓல்கியதோர் ‡ சலந்திரட்டி மூலிவேரு ம்-ஓரிதழ்த்தாமரைக்கிழங்கும் வெட்டிவேரும், அல்லவேதாமரையி ன்வளையம்நெல்லி யால்விழுதுநீர்ப்பூலா வறுகம்வேரே. ௫௪

* முற்தக்காசு-கோரைக்கிழங்கு, 0 குமரி-சோறறுக்கற்றாழை,

‡ சலந்திரட்டி-கொத்தான்.

வேரானவல்லாரை * வீழிசங்குமிளகரணை 0கொடுவேலி ‡கா க்கைவேலி; சீரானசிற்றாமல்லி சேராமல்லி- சிறுபுன்னையிருவேலி சி றுகாஞ்சோரி, தாரானதாதுவளை கண்டங்காலி - தடிப்பானநிலவா கைசிற்றாமுட்டி, வேரானகருங்காலி நாவலத்தி-வெள்ளறுகுசிறுபிர ப்பங்கிழங்காமின்னே, ௫௫

* வீழி-விழுது, 0 கொடிவேலி- சித்திரமூலம்,

‡ காக்கைவேலி-உத்தாவணி'

கிழங்கோடுகரிசாலை பொன்னாங்காணி-கெடியானவெள்ளைச்சா ரணையின்வேரும், சழங்கோடுநெரிஞ்சிலந்தை சூரியோடுசார் *சிவன் வேர்முந்திரிவேர் முருங்கைவேரும், வழங்கவேசுடுதுரத்தி முட்கா வேளை-மைந்தனையகிலோடு 0 மலாக்காகெந்தம், முழங்கவேமூலிவ கை நாற்பத்திரண்டு - முறையுடனே வகைவகைக்கும் பலந்தானெந் தே, ௫௬

* சிவன்வேர்-சிவனார்வேம், 0 மலாக்காகெந்தம்-மலாக்காசந்தனம்.

ஐந்தாகவிவையெல்லா மிடித்துநன்றா - யடிகனத்தபாண்டத்திலி ட்டுக்கேளு, ஐந்தானவிரெட்டு மரக்காநீர்தா-னளந்துவிட்டு அடுப் பேற்றி யெரித்துக்காச்சு, நைந்திடவேபூசைசெய்தெ யெடுத்துக்கொ

ண்டு-நலமாகவெட்டொட்டிற் பாதியாக்கி, மைந்தனேசிறுபாண்டம்
விட்டுக்காச்சி-வளர்காற்றிலதூற்றிமிக வாற்றிவையே, ௩௭

வைத்துமேயின்னமொரு செய்திகேளு-வளமான ஆவின்பால்ப
டிதானுலு, பொய்ந்துமேபோகாமல் சொலக்கேளு *புடமேழுதீர்
ந்தசவை வன்னிகற்பம், வைத்துமேயிவையெல்லாம் பாண்டத்துள்
ளே-பாலிட்டுஅடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி, வற்றியபின்னிரண்டு
படி யாறுநற்பார்த்து வடிகொண்டுமுன்வைத்துக் கியாழத்தாட்டே(

ஏழுபுடம்போட்ட வன்னிகற்பப்-சாதிலிங்கம்.

ஊட்டடாவெள்ளாட்டுப் பால்தானென்று-உத்தமனே தேங்காய்
பால்படிதான்ரண்டு, ஊட்டடாபாலோடு கியாழமொன்று- ஊட்டி
வைத்தின்னம்வகை யுரைக்கக்கேளு,மூட்டடாசாதிக்காய் பத்திரி
ம்ப-முடிவானஏலமொடு வங்கங்கோஷ்டம், வாட்டடாகுங்குமப்பூ
கோரோசனைதான் வால்மிளகுகுகாசானி யோமமாமே. ௩௮

ஓமமொடுவாலுழுவை கூகைநீரு-உற்ற * விருசீரகமுந்திப்பிலி
மற்றும், வேமமார் ○ தாளிசம்வாய்-விளங்க ⁑ மாஞ்சில்-வெட்பாலே
❋ திரிகடுகுதிப்பிலிமூலம், நாமமிகுமதிமதுரங் கொத்துமல்லி-நவாச்
சாரமிலவங்கப் பத்திரியுங்கூட, காமகொடுதக்கோலம் × தகரம்இந்
து-கசகசாமிஞ்சிட்டி சாரப்பருப்பே, ௩௯

* இருசீரகம்-கருஞ்சீரகம்-நற்சீரகம், ○ தாளிசம் -தாளிப்பத்திரி,
⁑ மாஞ்சில்-சடாமாஞ்சில் அதேபெருங்கோரை, ❋ திரிகடுகு-சுக்கு
மிளகு-திப்பிலி; × தகரம்-தகரபபச்சிலே,

பருப்பான * திரிபலேயும் சமுத்திராப்பழமும்-பகரரிய வலம்பு
ரிக்காய் கர்க்கடகசிங்கி, விருப்பானகாமப்பூ மகாப்பூவும்-விதமானசி
றுநாவற்பூவுங்கூட, கருப்பானசிற்றரத்தை பரங்கிப்பட்டை-கார்போ
கிபோரத்தை கத்தூரிபட்டை, மருப்பானதாமரைக் கிழங்கும்அல்லி
கொட்டி-மரமஞ்சணிலப்பனைவேர் மரவள்ளிதானே. ௪௰

* திரிபலே-தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய்.

வள்ளியாங்கிழங்குஞ்செங் கழுநீர்மூலம்-மாசற்றசெவ்வியதாமி
நதிரபுஷ்டி, வள்ளியாம் * வேர்க்கொம்பு கடுகுரோணி-மகத்தானசி
றுதேக்கு சித்திரமூலம், வள்ளியாம்வகைக்குப்பல மொன்றுசொன்
னேம்-வளமாகஇளவறுப்பாய்ச்சூரணித்து, வள்ளியாம்வித்துவகை
சொல்லக்கேளு-வாகானஅத்திவித்து முருங்கைவித்மே, ௪௧

* வேர்க்கொம்பு-சுக்கு,

வித்தாமூமத்தைசடைக் கஞ்சாவித்து விதமான முன்னைவத்துஅத்திவித்து, கத்தானசூரிவித்து நெரிஞ்சில்வித்து-கருவேலின்வித்தோடு மாதளையின்வித்தும், வித்தாம்பூனைக்காலி கரணீர்முள்ளி-விளம்பாலின்வித்து நாயுருவின்வித்து, முத்தானகூவிளத்தின்வித்தின்னைதந்தா முன்னையானகோதுமை யெள்ளுமுழுந்தே. ௭௩

உழுந்தானகொம்மட்டி மாதளையின்வித்து உற்றதொருஆவரைவித்துங்கூட, கொழுந்தானதேற்றான்வித் துஞாள்ளிவித்துங்-கூந்தற்பணிவித்தோடு தாமரைக்காய்வித்தும், விழுந்தானஅரசம்பூவரசவித்து-வெண்குன்றிவித்துசரக் கொன்றைவித்து, நழுந்தானதென்னை கருஞ் செம்பைவித்து-நலமானபுளியவரைத் தோலுங்கூட்டே, ௪௪

கூட்டுவாய்வாதுமைநற் கொட்டையோசி-குலமானமுந்திரியின் பருப்பேபடியாவும், கூட்டுவாய்வகைக்கு அரைப்பலந்தான்சொன்னேங்-குமுறவேயிளவறுப்பாய்ச் சூரணித்து, கூட்டுவாய்முன்மருந்தோ டொக்கச்சேரு-கூர்மையுள்ளபுலத்தியனே சொல்லக்கேளு, சேர்த்திடுவாயின்னமொரு வகைதானப்பா குலவுநல்லதென்னம்பூ முருக்கம்பூவே. ௪௫

பூவோடுமகிழம்பூ விலுப்பைப்பூவும்-புங்கம்பூமாதளம்பூவில்வப்பூவும், மாவோடுகொங்கிலவு அத்திப்பிஞ்சு- மாசற்றசண்பகப்பூ * பாற்புரண்டி, சேவானபரித்திப்பூ வெள்ளிரிப்பூ-சிறுநெருஞ்சில் காடாத்தி சிறுவிளாப்பூ, பாவானமுள்ளிலவு முருங்கைவாகை - பருங்கொன்றைகருவிளா கருவேல்வேம்பே, ௪௬

* பாற்புரண்டி-சிறுஅம்மான் பச்சரி,

வேம்பானமாமரத்தின் பிசினேடொக்க - விளம்பினன்காண் வகைவகைக்கு அரைப்பலமேலூட்டு-தேம்பாகநிழலுலர்த்திச் சூரணித்துச் - சிறப்பாகமுன்மருந்தோ டொவ்வச்சேரு' ஆம்பாகமாச்செய்தால்மோகதிக்காம் அதில்சர்க்கரைபலமிரண்டு அடைவாய்ச்சேரு, சோம்பாலேயிவையெல்லா மன்பாய்ச்சேரு - சொல்லுகிறேனின்னமொரு விவரந்தானே, ௪௭

தானென்றசூரணத்துக் கிடைப்பாகங்கேள்-சமரசமாம்வங்காளச்சீனிவிட்டு, பானென்றகியாழுமெல்லாம் பாண்டத்திலிட்டுப்-பாலோடுசீனிரண்டும் பாகுசேரு, மானென்றவிழியணங்கைப் புணருமைந்தா-மாந்தருக்குச்சொல்லாதே மதிமாறாதே, கானென்றசூரணத்தை போட்டுத்தீயில்-கைம்முறையாய்க் கிண்டிவாயடிபற்றாதே' ௪௮

பற்றுதேமுந்திரிபே ரீத்தன்பழங்கள்-பக்குவமாய்வகைக்கிரண்டு பலந்தான்போடு, பற்றுதேயாவினெய் படிதான்ரண்டு- பண்பாக வார்த்ததிலேலகிண்டுகிண்டு, பற்றுதேமுறியாம லடிபற்றுமல்-பாமகாகமெழுகுபதம் வருதற்பார்த்து, சுற்றுதேலேகியத்தை யிறக்கிக்கொண்டு-சூடாறிவந்தவுடன் தேனைவாரே, ௪௯

தேனென்னகொம்புத்தேன் படிதான்வாரு-செப்பரிய அப்பிரேகச்செந்தூரங்கேள், வானென்றசெந்தூரம் பலந்தானொன்று-வங்கச்செந்தூரமொருபலமேபோடு, கானென்றரசமொ டரிதாரபற்பங்-கணக்கோடுவகைக்கு ஒருபலமேபோடு, சேனென்றபுண்ணியனேயெல்லாம்நன்றாய்ச்-சேர்த்துநீலேகியத்தை நன்றாய்ச்செய்யே. ௫௰

செய்தபின்புசாபல்கபூஜை வர்த்தியாகச்-சிறப்பானகணபதியும் கந்தன்பூசை, செய்தபின்ப ஆயிபதம் பூசைபண்ணு-தீர்க்கமாய் வியாதிமாரணத்தையோது, செய்தபின்புவயித்தியற்கு மகிழ்ந்துநீதான்-திறமாகநாலிலொருபாகமீயே. ௫௧

ஐய்ந்துமனங்குளிரவெகு மானஞ்செய்து - இதமான அவிழ்தத்தை யுண்டுதேறு' ஆய்ந்தவிழ்தம்நாளொன்றுக் கிருவேளை- காலையந்தி முதல்கொட்டைப் பாக்களவுவீதம், சேர்ந்ததொருலேகியத்துக் கிசசாபத்தியம்- திறமாகமண்டலந்தான் கொண்டுதேறு, ஆய்ந்தவிழ்தமண்டலந்தான் கொள்ளும்போது, ஆச்சரியமாய்த்தேகம் பசும்பொன்னுமே, ௫௨

பசும்பொன்னுந்தீருகிற நோயைக்கேளு-பகாரியமேகவகை யிருபதும்போம், பசும்பொன்னுஞ்சேர்த்துமங்க டொண்ணூற்றாறும்-பறக்குமடாகிரந்தி யரையாப்புசூலை, பசும்பொன்னுமந்தார மீளைகாசம்-பழுதானகாமாலை சோகைபாண்டு, அசங்காதசயங்குன்மம் கிரிச்சினங்களாறுமடாபதினெட்டுக் குட்டமென்னே, ௫௩

குட்டமென்றவாயிரோ யிருபத்றாறுங்-குடிகெடுத்தபித்தம்நாற் பதுவும்போகும், மட்டமாம்வாதமெண் பதுவும்போகும்-மஞ்சளூற்றவுதிரவெள்ளை பிரமியம்போம், பட்டமாஞ்கிரங்குசொறி கரப்பான்போகும்-படர்தேமல்தாமரைகள் பதினெண்சூலை, சட்டமாம்லிங்கப்புற்று யோனிப்புற்று * தழுதணையுமேகவகை யூறலென்னே, ()

* தழுதணை-மேகத்தடிப்பு.

என்னவேதொண்டைப்புண் கண்டமாலை-யெழுவாளை விற்புருதிபிளவைபுற்று,மன்னவேகன்ஞெசிகன்நப்புற்று மகோதரமுமுண்மாந்தை தீராககவுசி, அன்னவேபெருவயிறு காய்ச்சல்கொண்டை-அத்

திசுரமத்திவெட்டைடயுஷ்மைவாயு, வின்னமொருஅரோசிகங்களன்ன
தோஷம்-வெள்ளோக்காளங்களொடு விக்கற்போமெ, ௫௫

விக்கல்லைககாவெரிவு தேகக்காந்தல்- மெலிவானபெரும்பாடோ
டெலும்புரிக்கி, மெய்க்கவேகுழிவாளை யாருப்புண்கள்- மேலானரத்
தவாய்வுடனேமிக்க, செய்க்கவேமுலைக்குத்து மார்பிலாணி-திகழ்பெ
ரியதொடைவாழை யிந்திரகண்டி, எய்க்கவேநரம்புவாய்ச் சிலந்தி
யோடு-இந்தவகைநோய்கமெளண் பத்துநான்கே. ௫௬

நான்கோடுபௌத்திரமு நேத்திரரோகம்-நந்தாதசிரசுநோய் தொ
ண்ணூற்றாறும், ஊன்பாய்ந்தமூலவகையண்டவாயு- உண்மையற்ற
சயரோகம்நாக்குரோகம், கூன்பாய்ந்தவளைவுகுத்துப்பிசமேல்மூச்சு-
குடிகெடுக்கும்கிறுகிறுப்பு முதலாமெல்லாம, மீன்போன்றவிழிமா
தேதீருந்திரும்-மிகுசோபநோயெழுந்து வீறுந்தானே, ௫௭

தானென்றஸ்திரீகர்ப்ப நோய்களேழுந் - தணிந்துவிடுமலடியுமே
பெறுவாள்பிள்ளை, பானென்றசிலவிஷங்க ளறுபானன்கும்-பறக்கும்
வண்டோடெலிக்கடியும் செய்யான்கூட, தானென்றபூரான்றன்கடிக
ளெல்லாந்-தனியிடுப்புச்சூலைகழ லண்டவாதம், தேனென்ற மேகரா
சாங்கப்பேரும்-செப்பிடுநோயாவுந்தான் தீர்ந்துபோமே; ௫௮

போமென்றகல்லடைப்பு நீரடைப்பு-பொல்லாததுர்மாங்கிஷத்
தடைப்புகூட, போமென்றநீர்த்துவார மெடுத்தரோகம்-புகலாதசல
க்கழிச்சல்கடுப்பிரத்தம், வேமென்றசரீரத்தில் வெப்புப்பார்வை-வெ
ண்குட்டங்கருங்குட்டம்விஷபாகங்கள், பாமென்றவிவ்வகைநோ யெ
ல்லாந்தீயிற்-பட்டிடுபஞ்சதுபோலப் பாரிற்போமே, ௫௯

பாரிலேநோயெல்லாம் பறந்துபோகும்-பசுந்தங்கம் போலாகுந்
தேகமப்பா, ஆரியுண்டகற்பங்க ளிதுக்கொவ்வாது ஆச்சரியத் * தா
துவெல்லாம் வீறிக்கட்டும், பாரியேநாதிரைக ளெல்லாமாறும்- ப
ளபளப்புவுடம்பெலாம் பரவிநிற்கும், காரியமாந்தேகமது கமழும்
வாசம்-கண்களுந்தான்செவ்வலரிப் பூப்போலாமே; ௬௰

* தாதுகட்டும்-திரிநாடிகளு முறுக்கேநிற்கும்,

பூப்போலாந்தேகமது கிவந்துமின்னும்-புனிதமிகுந்திரியச் சேது
பொங்காநிற்கும், பூப்போலாஞ்சுக்கிலமு மிறுகிக்கட்டும்- பூவையுட
ன்சம்போகஞ் செய்யப்போகின், * நாப்பாலாலளவறிந்து சொல்லப்
போமோ-நாடோறும்பத்துபே ரிருக்கவேண்டும், தாப்பானசயோ

கத்தாலேகெட்டுர்-தயங்காதேபெண்மாய்கை தள்ளுதள்ளே, ௬௧

* காப்பால்-நாவினால்என்பது பொருள்,

மாய்கையடாபெண்மாய்கை தள்ளவேண்டும் - மங்கினால்தேகசித்தியோகசித்தி, மாய்வதுமெய்மோகவலைக்குள்ளேசிக்கி - மாண்டார்கள்கோடான கோடிபேர்தான் மாய்கைவலைமூடினால் யோகம்ஞானம் வாய்க்காதுசிந்தியெல்லா மழிந்துபோகும். மாய்கைதள்ளி நாதாக்கள்ரிஷிகள்சித்தர் மாளாமலுகாந்தவரை வாழ்ந்திட்டாரே, ௬௨

வாழ்ந்திட்டவாதிமகன் வைத்தியனென்றால் - மைந்தனேகைமுறைகளறிந்துசெய்வான், ஆழ்ந்திட்டசுழிமுனைபற்றி நாடிபார்ப்பானந்தநவிதமறிந்து அவிழ்தஞ்செய்வான், ஆழ்ந்திட்டதாதுவிட கலக்கம்பார்த்து-ஆள்பலமுநோய்பலமு மாய்ந்தாய்ந்தோர்ந்து, சூழ்ந்திட்டநோய்களெல்லாந் தீரச்செய்வான் தொல்லுலகில் வயித்தியர்கள் செய்யார்பாரே, ௬௩

பாரப்பாமேகவகை யிருபதுந்தான் பறப்பதற்கு அப்பிரேகச்செந்தூரங்கேள், பாரப்பாநாலுவகைச் சாதியுண்டு-பரிவானகிருஷ்ணவப்பிரகமிகவுநன்று, பாரப்பாபத்துபலம் நிறுத்துக்கொண்டு பசுவினிடகோமயத்தில் சாணக்கத்தில், பாரப்பாஅப்பிரேக மதிலேயிட்டுப் பண்பாகஅவித்தெடுத்து இடித்திடாயே, ௬௪

இடித்துமேசுண்ணயுள்ள கருநெல்தன்னை-யிதமாகக்கலந்துநன்றாய் ரெட்டில்கட்டி, வடித்துபத்துவிசைகாடி தன்னிற்றோய்த்து - வலுவாகப்பிசைந்தநச் செக்கைதள்ளி, நடித்துமேமூன்றுநாள் சென்றபின்பு நலமாகத்தெளிவிறுத்துக் கொள்ளுமைந்தா, படித்துமேகணபதியைப்பூசைபண்ணு-பரிவாகநவநீதம் பார்த்துவாங்கே, ௬௫

வாங்கியேகல்வத்தி லிட்டுப்பின்னும்-வாகுடனேபழச்சாற்றால் நாலுசாமம், பாங்காகவாட்டியே வில்லைதட்டிப்-பக்குவமா யோட்டினிலிட்டோடுமூடி, ஆங்கியேகுழிவெட்டிக் கெசபுடமேபோடு-ஆறவிட்டேயெடுத்துமுன்போ லரைத்துக்கட்டித்,தியங்காதேயோட்டில்வைத்தோடுமூடிச்-சீலைசெய்துமுன்போல கெசபுடத்தைப்போடே, ()

போட்டுமேயாறவிட்டே யெடுத்துப்பாரு-புகலுமுறைபத்துவிசைதப்பாதேசெய், ஆட்டுமேசல்மிஷங்க ளற்றுநிற்கும்-அதன்பின்பு வாலரசுநாவலத்தி, பாட்டியேநாலுவகைப் பட்டைவாங்கிப்- பக்குவமாயிடித்துநன்றாய்க் கியாழஞ்செய்து, நாட்டியேகியாழத்தா லரைத்தனாத்து-ஙந்தாமல்முன்போலப் புடந்தான்பத்தே, ௬௭

பத்தானகுமரிச்சார் பலந்தான்பத்துப் பகரரியமுருக்கிலைச்சார் புடந்தான்பத்து, அற்றானகொடிவேலிச் சாற்றால்பத்து- ஆராளிசாற்றாலே புடந்தான்பத்து, கத்தானகவிழ்தும்பைச் சாற்றால்பத்து- காந்தைசார்செருப்படிச்சார் வகைதான்பத்து, கத்தானவெருக்கிலையின் பழுப்புச்சாற்றால்-சலியாமல்பத்துவிசை யரைத்துப்போடே. ௬௮

அரைத்துமே குமட்டிமாதளையிற்பத்து-அடைவானபுளித்தமாதளையிற்பத்து, உரைத்துமேபோகாமல் முறைதப்பாமல்- ஒளியாமல் நூற்றிரண்டுபத்துமப்பா, அரைத்துமேபுடந்தீர்ந்தே யெடுத்துப்பாரு-அம்மம்மாசெந்தூர மருணன்போலாம், தரைதனிலேவைத்தியர்களறியவேண்டுந்-தானதிலேமாவிடைச்செந் தூரம்போடே, ௬௯

போட்டதின்மேலரிசியிடு வுழுந்துபோடு-புதையாதுசெந்தூரந்தான்மிதக்கும்பாரு, காட்டுமேமிதப்பதற்குச் செந்தூரந்தான்-கசடானதனுக்கற்றுக்கனகமாச்சு, ஊட்டியேயின்னமொரு உபாயங்கேளு-உற்றநெய்பால்சர்க்கரைதே னுடன்பழமும், சாட்டியேபிசைந்துடிப்பிலேற்றிக்காய்ச்சி, நலியாமல்செந்தூரம் மதமாய்வாங்கே. ௭௰

வாங்கியேசர்க்கரைதேன் பழங்கள்நெய்யால்-வகையொன்றிற்குன்றியிடைகொள்ளுகொள்ளு,பாங்கியேமண்டலந்தான் கொள்ளும்போது-பாடியதோர்மேகவகை யிருபதும்போம், நீங்கியேகாசவகை யுஷ்ணரோகம் நில்லாதுஅஸ்திசுர மஸ்திகெட்டடை, தாங்கியேசயரோகம்தொண்ணூற்றாறும் சண்டாளக்கிரிச்சினங்களாறும்போச்சே, ()

போச்சப்பாபிரமேகம் வெள்ளைபஞ்சள்- புகழானபிரமியமுமேகவாய்வும், போச்சப்பாகிராணிவகை பொல்லாரோகம்- புகலவொண்ணாச்சன்னிவகை யெல்லாமோடும், காச்சப்பாகாலெரிவு கையெரிவு மேனி - காந்தலுள்இளைப்புடனே யிருமல்போகும், போச்சப்பாசர்வரோகமெல்லாந்தீரும் பளபளக்குந்தேகமெல்லாம் பாலையாமே, ௭௨

பாலையாந்நாதுவெல்லா மிறுகிக்கட்டும்-டங்கயம்போலஞ்சதிறந் தங்கம்போலாம், காலையாஞ்சந்திரனி லமிர்தமுறும்- கண்கெட்டமானிடரோ வறியப்போரார், ஆலமுண்டகண்டரிட மாகவைத்து- ஆயிடரதமடா தெளிந்துபாரு; வேலைக்கும்வாதிக்கு மப்பிரேகந்தான்.மேதினியிலொன்றுமில்லை விபரங்கேளே. ௭௩

* கதலிக்கந்தரசாயனம்.

கேளேநீசர்வரோகமெல்லாந்தீரக்கிளத்துகிறேன் கதலிக்கந்தத்தின்மார்க்கம், கேளேநீகணபதியைப் போற்றிக்கொள்ளு - குகன்பாத

ம்வணங்கிச்சற் குருவைப்போற்றி, கேளேகோண்கோஷ்டம்பலந்தா
னுலு - காரகன்டதிப்பிலியும் பலந்தான்ரண்டு, வீளேசுக்கிரண்டு
சாதிக்காய்ரண்டு-மேலானகிராம்பு சீரகமுங்கூட்டே, ௭௪

* கதலிக்கந்தம்-வாழைப்பூ,

கூட்டியேயிளவறுப்பாய்ச் சூரணித்துக்- குணமாகக்கைகொண்டு
கூறக்கேளு, கூட்டியேமிளகருணைச் சங்கம்வேரு-குலவுவகைக்கிரண்
டுபல மிடித்துத்தூளாய், கூட்டியேமுன்மருந்தில் சேர்த்துவைத்து
க்-கூறுபளிதாளிசட்டி யொன்றில்விட்டு, காட்டியேகதலிப்பூ நாறு
வெட்டிக்-காராவின்பால்கரைத்து வடிதான்கொண்டே, ௭௫

கொண்டேதான்படிரண்டு பாண்டத்தூற்று- கூராவைங்காரச்சினி
பலந்தான்பத்துங், கண்டேதான்கரைத்துநன்று யடுப்பிலேற்றிக்-கா
ய்ச்சியேமெழுகுபதமானபின்பு, பண்டேதான்சூரணத்தைதத் தூவிய
ப்பா-ப்க்குவமாய்க்கிண்டிவைக்க ரசாயஞ்சொன்னேம், இண்டேதா
னிறக்கிகணபதியுங்கர்த-னிதமான*வடுகனையும்பூசைபண்ணே, ௭௬

* வடுகன்-வைரவன்.

பண்ணியேதேன்படிக்கால் விட்டுக்கிண்டிப் - பாணைதனிலடக்கி
நெற்புடத்தில்வைத்து, உண்ணியேநாளொன்றிற் கந்திசந்தி -யுத்தம
மேகொட்டைப்பாக்களவுநேரம், பெண்மேணம்கள்பத்தியமா யுண்டு
தேறு-பெரும்பாடுமேலும்புருக்கிப்பிறமேகங்கள், நண்ணேதான்மே
கவகைபத்னெண்சூலை-நாடாதுகிரந்திகுட்ட மணையாப்பெண்ணே ()

என்னவேயத்திசுர மத்திவெட்டை-யியல்பான வுட்ணத்தோடெ
ரிவுகாந்தல், கன்னவேசிரங்குசொரிகரப்பானூரல்- கனமானகிராணி
வகைமூலச்சூடு, நன்னவேயிளைப்பிருமல்காசக்கூறு-நலங்கெடுக்கு நீ
ரிழிவுகிரிச்சினங்கள், என்னவேஸ்திரீகளுக்கு சூசிகாசெர்ப்பம்- ஏழு
வகைகரோகங்க டீர்ந்துபோச்சே,
௭௬

போச்சென்றவாக்கியம்வாய்ப் பேச்சோசமந்தா - புகலுகிறேன்
ரசபற்பம் வங்கபற்பம், காச்சென்றுசேர்த்துநீ கொண்டாயானால்-க
னமானரோகமெல்லாங் கடலேபுக்கும், ஆச்சென்றவாதமொடு வயி
த்தியமென்ன-ஆராய்ந்துசாத்திரத்தைப் பார்க்கவேண்டும், காச்செ
ன்றகுருதுறைகை முறையும்வேண்டுங்- கனமானவாதியும் வயித்திய
னுவானே,
௭௯

ஆவதற்குமுப்பூவையறியவேண்டு - மல்லாட்டால்வாதியல்ல நிரு
மூடன்றான், ஆவதற்குவழிலையென்ற கருவறிந்தால்- ஆட்டலாம்வாதமு

தல் வயித்தியங்தேர்ந்தே, ஆதவழ்குவழலைவிட்டால் வாதம்போச்சு-அவிழ்தங்கள்செய்தாலுஞ் சித்தியில்லை, ஆவதற்குக்குருதேடி யதிக்தபோது-ஆதியாமுப்பூவை முன்னேசெய்யே. ௮௰

## இரசபற்பம்

செய்வதற்குரசபற்பஞ் செப்பக்கேளு-திரமானசூதமொருபலந் தான்வாங்கு, பைவதற்குபேனிச்சார் வெற்றிலைச்சார்-பரிவானயழமஞ்ச * ளாகாசத்தூள், உய்வதற்குக் ௦ கொடிவேலிக் கியாழம்னவத்து-உற்ற + திரி-லைக்கியாழ முறைந்துசெய்து, நைவதற்குசண்டங்கத்திரியின்சாற்றில் நன்கரைத்தேயடுப்பேற்றித்தகிகரும்பே. ௮௧

* ஆகாசத்தூள்-ஒட்டரை ௦ கொடிவேலி-சித்திரமூலம்.

\+ திரிபலை கடுக்காய் தான்றிக்காய்-நெல்லிக்காய்.

கரும்பினிடகறனையிறைற்நேய்த்துமத்தி கனமானவொருசாமந் தீபம்போலே, விரும்பியேமத்திததுலூடுமூடி-விதமாகவெழுசிலைமண்ணுஞ்செய்து, அரும்பியேகுக்குடமாம் புடத்தைப்போடு - ஆறவிட்டேயெடுத்துமறு படியுமைந்தா, கரும்பிலேகிண்டாம லோடுமூடிக்-கடுகெனவேமுன்போலப் புடத்தைப்போடே. ௮௨

போட்டுமேயாறவிட் டெடுத்துப்பாரு-புகழாகநீகரும்பால் மேலூட்டாமல், ஆட்டுமேமுன்போலமூடிசெய்து- அப்பனேகுக்குடத்திற்போட்டெடுத்து, நாட்டியேயிப்படியே திறமாய்ச்செய்து- நாலுபத்துயெருவெடுத்து நன்றாயாய்ந்து, நீட்டியேவேதாந்த வேதாந்தா நீ-மகிழ்ந்துபுடம்போட்டு நினைவாய்ச்செய்யே. ௮௩

செய்யவேதவளநிறமாகும்பாரு - சிவசிவாவென்னசொல்வேன் சூதபற்பங், செய்யவேயனுபான மறிந்துகொண்டால் தீராதநோயே துசெப்பக்கேளு, பையவேபனைவெல்லம் நெய்தான்பாலில்-பரிவான லேகியங்கள் கியாழபாகம், உய்யவேகொண்டுவரத் தீரும்நோய்கள்-உரைக்கிறேன்கிரந்திகுட்ட மனையாப்பின்னே. ௮௪

* தவளம்-வெள்ளை.

என்னவேகுன்மமெட்டுக் கிராணியாறும்-இளைந்துவருமூலவகை பௌத்திரந்தீரும், கன்னவேகைமூடக்குக் கால்மூடக்குக் - கபாலகுஷ்டம்நீரிழிவு கயரோகங்கள், வின்னமாய்பிளவைப்புற்றுக் கண்டமாலை - விற்புருதிகுழிவாளை ஆறாப்புண்கள், அன்னவேயேகப்புண்மூலபுண்சூலை-அரிகரப்பன்சொரிகரப்பா ன்றோ தீர்க்கும்போமே. ௮௫

## தாம்பிரபற்பம்,

போமேதான்தாம்பிரத்தின் பற்பஞ்சேரு-புகலரியதாம்பிரத்தை தகடாய்த்தட்டி, நாமேதான்சுத்திவகை திறமாய்ச்செய்து- துலக்கமுடனெடுத்துஒரு ஓட்டிலிட்டு, நாமேதானடுப்பேற்றி யெரியையூட்டி-நாற்கரும்புதனைத்துண்டாய் நறுக்கிக்கொண்சி, வேமேதானறுக்கிய தோர்கரும்பினாலே-விதமாகத்தாம்பிரத்திற் றேய்த்திடாயே. ௮௬

தேய்த்திடவேநாற்சாமங் கைம்மாறாமல்- தேய்க்கவேதாம்பிரந்தானுருங்கிநிற்கும், வாய்த்திடவேகல்வத்திலிட்டுநன்றாய். மைந்தனே கெல்லுமியுங்கூடவிட்டு, ஆய்த்துபேயரைத்திடவே நொருங்குந்தூளாய்-அதையெடுத்தோட்டினிலிட்டோடுமூடி, வாய்த்துபேசீலைசெய்துகெசபுடத்தில்-மாபுடமாய்ப் போட்டிடச்செந்தூரமாமே, ௮௭

ஆமடாபற்பத்திலசடிருந்தா-லறையாமற்பின்றுமொரு ஓட்டிலிட்டு, நாமடாசீலைசெய்துபுடத்திற்போடு-நல்லருணன்போலச்செந்தூரமாகும், பாமடாசெந்தூரப் பற்பந்தன்னைப் - பணவெடையுயெடுத்துநெய்பால் தேனிற்கொள்ள, போமடாகுன்மபெட்டுஞ் சூலையாறும் பொல்லாதவாய்வுமென்ற தெல்லாம்போச்சே. ௮௮

போச்சென்றமேகவகை யிருபத்தொன்றாம்- போகாதகயரோகஞ் சயரோகங்கள், ஆச்சென்றவாதமொடு வாயுசூலை - அஸ்திவெட்டை அஸ்திசுரமுஷ்ணவாயு, காச்சென்றபௌந்திரநோய் சதையடைப்புக்-கடுகடுத்தநீரிழிவு பிரமேகங்கள், தீச்சுட்டகருங்கற்போல் வெடிசூலைப்புண்-தீருமின்னம்பலவன்கநோய் திறமாய்க்காணே, ()

காணப்பாபற்பங்கள் செந்தூரங்கள்- கருதியேகொள்ளுதற்குக் கருத்தாய்க்கேளு, பூணப்பாஆவின்பால் நெய்யிற்கொள்ளப்-பொதரவாய்க்கொண்டவற்கு புவியின்மீது, ஆணவங்கள் மெத்தவுண்டாம் நாதங்கட்டும்-ஆகாதநோயெல்லா மகன்றுபோகும் கோணமுறுப்பத்தியமோ விச்சாபத்தியம் - கொண்டுவாபெண்மாய்கை தள்ளிநல்லே. ௯௰

நில்லென்றுசொன்னாலும் நிற்கப்போமோ- நீதியுள்ளரதிரோகஞ் செய்யார்செய்யார், வெல்லுவதார் விந்துவைத்தான மேலோரில்லை-விருதுபெற்றமௌனியல்லோ ஞானியாகி, அல்லவென்றயவரியுள்ளோர் நாதத்தைத்தா- னடக்கவறியாமனைந்து செத்தார்கோடி, வல்லவனேயானுக்கா லனுபோகஞ்செய்-மாதத்துக் கொருமுறையாய்மதித்துச்செய்யே, ௯௧

வாதத்தூக் கெட்டிவிளைத் தயிலம்,

செய்யுவேவாதமொடுவாயுசூலே - தீரவேயெட்டியி:-தயிலங்கே
ளு, பையவேசொல்லுகிறேனெட்டிக்கொட்டை-படிரண்டு அளந்து
மேயூறப்போடு, ஐயவேகல்லுரலி லிடித்துக்கமபோல்-அவ்வெடைக்
கு * வெள்ளுள்ளிசேர்த்திடித்து, உய்யவேதிருகுகள்ளிச் சாற்றலா
ட்டி-யுத்தமனேவில்லேதட்டி நிழலுலர்த்தே, ௬௨

* வெள்ளுள்ளி-வெள்ளைப்பூண்டு.

உலர்த்தியேபூப்படத்தில தயிலம்வாங்கு உற்றரசகர்பூரம் பல
மோகால்தான், அலர்த்தியேகுருவிலொருகாசுபோடு - அப்பனேபர
ணிதனிலடைததூடு, வலுத்துமேகாசெடைகான் தயிலங்கொண்
டு-வாகனலேகியங்கள் சூரணங்கள், பலக்கவேசேர்த்துநீ கொள்ளும்
போது-பயன்வருங்காண்பலநோயு மொருங்கேபோச்சே. ௬௩

போச்சென்றவனுபான மறிந்துகொண்டால்-பொல்லாதசூலேப
தினெட்டும்போகும், வாச்சென்றவாதமெண்பதும்போகும் வா
கானகிரந்திபதினெட்டுஞ்சாகும், காச்சென்றவலியையந்துங் குன்மமெ
ட்டுங் கரையடங்காவாய்வென்ற இருபத்தாறும் - கூச்சென்றமெய்க்
கடுப்போடுளேவுகுத்து குலேமுட்டுஉருத்திரனுங் கீலுவாய்வே, ௬௪

* சிவன்வேம்புத் தயிலம்,

வாயுவொடுசெருவநோயெல்லாந்தீர - மைந்தனேசிவன்வேம்புத்
தயிலங்கேளு, வாயுவொடுசிவன்வேம்பு சமூலங்கொண்டு- வளமாகநி
ழலுலர்த்திச்சூரணித்து, வாயுவென்றசூரணத்தோ டின்னமொன்று
வாலுழுவையரிசிசமன் கொண்டேநீதான், வாயுவென்றகருடனிட கி
ழங்குச்சாற்றால்-வளமாகவாட்டிமிக வில்லேதட்டே. ௬௫

* சிவன்வேம்பு-சிவனார்வேம்பு.

கட்டியேபூப்புடத்திற் றைலம்வாங்கு-கருப்பூரம்காற்பலந்தான்
பொடித்துப்போட்டு, கெட்டியாய்காசெடைதான் மண்டலங்கொள்-
கெணிதமுடன்மேற்பூசத் தீரும்நோய்கள், குட்டமொடு குஷ்டநோயு
ம்பெருவியாதி-கோளரியமேகவடிசூலேப்புண்கள், கட்டியுடன்வண்டு
கடி யுளேச்சல்குத்து-கரப்பனொடுசில்விஷங்கள் காணுதென்னே. ()

சிவன்வேம்புச்சூரணம்,

காணுதசிவன்வேம்புச் சூரணங்கேள்- கருதியேசிவன்வேம்புச
மூலங்கொண்டு,கோணுதகிழலுலர்த்திப் பலந்தான்பத்துக்-குறிப்பாக

கச்சங்கம்வேர் பலந்தான்ரண்டு, கோணாதவெள்ளைச்சாரணையின்வேரும் தூதுவளை மிளகருணை யமுக்கராவேர், கோணாதுவகைவகைக்குப்பலந்தான்ரண்டு-கொடிவேலிகொச்சிகருஞ் சூரைவேம்பே. ௯௰௭

வேம்புடனேதிரிகடுகுதிரிபலாதி-விதமானகார்போகி கரியசீரகம்,சோம்பானகடனுரையும் வசம்பிர்துப்பு செப்பரியகருங்காலிப்பட்டையோடு,கோம்பானமூலமொடு பரங்கிப்பட்டை-கோப்பிரண்டைகருவாகை * யூறற்பட்டை, சோம்பாகவகைக்கிரண்டு பலமாய்ச்சொன்னோம்-சொற்பெரியசிவனார்தன்வேப்புகேளே, ௯௰௮

* ஊறற்பட்டை-கிளியூறற்பட்டை.

கேளேநீயிவையெல்லா மொன்றாய்ச்சேர்த்துக்-கிரமமுடனிழலுலர்த்திச்சூரணித்து, தேளேநற்பாண்டத்தி லிட்டுவைத்தா - திருகுகள்ளிச்சாறுமவெள் ளாட்டுநீரும், வேளேநீபேய்க்குமட்டிச் சாற்றினோடும்-விதமான * தேகிச்சாறுவகைவகைக்கு, கேளேநான்வகைக்குஒருபடி தான்வார்த்து-குமுறவேவிரவினன்றாய் மூடிப்போடே ௯௰௯

* தேகிச்சாறு-எலுமிச்சம்பழச்சாறு,

மூடியேநாள்மூன்று புதைத்துவைத்து- மூசியாமலெடுத்துரவியுலர்த்திநன்றாய், நாடியேசட்டிதனிலிட்டுமூடி- நணுகியந்திசந்திவெருகடிதூளப்பா, மூடியேதூளதனையெடுத்துநீயும்- முன்சொன்னசிவன்வேப்புத்தயிலந்தன்னை, பாடியேகாசெடைதான் சேர்த்துக்கொள்ளப்-பதினெட்டுச்சூலைகுட்டங் குறைநோய்போமே. ௱

குறைநோயுமரையாப்பு மட்டகுன்மம் - குன்றாதவெட்டிச்சூலைசொறிசிரங்கு, கணையாதவாயுஞ்சந் திடுப்புச்சூலை-கைம்முடக்குக் கால்முடக்குக்கீலுச்சூலை, துறையானகிரந்திகுட்டம் சூழ்கரப்பான் தொடவாளைவிற்புருதி கண்டமாலை, பறையாதலிங்கபுற்று யோனிப்புற்று-பழுவாளையெழுவாளை கன்னப்புற்றே, ௱௧

புற்றானசிலந்திவகை காத்தவாயன்-புரையானகுழிவாளை யாறாப்புண்கள், எத்தானவண்டுகடி புடையன்பூரான் எலிகடியும் பலபல்வான்சில்விஷங்கள், நத்தானகண்ணோசிபக்கப்புற்று-நாவரட்சிபலபுற்றுப்பல்லரணை தானும், மித்தானவாய்வென்ற விருபத்தாறும்-மேகவகையிரண்டுபத்தும் விழலாய்ப்போமே. ௱௨

போமென்றவிந்தவகை நோய்கள்யாவும் - பொடியாகுங்காயசித்திமேவுமப்பாரு, வேமென்றஉலகத்தோர் பிழைக்கவேண்டி- வெளியாகச்சாத்திரத்தை விரித்துவிட்டேன், காமென்றவைத்தியரோ நூலைப்பார்த்துக்-கைம்முறையுஞ்செய்முறையும் கணக்கோடாய்ந்து, நாமெ

ன்ற அகச்செருக்கை விரும்பிடாதே-ாலிங்தோர்க்குமருந்தீய்ந்து நிருணையப்பற்றே. ௱௩

## கிராணிவகையாறுக்கும் வச்சிராதிகபாடம்.

பற்றவேகிராணிவகையாறுந்தீரப் பாடுகிறேன்வச்சிராதி கபாடங் கேளு, முற்றுனசாதிக்காய் கிராம்புபத்திரி-முனையானதிரிகடுகு திரிபலாதி, கொற்றமுள்ளமாபனையு மதுரமின்னங்-குரோசானி வால்மிளகுங் * திப்பிலியத்தி, குற்றமிலாக்கோஷ்டமொடு நாகப்பூவுங்-கூறவொண்ணுப் புகழ் 0 விடைய + மாஞ்சில்வித்தே. ௱௪

* திப்பிலியத்தி-யானைத்திப்பிலி 0 விடையம்-அதிவிடையம்

+ மாஞ்சில்-சடாமாஞ்சில்,

வித்தானைமிரு சீரகமுமல்லி-விதமானதாளிசமு * முத்சக்காசும், சத்தானமிடிலவங்கமோடுகூட சார்வானகாட்டாத்திப் பூவோடின்னும், அத்தானகசக்சா 0 கர்க்கடகசிங்கி-அனல்படமேர்தீர்ந்த+சடைவன்னிக்கற்பம், கொத்தானமருந்தினுட பட்டையோடும () கூவிளத்தின் பழத்தோடும் விளாவுங்கூட்டே. ௱௫

* முத்தக்காசு-கோரைக்கிழங்கு 0 கர்க்கடகசிங்கி- கடுக்காய்ப்பிஞ்சு.

* சடைவள்ளிக்கர்ப்பம்-சடைக்கஞ்சா,

() கூவிளத்தின்பழம்-வில்வப்பழம்.

கூட்டியேயபினேடுபுளியினேடுங் குணமானமாதுகொட்டைபருப்புமைந்தா, நாட்டியேவகைவகைக்குப் பலமேகால்தான்-நந்தாமற்சொன்னேங்காண் பிந்தாதேநீ, நீட்டியேயெல்லாமோர்கல்வத்திட்டு சேர்ப்பான ஆலரசுநாவலத்தி, வாட்டியேநீர்ப்பூலா வேருங்கொள்ளு-வளமான வொதியம்பட்டையுமாமன்றே. ௱௬

பட்டையாவாரைவேர் விடத்தோல்நெல்லி-பாங்கானவிலங்கைதவேர் பலவுங்கொண்டு, இட்டமுடன்வகைக்கிரண்டு பலந்தான்சொன்னேன் இடித்துமேயெட்டொன்றாய்க் கியாழஞ்செய்து, எட்டாதமுன்சொன்ன மருந்தையெல்லாம்-இளவறுப்பாய்ச்செய்துமுன்னே கியாழமூட்டு, மூட்டியேபெருங்காயங் கழஞ்சொன்றிற்கு- மூதண்டகல்வத்திலாட்டுவாயே. ௱௭

ஆட்டியொன்றாய்க்காயவைத் தடைவாய்மைந்தா - அன்புடனே தொன்னைதனி லகனையூற்றித், தோட்டியேகாய்கின்ற சட்டிக்குள்ளே தொன்னையுடன்மருந்தைநடு வைத்துமூடி, மூட்டியேதீயதனை மெதுவாய்வேக-முடிமண்ணுகீசெய்து முடிந்தபின்பு மாட்டியேபுரட்டிநன்றாய்வேகவைத்து-மருப்புடமெடுத்ததனைக் கல்வத்தாட்டே. ௱௮

கல்வத்திலிட்சிமுன் களையத்தாட்டி-களரவேயாட்டிமுன் தொன்னைக்குள்ளே, கல்வத்தில்முன்போலே மருந்தையிட்டுக்-காய்கின்ற சட்டிக்குள்வைத்துமூடு, நல்லவைத்துமுன்போலே வேகவைத்து-நலமாகயெடுத்ததனைக் கல்வத்திட்டு, எல்லைவத்துயிப்படியே யரைத்தரைத்து-எழுதரம்பாவனையாய்ச் செய்திடாயே. ௱௯

செய்திடவேசுண்டைக்காய்ப் பிரமாணந்தான்-திரட்டியேகுளிகைதன்னை நிழலுலர்த்தி, பைதுமேயனுபான மறிந்துகொண்டாற்-பறக்குமேயாறுவித கிராணியெல்லாம், பொய்துமே நற்பொன்னாங்காணிச்சாறும் - புகழானவுரைவேலின் பட்டைச்சாறும், எய்துமே கோரையிட கிழங்கின்சாறு ‡ இதமேதிதயிர்மோருந் தேனுமாமே.(

‡ மேதி-எருமை,

தேனொடுபச்சரிசி கழுநீர்சேர்த்துச்-செப்பியதோரிவ்வகையாமனுபானத்தில், ஆனென்றகிராணிவகை யினையறிந்து-ஆகதங்கநோயினனுபானங்கண்டு, கானென்றவெருவுண்டைபோட்டுமைந்தா-கைகண்டுபிடித்தாற்போற் கிராணியாகும், தேனென்ற வயிற்றுளைச்சற்சீழ்ரத்தம்-தியங்கியேயபானத்திற் கடுப்பும்போமே. ௧௧௧

கபாடலேகியம்

போமென்றகிராணிக்கு வச்சிரக்குளிகை புகழ்ந்திட்டே நின்னமொருலேகியங்கள், ஆமென்றசாதிக்காய் கிராம்புபத்திரி-ஆனைத்திப்பிலியோமம் * விடையங்கோஷ்டம், வாமென்றகசகசா சீரகந்தான் வால்மிளகுதாளிசமுங் குராசானிமற்றும், வாமென்றதிரிகடுகு திரிபலாதி + மதுரமொடுவெந்தியமுஞ் சிக்கியாமே. ௧௧௨

* விடையம்-அதிவிடையம் + மதுரம்-அதிமதுரம்

சிங்கியொடுமல்லியுந்தான் லவங்கபட்டை-திறமானகஞ்சாவுமாஞ்சிலேரும், சங்கியசோரகிலோடு காட்டாத்திப்பூ-தடவானதாமரையின் கிழங்கினோடு, இங்கிதமாம்விழலரிசி யிவற்றோடின்னும்-இதமானநீர்முள்ளிவித்துகூட, மங்கியதோர்கார்கோளி முத்தக்காசு-வழுத்தவொண்ணாத் தென்னைமரப்பானைப்பூவே. ௧௧௩

பூவானமாதளையின் வித்துங்கூடப்-பூலாவேர்க்கருவேலம் வித்தும்மைந்தா, காவானபெருமரத்தின் வேருஞ்செய்ய-கதியானபுளியின்விரைத் தோலுமாகும், பாவானமாங்கொட்டைப் பருப்புமாகும்-பகராரியகாட்டுக்குள் கருணைவேரும், மாலாவகைக்கிரண்டு பலமேசொன்னோம்-வளர்நிழலிலுலர்த்திச் சூரணந்தான்செய்யே, ௧௧௪

செய்திடவேயின்னமொருசெய்திகேளு தீக்குமுடவலாகுகாவலத்தி, ஐதிடவேமுள்ளிலவோ டொதியம்பட்டை-யப்பனோமுடக்கற்றான் வெள்ளைப்பூலா, எய்திடவேயிவைசமனா யிடித்துநன்று- வெட்டொன்றாய்க்கியாழம்வைத் திடித்துக்கொண்டு, பெய்திடவே யாவின்பால்படிதான்ரண்டு- பெட்புடனேபனைவெல்லம் பலந்தான்பத்தே. ககரு

பத்தானபாலோடுகியாழம்ரண்டு-பக்குவமாயடுப்பேற்றிப்பாகுசேரில், அத்தானசூரணத்தைக் கொட்டிக்கொண்டு- ஆவினெய்படிதானொன் றகிலேவாரு, முத்தாகக்கிண்டியதை மெழுகுபோலே- முதிராமலிறக்கிவைத்துத் தேனைவாரு, பற்றுமற்பார்த்துமே கிண்டிமபோது-பக்குவமாய்க்கெந்தக செந்தூரம்போடே. ககசூ

போடவேலோகசெந்தூரம்போடு-புகழாகவகைவகைக்கோர் பலமேபோடு, ஆடவேயிப்படி லேகியந்தானப்பா- அன்பாகநாளொன்றாக்கந்திசந்தி, வாடவேவேண்டாமண் டலமேபகொள்ளு- மகத்தானகிராணிவகையா றும்போகும், சாடிவருஞ்சீழ்க்கிராணி சலக்கிராணி சந்திரன்றன்கிராணியொடு மூலவாய்வே. ககஎ

மூலமாம்வாயுவென்ற கிராணிபோடும்- முனையானசுசிகா கிராணிபோடும், ஆலமாப்பாண்டுவகை கிராணிபோகும்-அசங்காதகிராணிகுன்மம் பித்தமேகம், சாலமாம்வாதபித்தம் வாயுநீங்கும் - தடுத்துவந்தசண்டாள மேகமெங்கும், சீலமாம்வயிற்கடுப்பு மூலகிராணி- தீங்கானநோயெல்லாந் தேங்குமபாரே. ககஅ

சயகாசத்துக்கு தூதுவளைகற்பம்.

பாரப்பாசயகாசமெல்லார்தீர - பாடுகிறேன் தூதுவளைக்கிருதந்தன்னை, நேரப்பா தூதுவளைச் சமூலஞ்சொன்னோம் -நிழலிலேயுலர்த்தித்தூள்பலந்தானாலு, சேரப்பாவழுதலையுங் கண்டங்காலி-சிறிதாகுஞ்சோரியுடனுடாதோடை, ஓரப்பாவகைபலந்தா னென்றுசொன்னோம்-உலர்த்தித்தூள்முன்மருந்தோ டொக்கச்சேரே, ககசு

சேர்ந்துமேதிரிகடுகுதிரிபலாதி-சிற்றரத்தைபேறரத்தை சிங்கிகோஷ்டம், கார்த்துமேசீரகமுங் கொத்தமல்லி-கசகசாசாதிக்காய் பத்திரிகிராம்பு,சார்த்துமேசூகைநீரக்கிராகாரம்-சண்பகப்பூவசம்பு மிருசீரகமுமதுரம், கோர்த்துமேநெற்பொரியும பருத்திவித்தும்- கெடிதானநெல்லிமுத்தம் விளாவினோடே. கஉ0

விளாவோடுநிலப்பனைவேர் முக்காவேளை-மேலான ஆவைசுகைகொந்திவேர்த்தோலுந்தான், அளவானசிறுதேக்குசெவியமாஞ்சில- அமுகா

ணைதாளிசப்பத்திரியுங்கூட்டு, மிளகோமூலமொடுதேவதார - விலகி லும்லவங்கப்பட்டையோடேலம், விளவாழைச்சுரட்டை கீழ்க்கால் நெல்லி - பேணிகரிசாலையுடன்பிரர்ய் முட்டியிந்தே. ௧௨௧

* அசுவகெந்தி-அமுக்குரு;

இங்தோடுகருங்காலி யிழுந்துகொற்றை - யிருவேலிதேள்கொடுக்கி மிருதணமுஞ்சங்கு, இந்தோடுபொடுதலையும் * குல்லிவேரும்- இதின் சார்வெட்பாலையும்வேலிப்பருத்தி, இத்தோடு ० சதாவேரிமணத்தக் காளி- யிவையெல்லாம்வஸ்திரகாய மதாய்ச்செய்து, இதனோடுமுன் சொன்னசூரணத்தில் இதமாகபணமகிழ்வுற்றெருக்கச்சேரே. ௧௨௨

* குல்லை - துளசி ० சதாவேரி - தண்ணீர்மீட்டான்.

சேர்த்துமேயின்னமொரு செய்திகேளு-செப்பரிய வாவின்பால வெள்ளாட்டின்பால், சேர்த்துமேகுமட்டிமா சனையின்சாறும்- தேசி யென்றபழச்சார்நெல்லிக்காய்சாறும், சேர்த்துமே * கூழ்ப்பாண்டம் ० குமரிச்சாறுந்-திகழரிய ‡ ஆமபற்சா + றுள்ளிச்சாறும், பார்த்துமே வகைக்குப்படி யளாதான்சொன்னேம்-பாலானவகைவகைச்சுப்படி தான்ரண்டே. ௧௨௩

* கூழ்ப்பாண்டம் - சாம்பற்பூசணி அதேகலியாணபூசணி,
० குமரி-கற்றாழை; ‡ ஆம்பல் - அல்லி, + உள்ளி-வெண்காயம்.

ரண்டானவிவையெல்லாந் தாளிசேரு-நயமானபனைவெல்லம் ப லந்தான்பத்து, கண்டானவெங்காளச் சீனிபலம் பத்து-கருவானபனை வெல்லம் பலந்தானைந்து, அண்டாதேகனாத்தொன்றாய்த் தாளிசேர் த்து-அடுப்பேற்றியோர்விறகா லெரியைமூட்டு, பண்டாதே சாமொல் லாம் வற்றக்காய்ச்சிப் - பதங்குழம்பாய்வருமளவிற் பிறண்டங்கொ ட்டே. ௧௨௪

கொட்டிடேயடுப்பேற்றிக் கிண்டுவாய்நீ-குறுக்கியே மெழுகுப தந்தீயாமற்பார், அட்டியேபதமான ஆவிநெய்யில்-அன்பாகவொருப டிதான்வார்த்துக்கிண்டு-திட்டமாய்மெழுகுபதம் வருதல்கண்டு-திற மானகொம்புத்தேன் றெளிவாகத்தான், ஒட்டிடேநீயகிழ்த்து உறுதி யாக உதவுமறைபடிவாங்கி யோகிவாறே. ௧௨௫

வார்த்திடவேயின்னமொரு வரிசைகேளு - வயித்தியரோயிம்மு றைகளறியார்காணார், ஆர்த்திடவேநாகபற்பம் வங்கபற்பம்-அரிதார பற்பமொடுபவளபற்பம், வார்த்திடவேவைலசக்சுக்காற் பலமேபோடு

* வழலையென்றகுருவிலொரு காசுபோடு, ஆர்த்திடவே யப்பிரேகச்
செந்தூரந்தா னதட்டியேயொருபலந்தான் கூடப்போடே. ௧௨௬

* வழலை-முப்பூ.

கூடவேபோட்டுநீ கணேசன்கந்தன்-குலவிடுநல்வடுகனையும் பூ
சைபண்ணு, வாடவேவேண்டாங்காண் தேவிபூசை- வளமாகச்செய்
துநீசாபந்தீர்த்து, சாடவேசெட்டியிலே பதனம்பண்ணு- சரியாகநெற
புடத்தி லிட்டுவாங்கு, பாடினேன்கொட்டைப்பாக் களவுநேரம்- பத்
தியமாய்மண்டலந்தா னுண்டுதேறே. ௧௨௭

உண்டிடவேவியாதிமா ரணத்தையோத-லையாதநோயாளிகளும
ந்தீரும், கொண்டிடவேசயகாசந் தொண்ணூற்றாறுங் - குத்திருமல்
நெட்டிருமல்குருகுருப்புச், சண்டியாமிளைப்பிருமலீளைகாசர்- தனிப்
பித்தமந்தாரகாசம் * கோஷம் தொண்டையிலேகுவளைக்கட்டு சிலே
ஷ்மகாசந்-தொலையாதவாதசயம் விழலாய்ப்போமே. ௧௨௮

* கோஷம்- இரைச்சல்.

விழலாகுமஸ்திசுர மஸ்திவெட்டை-வெண்மஞ்சட்காமாலைசோ
கைபாண்டு, விழலாகும்வாய்வுடனேசூலைகுன்மம்-மேகவகை கிரந்தி
யரையாபபுச்சூலை, விழலாகுமெய்க்குடைச்சல் கைக்குடைச்சல்-மே
லெரிவுகாந்தலுளைப் பிடிப்புச்சூலை, விழலாகும்கீர்சூலை யண்டவாத
ம்-வீறானநோய்களெல்லாம் நீறாய்ப்போமே. ௧௨௯

பேர்மென்றபாண்டுகாமாலைசோகை-போகவேகரிசாலைமேலகியங்
கேள், தேமென்றகரிசாலைசமூலங்கொண்டு-திடமாகநிழலுலர்த்திச்சூ
ரணித்து, நாமென்றபலம்பத்து நிறுத்துவைத்து- நலமானகடுக்காயு
ம்நெல்லிதான்றி, வேமென்றதிரிகடுகுமிரண்டுசீரம் - விதமானதாளி
சையுமோமமாமே. ௧௩௦

ஓமமோடதிமதுரங் கொத்துமல்லி-யுற்றதொருவசம்பொடுலவங்
கப்பட்டை, ஓமமொடுசடாமாஞ்சி சிங்கிகோஷ்டம் - ஒளிவானநாகப்
பூவகிலுங்கூட, ஓமமொடுமரமஞ்சள் முட்காவேளை-உண்மைபெற்ற
சாதிக்காப்பத்திரிகிராம்பு, ஓமம்வாய்விளங்கமொடுதகரவித்து-உரை
யானவெட்பாலை * சிறுவிளாவேரே. ௧௩௧

* சிறுவிளா-குட்டிவிளா.

வேரானவெட்டிவிலா மிச்சமுன்னை-வில்வவேர் விளாம்பழத்தி
னோடுங்கூட, பேரானதழுதாழை பொன்னாங்கண்ணி-பெரியதொரு

நாய்வேளைகீழ்க்காய்நெல்லி, வீறானசிற்றாமுட்டி பேராமுட்டி *வீழி
சங்குமுசுமுசுக்கை யமுக்கராநொச்சி, பாரானநெருஞ்சிசெருப்படை
யின்வேரும்-பலமானகாட்டிலவிலக் குறிஞ்சிவாமே ௧௫௨

* வீழி-விழுதி.

வாமென்றநிலவாகை விஷ்ணுகாந்தி-வன்முருங்கை பெருமருந்
துங்காட்டுமல்லி, வேமென்றசிறியவா னாழைையோடு -வெட்பாலை ய
ரிசிமுத்தம்பேரீத்தோடு, தாமென்றமுந்திரிவேர் சித்திரமூலஞ்-சாற்
றுசிறுதேக்குமொட் டரும்பாவாரை, தோமென்றஆல்விழுது தென்
னம்பாளை-துணையானசெங்கழுநீர் மூலந்தானே. ௧௫௩

தானென்னெய்தலொடு மூலவேருந் தனிவெட்டிவேருந்தா மரை
யின்வேரும், கானைதும்பிமாம் பழத்தினோடு * கங்கைமீட்டான்பே
ய்ப்புடலும் பூமிச்சருக்கரை, கோனைவெள்ளருகு காட்டாளிக்கிழங்
கு-கூர்முருங்கைப்பூவுமா தளையின்பழமும், தேனைசிறுபச்சைசப்ப
யறிலுப்பை-திகழும்பூதாமரையின் கிழங்காமென்னே. ௧௫௪

* கங்கைமீட்டான்-தண்ணீர்மீட்டான்.

என்னவேவகைக்குவகைப் பலந்தானொன்று- இளவறப்பாய்ச்
சரக்கையெல்லாஞ் சூரணித்து,கன்னவேரவியுலர்த்தி மருந்தோடொ
க்க-கலந்துவைத்தே யின்னம்வகை கருதிக்கேளு, பன்னவே நீர்முள்
ளி கரிசாலையின்னம்-பருவேப்பம்பட்டையொடு நெல்லிப்பட்டை, வ
ன்னமொருநாவலத்தி யொதியம்பட்டை- வாகானஆல்விழுது கூடக்
கூட்டே. ௧௫௫

கூட்டேநீகிளியூறற் பட்டைமார்தா-குல்லையொடுகீழ்க்காயின்நெ
ல்லிப்பட்டை, நாட்டேநீகார்கூந்தற் பட்டையோடு-நன்னாரிதன்னுட
னேயாடாதோடை, காட்டேநீசீந்திலொடு பேய்ப்பிரப்பன்-கனமான
கூழ்ப்பாண்டம் வெள்ளரியின்வித்தும், மாட்டேவாழைப்பூவும் சிறு
கீரைதானும்-மாவரசும்நாணலொடு * கையானுமே. ௧௫௬

* கையான்-கரிசலாங்கண்ணி.

ஆமேதான் * கருப்பம்வே ராவின்வேரு-மடைவானநெல்லிவே
ர்குமரிவேரும், தாமேதான்தொட்டிவேர் ० காக்கைவேருந்- தனியா
னமுடக்கற்றான் வேருந்தானும், போமேதானுமூலாத்திகோதைத்த
ண்டும்-பிரமியொடுதழுதாழை ‡ வெள்ளீண்டாகும், நாமேதான்பே
ய்க்குமட்டிசூரிகெந்தம்-நலமானவகையொன்றிற் பலந்தானைந்தே. ()

* கருப்பம்வேர்-கரும்பின்வேர் ० காக்கைவேர்-காக்கணன்வேர்

‡ வெள்ளீண்டு-வெள்ளைப்பீயச்செடி.

ஐந்தாகச்சரக்குவகை யெல்லாம்வாங்கி-யருங்கல்வத்திடித்து ஒருபாண்டத்திட்டு, சிந்தாதேயிருதூணி நீரும்விட்டுத்-திறமாகவெட்டினிலொன் றாக்கிக்கொண்டு, குன்றாதேகியாழத்தை வடித்துவாங்கிக்-குமட்டிமாதளையின்பழச் சாறேநாழி, நன்றான *நிம்பச்சார்படிதானென்று-நல்லாவின்வெள்ளாட்டுப் பாலுங்கேளே. கஙஅ

* நிம்பச்சார்-எலுமிச்சம்பழச்சாறு.

கேளேநீவல்லாரை பளியரைச்சார்-கிரமமுடன் வகையொன்றிற்படிதானென்று, பாளேநீயளந்துமுன் கியாழத்தூட்டிப்- பரிந்தடுப்பிலேற்றிச் சர்க்கரைபலந்தான், நாளேநீயைந்தாகப் போட்டிஞ்சிச்சார்-நாழிவிட்டு அகப்பையினாற் கிண்டக்காய்ச்சு, சூளேநீகுழம்பானாற் சூர்ணத்தைத்-தூவிக்கிண்டாவிநெய் படிதான்வாரே. கஙகூ

வாரேநீமயனம்போற் கிண்டிவாங்கு-வளமாகமெழுகுபதம்வருதற்பார்த்து, காரேநீகருகாம லிறக்கிவைத்துக்- கலங்காமலொருபடி கொம்புத்தேன்வாரு, பாரேநீயத்தனையும் போதாவிட்டால்- பக்குவமாயாவினெய்பின்னுங்வாரு, சேரேநீநெய்வார்த்துக்கிண்டும்போது-திரிலோகசெந்தூரம் பலந்தான்ரண்டே. கச0

ரண்டோடுகாந்தச்செந் தூரம்போடு-நல்லகர்ப்பூர சிலாசத்துப்பற்பம், மூண்டாதேயொருபலந்தான் போடுமுன்னே- மொழிந்தமுட்பூக்குருவிலொரு கழஞ்சுபோடு, தண்டாதேயிவையெல்லாம் போட்டுக்கிண்டிச்-சாடிதனிலிட்டுநேக் புடந்தான்வைத்து, கொண்டிடவே நாளொன்றுக்கந்திசந்தி - கொட்டைப்பாக்களவாகக் கொள்ளுகொள்ளே. கசக

கொள்ளேநீநாடோறுந் தப்பாமற்றான்-கூறுகின்ற பத்தியமோ இச்சாபத்தியம், நள்ளேதான்புளிபுகையும் பெண்ணுமாகா-நன்மீனும்பச்சைமாங் கிஷமுளாகா, உள்ளேதானெவ்வொன்று மாகாதப்பா- உத்தமனேபத்தியமாய்க் காக்கச்சொல்லு, விள்ளேதானாகாத நோயறிந்து-வீறாகமருந்தீந்து வயித்தியம்செய்யே. கசஉ

செய்யேதான்பொல்லாத நோய்களெல்லாந்-திறமாக மண்டலந்தான்கொண்டாயானால், நையாதகாமாலை சோகைபாண்டு- நந்தாக்ஷயரோகம்போகும்போகும், மையாததெண்பாண்ட மாறிப்போகும்-வளமானகவசியுமுள் மாந்தைபோகும், பொய்யாதபீலிபெரு வயிறும்போகும்-பொருமகோதர * மாம்பற்கௌசிபோமே. கசங

* ஆம்பல்-நீராம்பல்.

கௌசிபோம்பாண்டுவகைக் கிராணிதீரும்-கனமானஉப்பிசமக் கினியாமாந்தம், கௌசிபோம்பித்தரோகங்காமாலை-கனவெட்டைகா லெரிவுகையெரிவும், கௌசிபோமஸ்திசுரமஸ்திவெட்டை-கதிகெடுத்தவரோசிங்க ளன்னதோஷம், கௌசிபோம்நீரிழிவு மீளைபோகுங்-காணாதவாதமெல்லாங் கலங்கிப்போச்சே. ௧௪௪

* வெட்டை-பித்தவெட்டை.

o வாயிலப்பு-வாயூறல், மகோதரம்-நீர்க்கோவை.

கொண்டைச் சலக்கோவை யிவைகளுக்கு மருந்து.

போச்சென்றவாயூறல் வாயிலப்பு-போகவேயின்னமொரு சூட்சங் கேளு, காச்சென்றவல்லாரை யொருதலைவெள்ளுள்ளி- கசக்கியேவாயிலிட்டுமெல்லத்தீரும், வேச்சென்றவிம்முறைதா னுருஞ்சொல்லார் வெசுறுக்காய்நெய்யாகும் விரும்பிப்பாரு, காச்சென்றமகோதரம் நீர்க்கோவைபோகக்-காட்டுகிறேனுட்டுக்குள் பாட்டுங்காணே. ௧௪௫

காணவேரும்மட்டிக் காயைவாங்கிக்-கத்திகொண்டுபதினாறு கீற்றாய்க்கீறி, காணவேயைந்துவகை லவணமூட்டிக் - கலசத்திலிட்டடைத்துஆவிகொட்டடங், தோணவேபுதைத்ததன்பின் னதிலேதாக்குத்-தூயவேபட்சமொடு சென்றுவாங்கு, ஆணவேநாளொன்றுக் கொருகீற்றப்பா-அருந்தியேபத்தியமா யிருந்திடாயே. ௧௪௬

இருந்திடவேமகோதரமும் விஷநீர்கோவை - இனிதானசலக் கோவை யாம்பற்கௌசி, அருந்திடவேயிவையெல்லாந் தீருஞ்சொன்னே - லப்பனேயின்னமொரு விபரஞ்சொல்வேன், பொருந்தியே யெள்ளுப்பூத் தொக்கினோடு-புகழ்பச்சைக்கருவாடு மாதளையுங்கூட, அருந்தவேயிலையதனை யிடித்துப்பின்பு-அவித்து மூன்றுநாளுண்ணக்கோவைபோமே. ௧௪௭

* கோவை-சலககோவை.

போமென்ற காய்ச்சலொடுகட்டிகெண்டை-பொருமலோடுஉப்பிசங்கள் போகச்சொல்வேன், தேமென்றசாதிக்காய் கிராம்போடேலம்-திரிகடுகுபெருங்காயம் வெள்ளைப்பூண்டு, வேமென்றகார்போகி கரியசீரம்-விருதானதேசாவரங் கல்லுப்போடு, நாமென்றசவுட்டுப்பு விந்துப்போடு-நவாச்சாரம்வகைசமனாய் நாய்வேளையே. ௧௪௮

நாய்வேளைச்சாறதனா லரைத்துநன்றாய்-நாள்மூன்றுநிழலுலர்த்திப் பின்னுங்கேளு, நீவேளைச்சாற்றினால் மூப்பாலாட்டி-நிழலுலர்த்தி நாள்மூன்றுசென்றபின்பு, ஆபவேயெடுத்துமுன்போற் கல்வத்திட்டு

அச்சாற்றுலாட்டிமுன்போ னிழலுலர்த்தி, தோராவேசூரணமாய்செய்துகொண்டு-துலங்கவேயானுபான மறிந்திணங்கே. கசகூ

இணங்கவேகரப்பானு மேழுமெங்கே-என்மக்காள்பெண்மலடு உண்டோசொல்லு, வணங்கியேயிம்முறைதா னறியார்மாந்தர் - மலடென்றும்பிள்ளையில்லை யென்றுமாய்வார், குணங்களைத்தான்சொன்னேன்வைத்தியரேகேளீர், கூறுகெட்டலையாதீர் குறிப்பாய்பாரீர், குணங்களாமேகவகை யெலலாந்தீரக்-கூறுகிறேனின்னமொரு எண்ணெய்கேளே. கருய

மேகத்துக்குக்கிருதம்.

எண்ணெயாமிளகருணை வெள்ளைச்சாரணைவேர்-இதமானமுந்திரிவேர்முருங்கைவேம்பு-தண்ணவேகுமரிமர வள்ளிசீந்தில்-சலந்திரட்டிகரிசாலை பொன்னாங்காணி,விண்ணவேயமுக்கிரா சங்கங்குப்பி-வெள்ளீண்டுநீர்ப்பூலா வீழியோடு, திண்ணமாம்நிலப்பனைவேரத்திப்பட்டை-சிறுவிளாவெள்ளறுகு வல்லாரையாமே. கருக

ஆடையாமுடக்கற்றானகத்தியோடு - அப்பனேவகைக்கிரண்டு பலந்தான்சொன்னேம், ஆரையாமகத்துயது சமூலங்கொண்டு- அழகாகஇடித்திடுவாய் பலந்தான்பத்து, சேரவேயொன்றாக இடித்துமைந்தா செல்லுமொருதாழியிலே சலந்தான்கேளு, வேரையான்சீரகமும் பலந்தானெட்டு வெந்தயமோர்பலமெட்டு மதிலேபோடே. கருஉ

போட்டுபதினாறுபடி சலந்தான்வாரு-போக்கோடே யடுப்பேற்றிஎட்டொன்றாக்கி, ஆட்டுநல்லஅடுப்பிறக்கியாரவிட்டு - அழகானகியாழத்தை யிறுத்துவாங்கி, தீட்டியேகியாழந்தானளவுகண்டு * சிற்றேரண் டெண்ணெய்படிரண்டுவாரு, காட்டியிருள்ளிச்சார் படியிரண்டு காராவின்பாலிரண்டு கல்நாரெட்டே. கருங

* சிற்றேரண்டம்-சிற்றாமணக்கெண்ணெய்.

எட்டானகல்நாரைவஸ்திரகாயம்-இதமாகச்செய்ததிலே போடுபோடு, மட்டானராயபுரிச் சர்க்கரைதானெட்டு- வாகாகப்போட்டதிலே கிண்டிக்காய்ச்சி, இட்டமாய்ப்பாலோடு கியாழம்வைத்து- எண்ணெயாய்மெழுகுபதமாகக்கிண்டி, தட்டியேகற்கத்தோ டிறக்கியாறுசாமமிட்டுமூடியேதா னியப்புடம்வையே. கருச

வைத்துமேபட்சமொன்று கழித்துவாங்கு - மைந்தனேநாளுக்கோர்கரண்டிவீதம், உயர்ந்துமேதினந்தோறும்கொண்டாயானால்-

ஓடுகிறநோய்களை நீயோர்ந்துகேளு, மெய்த்தொருமேகங்க ளிரண்டுப த்தும்-மேலானகிரந்தியரை யாப்புக்கட்டி, கைத்ததொருஅஸ்திசுரம ஸ்திவெட்டை-கரப்பானொடுசிறங்குசொறி மேகம்போமே. ௧௫௫

மேகமொடுநல்வகையாம் பிரமியங்கள்-வெண்குஷ்டம் தாமரைக ள்மேகவூசல், மேசழுறாட்பித்தவாயு உஷ்ணவாயு - மெய்யெரிவுகை எரிவு காலெரிகாந்தல், மேகமாம்வாயுவொடு அண்டவாதம்-மெல்லி யர்கள்கெர்ப்பநோ யேழுந்தீரும், மேகமாமலடிகட்கும் பிள்ளையுண் டாம் விருத்தானவயித்தியரே விரைந்துபாரே. ௧௫௬

விரைந்துபார்வாதமாஞ்சீரமானல்-விரும்பித்தேன்தனிலேவெரு க்கித்தூள்வை, கரைந்திடவேவுஷ்ணமாஞ் சீரமானல் - மாசற்றஆ வின்னெய்தனிலேயூட்டு, கரைந்திடவேகாய்ச்சலொடு கென்னைடகட்டி கலங்கியேபுண்ணைவிட் டோடும்பாரு, குறைந்திடவேநோய்களெல்லா ங்கூறிட்டோடுங்-குவலயத்தில்லைககண்ட வித்தைபாரே. ௧௫௭

## குமட்டிக்காய்த்தயிலம்.

பாரப்பாசருவநோய் வெருவியோடப்-பாடுகிறேன்குமட்டிக்கா ய்த்தயிலத்தன்னைச், சேரப்பாகுமட்டிச்சார்படிவிரண்டு- சிற்றேரண் டத்தெண்ணெய்படியிரண்டு, ஆரப்பா ஆடாதோடை படியோரண் டு-அவுரியுடன்திருகுகள்ளிவீழிச்ஞ்சா, வேரைப்பாகழற்சிமுடக்கற்று ன்கூட-வேம்பின்பட்டைச்சாறும் வகையைக்கேளே. ௧௫௮

வகைவகைக்குப்படியொன்று அளந்துவாரு-வாகானவெண்மறி னீர்ப்படிதான்பாதி, தகையானவெருக்கினிட பழப்புச்சாறு ௦ சது ரமாக்கள்ளிப்பால் வண்ணமாகும், அகமானவிவையெல்லாம் பாண் டத்திட்டு-அடுப்பேற்றிக்குருகிளரும் பருவந்தன்னில், மிகவானதிரிக டுகுதிரிபலா தி-வெண்காரமிந்துப்பு ‡ விளங்கமாமே. ௧௫௯

* வெண்மறி-வெள்ளாடு ௦ சதுரமாங்கள்ளி-சதுரக்கள்ளி

‡ விளங்கம்-வாய்விளங்கம்.

விளங்கமாம்வெண்கடுகு கடுகுரோணி - விருந்தானகருஞ்சீரகந் தான்கூட, விளய்கவேங்வாச்சாரம் சத்திச்சாரம்-மேலானஎவாச்சார ம்வளையலுப்பு, களங்கமாமத்திதிப்பிலியுமூலங்- சல்லானமரமஞ்சள் கனகல்லுப்பு, அளக்கமாம்வகைவகைக்கு பலமோவொன்று- அப்ப னேகல்வத்தி லரைத்துப்போடே. ௧௬௰

அரைத்துமேகரைத்தந்தக் கியாழங்கற்க - மப்பனே யடுப்பேற்றி எரித்துக்காய்ச்சு,வரைத்துமேமெழுகுபத மதனைப்பார்த்து - வடித்

துனீவாங்கியேதான்பதனம், மண்ணுஅரைத்துமேதானியடம்வைத்துமூடி-அடைவாயோர்மண்டலந்தான்சென்றபின்பு அரைத்தோமேநாளொன்றுக் கொருகரண்டி-யுத்தபனேயுண்டுவர வுறுதியாமே.

உறுதியாம்நாள்மூன்று கொள்ளுபத்தியம்-உப்பாகாதாறுநாள் பத்தியங்காரு, இருகியாமேழாநாள் தலைநீர்வார்த்து-எட்டாநாள்பற்றதெல்லாங்கூட்டுகூட்டு, பிறிதியாந்தீருகிற நோயைக்கேளு - மேகசிவாயன்னுவாயுவென்ற விருபத்தாறும், அறுதியாம்நீராமைமமகோதரங்கள்-அஷ்டகுன்மம்பேராம்ப லனைத்தும்போமே. க௱உ

அனைத்தும்போமுறுதியாம் நீர்க்காலைபோகு - மடல்கட்டிகெளசிமுதல் செண்டைபோகும், மனந்துள்ளேயுறுகோழைபொருமல்போகும்-வாயிறுற்றவுப்புசரோம வாடிப்போமே, கனத்தபெண்கட்குற்றகர்ப்ப நோய்களேழும்-கதித்தோட அவன்குளித்த மூன்றாநாளில், தனத்தமுடன்நாளொன்றுக் கொருசரண்டி-தயவாகக் கொடுத்துவரச் சார்புங்கேளே. க௱௩

சார்பென்னாலநாளாறப்போட்டுத்-தாரபர்மைந்தாநாள் தலைநீர்வார்த்து, சார்பென்னசாத்தியொடு ஓமத்தாலே-தானமதுசெய்வித்துக்கிரகசாரம், சார்பென்னிலைவையெல்லாந்தீரச்செய்து - தனியேமூநாளிலநாயானைச்சேர, சார்பென்ன இன்னமொரு சூட்சம்பாரு-தலைமைபெறும்வயித்தியரே சாற்றக்கேளே க௱௪

சாற்றக்கேள்சருவநோயெல்லாந்தீரும் - சாத்தரசகர்ப்பூரம் விராகனுலு, மாற்றக்கேள்ரசிச்சார் முசுமுசுக்கை-வண்சாற்றுலேருசாமங்கருக்குப்போடு, போற்றக்கேள்சுருக்கிட்ட கர்ப்பூரத்தைத் - பாகமுந்தெண்ணெயிற்போட்டுச் சுகமதாக,தேற்றக்கேள் தானியப்புடம்வைதெடுத்துத்-தேங்காதெசாபத்தை நிவர்த்திசெய்யே. க௱௫

செய்யேசண்முகற்குங் கணேசருக்குந்-தேவிக்கும்பிரமான வடுகனுக்கும், செய்யேநீபூசைமுதலானதுலைத்து- சேர்ந்தநவசித்தருசாபந்தீர்த்து, செய்யேநீமனங்களித்து வயித்தியந்தான் - தேசத்தோர்புகழ்வோர்கள் வெகுமானங்கள், செய்துமேமகிழ்வார்கள் மைந்தாவுன்னைத், தீராதரோயுண்டோ செப்பக்கேளே. க௱௬

## பஞ்சலவணபற்பம்.

செப்பக்கேளோர்பஞ்சலவணபற்பம்-தெளிவான நாலறிந்தோர்சொல்லார்சொல்லார், மெய்ப்பாகஐந்துவகை லவணமெல்லாம்- விதமானவகைவகைக்குப்பலந்தானொன்று, தப்பாமல்கல்வத்திலோன்

றாய்ப்போட்டுச்-சார்வாகமைபோலப் பொடித்துப்பின்பு,கப்பாகப்பிரண்டைச்சார் * முருங்கைச்சாருங் - கனமானமேனிச்சார் நொச்சிச்சாரே. ௧௬௭

* முருங்கைச்சார்-முருங்கைபட்டைச்சார்.

சாறுணகுமரிச்சார் வகைவகைக்குச்-சாமமொன்றாய்விட்டரைத்துவில்லைதட்டி, வீறாகரவியுலர்த்திப்போட்டிவிட்டு - மேலோடுமூடியேசீலைசெய்து, கூறாகப்பத்தெருவிற் புடத்தைப்போடு-குணங்கெட்டுஅலையாதே லவணபற்பம், யாறுமலெடுத்துப்பிங்காளிலிட்டு- வளமானபெருங்காயம் நாலத்தொன்றே. ௧௬௮

ஒன்றாகச்சேர்த்ததிலே தேனைவாரு-உறவுடனேமத்தித்து வைத்துக்கொண்டு, கன்றாய்ப்பாளொன்றுக்குக் கழஞ்சுவீதங்- நன்மையுடனிருநேரங் கொள்ளுகொள்ளு, குன்றாதவாப்வெங்கே வாதமெங்கே குந்தலொடுகுடைச்சல்வலி கடுப்புச்சூலை, அன்றானவாயுசர்த்திமேக மெல்லா-மண்டவாப்வெல்லாந்தா னகன்றும்பாமே. ௧௬௯

போமென்றவாதபெண் பதுவுஞ்சூலை-புகழானசூலையது விருபத்தாறும், ஆமென்றஅட்டகுன்மங் கிராணியாறு - மந்திரமாம்வாயுவொடுருத்திரவாப்வு, சோமென்றகுண்டலமாம் வாயுவெட்டும்-குடல்புரட்டோடுஷ்ண முப்பிசமுமந்தம், ஆமென்றவிவ்வகையாம் வியாதியுள்ள-அசையாதமகோதரமு மகன்றும்பாமே. ௧௭௰

அரையாப்புகிரந்திசூலை முதலியவற்றிற்குமூலிகை.

அசையாதஅரையாப்புக் கிரந்திக்கெல்லா-மறைகிறேன்மூலிகையிலப்பாகேளு, திசைபாதசங்கங்குப்பி * நாயிலைச்சார் திருகாணகள்ளிச்சார் ஆவின்பாலும், வசையாதநல்லெண்ணெய் சமனாய்க்கொண்டு-மயங்காமல்மூன்றாநாளாறுவேளை, நசையாதநேரமொன்று படிகால்விதம்-நல்கிக்கொண்டுவரப் பத்தியங்கேளே. ௧௭௧

* நாயிலை-இலைகள்ளி.

கேளப்பா ஆவின்பால் வெள்ளாட்டின்பால்-கெடியானவெள்ளீராமற்றொன்றாகா, ஈளப்பாஎழாநா ளுப்புவறுத்துண்ணு-நலமாகத்தலைமுழுகி யெல்லாங்கூட்டு வேளப்பா அரையாப்பு * கள்ளிப்பூக்கிரந்தி - விதமானஅரிக்கிரந்தி சொறிக்கிரந்தி, சூளப்பா பண்புரைகள் கைகால்பிடிப்புச்-சூலைமுதல்ரோகமெல்லாந் தீர்ந்துபோமே. ௧௭௨

* கள்ளிப்பூக்கிரந்தி-கள்ளிப்பூப்போலும் நிறமுள்ளகிரந்தி.

தீர்ந்துபோம்கர்ப்பூரஞ் சேர்த்துக்கொள்ளு-தீருமப்பாவாதமுதல்வாயுசூலை,தீர்ந்துளபாய்பிரமேகம் வெள்ளைவிழுதல்-தீராதகிரந்தி

புண்கள் பிளவைப்புற்று, தீர்ந்துபோமேகத்தி லெடுத்தரோகஞ்-செப்பாதேயொருவருக்குந் திறமைமைந்தா, தீர்ந்துபோம்பித்தவகை அமீராசியங்கள்-தீரவேசொல்லுகிறேன் சூட்சங்கேளே. (௱௭௩)

வல்லாரை - மூலிகை.

சூட்சமாம்வல்லாரை கொண்டுவந்து-சுகமாகமிளகுகள்ளி வொக்கச்சேர்த்து, சூட்சமாமென்றுதின்னக் காலமேதான்-சுளுவாகவாய்க்கசப்புவாய்நீராதல், சூட்சமாயிவையெல்லாம்போகும்பாரு-சொன்னதொருபச்சிலைதான்பொய்யாதப்பா, சூட்சமாம்வயித்தியர்களறிவாரின்னூல்-சொல்லுதற்குநாவுண்டோ மெய்யாம்பாரே. (௱௭௪)

சேங்காட்டை - மூலிகை.

பாரப்பாமகத்தான *சேங்கொட்டைதன்னைப்-பாடுகிறேன்மேகவகை கூட்டந்தீர, நேரப்பாசேங்கொட்டை ரத்னமரந்தான்-நிகரில்லாநோய்களுக்குக் காலன்காலன், சூரப்பாகொட்டைபலமிருபத்தொன்று-சுத்திசெய்துமூக்குவெட்டி வேறேவைத்து, ஆரப்பாபரங்கிப்பட்டை வெள்ளைப்பாகாய் - ஆவின்பால்சுத்திசெய்து பலமும்பத்தே. (௱௭௫)

* சேங்கொட்டை-சேராங்கொட்டை.

பத்தானநெல்லிமுள்ளி தான்றிக்காயும்-பரிவானவிரைபோக்கிப் பலன்தான்பத்து, நத்தானைசுக்கோடு சிற்றரத்தை-நலமானசடாமாஞ்சி சன்னலவங்கம், முத்தானவகைக்குப்பல மேழரைதான்-முனையானகடுகுரோணி *பனைவெட்பாலை, நத்தாகச்சிவன்வேம்பு பலமேரண்டு-நற்சாதிக்காய்கிராம்பு பத்திரிதானே. (௱௭௬)

* பனை - நிலப்பனை.

பத்திரியுமிளகேலமோமந்திப்பிலி-பரிவானசெவ்வியமுந்திப்பிலிமூலம், வைத்ததிபாக்கார்போகி கொத்துமல்லி-வாய்விளங்கங்கருஞ்சீரம் சித்திரமூலம், கொத்தறிபாக்குங்குமப்பூ சிறுவாலுழுவை-கோரோசனைதன்னுடனே யமுக்கருவேர், நத்தறியாவிவையெல்லாஞ்சேர்த்திட்டொன்றாய் நலமானவிளவறுப்பாய்ச் சூரணந்தான்செய்யே. (௱௭௭)

செய்துமுன்சுத்திசெய்த சேங்கொட்டைதன்னைச் - சிறப்பாகவெடுத்து பின்னுமறுசுத்திகேள், செய்ததொருபுளியிலைச் சாற்றதனிலவித்துச்-செயலாகக்குமரிச்சாற் றதனிலோர்நாள்தான், செய்தவித்து இளநீரோர்நாளவித்துச்-செய்துலர்த்திசீலைசுற்றி பெருமைச்சாணம், செய்தேழுதரம்செய்து திறமாய்மைந்தா-செயலாகயிப்படியே செய்யே செய்யே. (௱௭௮)

செய்தகோட்டைதனையொன்றாயிரண்டாய்வெட்டி-சேர்ப்பாக இருநாழி நெய்யிலிட்டு, நெய்வந்துசிவந்துவரும் பதத்திலப்பா-நேய முடன்நெய்தன்னை யிறுத்துக்கொண்டு, ஐவந்தகோட்டைதன்னை யாவின்பால்தான்-அப்பனேயிருநாழி விட்டுக்காச்சு, பையவேநெய் பதமாய் வருகும்போது-பக்குவமாயிறுத்தின்னம் பகரக்கேளே. ()

கேளந்தகோட்டைதனை யரித்தெடுத்துக்-கிரமமுடன்போட்டு முன்போல் நெய்யைவார்த்து, கேளந்தத்தண்ணீரும் பாலும்ஒன்றா ய்ச் - சிவக்கவேவெந்துவரும் பதத்தைப்பார்த்து, கேளந்தராயபுரி சர்க்கரையோமைந்தா-குணமாக மூன்றுபத்து பலந்தான்மிக்க, வே ளந்தமுருகனையுங் கணேசன்பாதம்-வீழ்ந்தன்பாய்துதித்துநீ மதித் துப்போடே. (௱௮௰)

போட்டுநீகிண்டிவர அடிபற்றாமல்-புகழாகப்பாகுபதம்பார்த்து ப்பற்பம், போட்டுபலமாகச்சேர்த் தொன்றாய்க்கிண்டிப் - போதித்த பதம்பார்த்து நெய்யைவார்த்து, சூட்டுமேற்கருகாம லடிபற்றாமல்- துரிதமுடன்மெழுகுபதந் தன்னைப்பார்த்து, வாட்டியேயிறக்கிநீ யா றவைத்து-வளமாகத்தேனைமிக வார்த்துக்கிண்டே. (௱௮௧)

கிண்டியேகணேசன்முன்னே வைத்துப்போற்றிக் - கெடியாகச் சாடியில்தா னிறப்புடம்போட்டு, அண்டிநைவேத்தியத்தோ டுபசா ரஞ்செய் - தவர்கையால்தரச்சொல்லி வாங்கிக்கொண்டு, தண்டியே பொருளெல்லாந் தருமஞ்செய்நீ-தப்பாமல்தேவிவடுகனையும்பூசி, ம ண்டியேதீராத நோய்தானுண்டோ-மண்டலந்தானிருநேரங் கொள் ளுகொள்ளே. (௱௮௨)

கொள்ளுநீகோட்டைப்பாக்களவுமேதான்-கூறுனபுளிபுகையும் பெண்ணுந்தள்ளு, கள்ளகாங்கரப்பனென்ற பித்தம்போகும்-கனமீ ன்பதார்த்தமொடு மோருந்தள்ளு, விள்ளவேநாளுநாள்விட்டுமப்பா- விருதானவிளக்கெண்ணெ வைத்துமூழ்கு, மெள்ளவேமண்டலமிப் படிதான்செய்யில்-வீழ்த்திறங்குநோயெல்லா மொழிந்துபோமே. ()

நோயேதுமேகமென்ற திருபத்தொன்றும்-நோக்கரியாக் கிரந் திபரையாப்புச்சூலை, நோயேதுபதினெட்டுக் குட்டமோடும்-நுவலரி யவாயுவென்ற திருபத்தாறும், நோயேதுபிரமியங்கள் வெள்ளைவீழ் தல் நுட்பக்கால்முடக்குங்கைமுடக்குச்சூலை, நோயேதுவாதபித்தங் கடுப்புக்குத்தம்-நுணுக்கமாமேகவெடி கரப்பான்புண்ணே. (௱௮௪)

புண்ணோடுபிளவைபற்று மேகவூறல் - போவரியசிரங்குசொறி கரப்பான்குட்டம், அண்ணோடுமூலவெட்டையஸ்திவெட்டை அபா

ணத்தில்-மூலவாய்வு உஷ்ணவாய்வு, தண்டோடுபௌத்திரநோய்பக்கப்புற்று-தழுமணையும்வண்டுகடி சிலவிஷங்கள், மண்ணுடும்பூரான்செய்யானும்பாம்பு-மகத்தானஎலிகடிநோய் விஷங்கள்போமே. ()

விஷமானசரீரநோயெல்லாந்தீரும்-விருதுசொல்லிவயித்தியரே விரைந்துபாரீர், நிசமாகுஞ்சரீரபலந் திடமுண்டாகும் - நிச்சயமாய் விந்துகட்டுஞ் சுக்கிலமீறும், கசகாமலவிழ்தங்கள் செய்யும்போது-கைம்முறைகள்தவறாது கருத்தாய்ப்பாரீர், விசுவாசமாகவெண்ணி முறைதப்பாமல்-மேதினியில்வயித்தியஞ்செய் பலிக்கும்பாரே. ()

பலித்திடவேரசமொடரிதாரபற்பம்-பாய்ச்சியேயசனத்திற்சேர்த்துக்கொள்ளு, நலித்திட்டபதினெட்டுக் குட்டமேகம்-நாட்சென்றரோகவகையெல்லாந்தீரும், சலித்திட்டகருமகதிபொருமனையும்-சண்டையிட்டுநெருப்பெரிந்தாற் போலேபோகும், கெலித்துவருநோயெல்லாஞ்செயவல்லாரி-கெடுநியுள்ளபேர்களுக்குச் செப்பொணாதே. (௱அஎ)

கரந்தைதைலேகியம்.

ஒண்ணுநமேகவகைக்கோர்மூலிகைதான்-உரைக்கின்றேன்விவரமாயுணர்ந்துகேளு, ஒண்ணுதுநாறுகின்ற கரந்தைசமூலம்-உத்தமனேயழனுலர்த்திச் சூரணித்து, ஒண்ணுதுதிரிகடுகு கடுக்காய்தான்றி-புறுவசம்பிந்துப்புவா லுழுவைமோஷ்டர், ஒண்ணுதுகரியசீரம் ஓமமேலம்-உள்வரசுமஞ்சள்கார் போகிவித்தே. (௱அஅ)

வித்தானசெவ்வியம் வாய்விளங்கம்-விதமானஆனைத் திப்பிலியின்மூலம், நத்தானசாதிக்காய் சண்பகப்பூ-நலமானதாளிசமுஞ் சன்னலவங்கம், முத்தானமதுரமொடு சாதிப்பத்ரி-முனையாகவகைக்குக்காற்பலமேதாக்கு, சத்தாகவிளவறுப்பாய்ச் சூரணித்துச்-சேர்கரந்தைச்சூரணந்தான் சமனுய்க்கேளே. (௱அகூ)

கேளேநீசூரணத்தில் நெய்தேன்விட்டுக்-கிண்டியேலேகியமாய்ப் பண்ணிக்கொண்டு, நாளேநீ நாளொன்றுக்கந்திசந்தி - நலமாகக்கொட்டைப்பாக் களவுநேரம், கேளேநீரசபற்பஞ் சேர்த்துக்கொள்ளு-தீருகிறநோயையினிச் செப்பொணாது, தேளேநீகிரந்தியரை யாப்புக்குட்டம்-மேகவெடிசூலைவெட்டி கரப்பான்போமே. (௱கூ௰)

கரப்பான்புண் புரையுந்தழுதணையுஞ்-சூலைகபாலகுஷ்டம் பவுத்திரமழுகண்ணிச்சூலை, பரப்பானமேகவூறல்மேகப்புற்று-பருந்தினவுசாறிசரீரம்படரும்வெள்ளை, கரப்பானகருங்கிரந்திசெங்கிரந்தி-

கள்ளிப்பூவரிகிரந்தி கன்னட்புர்று, தூரப்பானவெலிகடியும் லிங்கபு
ற்று-தொடர்யோனிற் புற்றுவிற்புருதிபுண்ணே. (௱௬௧)

புண்ணோடுதுடைவாழைப் பிளவைபுற்று-போகாதசக்கரநோய்
போகும்பாரு, பெண்ணோடுபுளிபுகையு மீனுந்தள்ளு-பெட்பு-னே
மண்டலந்தான் கொள்ளும்போது, கண்ணோடும்வாய்வோடு மஷ்ட
குன்மம்-சலித்தோடபதினெட்டுக் குன்மமோடும், கண்ணோடும்
ரோசிகநோய் காணுதோடுங்-கனமானசிலவிஷங்க ணீறிப்போமே. ()

நீறவேபித்தவாயு முஷ்ணவாய்வும்-நிலைபாதவரோசிகநோய் யண
ணதோஷம், விறவேபொருமல்விம்ம லக்கினிமந்தம் - மிகுவாந்திவிக்
கல்கக்கல் வாய்நீர்சாலத், தாறவேவாதத்தின் வாயுச்சூலை-சரீரத்தில்
வலிக்கடுப்பு முளைவுகுத்தல், சேறவேதலைமயக்கங் கிறுகிறும்புங்-தே
க்கமிடுமெஸ்திசுரந் தீரக்கேளே. (௱௬௩)

பித்தவுளைவுமுதலிய சகலநோய்களுக்கும் கண்டாத்திரிசூரணம்.

தீரக்கேள்சகலவித நோயுந்தீரச்-செப்புகிறேன்கண்டாத்திசூர
ணந்தான், ஆரக்கேள்நாரில்லாவிஞ்சிபலம்பத்து-அடைவாய்மேற்றோ
ல்போக்கி யிதள்போற்சீவி, சேரகேள்சீரகமேயரைப்பலந்தான்-சே
ர்த்தொன்றாய்ப் பீங்கானிற்பழச்சாறிட்டு, ஆரக்கேள்மூன்றுநா ளா
றவைத்து-அழகாகரவிதனிலே யுலர்த்திடாயே. (௱௬௪)

உலர்த்தியேயாவிநெய் விட்டுநன்றா-யுணர்வாகப்புரட்டியே வை
த்துக்கொண்டு, உலர்த்தியேபிடித்துநன்றாய்ச்சூரணித்து-உத்தமனே
யின்னமுமொன் றுரைக்கக்கேளு, உலர்த்தியேதிப்பிலியு மிளகுமோ
ஷ்டம்-உற்றநல்லகிராம்போடு தாளிசப்பத்திரி, உலர்த்தியேதிரிபலை
வாய் விளங்கமாஞ்ச-யுளமதுரங்கொத்துமல்லி யோமமாமே. (௱௬௫)

ஓமமாம்திப்பிலியு மூலத்தோடு-உற்றமுட்காவேளை சந்தனமு
மேலம், நாமமாந்தழுதாழைத்தொலியுங்கூட-நலமாகவிவையெல்லா
ஞ் சமனுப்க்கொண்டு, காமமாங்கரியாலைச் சாற்றினாலே - கசகாதே
மூன்றுநா ளூறவிட்டுத், தாமமாம்ரவிதனிலே யுலர்த்திக்கொண்டு-
சார்ந்தெடுத்தே யிடித்துச்சூரணந்தான்செய்தே. (௱௬௬)

செய்தேமுன்வைத்தசூ ரணத்தோடொக்கச்-சேர்த்துப்பின்சம
னாகச் சரக்கைக்கேளு, எய்தேநீநெற்பொறி முந்திரிப்பழந்தான் - எ
ழிலாய்க்கர்ப்பூர சிலாத்தும்பற்பம், வைதேதான்வகைவகைக்கோர்
பலந்தான்சொன்னோம்-வளமாகவிவையெல்லாம் ரேசித்தொன்றால்,
பெய்தேநீகண்டெடைக்குச் சீனிப்பாதி-பிரபலமாய்ப்போட்டுநீ வை
த்துக்கொள்ளே. (௱௬௭)

வைத்துக்கொள் வெருகடித்தூளொருநேரந்தான்-மண்டலந்தானந்திசந்தி கொண்டாயானால், சத்தமுறும்பித்தநோய் நாற்பதும்போம்-சாற்றியமுன்வியாதியெல்லாந் தீருந்தீரும், குற்றமின்றிச்சொல்லிவிட்டேன் சூட்சமாகக்-குவலயத்திற்கைகண்டமுறைதானப்பா, ஏற்றவிதிலெள்ளளவு மறைப்போவில்லை-எனைப்போற்மற் றொருவர்சொல்லார்பாரே. (௱௯௮)

புக்கபூச்சூரணம்.

பாரப்பாமேகமிரு பதுவுந்தீரப்-பாடுகிறேன்பிக்கப்பூ வென்றமொழி, நேரப்பாஒருபடிப்பூ வாரிவந்து-நேயமாயாய்த்தெடுத்துப்பாண்டத்திட்டு, சேரப்பாவடுப்பேற்றி பெரிந்துக்கிண்டி-சிறப்பாகவாவிநெய்ப் படிதானென்று, ஊரப்பாவறுக்குமப்போ கொஞ்சங்கொஞ்சம்-உண்ணவுண்ணவார்த்துமே புரட்டிவாங்கே (௱௯௯)

வாங்கியேயொருநேரம்வெருகடித்தூள்-மண்டலந்தான்கொண்டிடவே யந்நோயெல்லாம், ஏங்கியேமேகவகை யெல்லாமோடும்-இலவுபட்டதீப்போல வெரிந்துபோகும், பாங்கியேபத்தியந்தான் பசரக்கேளு-பரிவானபுளிபுகையுந் தள்ளவேண்டும், ஈங்கியதோர்வாயுவென்ற பதார்த்தந்தள்ளி-இச்சாபத்தியமாக வுண்டுகேளே. (௨௱)

கபாடசூரணம்.

உண்டிடவேகபாடசூரணந்தான்கேளு - ஒளியாமற்சொல்லுகிறேனுளவாய்க்கேளு, சுண்டையிடவற்றல்கருநிம்பப்பத்திரி-சொல்லரியமாங்கொட்டைப் பருப்போடேலம், கண்டிடவேமாதளையின்பழமிந்தோடும்-கனநெல்லிமுள்ளிவெந்தயத்தோடேழும், கொண்டுநீசமனாகச்சேர்த்துமிக்கக் - குலவும்வெருகடித்தூளாய்த் தயிரிற்கொள்ளே. (௨௱௧)

கொள்ளவேகிராணிவகை யாறுமெங்கே - குமுறுகின்றகழிச்சலொடு மூலவாயும், விள்ளவேபல்விதநோ யெல்லாமெங்கே - விண்ணென்றுங்குடிலத்திற் புக்கும்புக்கும், தள்ளவேவேண்டுமடா புகையும்பெண்ணுஞ்-சார்மீனுமாகாதுபத்தியங்காரு, உள்ளநோய்தீருமப்பா சொன்னேன்-உண்மையுடனிந்நூலைப் பார்த்திடீரே. (௨௱௨)

நிலவாகைச்சூரணம்.

பார்த்திட்டநிலவாகை சமூலங்கொண்டு-பரிவாகநிழலுலர்த்திச்சூரணித்து, ஆர்த்திட்டதிரிபலைத்தூள்நாலத்தொன்று-அவ்வெடையேசீனிசர்க் கரையுஞ்சேரு, சேர்த்திட்டநாளொன்றுக் கந்திசந்தி-கறப்பாகவெருகடித்தூள்கொள்ளுகொள்ளு, பார்த்திட்டமேகவகையிருபத்தொன்றும்- பறக்குபேசிறங்குசொறி சரப்பாணோடே (௨௱௩

கரப்பனென்ற அஸ்திசுர மஸ்திவெட்டை-கடுகடுத்தபித்தவாயு ஊறல்ரோகம், கரப்பவென்றவரோசிகமு மன்னதிவேஷம்-கனமேகத்தாலெடுத்த ஊறலெல்லாம், கரப்பனென்றகிராணியு மயக்கந்தூக்கம்-கசந்துவாய்நீரூறல் காத்தல்கண்ணும், கரப்பனென்றளரிவிமலக்கட்டும்போகும்-கதிப்புடனேகீழ்நோக்கும் பெருமைகாணே. (௨௱௪)

கரிச்சாலைச்சூரணம்.

பெருமைகாண்சருவரோயெல்லாந்தீரப்-பேசுகிறேன்கரிச்சாலைச் சூரணந்தான், அருமைகாண்பொற்கையானன்றுநன்று-அல்லாட்டால்நற்கையான் பலந்தான்பத்து, உரிமையாய்நிழலுலர்த்திச் சூரணித்து உளவாகக்கடுக்காணுமிளகுகோஷ்டம், கருமையாமோமமொடுமஞ்சள்சிங்கி-கருஞ்சீரமாஞ்சிதிப்பிலி மூலமாமே. (௨௱௫)

மூலமாந்தாளிசமுங் கிராம்புமிக்க-மூலையானசுக்கேலம்நெல்லிமுள்ளி, மூலமாஞ்சீரகமு மதுரம்அல்லி-முத்தானவிலங்கமொடு மூட்காவேளை, காலமுடனிவைபெல்லாம் பலம்பத்தாகக்-சரிசாலைச்சூரணத்திற் சமனாய்ச்சேர்த்துச், சீலமாமின்னமொரு வகைதான்கேளு-திரிலோகமண்டூரஞ் சேர்த்துக்கொள்ளே. (௨௱௬)

கொள்ளவேநாளொன்றுக் கந்திசந்திக்-குறையாதேவெருகடித்தூள் மண்டலந்தான், கொள்ளவேபித்தநாற் பதுந்தானெங்கே-குலப்பாண்டுபித்தங்கா மாலைசோகை, கொள்ளவேயிளைபெரு வயிறுபீலி-குன்மமொடு மஸ்திவெட்டை, அள்ளவேகாலெரிவு மதக்கந்தூக்கம்-அஸ்தியொடுவுப்பிசரோ யெல்லாம்போமே. (௨௱௭)

பறங்கிபட்டைரசாயனம்.

போமென்ற கிரந்தியரையாப்புச்சூலை-போகவேரசாயனந்தான் புகலக்கேளு, ஆமென்றபறங்கிப்பட்டை பலந்தான்பத்து-ஆவின்பால்சுத்திசெய்து நொறுக்கித்தூளாய், கோமென்றகல்வத்தி லிட்டுப்பின்பு-குழிவெட்டிமுழவுயர மதற்குள்வைத்து, ஆமென்றபின்பிரண்டு கலசம்வாங்கி-அக்கலசத்தூரிணி லைந்துதமர்போடே. (௨௱௮)

தமரிட்டகலசத்தி னுள்ளேமைந்தா-சாற்றறியகெந்திபலமிரண்டேசொன்னேம், பமரிட்டுசுத்திசெய்து கலசத்திட்டுப்-பட்டையிட்டகலசத்தின் மேலேவைத்து, கபரிட்டுப்பின்னுமொரு கலசத்துள்ளே-கார்த்திகையாங்கிழங்கோடு வசம்புவோமம், அமரிட்டேயிடித்தொன்றாய்க் கலசத்துள்ளே-அடக்கியேகலசத்தை மேலேவையே.

வைத்துமேநல்லமட்டங் கண்டுநீதான் - வாய்மூடியதன்மேலேயுடந்தான்போடு, அத்துமேமுழவுயரம்புடந்தான்போடு-ஆறவிட்டுப்

பின்னெடுத்துப் பார்த்தாயானால், உயர்த்தவொருகிழங்கிலிடதைலந்தானே-உறுதியொடுகெந்கத்தி லுருகிப்பாய்ந்து, பத்துமேகெந்தியிடதைலந்தானும்-பறங்கியின்றன்பட்டையிலே யுறைந்துபோமே.

உறைந்தபட்டைத் தைலத்தோ டெடுத்துலர்த்தி-உற்றிடித்து வஸ்திரகாயந்தான்செய்து, அறைந்தழைக்குஞ் சாம்பிராணிப்பதங்கமேற்ற-அறைக்கின்றேன்தாளியைவாய்வேடுகட்டிப், புறந்தனைகுறுந்தாளிதுட் சொல்லக்கேள் - புளிபந்தனைவிட்டுவிலாப் பக்கத்தாணி, சிறந்துமூவிரல்கலந்ததணலுக்குள்ளே-செயலாகச்சாம்பிராணிபொடித்துப்போடே. (௨௱௰௧)

போடப்பாவிரண்டரையே பலந்தான் சொன்னேம்-போட்டெல்லாம் பதங்கித்துஆனபின்பு, நாடப்பாவெடுத்தனைப் பதனம்பண்ணு - நாளொன்றுக்கந்திசந்தி வெருகடிகொள்வாயே, வேண்டாங்காண் பத்தியங்காருமைந்தனே-கிரந்தியரையாப் புக்குட்டம், சாடவேபதினெட்டுக் குட்டரோகம்-சந்திடுபூச்சூலைகைகால் முடக்குப்போமே (௨௱௰௨)

முடக்கானபிரமேகம் வெள்ளைவிழ்தல்-மோகத்தாலெடுத்தபதகரமுமூறல், முடக்கமாய் சொன்னதொருலிங்கப்புற்று, முனைபெற்றவாதமொடு யோனிப்புற்று, நடக்கிவேகன்னேசி கன்னப்புற்று-நாடாதுவாய்வோடு பதினெண்சூலை, அடக்கியே சொல்லிவிட்டேனிந்தநூலை-யாருக்குங்கொடுக்காதே சித்தோடாடே. (௨௱௰௩)

## அரிதாரவெண்ணெய்.

ஆடவேசிரங்குசொறி கரப்பான்புண்கள்-ஆறாதபுண்புரைகளாரவேண்டி, தேடவேயரிதாரத் தெண்ணெயொன்று செப்புகிறேனரிதாரம் பொடித்துப்போடு, ஆடவேநல்லெண்ணெய் படிதானென்று அரிதாரமோதப்பி பலந்தான்முக்கால், தேடவேசெங்கொட்டை வாங்கிக்கொண்டு-திறமாகவிருதுண்டாய் வெட்டிப்போடே. (௨௱௰௪)

வெட்டியேஓர்கலசத் திட்டுமைந்தா - வீறானகலசம்வாய்கிட்டிகட்டி, அட்டியின்றிபடுப்பேற்றி யன்பாகத்தான்-ஆறுமற்காய்ச்செண்ணெ யனலிற்பற்றி, தட்டியேசெங்கொட்டை வெடிக்கும்போது-தாளியொன்றில்கொப்பறையில் நிறையத்தண்ணீர், கொட்டியேகொதிக்கவைத் தெண்ணெய்தன்னைக்-கோல்பற்றியெடுத்ததிலே கொட்டிடாயே. (௨௱௰௫)

கொட்டவேயெண்ணெயெல்லா மிதந்துநிற்கும்-குறிப்பாகவெடுத்ததையோர் கலசத்திட்டு, கொட்டவேயுதயாதி கோரோசனமு

ண்டு-குணமாகஎண்ணெயைத்தான் தேகத்தூற்று, கொட்டவேசா
யரட்சையரைப்புப்போட்டுக்-குளிப்பீரேயிப்படிதானுமூன்றப்பா
கொட்டவேஐந்தெண்ணெய் தேய்த்துக்கொண்டு-கூர்த்துநீதலைமுழு
கத்தீரும்நோயே. (உ௱௰௬)

## தேங்காய்த்தயிலம்.

நோயேதுசிரங்குசொறி கரப்பானேது-நுவலவொண்ணுவாறுப்
புண்புரைகளேது, நோயேதுஇன்னமொரு செய்திகேளு-நுணுக்க
மாந்தேங்கையை கருகச்சுட்டு, நோயேதுஅதிற்பாதிமிளகுஞ்சேர்த்
து-நோக்கமாயரைத்ததனை வழித்துக்கொண்டு, நோயென்றதேகமெ
ங்கும்பூசபூச-நோன்மையுடன் சாயரட்சைவெந்நீர்வாரே. (உ௱௰௭)

வார்த்துமேமூன்றுநாள் குளித்துப்பாரு-வாராதுசிறங்குசொறி
கரப்பான்போகும், வார்த்துமேயின்னமொரு சூட்சங்கேளு-வளமா
னதேங்காய்ப்பால் படிதானிரண்டு, வார்த்துமேசட்டியிலிட்டடுப்பி
லேற்றி-வலகயானகல்லுப்பு மஞ்சளிரண்டு, சேர்த்துமேகரியசீரகத்
தினோடு-திறமாகவகைக்குக்காற் பலந்தான்சேரே. (உ௱௰௮)

சேரப்பாசமனாக மும்மருந்துந்-திறமாகப்பொடித்தந்தப் பாலி
ற்றாவி, நேரப்பாவடுப்பேற்றிக் காய்ச்சுகாய்ச்சு-நிகரானபதமாக எ
ண்ணெய்வாங்கு, ஆரப்பாஇவ்விதமாய் மருந்துசொல்வார்-அவனியி
லேயுண்டோதான் கண்டாற்சொல்லு, தேரப்பாஎன்மருந்தே நன்ம
ருந்து-தெளிவாகச்சொன்னேன்காண் சிறப்பாய்த்தானே. (உ௱௰௯)

தானேதான்வாங்கியதை வுடம்பிற்றேய்த்துத்-தனியானமாம்ப
ட்டை தனைபிடித்துக், கோனேநீகுறுணிநீர் தனிற்குழைத்துக்-குண
மாகமேற்பூசிச் சாயரட்சை, வானேநீயிப்படிதான்மூன்றுநாள்தான்
வளமாகக்குளித்துவரச் சொறிசிரங்கு, தேனேதான்கரப்பானுந் தீரு
ங்கேளு-செயலானபுளியில்லையா வாரைவேரே. (உ௱௨௰)

வேரானதிரண்டுபங்குமிளகோவொன்று-விருதானகரியசீரகமு
ங்கூட, ஆரானவசம்புசுட்டுக்கூட்டுக்கூட்டு-ஆடுதொடாமூலிச்சாற்வி
ட்டேபாட்டு, பேரானகார்போகி வித்துக்கூன்டு - பெரியாரைச்சாற்
றிலேகொஞ்சம்வாரு, ஏரானதிவையெல்லா மரைத்தொன்றாக - எ
ள்ளென்றநல்லெண்ணெய் தன்னிற்போடே. (உ௱௨௰௧)

போட்டுமேரவிபுடமாய் வைத்துக்கொண்டு - பூசியேமேலெங்கு
ந் ❋ திவலைபாக, ஆட்டுமேசாயரட்சையரைப்புப்போட்டு- அப்பனே
மூன்றுநாள் குளிக்கச்சேளு; வாட்டுமேசிரங்குசொறி கரப்பான்புண்

கள்-மருதஅரிகரப்பான்சொறிகரப்பான், மீட்டுமேவெடிகுலையரை
யாட்புப்புண்-விஷக்கடிநோய்நாடாமலோடுந்தானே. (௨௨௨)

* திவலை-நீர்த்துளி.

முக்கூட்டுத்தயிலம்.

தானென்றமுக்கூட்டுத் தயிலமொன்று - சாற்றுகிறேன்சருவ
நோயெல்லாந்தீர, வானென்றவெள்ளெண்ணெய் சிற்றேரண்ட-வல்
லெண்ணெ யாவினெய்வகைவகைக்கு, ஆனென்றவிரண்டுபடி யள
வாய்ச்சொன்னோம் - ஆவின்பால்நாலுபடி யதிலேவாரு, பானென்ற
செவ்விளநீர்ப்படி தானாலு பக்குவமாயின்னம்வகை பகரக்கேளே. ()

பகருகிறேன் கரிசாலைபொன்னாங்கண்ணி-பருப்பிவீழிவல்லாரை
யவுரிகொத்தான், முகருகிறேன்தழுதாழை * படையுநொச்சி-முரு
க்கிலைகற்றாழையுங் கர்ப்பூரவள்ளி, புகலுகிறேன்தூதுவளை கண்டங்
கத்திரி-புளிபாரைமுசுமுசுக்கைசங்கங்குப்பி, நகருகிறேன்மேனிசிறு
கீரைவேளை-நலமானவிழுகாடா தோடையென்னே. (௨௨௪)

* படை-செருப்படை.

தோடையொடுபிச்சிபுன் முருங்கை * கூந்தல்-சொல்லரியமண
முல்லை நாட்டுமுல்லை, தோடையொடுஆதண்டை கீழ்க்காய்நெல்லி-
சொற்றாழைவிழுதுபருநெல்லிக்காயும், தோடையொடுஅல்லிக்கொ
ட்டி நெய்தலாம்பல்-துளக்கரியநிலக்குமிழிதண்ணீர்மீட்டான், சூட
வேயூழலாத்தி மணத்தக்காளி - சொல்லுபொடு தலைநெரிஞ்சிதுத்தி
யாமே. (௨௨௫)

கூந்தல்-முதியார்கூந்தல்.

ஆமேசிறுமுள்ளங்கிவெள்ளறுகுதானும்-அடைவானசெங்கழு
நீர் முத்திருக்கும், தாமேதாவலத்தி யொதியம்பட்டை-தனிசுண்
டிமுள்ளங்கி திருநாமப்பாலை, சேமேமூக்கிரட்டைவேர் கருடக்கிழங்
கு-செப்பிடுநற்கரந்தைபெரு நெரிஞ்சிக்கொன்றை, நாமேயால்விழு
துசிறு குரட்டைபிரமி-நற்பருத்தித்தேள்கொடுக்குக்கரந்தைநாரே.

நாரோடுபற்பாடகம் வகைவகைக்கு-நவிலுமறைப்படியாகத் த
னிச்சாறாக, சீரோடுவாங்கி யெண்ணெயிலேவார்த்துச்-செயலாகவெ
ட்டி விலாமிச்சம்வில்லை, ஏரோடுநன்னாரி சிற்றாமுட்டி - இயல்பேரா
முட்டிமுகை * இருவேலித்தான், வீரோடுமிளகுரணை சங்குமுத்தி-
வெள்ளைச்சாரணைபுங் குருந்தொட்டிவேரே. (௨௨௭)

* இருவேலி-வெட்டிவேர்.

குருந்தானசிற்றா மல்லிபேராமல்-கூறான ஆயிலிய மருதிலந்தை, மருந்தான அமுக்கராவேர் சித்திரமூலி-வகையானசிறுபீளை நிலப்பனைவேர், வருந்தாது தன்மைபெற்ற * முத்தக்காசு-வளைநாதுநொச்சியொடு கண்டங்சாலி, திருத்தானமரவள்ளி முந்திரிவேருந்-தேற்றானுங்கருங்குறுந்தும் முன்னைவேரே. (௨௨௮)

* முத்தக்காசு-கோரைக்கிழங்கு.

முன்னையொடுபூவரசும் இலுப்பைவிழி-முடியுற்றநரியுடையுஞ் சிறுவிளாவும், தன்னையொடுமுள்ளிலவு முருங்கைவேரும்-தனியாச் சாசம்பங்கி விஷ்ணுகாந்தி, பின்னையுளஆவாரை வேருமைந்தா-பேசுமெருகங்கிழங்கும் பியசில்லாமல், நன்னயமாய்ச்சரக்கெல்லாஞ் சேர்த்துக்கூட்டி-நவிலுகிறேனின்னமொன்று அறுகுதானே. (௨௨௯)

அறுகோடுபொன்முசுட்டை சுறுகாஞ்சோறி-ஆடுதெண்டைவெட்பாலை அத்திசெம்பை, அறுகோடுசண்பகப்பூ முட்காவேளை-அகில்தேவதாரமொடு மலர்க்காய்கெந்தம், அறுகோடேயிருவெட்டி நீர்ப்பூலாவேர்-அரசுகாட்டாத்தி சிறுவழுதலைவேர், அறுகோடுவகைக்கிரண்டு பலந்தான்சொன்னோம் - அதட்டியேயிடித்துவோர் தாளிசேரே. (௨௩௰)

சேரேனீபிரம்பினிடகிழங்கிரண்டுசேர்த்தொன்றாய்-யிருதாணி நீரிலிட்டு, வாரேநீயடுப்பேற்றி யொருவிறகால்-மாட்டியேஎட்டிலொன்றாய்க் குறுகக்காய்ச்சி, காரேநீமுன்னெண்ணெய்க் கியாழத்தோடே - கலந்துவிடுகடைசரக்கின் வகையைக்கேளு, தேரேநீதிரிகடுகு திரிபலாதி-திப்பிலியின்மூலமொடு கோஷ்டமாமே. (௨௩௧)

கோஷ்டமாஞ்சித்திரத்தை பேரரத்தை - கொத்தமல்லி யேலமொடுலவங்கமாஞ்சி, கோஷ்டமொடுதாளிசை யிருசீரகந்தான்-கொடிதானவாய்விளங்க மோமமிரண்டும், தீட்டியேநாகப்பூ மதுரமிந்து-செவ்வியமாமஞ்ச ளுடனேமற்றும், வாட்டமாஞ்சாதிக்காய் கிராம்பு பத்திரி-வந்திட்டிவாலுழுவை சிங்கியாமே. (௨௩௨)

சிங்கியொடுவால்மிளகு கூகைநீறு-செண்பகப்பூவலம்புரிக் காய்கறுவாப்பட்டை, பங்கியாங்கிளியூறற்பட்டையொடு-பச்சிலைபூலாக்கிழங்கு சோம்புமஞ்சள், வங்கியொடுசமுத்திராப் பழங்கச்சோரி-வங்காளப்பச்சையொடு முத்தக்காசி, அங்கிசேபெருங்குரும்பை அக்கிராகாரம்-அத்திதிப்பிலியினொடு வகைவகைக்குப்பலமே. (௨௩௩)

பலமாகவிவையெல்லாம் ஆவின்பாலால் - பக்குவமாயாட்டியவ் வெண்ணெயிலேயப்பா, நலமாகக்கரைத்தொன்றாய்க் கலக்கிநீதான்-

நற்றுளிசேர்த்தடுப்பி லெரியமூட்டு, பலமாகஓர்விறகா லடிபற்றுமல்-பொங்காமலகப்பையிற் கிண்டுகிண்டு, குலமானகியாழகற்க மெல்லாம்வற்றிக்-குறுக்கியேமெழுகுபதம் வருதல்காணே. (௨௱௪)

வருதலால்முருங்கைப்பூ படியோவென்று-மருக்கொழுந்துமப்படியொன் றதிலேபோடு, கருகாமலடுப்பேற்றிப் பதமதானால் - நழுவாமற்றீயெரிவ துற்றுப்பார்த்து, பருவமாய்த்தயிலமதை வடிக்கச்சொல்லிப்-பாங்கானவடிகலசத் துள்ளேகேளு, சருவமாய்க்குங்குமப்பூ கழஞ்சிபோடுப்-தனிப்பச்சைக்கர்ப்பூரங் கழஞ்சுபோடே. ()

போடப்பாகோரோசனை கழஞ்சுபோடு-புனிதமொடுகெஸ்தூரி கழஞ்சுபோடு, ஆடப்பாவகுகலசத் துள்ளேபோடு-ஆதியென்றகுருவிலொரு கழஞ்சுபோடு, வாடப்பாபோட்டுநீ தயிலந்தன்னை - வடித்துமேகணபதியைப் பூசைசெய்து, நாடப்பாசத்தியைத்தான் மனதுக்குள்ளே-நற்றுனியப்புடமாய் வைத்துமூடே. (௨௱௬)

மூடியேமண்டலந்தான் வைத்தானன்றும்-முடியாட்டால்பக்ஷமொன்றி லெடுத்துமூழ்கு, சாடியேகிருதமொடு தயிலங்கற்கம்-தானியபுடம்வைத்தெடுக்க மெத்தநன்று, சாடியேசூரணங்க ளெல்லாமைந்தா-சாம்பிராணிப்பதங்கத்தி லேலவேண்டும், தேடியேயிம்முறைதா னில்லாவிட்டால்-தேகத்துக்கேறாது குற்றங்காணே. (௨௱௭)

குற்றங்கள்வாராமல் தயிலமூழ்கு - குணங்கேளுவைத்தியரே கூறுவேனான், பற்றியேநாலுநாள் வட்டமூழ்கு-பசும்பருப்புச் சியக்காய்வெந்நீராகும், வெற்றியுடன்தீருகிறநோய் சொல்லக்கேள்-மேகவகையிருபதுந்தான் கடலேபுக்குப், வற்றிப்போ மஸ்திசுரமஸ்திவெட்டை-மயங்காதேமெய்யெரிவு காந்தற்போமே (௨௱௮)

காந்தலொடுபித்தவாயு மூஷ்ணவாயு - கண்ணெரிவுகிறுகிறுப்பு மயக்கந்தூக்கம், வாந்தியொடுவாயுநீரும் அண்ட சூலை-வறட்சியொடு காமாலை பாண்டுசோகை, எந்திவருமண்டையிடி மண்டைக்குத்து-எழில்மூக்குநீர்பாய்ச்சல் பீனசந்தான், சாந்திசிரங்கண்ணெரிவு கண்புகைச்சல்-சாற்றுங்கால்கையசதி சூலைவாய்வே. (௨௱௯)

வாய்வோடுசூலையெரி நீர்ச்சுருக்கு - வாதபித்தஞ்சிலேட்டுமத்தாலெடுத்தரோகம், தேய்வாகுமற்றுமுள்ள ரோகமெல்லாம் - திடுதிடென்றிடவிழுந்தாற் போலேயோடுங், காய்வேதுகண்ணொளியாங் குளிர்ச்சிகாணுங்-கண்புகைச்சல் வெள்ளெழுத்து மாறிப்போகும், பேய்போலவலையாதீர் வைத்தியோரே-பேசுகிறேன்சிறுசந்தனாதியொன்றே. (௨௱௰)

## சிறுசந்தனாதித்தயிலம்.

ஒன்றானசந்தனமோ பலந்தானூறு-உற்றவெடிவிலாமிச்சைவில்லைசங்கு, நன்றானநிலப்பனையும் மூக்கருவும்-நன்னாரிசாரணைமிளகருணைவேரும், கன்றானகுறுந்தொட்டி பேராமுட்டி-காஞ்சொறியுந்தூதுவளை காட்டுமல்லி, குன்றானதேற்றாம்வே ரத்திப்பட்டை-குலநெல்லியாயிலியப் பட்டைதானே. (௨௪௧)

பட்டையொடுஆலவிழுது சித்திரமூலம்-பாலைபாம்பட்டையொடுகுமரிவேரும், நட்டமிலிருவேலியோடு வட்டத்திப்பி-நற்றென்னமரப்பாளை விடத்தோல்வீழி, பட்டமருமுன்னைகருஞ் செம்பைமுத்தம்-மரவெள்ளிநீர்ப்பூலா முந்திரிகைவேரும், இட்டமுடன்வகைவகைக்குப் பலந்தானைந்து-இடித்தொரு தாழியிலேவிட்டுக்கேளே. ()

கேளப்பாவிருதூணி சலந்தான்விட்டுக்-கெடியானசந்தனமேய தாழியிட்டு, வேளப்பாவிருதூணி நீர்தான்விட்டு - வெவ்வேறேயடுப்பேற்றி யெட்டொன்றாக்கி, நாளப்பாகியாழ மிரண்டுமொன்றாய்ச்சேரு - நலமானவெள்ளெண்ணெய் படிதானெட்டு, ஆளப்பாசெவ்விளநீர்படிதானாலு-ஆவின்பாற்படிநாலு மதிலேவாரே. (௨௪௩)

வாரேநீசாறுவகை சொல்லக்கேளு-வல்லாரைகரிசாலை பொன்னாங்காணி, சேரேநீகருப்பூர வள்ளியோடு-செருப்படையுமுசுமுசுக்கை மணத்தக்காளி, பாரேசிதேவிச்செங் கழுநீர்ச்சாறும் - பருத்திக்காய்நீர்மீட்டா னல்லிகொட்டி, வேரேனிநந்தியா வட்டத்தோடு-மிகுமல்லிசிறுகீரைச் சாறுங்கூட்டே. (௨௪௪

கூட்டடாநீரு மாதளையின்சாறும்-குமரியொடுமுடக்கற்றான்பற்பாடகமும், நீட்டடாதாழையிடவிழுதிச்சாறும் - நெல்லிக்காய்தழுதாழைச் சாறுநொச்சி, ஆட்டடாவெள்ளறுகு பெருநெரிஞ்சி-அமிர்தவல்லிசிந்தியொடு காணாவேளை, வாட்டடாஅவுரிபழம்பாகியோடு-மைந்தனேவகைக்குப்படி யரைதான்சாரே. (௨௪௫)

சாறோடுகியாழவகையெல்லாமொன்றாய்ச்-சாதித்துத்தாழியொன்றில் சாற்றக்கேளு, ஆறோடுதிரிகடுகுதிரிபலாதி-அழகானஏலமொடு லவங்கங்கோஷ்டப், வீறோடுதாளிசையு ரோமம்ரண்டு-விதமானமதுரமிரு சீரமல்லி, கூறோடுசாதிக்காய் பத்திரிகிராம்பு-குலவும்வால்மிளகிந்து சடாமாஞ்சியே. (௨௪௬)

மாஞ்சியொடுவாய்விளங்கம் சேவலையும் - வளமானசோம்போடு மஞ்சள்கூடத், தாஞ்சமமாய்க்கூகைநீறு தானுங்கூட்டு-தயவாகக்க

ஸ்தூரிமஞ்சள் தலையுஞ்சேரு, வாஞ்சைமிகுகிளியூறல் கறுவாப்பட்டைமாதினிய சூளவிந்தார்வங்காளப்பச்சை, ஆஞ்சினமில்லத்தி திப்பிலிவெட்பாலை-அடல்பெற்றவாலுழுவை யரிசியாமே. (உசஎ)

அரிசியுநாகப்பூகற் கடகச்சிங்கி - அழகானவலம்புரிகோ ரோசனைதான், கரிசியுளகார்போகி வித்துங்கூட-கனமானவெட்பாலையரிசிகூட்டு, பரிசுபெறும்விழலரிசி வகைவகைக்குப்-பலங்காலாய்ச்சொன்னமடா கலங்காதேனி, துரிசாகஆவின்பாலதனாலாட்டித்-தொடர்பாகளண்ணெயிலே கரைத்துவாரே. (உசஅ)

கரைத்துவரசித்தாக அடுப்பிலேற்றிக்-கனமாகமூன்றுநாள் சிறுகொதிப்பாய், தரைத்தனிலேயோர்விறகால் தீயைமூட்டு-சாலமுடனாலுநாள் கடுந்திப்போடு, உரைத்தமருந்தடிபற்றிக் கருகாமற்றான்-உண்மையுடன்மெழுகுபதம் வருதல்பார்த்து, திரைத்தவுடன்முருங்கைப்பூச் சண்பகப்பூ-சிறப்பிலுப்பைப்பூவிஞ்சம் பங்கிப்பூவே. ()

பூவோடுபனினீர்மா தலையுமுல்லைப் - புங்கொடுகோங்கிலவுபாற்புரண்டிப்பூவும், பூவோடுவகைக்குவொருபடிதான்சொன்னோம்-பொற்பானமருக்கொழுந்து பிடிதான்போடு, பூவோடுயிவையெல்லாம் போட்டுக்கிண்டு-பொங்காமன்மெழுகுபதம் வருதல்கண்டு, காவோடுகையிட்டுக் கிண்டிப்பாரு - கடுகுருண்டு மெழுகாம்பின் னடுப்பையாற்றே. (உருய)

ஆற்றவேவ்வடிகலசந் தன்னிற்கேளு-அணிகுங்குமப்புரோ சினைகஸ்தூரி, தேற்றமிகுஞ்சாதிக்காய் புனுகுகோஷ்டம்-செங்கழுநீர்ப்பச்சைகர்ப் பூரமெல்லாம், போற்றியேவகைவகைக்கு நாற்சழஞ்சு-பொற்புடனேயடிகலசத் துள்ளேயிட்டு, ஆற்றியேதயிலத்தை வடித்துவாங்கு-ஐங்கரனையறுமுகனைப் பூசைபண்ணே. (உருக)

பண்ணியேதானியநெற் புடந்தானிட்டு-பாங்குடனேநாலுநாள் வட்டமூழ்கு, நண்ணியேபசும்பயறு சிக்காயாகும் - நலமாகப்புளிப்புகையும் பெண்ணுந்தள்ளு, கண்ணியேமச்சமாமிசமுந்தள்ளு-கனமானபால்நீரு மோருமாகா திண்ணமாம்பலகார வர்க்கமாகா - தின்பண்டமானதெல்லா மாகாதள்ளே. (உருஉ)

தள்ளியேமற்றுநாளெல்லாங்கூட்டுச்-சாதகமாய்த்திருகிற நோயைக்கேளு, துள்ளியேமேகமென்ற திருபத்தொன்றும்-தொடருகிற பித்தசேத்து மத்தினோயும், உள்ளியேஅஸ்திசுர மஸ்திவெட்டை-யுட்காய்ச்சல்முறைக்காய்ச்சல் கைகால்காந்தல், தெள்ளியேகையெரிவு கண்ணெரிச்சல்-திடுக்கிட்டுநடுக்கமுற்றுத் தியங்கும்பாரே. ()

தியங்குமடாசயகாசம் பதினெண்சூலை-தீராதகுலையெரிவு அஷ்டகுன்மம், மயங்குமடாமாதூக்கலுஞ் சிரசில்நோயும்-வல்லிடுப்புச்சூலை முதல் குன்மக்கட்டி, தயங்குமடாதேகத்தில் நாடாதேதான்-தனிச்சிரங்குசெறிசுரப்பான் குட்டம்வாயு, வயக்கொள்நீரிழிவுவெண் குட்டமோடு-மண்டையிடிவலிகடுப்பும் பறந்துபோமே. (௨௫௪)

பறந்துபோம்திமிர்வாதம் வாயுசூலை-பழுகானகனரோகந் தொண்ணூற்றாறும், அறந்துபோம்சண்டாளரோகமெல்லாம்-என்னென்றுசொல்லுமேவன் மருந்தின்சூட்சம், சிரந்ததடாசந்தனாதி தயிலம் போலே - தேசத்திற்கிட்டாது தெளிவாய்ப்பாரு, திறந்தருமிம்மருந்தோதான் மண்ணிற்புண்ணியம் - செய்தவர்க்கேயெய்துங்காண் தேர்ந்துபாரே. (௨௫௫)

இளைப்பிருமலுக்குக்கஞ்சி.

பார்க்கவேயிங்கலுப் பிசமோடீளை-பறந்தோடநன்னாரிபருவேராசு, ஏற்கவேகொண்டுவந்து மேற்றோல்போக்கி-எலுமிச்சங்காயளவு வீதங்கொண்டு, ஆர்க்கவேசம்பாநெல் *பழந்தண்டுலம்-அல்லாட்டால்கருங்குருவை யரிசியேனும், காக்கவேயொன்றிரண்டா யிடித்துவாங்கிக் காற்படியாயளந்து தாழியிலேபோடே. (௨௫௬)

* பழந்தண்டுலம்-பழைய அரிசி.

போட்டுத்தண்ணீர்வார்த்து உப்பில்லாமல்-பொங்கியேகஞ்சிதான் கொதிக்கும்போது, நாட்டமுடன்முன்னரைத்த மருந்தைபோடு நலமானதேங்காய்ப்பூ வளவேபோடு, ஆட்டவேகுழையவெந்துபாகுபோலே-ஆறுமடாஆறவைத்துக் குடிக்கச்சொல்லு, வாட்டமின்றிமூன்றுநா ளைந்துநாள்தான் - வகையுடனேதப்பாமல் கொள்ளுகொள்ளே. (௨௫௭)

கொள்ளவேசொன்னநோ யெல்லாந்தீரும்-கொடிதானபத்தியங்க ளில்லைதானே, உள்ளவேமருந்திட்ட கஞ்சிக்குப்பு உதவாதுமருந்தெல்லா மாகும்பாரு, கள்ளமுறுவாயுப்பண்ட மாகாதப்பா - கரப்பனென்றபதார்த்தமெல்லாந் தள்ளுதள்ளு, விள்ளவேநாரிவேர்க் கஞ்சியுண்ட-வேதப்பிமருந்தெல்லாந் தின்னுதின்னே. (௨௫௮)

பஞ்சபாணச்செந்தூரம்.

தின்னவேசருவநோயெல்லாந்தீரச்-செப்புகிறேன்பஞ்சபாணச்செந்தூரந்தான், அன்னவேசாதிலிங்க மனோசிலைக்காந்தம்-அரிதாரகெந்திரச * பூரம்வெள்ளை, சொன்னதொருபாஷாணம்பலபொன்று

கச்-சுத்திசெய்துகல்வத்தி லிட்டுமைந்தா, நன்னயமா*மேனிச்சாற் சாமம்நாலு†நாகவல்லிச்சாறுமொரு சாமம்நாலே. (உருகூ)

* பூரம்-ரசகர்ப்பூரம் * மேனி-குப்பைமேனி.

‡ நாகவல்லி-வெற்றிலை.

நாலோடுபருத்திச்சாற் சாமம்நாலு-நலமானவெள்ளருகு சாமம்நாலு, மேலோடுதுளசிச்சாற் சாமம்நாலு-மிக்கவழுதலைச்சாறு சாமம்நாலு, ஏலோடுமிந்தவண்ணம் நன்றாயாட்டி-யியலாகவில்லைகட்டி நிழலுலர்த்தி, மாலோடுசட்டியொன்றில்வைத்துப்பின்பு-மைந்தனே நாகவல்லி யிலைப்பரப்பே. (உசுய)

பரப்பியேமேல்வில்லை வைத்துமூடி - பக்நவமாயெழுசீலை மண்ணுஞ்செய்து, அரப்பியேயடுப்பேற்றியறு விராகுநன்றால் - அப்பப்பாபதருமல் சிறுதீயாக, துரப்பியேசாமம்நா ளெரித்துவிட்டால-தோன்றுமடாசட்டியெல்லாஞ் சிவந்துகாணும், நிறப்பியேசதமொன்று பூசைசெய்து-நீமகனேயடுப்பாற்றி யெடுத்துப்பாரே. (உசுக)

பாரேநீசெந்தூரப் பற்பந்தன்னை-பகர்ந்திட்டாச்சருவகோயெல்லாம்போகும், கிரேநீயிஞ்சிச்சாற் தேனிலிட்டுச்-கியாழகற்கம்நோயறிந்து அனுபானஞ்சேர், வீரேநீசன்னிபதின்மூன்றுமெங்கே-விரிடுமேகுட்டமொடு பதினெண்சூலை, காரேநீவால்வென்ற திருபத்தொன்றும்-கனமானவாதசிரம் கதித்தோடும்மே. (உசுஉ)

ஓடுமேமேகமென்ற இருபத்தொன்றுய்-ஞரெட்டேக்குன்மமொரு கிராணியாறும், வாடுமேகைகாலின் முடக்குஞ்சூலை-மாருதவெட்சூலை பிளவைப்புற்று, சாடுமேகள்ள கழுங்கண்டமாலை-தனிக்குட்டம்குலை நோயும் அரிகரப்பான், தேடுமேயமபுரத்தைச் சொரிகரப்பான்-தீராதவண்டுகடி தேமல்போமே. (உசுங)

போமேதான்கழல்வாதம் வலிகடுப்பு-புகலாதகுழிவாழை அழுகண்ணிற்புண், சாமேதான்கண்ணோசி கன்னப்புற்று-சாற்றியதோர் கபாலகுஷ்டம் பவுத்திரரோகம் வேமேதாள்முள்வீழை விரணரோமம்-வெருண்டோடுங்கயரோகம் நாக்கில்ரோகம், தாமேதான்சந்திடுப்புகிலுச்சூலை-தளராதகபாலவாயு னீங்குந்தானே. (உசுச)

நீங்குமடாமெய்க்குடைச்சல் கைக்குடைச்சல்-நிலைபெற்றசூலை நோயுங் குன்மக்கட்டி, வாங்குமடாகுடச்சலொடு வுளைவுகுத்து-கத்தானகருமநோ யெல்லாமைந்தா, ஏங்குமடாபரிதிகண்ட பனியைப்போல - எல்லோர்க்கும்கிட்டாது வல்லோர்சொன்னர், ஓங்குமடாவடுகனீ பூசித்தேதான்-உலகத்தின்வயித்திபஞ்செய்பறந்துபோமே.

## கெந்தகச்செந்தூரம்.

பறக்கவேகெந்தகச்செந் தூரங்கேளு-பருநெல்லிக்கெந்திபலம் நாலரைதான்சேரு, சிறக்கவே அயப்பொடியொன் றரைப்பலந்தான் சேர்த்துநீர்ச்சுண்ணாம்புத் தண்ணீர்விட்டு, நிறக்கவேயேழுநாளரைத்துநன்றாய்-நிகழ்த்தரியசட்டியிலே போட்டுநீதான், மறக்காமலெரித்துவரச் செந்தூரமாகும்-மைந்தனேயதனுடைய மகிமையென்னே. (௨௬௬)

மகிமையென்ன அனுபானம் வெட்பாலையின்றன்-வல்லரிசிசிரகமாங் கொழத்தூட்டு, மகிமையென்னபச்சரிசிசுழு நீராகும்- மகத்தானதேனிலும் பாலிலுமேயாகும், மகிமைசென்ன இப்படியே யறிந்துபோட-வழுத்தாதசூலைபநி னெட்டும்போகும், மகிமையென்னகிராணிவகையாறுந்தீரும்-மயங்குமடாகாமாலை சோகைபாண்டே.

பாண்டோடும்கிராணிவகைக்கெல்லாங்சேரு, பரிவாகஅவிழ்தங்கள் செய்துகொண்டு, காண்டோடுசெந்தூர மதிலேயூட்டு-கதித்தோடும்சிரங்குசொறிபண்புரைகளெல்லாம், கூண்டோடும்மேகவகையெல்லாந்தீரும்-குணமாகப்பாலினுணப்பிரமேகம்போம், மாண்டோடுங்கரிசாலைலேகியத்தூட்டி-வழுத் * தீராற்காமாலை சோகைபோமே

* ஈராறுகாமலை-பன்னிரண்டுகாமாலை.

## லிங்கக்கட்டு.

போமென்றஅரிதாரஞ் சுத்திசெய்து-புகமூகக்கட்டிக்கருவங்கத்தூட்ட, ஆமென்றகளுவங்கம் நொறுங்கிநிற்கு-மவ்வெடைக்குக்கட்டித்தாளகத்தைப்பின்னும், வேமென்றகல்வத்திலிட்டுக்கேளுமெல்லியர்தம்பால்விட்டு அரைத்திமைபோல், வீமென்றலிங்கமொருலந்தான்வாங்கி-மேற்பூசிக்கவசங்கட்டிக்சிலைசெய்யே. (௩௬௧)

செய்திட்டுச்சாணகலம் சாண்தானீளம் - திறமாகக்குழிவெட்டியுமிப்புடம்போட. எய்திட்டபுடமதனை யாற்றிப்பார்க்க -இலிங்கமதுவுருகிஒரு மணிபோல்நிற்கும், மொய்திட்டசெந்தூர மீந்தால்பத்து - மூன்றுசந்திதோஷமெல்லாம் முறையிட்டோடும், கைதிட்டசுரங்களெல்லாங் காணுதோடுங் - காட்டவொண்ணுவெள்ளியிலோரேழுமற்றே, (௨௭௰)

மாற்றென்னவீணிலேதான் காணுமோசொல் மவியசீர்கோசமுடன் மீசஞ்சேரு, நீற்றென்னபோட்டிடவேவர்னங்காணும்-நிலையாட்டால்வர்னமில்லை யுலகொவ்வாது, பார்த்தாலுமுலகத்தைப்பறைசெய்யாதே-பாஷாண்டர்தம்முடனேபேசாதேநீ, கார்த்துன்னைவணங்கியே கேட்டாலுந்தான்-காணேனெனச்சொல்லிக் கருநிதில்லே. ()

## சர்வநோய்க்குங் கோடாசூரிகுளிகை.

கருதியேமகத்தான கோடாசூரி - காட்டுகிறேன்சர்வநோ யெல்லாந்தீர, கருதியேசூதமது சிலையுந்தாரங்-காந்தமொடுவெண்காரஞ் செம்புத்தொட்டி, பருதியேவெண்ணாவி சவுக்காரந்தான்-பகரிந்துபச்சைக்கர்ப் பூரஞ்சூடன், மருவியே * வசுவாசி துரிசிமல்லி-மயூரசிகைப்பெருமருந்து வாளந்தானே. (௨௭௨)

* வசுவாசி-சாதிப்பத்திரி.

வாளமொடுசேங்கொட்டை சித்திரமூலி - வளமானகுரோசானியானைத்திப்பிலி, நாளமிகுமிளகுடனே கடுக்காய்நெல்லி-நன்மூள்ளிகோஷ்டமொடு முத்தக்காசு, நீளமிகுதாளிசைதேசா வரங்கிராம்பு-நிகழ்த்தரியசிரகமுஞ் சிறுதேக்கத்தி, காளமிகுவேர்த்தோலி செவ்வாலங்கொட்டை-கனகசிற்றாமுட்டிவிஷ்ணு காந்திவேரே. (௨௭௩)

காந்திவேர்தன்னுடனே நிலப்பனையின்வேருங்-கனமானவெள்ளைப்பாஷாணங்கூட, சாந்திபெருஞ்சிற்றரத்தை கருநாவிதான்-சாற்றரியபேரரத்தை வகைவகைக்கு, ஏந்தியேகழஞ்சிரண்டு சமனாய்க்கூட்டு இயமானகரந்தையுலற் கழஞ்சிரண்டு, தேர்ந்துநீதாம்பிரயற்பங்கழஞ்சி ரண்டுசெயலாககல்வத்தி லிட்டுக்கேளே. (௨௭௪)

கேளப்பாசொல்லரிய கையான்சாறும்-கிளர்த்தரியநொச்சிச்சாற்-வேலிச்சாறும், வேளப்பாபருத்திச்சாற் செருப்படைச்சாற்-மிகுத்தானகற்றாழை துளசிச்சாறு, கேளப்பாஅவுரிச்சாற் வகையெல்லாந்தான்-குணமாகவெவ்வேறே சாறும்வாங்கி, சூளப்பாவகைக்குச்சாற்நாளொன்றாகச்-சுகமாகஆட்டுமின்னம் வகைகேளொன்றே. ()

ஒன்றாகவாங்கியே துளசிதும்பை-உம்மைபெற்றதூதுவளை மூட்காவேளை, நன்றானநீலிகுட்டி விளாவோடின்னம் - நலமானவழுதலையுங்கண்டங்காலி, குன்றாதசிறியகாஞ் சோறியோடு-குணமானசித்திரமூலி மலைதங்கிவேர், கன்றானகாக்கைவேர் ஆனைதிப்பிலி-கனமானமேனிதிரி பலையுமாமே. (௨௭௬)

ஆமேதான்வகைவகைக்குச் சமனாய்த்தூக்கு-அடைவுடனேகியாழமதாய்க் கலக்கிப்பின்பு, தாமேதானெட்டிலொன்றாய்க் குறுகக்காய்ச்சித்-தனியாகமுன்மருந்தில்விட்டுநீதான், வாமேதான்கல்வத்திலாட்டுஆட்டு-வண்மையுடன்சிறுபயறு போல்திரட்டி, தேமேதான்குளிகைகட்டி நிழலுலர்த்திச் - செப்பிலிட்டுஆவின்கொட் டாயிற்குள்ளே. (௨௭௭)

உள்ளேதான்பூமிதனில் சிலநாள்தாக்கு-உண்மையடாகோமயத்தின் சாரம்பட்டால், கள்ளேதான்வேகமது மிகவுண்டாகும்-நற்குளிகையுடனேதான் சுத்தியாச்சு, கொள்ளேதான்பட்சமொன்று சென்றபின்பு-கூர்ந்துநீயெடுத்ததனை யுலகத்தோர்க்கு, அள்ளேதானந்தந்தநோயறிந்து-அடைவாய்ப்பத்தியமீந்தனு பானத்துட்டே. ()

ஊட்டிடவேசன்னிவகைக் கிஞ்சிச்சாறு-முற்றதொருசயமீளைமிருமல்காசம், ஆட்டிடவேபித்தசுர முக்காவேளை-அப்பனேசேத்துமசுரமிஞ்சிச்சாறும், நாட்டிடவேவாதசுரம் நொச்சிச்சாறும் - நானுநாளிருமலுக்கு வேப்பிலைச்சாற், மூட்டிடவேதும்பையிட சாறுமாகும்-மூன்றுநாமாறலுக்கு முறையைக்கேளே. (௨௭௬)

முறைகேளுதுளசிவேர் தும்பைவேரும்-மூதண்டநாயருவி மிளகுசுக்கு, அறைகிறேன்கியாழத்துக் கதிலேயூட்டு-அப்பனேவெண்சுரத்துக் கறையக்கேளு, இறையானசீரகத்தின் கியாழத்தூட்டு-இடுக்கமுள்ளசுரங்களுக்குக் கடுக்காய்ச்சாறும், பிறையானவிஷக்கடிக்கும் பழச்சாருகும்-பில்லிக்குமுள்ளிபழஞ் சூனியாமே. (௨௮௰)

சூனியமாம்புண்களுக்கு வெண்ணெயாகும்-சொல்லுகிறேன்கிரந்திக்குப் பின்னுங்கேளு, 'கானியமாம்புருப்புரணி சாம்பலூறும்-கதிப்பாகத்தெளிவிறுத்து அதிலேவூட்டு, கோனியமாநேத்திரநோய் சகலத்துக்கும்-குணமாகப்பழச்சாறு தன்னிலூட்டு, மானியமாங்கிராணிமுதல் பேதிக்கெல்லாம்-வளமானஅவிடயம் சாதிக்காயே. ()

காயோடுஅபினியுட னுத்திப்பூவுங்-கருவாகைவகைவகைக்குச் சமனாய்வூட்டு, வாயோடுகுளிகைதனை வூட்டிமற்றும்-வள்மாகமேதியிட தயிருமோரும், தேயோடுபச்சரிசி கழுநீயாகு-தெளிவாகமுறையறிந்து தேசத்தில்தான், சேயோடுகணபதியும் வடுகன்பூசை-சிந்தித்துநோயோர்க்கு வயித்தியஞ்செய்யே. (௨௮௨)

செய்யேதான்காமாலை பாண்டுசோகை-தீராதகவுசிஜைதல் தீரக்கேளு, உப்பேநீர்முள்ளிகரி சாலைகடுக்காய்-உடனேயாட்டின்சிறுநீர் * மண்டூரஞ்சேர், ஐயேதான்கைப்பாக மாகச்செய்து - அரைந்திட்டோங்குளிகையுடன் மண்டலந்தான், வையேநீவாதமெண் பதுவுந்தீர-வலிவசிறுகழுதைப்பா லதன்றன்னீரே. (௨௮௩)

* மண்டூரம்-செங்கற்கிட்டம்.

நீராகுமலசலத்தைக் கட்டிநிற்கும்-நிலைவாயுஇருவேலி பருத்திச்சாரும், வாருவகுன்மவகை மிளசேலந்தான்-வல்லாரையறுகினிட

கிழங்குமாகும், பாராகஅனுபான மறிந்துகூட்டு-பதினெட்டுக்குஷ்ட மொடு சூலைக்கெல்லாம், ஏரானசிவன்வேம்பு வாலுழுவையரிசி-யெ ழிலானகருங்காலிப் பட்டையாமே. (௨௮௪)

பட்டைவிடதயிலமாம்விடத்தோல்தயிலம்-பாங்காகும்பதினெ ட்டுச் சூலைபோகுங், குட்டமறுங்கைகாலின் முடக்கெல்லாங்-கூறரி யபரங்கியிட பட்டைகெந்தி, எட்டியிட்டுகொட்டை யின்றன்றயில ங்கூட்டு இயலானவெள்ளுள்ளி கூடச்சேரு, நட்டமிலாப்புனலியிட தண்டுமைந்தா-நலமாகப்போட்டுவரச் சுறுக்காம்பாரே. (௨௮௫)

போட்டுச்சிற்றேரண்டப் பருப்பெரித்துப்-புகட்டியிளவறுப்பா கக் கல்வத்திட்டு, போட்டுநீமுலைப்பாலு மேரண்டெண்ணெய் புகட் டியரைகுழல்பாகும் குளிகைசேர்த்து, போட்டுநீவெண்தூசி லூதிப் போடு-புண்பிளவைதுடைவாழை யரையாப்போடு, போட்டுநீசிலந்தி குழி வாழைமுதலாகப்-பொல்லாதகண்டமாலை நீங்கிப்போமே. ()

சருவநோய்தீர ஆனந்தவயிரவன்.

போமென்றசருவநோ யெல்லாந்தீரப்-புகலுகிறேனானந்த வயிர வன்தான், தாமென்றதிரிகடுகு தாரம்இந்து - தனிபானவாளமொடு நாவிலிங்கம், வேமென்றசமனிடைத்தான்கல்வத்திட்டு-வெள்ளுள்ளி த்தயிலமுட னிஞ்சிச்சாறும், ஆமென்றவேழுநாள் மயனம்போலே- ஆட்டியேகுன்றியிட வுண்டைசெய்யே. (௨௮௭)

செய்தவுண்டைநிழலுலர்த்திச் செப்பிலிட்டுச்-சிறப்பானநெற் புடத்தி லிட்டுவாங்கு, தொய்தமுள்ள விஞ்சிச்சாற் தேனிலிட்டு- தொலையாதசந்நிபதின் மூன்றுமோடும், மெய்தனுறுமுவேழு தோஷ மெங்கே-முனையானபதினெட்டுச்சுரமுமெங்கே, ஐவதண்டவாதமெ ன்பதுவுமெங்கே-அதில்பிறந்தநோயெல்லா மெங்கேபோச்சே. ()

அக்கினிசஞ்ஜீவிதுமாரன்.

போச்சென்று நினையோடா-சஞ்சீவிகேள் புகலுகிறேனக்கினிக் குமாரனாக, காச்சென்றசெம்புடனே யுருக்குக்கஞ்சம் - சனமான இ ரும்போடு சிலையுந்தாரம், வேச்சென்றதிரிபலை கருநாவிகூதட்-வெண் காரந்திரிகடுகுஞ் சமனாய்க்கொண்டு, தாச்சென்றுசுத்திசெய்ததிப்பி லிநாவி-தனையகற்றிமற்றதெல்லாங் கல்வத்தாட்டே. (௨௮௯)

ஆட்டியேசெந்தூர முருக்கம்பூப்போ-லாகுமடாகல்வத்திட்வி டுக்கேளு, ஊட்டியேகற்றாழைச் சாற்றாலாட்டு-ஊற்றப்பாநால்சாமங் குப்பிகேற்றி, காட்டியேபனிரண்டு சாமந்தீயைக் - கமலம்பேலெரி

த்தாற விட்டுவாங்கி, நாட்டிபேகருநாவி திப்பிலிகூட-நலமானவெள்
ளுள்ளித் தயிலத்தாய்ந்தே. (உகூய)

ஆய்ந்தாட்டுஇருசாமம் ஆட்டிமைபோல்-அப்பனேகயிற்போனு
ஞ் சுண்டைக்காய்போல், வாய்ந்துமேகுளிகைசெய்து நிழலுலர்த்தி-
வளமாகச்செப்பிலிட்டு நெற்புடம்போட், டேய்ந்துமே யிஞ்சிச்சார்
தேனுங்கூட்டு-ஏகாதபதினெட்டுச் சந்நியேகும், தீர்ந்துபோமக்கினி
சஞ்சீவியென்றால்-செத்தபேருலகத்தி லுண்டோசொல்லே. (உகூக)

அமிர்தாதியுண்டை.

சொல்லென்றஅமிர்தாதி யுண்டைகேளு-துடியானதிரிகடுகுமா
விலிங்கம், அல்லென்றவகைவகைக்குக் கழஞ்சுவீத-மழகாகச்சுத்தி
செய்து குளவிக்கூண்டு, மல்லென்றஅவ்வெடைக்குக் கல்வத்திட்டு-
மங்கைமுலைப்பாலதனாற் சாமமாட்டு, வல்லென்றதனத்தாளைச்சேரு
மன்னு-மைபோலாஞ்சுண்டைபோ லுண்டைபண்ணே. (உகூஉ)

பண்ணியுண்டைநிழலுலர்த்திச் செப்பிலிட்டுப் - பரிவாகக்கசக்
காமல் குளிகையாக்கித், திண்ணவுடன்மட்டடங்கா வுடம்புளைச்சல்-
திறமானவாயுக்குத்தல் கடுப்புச்சத்தி, வண்ணமிகுமுப்பிசமு மந்த
த்தொண்டை-வலிநெஞ்சுநீர்த்தோஷஞ் தாகச்சுரமும்; நண்ணுசிறு
* மதலைகட்கு வருநோய்மாந்தம்-கவிலரியசந்நிமுதல் தீரும்பாரே.

* மதலை - குழந்தை.

கிரந்தியரையாப்புக்கெண்ணெய்.

பாரேநீகிரந்தியரை யாப்புச்சூலை-பகரரியகரப்பானோ டெல்லாந்
தீர, வேரேநீபொடுதலைச்சாற் படியிரண்டு-வீழிச்சாற்கரிசாலை சங்க
ங்குப்பி, வாரேதானீறுள்ளி தேசிச்சாறும்-வகைக்கொருபடிவீத மு
ன்சாற்றோடொக்க, சேரேநீசிற்றேரண்டத்தி னெண்ணெய்-சேர்த்
துக்கொள்படியிரண்டு திறமாய்த்தானே. (உகூச)

திறமாகச்சங்கம்வேர் சித்திரமூலம்-செம்முள்ளிவேரோடுஅமு
க்கராவேர், கறமானதிரிபலையுஞ் செங்கத்தாரி - கனபட்டைகஸ்தூரி
மஞ்சள்கூட, புறமானகரியசீரகமுஞ்சேரு-புகலாதகார்போகிவித்து
ஞ்சேரு, மறமானமிளகோடு கரப்பான்பட்டை-வாலுழுவைசெங்கொ
ந்தம் வசம்புகூட்டே. (உகூரு)

கூட்டடாதகர விரைக்குமான-குணமானஅத்திதிப் பிலியின்மூ
லம், நட்டடாசாரணைவேர்நிம்பப்பட்டை-நலமானமூக்கிரட்டை நெ
ரிஞ்சிவேரும், சூட்டடாவலம்புரிக்காய் நாகப்பூவுஞ்-சொல்லுரற்கட
கசிங்கி மதுரங்கூட, மீட்டடாவிந்தியொடு ஓமமெல்லாம்-விரைவாம
நிலவாகை வேருஞ்சேரே. (உகூசா)

வேரோடுஉற்றகுமிழ் நல்விளாவேர்-வெட்பாலையரிசிக்காய்கடுகு ரோணி, பாரோடுசொல்லரிய பங்கம்பாலை-பண்ணுகருஞ்சீரகமும்காக த்தாளி, ஏரோடுசெங்கழுநீர் கோஷ்டஞ்சத்தி - யெழில்சாரங்காஞ் சோறி சிறியசிரம், பேரோடுகழற்கொடி பருப்புங்கூடப்-பேசுகிறேன் வகைவகைக்கு நிறைதான்கேளே. (உகூச)

கேளேநீசரக்கெல்லாம் பலமொன்றாகக் - கிளர்த்திநேங்கல்வத் தி லிட்டுமைந்தா, வேளேநீகொடிக்கள்ளிச் சாற்றினோடு-வெள்ளாட் டுப்பாலும்புங்கம் பாலாகும், காளேநீமூன்றுமொன்றாய்க் கல்வத்தா ட்டிக்-கருகியேயெண்ணெய்தனிற் கரைத்துவாரு, வாளேநீயடுப்பே ற்றி யெரித்துக்காய்ச்சு-மைந்தனேமெழுகுபதம் வருந்தான்காணே.

வருதல்கண்டுமெழுகுபதந் தன்னைப்பார்த்து-வடிக்குமப்போவ டிகலசந் தன்னிற்கேளு, கருதல்கண்டுவிரைவுடனே ரசகற்பூரம்-கழ ஞ்செடையோநாலதிலே பொடித்துப்போடு, கிருகில்லா அரிதார பற் பம்ரண்டு-சேர்த்தந்தத்தயிலத்தை வடித்துவாரு, விருதானகணேச னுக்குப் பூசைபண்ணு-வேடுகட்டித்தானிபப்புடம் வைத்துவாங்கே.

வாங்கியேநாளொன்றுக் கொருகரண்டி - வாகாகநாண்மூன்று நாளுந்தேழு, தாங்கியேஆள்பலனும் நோய்பலனும்பார்த்துச்-சார்ந்த ரிந்துஉண்டுவரத் தருவாய்நீயும், ஏங்கியேஅலையாதேபத்தியங்காத்து இருக்கச்சொல்லுமறுபத்தியம் போக்கிநீர்வார், ஆங்கியேபுளிப்புவ கை யெல்லாங்கூட்டு-அதில்தீரும்நோயையினி யறையக்கேளே. ()

அறைகிறேன்கிரந்தியரையாப்புச்சூலை-அதில்பிறந்தசிரங்குசொ றி கரப்பான்புண்ணும், இறையானவெடிசூலை சூலைப்புண்ணு-மெழு வாழைகுழிவாழை யாறுப்புண்ணும், மறையானமேகவெடி கரப்பா னூறல்-பக்கபுற்றுத்தேமலொடு தாமரைநோய்தானும், கறையானக ண்ணோசி கன்னப்புற்று, கருங்கிரந்திசெங்கிரந்தி கள்ளிப்பூவே. ()

கள்ளிப்பூக்கிரந்தியொடு குறைநோய்குஷ்டங்-கனலண்டவாத மொடு நாக்கில்ரோகம், தெள்ளிடுசீழ்ப்பிரமேகம் வெள்ளைவிழ்தல்-தீர்ந்திடுமேபெண்கட்கு கரப்பானேயுங், கள்ளமின்றிச்சொல்லிவிட் டேன் இந்தவெண்ணெய்-கனகமடாகண்டுபார் உன்னுக்குள்ளே, உ ள்ளபடிதலைமுழுக இன்னமொன்று - உரைக்கிறேன்சூட்ச சஞ்சீவி யாமே. (௬௱உ)

சஞ்சீவியெண்ணெய்.

சஞ்சீவியிஞ்சிச்சாற் படிதானென்று-தனியானநல்லெண்ணெய் படிதானென்று, சஞ்சீவிவாவின் பால்படிதானென்று-காரித்துமெழு

குபத மாகக்காய்ச்சி, சஞ்சீவியாகவே வடித்துவாங்கு-மாறுமல்மூழ் கிவரச் சூலைவாயு, அஞ்சியேகபாலநோய்மண்டைக்குத்து-அடல் சந்நிகிறுகிறுப்பு மயக்கம்போமே. (ருாரு)

செம்பைத்தயிலம்.

போமென்றமேகவகை யெல்லாந்தீரப்-புகலுகிறேன்தயிலமொன்று மேகமூலி, ஆமென்றகருஞ்செம்பை யிடித்துச்சாறு-ஆவின்பால்விட்டதிலே பிசைந்துநன்றாய், நாமென்றபடியிரண்டுபிழிந்துகொண்டு-நல்லெண்ணெய்படியிரண்டு மதிலேவார்த்து, ஆமென்றஅடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி-அப்பனேமெழுகுபதம் வடித்திடாயே. ()

வடித்துமேநாலுநாள் வட்டம்மூழ்கு-மகத்தானமேகவகைச் சூடுகாந்தி, நடித்துமேயஸ்திசுர மஸ்திவெட்டை-நாடாதுமண்ணெரிவுகாந்தல்தீரும், திடத்தமுறுந்தேகமது சவுக்கியமாம்பார்-செப்பார்கள்வயித்தியர்க ளுலகில்மைந்தா, படித்திட்டமதுராதி சந்தனுதி-பாரிவானமேகாதி யிதுக்கொவ்வாதே. (ருாரு)

பீனசங்கூட்குத்தயிலம்.

ஒவ்வாதுபீனசங்க ளெல்லாம்போக-உரைக்கிறேன்மூலிகைதானென்றேசூட்சம், ஒவ்வாதவிழுதிச்சாற்படிதானென்று-உத்தமனேயாவின்பால் படிதானென்று, ஒவ்வாதேஎள்ளெண்ணெய் படிதானென்று-உண்மையுடன்கலந்த மூலிவேரை, ஒவ்வாமலொருபந்தானரைத்துப்போடு-உற்றவடுப்பேற்றிமெழுகு பதமாய்க்காய்ச்சே. ()

காய்ச்சியேவடித்தந்த தயிலமூழ்கக்-கதிப்புள்ளபீனசங்களேழும்போகும், தாழ்ச்சியேவாராதுநால்நாள்வட்டம்-தயிலமிடடுப்பசும்பயறு சீக்காய்மிளகு, காட்சிபெற்றவயித்தியரே சொன்னேன்காணீர்-கனக்மாமிந்நூலைக் கைவிடாதீர், சூட்சமாமெண்பதெனும்வாதந்தீரச்-சொல்லுகிறேன்ஐந்தெண்ணெய்த் தயிலந்தானே. (ருாஎ)

ஐந்தெண்ணெய்த்தயிலம்.

தானென்றஐவந்தெண்ணெய்த் தயிலங்கேளு-சாதியாம்நிரம்பஎண்ணெய் வேப்பெண்ணெயும், தேனென்றநல்லெண்ணெய் தேங்காயெண்ணெய்-சிற்றேரண்டத்தெண்ணெயி லிவ்வைந்துங்கூட்டு, ஏனென்றவகைக்குஒரு படிதான்சேரு-எழில்வேப்பெண்ணெய்ப்படி யிரண்டுவாரு, வேனென்றதிரிகடுகு கள்ளிச்சாறு-வெள்ளுள்ளிதூதுவளை நொச்சிச்சாறே. (ருாஅ)

சாறானமணியுத்தா மணியிஞேடு-தழுதாழைமுடக்கற்றான் சித்திரமூலம், தேறானமுருங்கையின்றன் பட்டைச்சாறும்-தேள்கொடு

க்குவேளைச்சா றெல்லாங்கூட, காறுன * பாதாள மூலிச்சாறும் ‡ ந ந்திகேசரச்சாறு படியிரண்டாய், பேருகவகையெல்லாம் எண்ணெ யோடு பெய்துகொடிவேலிவேளை மேனியாமே. (கூாகூ)

* பாதாளமூலி-ஆடுதின்னாப்பாளை.

‡ நந்திகேசரம்-நந்தியாவட்டம்.

மேனியாந்தழுதாழை நொச்சிசங்கு-விருதானகருவாகை புன லிகுன்றி, ஆனியாம்மாவிலிங்கு நிம்பப்பட்டை - ஆயிலியப்பட்டை யொடு * காட்டுக்கொட்டை, நானியாங்கொள்ளுக்காய் வேளைநீலி- நாய்வேளைதூதுவளைச் சாரணைவேர், தானியாம்கார்த்திகையின் கிழ ங்கிநோடு-சார்ந்திடுகல்வெள்ளுள்ளி சடைச்சிவேரே. (கூாய)

* காட்டுக்கொட்டை - காட்டாமணக்கு.

வேரோடுமிளகருணை மருள்கிழங்கு-மிருவாதங்கொல்லி * மர க்கற்றாழைவேர், வேரோடுவெண்முருங்கை கருங்காலிவேர்-விடைத் தோன்றிமுன்னையு முத்திரிக்கஞ்சிவி, வேரோடுபேய்க்குமட்டி கோ ப்பிரண்டை-வியமானதிருகுகள்ளி முயற்காதுவேர், சிரோடுகள்ளியு முத்தாமணிவேர் -சேரும்பேருமத்தை யுடனும்பின்னே. (கூாயக)

* மரக்கற்றாழை-யானைக்கற்றாழை.

பின்னுங்கேள்சிற் றேரண்டத்தின்மூலி - பேகசதாவேரியொடு * பிளகுந்தென்னை, அன்னவேயிருக்கையாமெருக்கன்வேரும்-அழ கானநாய்கடிவே ரிருவேலிவேர், சொன்னவொருசிறுவேம்பு - தேவ தாரம்சொல்லுமாதளைவேரு நாணல்வேரும், பின்னமிலாக்காட் டத் திப்பட்டைவேரும்-பேசரியகருங்குருந்தின் வேருந்தானே. (கூாயஉ)

* பிளகு-கமுகுவேர்.

குருந்தானவமுக்கரு வேளைவேருங் - கொடுங்கருடக்கிலங்குமா தொண்டைவேரும், மருந்தானமயிலாளிப் பட்டைவேரும்-வளமான கருஞ்சூரைப் பெருமந்து, தருந்தானமலைவேம்புப் பாட்டையோடு- தலைமைபெறுமிலுப்பைமேற் புல்லுருவிதானும், தருந்தானநிலக்கடு ம்பு சாசாவெண்ணி-கருவெல்லாம்பலம் நாலாயிடித்துக்கொள்ளே,()

இடித்துநீபாண்டத்திலிட்டுப்பின்பு- ஈரெட்டுமரக்கால்நீர்விட்டு க்குழப்பி,டித்துமேயூறவைத்து அடுப்பிலிட்டு- நவிலுமீராறிலொன் ருய்க் காய்ச்சிப்பின்னும், முடித்துமேபாலோடு எண்ணெய்சேர-மு கியவைத்துக்கற்கவகை பெருங்காயந்தான், தடித்துமேவெள்ளுள்ளி வசம்புசுக்கு-தனிவிளங்கமோமந் திப்பிலிமூலமே. (கூாயச)

மூலமொடுசதகுப்பை நவாச்சாரந்தான்-முனையான ஆனைதிப்பிலியுஞ்சேரே, காலமிகுசிற்றரத்தை பேரரத்தை-தனியானபெருமருந்து முசுறுமுட்டை, கோலமிகுமயிலிறகு அண்டத்தோடு - குதிரையிடகுளம்புசிவல் * ஆகாசத்தூள், ஞாலமதிற்பூத்திடுகா ளானுங்கூட-நற்கடலினுரையோடு சமுத்திராப்பழமே. (௫௱௰௫)

* ஆகாசத்தூள்-ஒட்டறைத்தூள்.

பழமோடுநாணலுந்தான் * கழற்சிவித்தும்-பண்பானதிரிபலையும்பறங்கிப்பட்டை, அழகானசதகுப்பை மரமஞ்சள்தான் - அறைகின்ற * செங்கந்தந் தேவதாரம், விழைவானமாசார மக்கிராகாரம்-மிருகோஷ்டஞ்சடாமாஞ்சி வகைவகைக்கு, கிழமையுடனொருபலந்தான் சொன்னேனைந்தா-கேடில்லாவெள்ளாட்டுக் கோமயத்தே. ()

* கழற்சி - கச்சைக்காய்.

* செங்கந்தம் - சிவப்புசந்தனம்.

கோபயத்தைவிட்டரைத்து அடுப்பிலேற்றிக்-குணமாகவொருவிறகா லெரிக்கவேண்டும், வாமமுடன்மெழுகுபதம் வருதல்பார்த்து வடிகதசத்துள்ளேநீ வைத்துப்பின்பு, நேமமுடன்காந்தச்செந் தூரமொன்று-நேராகக்கழஞ்சிஇடைநால்தான்போடு, தாமறிந்துலிங்கச்செந்தூரம்போடு-தளராமல்தயிலத்தை வடித்துவாங்கே. (௫௱௰௭)

வாங்கிப்பின்கணபதிக்குப் பூசைபண்ணு - மயிலேறும்பெருமானை மனதிலுன்னு, ஓங்கிநீவடுகளையும்பூசித்தோது-உற்றமாரணநோய்களோடுமோடும், தேங்கியேதிரியாதேவயித்தியந்தான்-செப்புவரோவிப்புவுயி லெண்ணைப்போல, வீங்கியேதானியபுடம் வைத்தெடுத்து மேலெங்கும்பூசியே முறுக்கிடாயே, (௫௱௰௮)

முனுக்கியேயனல்காட்டிக் கருகத்தேத்து - முந்தியேதயிலங்காசெடைதானென்று, சுறுக்காகநோய்பலனுள்பலனறிந்து-துடியாகமூன்றுநா ளொன்பதுநாள், இறுக்கியேபுளியுப்புகையுந்தள்ளு - எந்திமையுமாகாவெங் நீர்ச்சோறுண்ணு, மறுக்கிகயகடும்பத்தியங் காக்கவஞ்சும்மக்களேநோய்தீரும் வகைகைக்கேளே. (௫௱௰௯)

வகைகேளீர்வாதமெண் பதுவிநீங்கும் - மகத்தானவாய்வென்றதிருபத்தாறும், தொகையானபட்சவாதம் பாரிசவாதம் தொலையாதஇளம்பிள்ளை வாதம்போகும், திகையானகைப்முடக்குக் கால்முடக்குத்-திமிர்வாதம்பதினெட்டுச்சூலையோடும், பகையானஅண்டவாதஞ்சில்வாதந்தான்-பதின்மூன்றுசந்நிமுதல் பறந்துபோமே. (௫௱௨௰)

பறந்துபோமுட்குத்துப் புறவீச்சோடு-பாண்டிசுவுப்பிசமேங்கல்சிரசுரோகம், இறந்துபோம்பெருவயறு சோகைகாமாலை - ஏகாதநீர்க்கோவை குமரகண்டம், மறந்துபோம்குதிரைவலி முயல்வலிப்பு-வலிதானகாக்கைவலி நடுக்குவாதம், துறந்தோடுஞ்சூனியமும் பில்லிசிரங்குசொறிகரப்பான்குஷ்டம் வண்டெலியும்போமே. (௩௨௧)

எலிகடியுஞ் சிலவிஷமும் பூரான்செய்யான்-இயலானநரிக்கடிநோய் நாய்க்கடிநோய், வலிதானநோயெல்லா மகன்றுபோகும்-மண்டலத்தில் கைகண்ட முறைதானப்பா, சலியாமற்பிணியோர்க்குத்தந்தாயானால்-சகத்திலுனைப்போல் வயித்தியனில்லைபாரு, பலியாதென்றுன்மனதிலெண்ணாதேநீ - பகருகிறேன்சுகபேதி யெண்ணெயொன்றே. (௩௨௨)

சுகபேதி யெண்ணெய்.

ஒன்றானசுகபேதி யெண்ணெயப்பா-வுரைக்கிறேன் கவனமுடனுய்த்துக்கேளு, நற்றானசிற்றேரண்டத்தி னெண்ணெய்-நவிலுமொருபடிபசும்பால் படிதாநாலு, வன்றானவதிமதுரம் கடுகிந்துப்பு - வாளமொடு காயசுத்தி கடுகுரோணி, தன்றானவகைவகைக்குக் கழஞ்சுநாலு-கலந்தரைத்துக்கரைத்தடுப்பி லேற்றிடாயே. (௩௨௩)

அடுப்பேற்றி மெழுகுபதமாகக்காய்ச்சி-அப்பனேவடித்தெடுத்து வைத்துக்கொண்டு, மடுப்பேற்றியெண்ணெயிட விவரங்கேளு-வளமறிந்து சிறுபிள்ளைக்கோர்கழஞ்சு, கடுப்பதறும்பெரியோர்க்கு முக்கரண்டி-கற்குடலுக்கரைக்கால்சேர் கால்சேருட்டு, உடுப்பாகஎண்ணெயுண்டோர் கடிகைக்கப்பா - உண்மையுட னுப்பில்லா வெந்நீர் கொள்ளே. (௩௨௪)

வெந்நீர்தான் கொள்ளநல்லபேதியாகும்-மிகுபேதிகண்டதென்றால் விவரங்கேளு, செந்நீராஞ்சுடுகஞ்சிகாய்ச்சியாற்றிச்-சிறுகநீயுப்பிட்டுக்கொண்டருந்து, அந்நீருமில்லாட்டால்மோர்ச்சோறுண்ணு-அந்தியிலே சீரகமிளகுஞ்சுக்கு, நன்னயமாய்க் கியாழமிட்டுக்கொள்ளச்சொல்லு-ராத்திரிக்கு மிளகுநீர்ச்சோறுமுண்ணே. (௩௨௫)

உண்ணவேயிந்தவிதந் திங்களொன்று-உண்டுவரதேகத்தில்நோய்தானேது, திண்ணமிகும் வாய்வேதுவாதமேது-தேசிகனே சிரங்குசொறிகரப்பானேது, வண்ணமுறுக்கணமேதுமாந்தமேது-வயிற்றுச்சூடஸ்திசுரம் வெட்டையேது, நண்ணுமிகுவாதநீர் பித்தம்போகும்-நானிலத்தி லிவ்வெண்ணெயுரைக்கொணாதே. (௩௨௬)

விரோசனம்.

ஒண்ணுதசதுரக்கள்ளி வேலின்பட்டை-உத்தமனேவாங்கு துண்டாய் நறுக்கிக்கொண்டு, எண்ணுதஆவின்பா லவித்துலர்த்தி-இப்படியேமூன்றுதரமுலர்த்திவைநீ, பண்ணுகப்பாக்களவுபட்டைகொண்டால்-பத்துவிசைபேதியது பண்போடாகும், உண்ணுய்நீ மோரசனம் பகற்போதுண்ணு-உற்றசிரகமிளகுகியாழுங்கொள்ளே. (ருஉஎ)

வேறு-விரோசனம்.

கொள்ளப்பா இன்னமொருபேதிகேளு - கூரானவெள்ளேக்குங் கிலியக்கட்டி, அள்ளப்பாசதுரக்கள்ளிமரந்துளேத்து-அதற்குட்குங் கிலியத்தைவைத்தேமூடு, நள்ளப்பாபட்சமொன்று சென்றுவாங்கு-நலமாகப் பேதியாமின்னங்கேளு, விள்ளப்பாபிரமியொடுகெற்ருழையும் - * வேர்க்கொழுந்து கடுகுரோகணிநிலவாகையே. (ருஉஅ)

* வேர்க்கொழுந்து வேலங்கொழுந்து.

வாகையொடுகெடுக்காயும் * களியடைக்காய் - வகைசமனுக்கொண்டுநீ எட்டொன்ருக, நாகரிகமாகவேகியாழஞ்செய்து-நல்லசிற்றேரண்டத்தெண்ணெய்தன்னே, பாகுபெறச்சமனுகவிட்டுக்கொண்டுண் பரிவாகப்பேதியது நன்ருயாகும், ஒகையுடன்பேதியதுமிஞ்சியானல் உற்றதண்ணீர்சாதமுமாய் உண்ணுஉண்ணே. (ருஉகூ)

* களியடைக்காய்-களிப்பாக்கு

புரசைவிரைப்பேதி.

உண்ணுநீபுரசைவித்தை ஆவின்பாலில்-உறுதியுவினரைத்துண்ணபேதியாகும், சண்ணுமடாநோயெல்லாந்திரேகசவுக்கியம்-தானுகுஞ்சண்டாளக் சீ கிரிமிபோகும், நண்ணுசிறுகிருமிக்கோ வின்னமொன்று-நவில்கொன்றைமரத்துடைய கொழுந்தைவாங்கி, வண்ணமுடனுப்பில்லா தவித்தேயுண்ண-மற்ருநாள்கூண்டோடேகிருமிவீழ்மே.

* கிருமி-கிரிப்பூச்சி-நாகப்பூச்சி-மயரைப்பூச்சி.

துவரைப்பேதி.

வீழுமடாதுவரையிடபேதிகேளு-மிதமாகநற்றுவரைவேகவைத்து, ஆழுமிகவுள்ளுற்றல் சலத்தைவாங்கி-அடைவாகக்கரும்புவெல்லமதிற்போட்டுண்ணு, சூழுமந்ததுவரைதான்வெல்லநீரைச் - சோராமலுண்டுவரக்கிருமிசாகும், தாழுகின்றநோயெல்லாங் காணுதோடுந் தனிநேத்திர-நோய்போகுஞ்சூட்சங்காணே. (ருகக)

நேத்திரவியாதிகளுக்குக்குளிகை.

சூட்சமாஞ்சமுத்திராப்பழத்தைவாங்கி - துப்புரவாயாவின்பா லவித்துலர்த்தி, சூட்சமாநேத்திரநோ யாவற்றிற்குஞ்-சொல்லரியமு லைப்பாலிலரைத்துப்போடு, சூட்சமாய்க்கண் ணுற்ற நோயெல்லாந்தா ன் - தொலைந்துபோமிதனைவிடமருந்தொன்றில்லை, சூட்சமாங்*கூவி ளத்தின்பழத்தின்வித்து-சுத்திசெய்து நந்திபாவட்டம்போடே. ()

*கூவிளத்தின்வித்து வில்வவிரை.

போடவேக்ண்புகைச்சலெரிவுகாந்தல்-புகைமேகம்நீர்ப்பாச்சல் பூச்சுவெட்டு, நாடாதுகடுப்புவலி மிளகின்வாய்வு - நலமானரோகம் போமுளைவுதீரும், வாடாதநேத்திரனேயெல்லாம்போக - மகத்தான குளிகையொன்றுவழுத்தக்கேளு, சாட்வேசங்குதிரிகடுகு*தாரம்-த ருவாக அதிமதுரம் புங்கம்வித்தே. (ருகங)

*தாரம் தேவதாரம்.

வித்தானமனோசிலையும் பீதரோகணியும்-விருதானதுத்த மிவை பத்துங்கேளு, நத்தியேசமன்கொண்டுகல்வத்திட்டு - நந்தியாவட்ட ப்பூச்சாற்றாலாட்டி, சித்திபாக்கி நிழலுலாத்திதேனிலுண்ண-நேத்தி ரநோய்தொண் ணூற்றாறும், சத்தியமாய்ச்சொல்லுகிறேன் தீர்ந்து போகும்-சண்டாளர்க்கிந்நூலைக்கொண்டாலென்னே. (ருகச)

ஆணிப்பூமாற.

என்னவே ஆணிப்பூமாறவேண்டி-யியம்புகிறேன் *கலைக்கொம் புருத்திராட்சம்,பன்னவேவெள்ளைச்சாரணையின்வேரும்-பரிவரன* தேசிப்பல்ஆனைத்தந்தம், நன்னவேசேவலிடநெஞ்செலும்பு-நவில்ச ரிகை வெள்ளியொடு புலிநகந்தான், துன்னவே மேனிவேர் சமனாய் க்கொண்டு-சொல்லாவினீர்தனிலேயூறப்போடே. (ருகரு)

*கலைக்கொம்பு மான்கொம்பு[]தேசிப்பல் குதிரைபல்.

ஊறவேமூன்றுநாளானபின்பு-உகமையுடன்கல்வத்திலிட்டுமை ந்தா, கூறவேமுலைப்பாலாலாட்டிப்பின்பு-குணமாகக்கயிறுசெய்து நி ழலுலர்த்தி, வீரவேஆணிப்பூவுக்குந்தானும்-மிகவாகக்கரைந்துபோ கும்-தேசிகனே கைகண்டவித்தைபாரே. (ருகசு)

*தேறல்-தேன்.

நேத்திரவியாதிசட்கு.

வித்தைபார் கண்ணினுற்றநோய்கட்கெல்லாம்-மேலாகத்தலையி னுற்றவலிகட்கெல்லாம், சித்தையாயெனுமிச்சம் பழமுகத்தைச்விசி

யே*கதிர்செய்துஅயப்பொடித்தூள், அத்தைதானுட்செலுத்திய தன்றன்மேலே-அடைவாகச்சாண்துகிலைக்கொண்டேபந்தாய், மொத்தைபோலேசுட்டிப்பந்தாகத்தீமுன்காட்டிப்பின்புனீகசக்கிடாயே.

கதிர்-துவாரம்.

கசக்கியேகைதனில்தான்வைத்துக்கொண்டு - கண்தனிலேமாறாமலொற்றும்போது, வசக்காதகண்வலிகள் வலிப்புக்குத்து-மாறுதசிவப்போடுமேற்றலைபியினையும், இசைப்பின்றிநாண்மூன்றி லசைப்பற்றுப்போம்-இதுபோலமருந்தொன்றில்வுலகிலுண்டோ,பிசகென்று நினையாதேநேத்திரநோய் - பெலனொடுங்கிநெறிமுறியுங் குணமாய்ச்செய்யே. (௩௩௮)

பூபதிமாத்திரை.

செய்யவேபூபதிமாத்திரைதானென்று - தேசத்திற்சொல்லுகிறேன்மாசொன்றுண்டோ, உய்யவேநாவிரசம் அரிதாரந்தான் உற்றதிரிகடுகுகெந்தி*காயம்)(வாளம், ஐயவேசுத்திசெய்து கல்வத்திலிட்டு-அருங்கொடிவேலிச்சாற்றாலேழுநாள்தான், மைபோலே. ஆட்டிகபிறண்டைசெய்து-மகிமையுடனிழலுலர்த்திச்செப்பில்மூடே. ()

*காயம்-பெருங்காயம்)(வாளம்-நேர்வாளம்.

மூடியேதேனிஞ்சிச்சாற்றிலூட்டு-முறிந்தோடுஞ்சந்நிசுரதோஷமெல்லாம், நாடியேயனுகாதுவாதவாயுநடுங்குமப்பா-சுரமெட்டுங்குன்மமெட்டும், ஓடியேபோகுமடாநாவரட்சி - ஓடுங்காதசயகாசமேகம்போகும், வாடியேயிளையாதேயென்றால்போல-மண்ணிலெவர்சொன்னார்காண் சொல்லார்பாரே. (௩௰௪)

சுர இராமபாணமாத்திரை.

பாரேநீ சுரமனைத்துந் தீரவேண்டிப்-பாடுகிறேன் சுரராமபாணந்தன்னை, சேரேநீவெள்ளையொடுகௌரிரண்டும் - சேர்சமனாப்க்காரசுண்ணம் உள்ளே வைத்து, காரேநீதொளாந்தரமாயெரித்துக்-கல்வத்திலிட்டதனையரையக்கேளு, ஆரேநீ பரும்பாகல்சாறுவிட்டு-அரைத்திடுவாய்மூன்றுநாள் கைமாறாதே. (௩௪௧)

மாறாமலுழுந்தளவாய்க்குளிகைகட்டி - மகிமையுடனிழலுலர்த்திப்பின்புமைந்தா, நீறாகத்தானியபுடம் வைத்தெடுத்து - நீமகிழ்ந்து செப்பிலிட்டுப் பதனம்பண்ணு, ஆகாறுச்சுரங்களுக்கு அனுபானங்கேள்-அடவிஞ்சிச்சாறேனு முலைப்பாலேனும், வீறுதநொச்சிச்சாற் முருங்கைப்பட்டை-பிகுதும்பைச்சாறுடனேகேளும்பின்பே (௩௪௨)

பின்புநீசுக்கரத்தைக்கியாழந்தந்தால்-பேசியதோரனுபான மறிந்துசெய்நீ, அன்புடனேமூன்றுநாள்பத்திங்காக்க-அடைவாகச்செய்துவிடில் சுரங்கள்காய்ச்சல், துன்புறவேசெய்கிறதோர் பதினெண்சுரமும்-தொலைந்துபோம் உண்மையென்றுநம்புநம்பு, இன்புறவேகணபதியும்கந்தன்பூசை-இயற்றிவரவயிற்றுச்சுர மெல்லாம்போமே.

சுராங்கிஷக்குளிகை.

சுரம்போகும்சுராங்கிஷத்தின்குளிகைகேளு-சொற்பெரிய அரிதாரம்பலந்தான்தூக்கு, சிரமானபாக்குப்போற்றுண்டுதுண்டாய்ச்-சீவியேசீலையிலேகிழிபோற்கட்டு, உரமானஒட்டிவிட்டுக் கல்லுச்சுண்ணம்-உத்தமனேசிலேழும்பரவவிட்டுத், தரமானதேசினீர்விட்டால் நீர்க்கும்-o-தமனியம்போலாகுமடாசுத்திதானே. (௩௪௪)

o தமனியம்-பொன்.

சுத்தியாமெடுத்ததனைக்கழுவிப்போட்டுச்-சொல்லரியசாரசுண்ணஞ்சிறுநீர்விட்டு, சுத்தியாங்கரைத்தந்ததெளிவைவாங்கித்-தோலாமலாட்டியேநாலுசாமம், சுத்தியாமெடுத்ததனைக் கழுவிப்போட்டுத்-துலக்கமுடன் *கூழ்ப்பாண்டச்சாற்றிலிட்டு, சுத்தியாயத்தொளாந்திரம்எரித்துவாங்கிச்-சுகமாகக்காடியினுற்சாமமாட்டே. (௩௪௫)

*கூழ்ப்பாண்டம்-கலியாணபூசினி

ஆட்டியேயரசன்பட்டைக்கியாழத்தூட்டு- அப்பனேதொளாந்திரம்நாலுசாமம், கூட்டியேயெரித்துநன்றாய்க்கழுவிப்போட்டுக்-கொம்பினிடபாகற்காய்முற்றல்வாங்கி, வீட்டியேகுடைந்தந்தவிளையைப்போக்கி-வீறுமரிதாரத்தினுள்ளேவைத்து, ஊட்டியேசுண்ணாம்புச்சீலைசெய்து-உகமையுடனெருமையின்றன்சாணம்பூசே. (௩௪௬)

பூசியேபுடம்போடுபாகற்காய்தான்-பொசுங்காமல்கருகாமல்பதமாய்நிற்க, வீசியேதீயெரிக்கவெந்துபோகும்- விதமாககாய்பதம்பார்த்தெடுத்துவாங்கி, ஆசியொடுசுண்ணாம்புச்சீலைதள்ளி-அழகாகக்காயதனைக்கல்வத்திட்டு, தேசுபெறஅரைத்திடுவாய்நாலுசாமம்-தியங்காமல்பாகலிடசாறுகொண்டே. (௩௪௭)

கொண்டப்பாமயனம்போலரைத்துநன்றாய்-குலவியேயெடுத்துசிறுபயறுபோல, கண்டப்பாகுளிகைகட்டிநிழலுலர்த்திக்-கருவாகச்செப்பிலிட்டுத் தானியபுடமாய், விண்டப்பா தீயிலிட்டுவாங்கிக்கொள்நீ-விநாயகனைமுருகனையும்வணங்கிப்போற்று, உண்டப்பாவியாதிகளுக்கடுத்தமாத்ரை-யாராலுமுடியாதினருமைபாரே. (௩௪௮)

அருமைபார்வா தசுரமிஞ்சிச்சார்தேன்-அடல்மைந்தாபித்தசுரம்கொச்சிச்சாறும், பெருமைபார்நொச்சியிடகியாழமாகும்-பிறங்குசிலேற்பனத்துக்குச்சுக்குகியாழம், ஒருமையுடனிவ்வகையிலனுபானந்தான்-உதவாட்டாலவைக்கிசைந்தகியாழத்தூட்டு, தருமையாமிதுசுறுக்குநோய்கள்போகும்-தலைபெரும்பாஷாணக்கட்டுக்கேளே. ()

பாஷாணக்கட்டு.

பாஷாணம்வெள்ளையதுபலந்தான்வாங்கு-பரிவாகச்சீலைசுற்றிக்கொண்டேபின்பு, பாஷாணம்வெள்ளாவிநடுவில்வைத்துப்-பதனமாகவெந்தெடுத்துப்பொடியாய்ச்செய்து, பாஷாணமிப்படிமூன்றேதரந்தான்-பண்ணிவரயெண்ணெய்கக்கிசுத்தியாகும், பாஷாணந்தனையெடுத்து அயக்கரண்டி-பரிந்தட்டுமுந்திரிச்சார்சுருக்குத்தாக்கே. ()

தாக்கவேயிருசாமங்கட்டிப்போகுந்-தனையெடுத்தேயிருயெடைத்தயிலமூட்டு, ஆர்க்கவேகட்டியதுமெழுகுபோலா-மப்பனேவேதையிடவெள்ளியாகும், ஏர்க்கவேயனுபானமறிந்துபோடு-எட்டுவகைச்சுரங்கள்தலைநட்டுவீழும், காக்கவேசந்நிசுரங்காணுதோடுங் - கருவானபாஷாணக்கட்டுதானே. (நுறுக)

குளிர்சுரத்துக்குகியாழம்.

கட்டானகுளிர்சுரத்துக்கியாழங்கேளு-காட்டுநல்லகரந்தையொடுசுக்கெட்டாகும், துட்டானகழற்கியிடபருப்புமாகுந்-துளசிவேரைந்தாகுங்கூட்டியொன்றாய், கொட்டியேநீரைவார்த்தெட்டொன்றாக்கிக்-குணமாகஅந்திசந்திதேனிற்கொள்ள, நெட்டியேவியாதியெல்லாந்தாழ்ந்துபோகும்-ஞீனிலத்திலின்னமொன்றுநிகழ்த்தக்கேளே. ()

சர்வசுரக்கியாழம்.

நிகழ்த்துகிறேன்சர்வசுரக் கியாழங்கேளு-நிலைபெற்றவிலாமிச்சுசீந்தமுதகம், நிகழ்த்துகிறேன்காஞ்சொறிபற்பாடங்கும்மட்டி-நோரந்தேசாரம்வேர்ப்பீர்க்குக்கோஷ்டம், நிகழ்த்தரியசிறுதேக்குங்கண்டங்காலி-நீடுந்திப்பிலிசுக்குச்சிற்றாமுட்டி, நிகழ்த்தியபைந்துளசிவேர்விஷ்ணுகிராந்தி-நேர்ப்பாகச்சமனிடித்தோர்பாண்டத்திட்டே. ()

நாட்பட்டசுரத்துக்குக்கியாழம்.

இட்டுமேநீர்வார்த்தே யெட்டொன்றாக்கி-யிவைபாகமருந்திடவேசுரமெல்லாம்போம், தட்டியேநாட்பட்டசுரத்துக்கெல்லாஞ்-சாற்றுகிறேன்தாமரையின் கிழங்காமுத்தம், எட்டுமேநன்னாரி கிராம்பு

கோஷ்ட-மேலமொடுதாளிசையு நாகப்பூவும், மட்டுமேலவங்கப்பத் திரியினோடு-மதுரங்கோரோசனையுந் தென்னம்வேரே. (௫௰௪)

வேரோடுவிஷ்ணுகிராந்தி வில்வத்தோடு - விரைந்துசமனாகவே யெட்டொன்றாக, ஆரோடுகாய்ச்சியகற் கியாழத்தூட்டு - அகலாதபமுஞ்சுரங்க ளெல்லாம்போகும், வீரோடுவாந்திபித்த சுரத்துக்கெல்லாம்-வெட்டிவேர்சங்கம்வேர் வில்வவேரும், ஆரோடுநன்னாரி யறுகம்வேரு மடல்பொரியுமுட்காவேளை யுந்தானுமே. (௫௰௫)

ஆமடாசிறுபயறு சமனாகக்கொண்-டழகாகச்சேர்த்தொன்றாய்க்கல்வத்தாட்டி, நாமடாநீர்வார்த்துற் தீயில்வைத்து - நலமாகவெட்டொன்றாய்க்குறுகக்காய்ச்சி, போமடா அருந்திவரச்சுரங்களெல்லாம்-பொறிபட்டபஞ்சுபோல்பொசிங்கிப்போகும், வாமடாதாபசுரமெல்லாந்தீர-வழுத்துகிறேனின்னமொரு வரிசைகேளே. (௫௰௬)

தாபசுரக்கியாழம்.

வரிசையென்ன அதிசாரசுரத்துக்கெல்லாம்-மாம்பட்டையதிவிடயம் முதியார்கூந்தல், தரிசையாஞ்சுக்கோடு முத்தக்காசும்-கண்டிப்பாய்நீர்வார்த்து எட்டொன்றாக்கி, புரிசையாமிலவுடைய பிசினன்றாகப்-பொடித்திட்டுக்கொண்டிடவே புகலக்கேளு, கரிசையுறுமதிசார சுரநோயெல்லாங் கண்காணாதோடுமடா கண்டுபாரே. (௫௰௭)

பித்தசுரத்துக்குப் பஞ்சதாரை.

கண்டுபார்பித்தசுரம் பித்தவெட்டை-கலங்காதஅஸ்திசுரங்காணாதோடும், கொண்டுபார்பேய்ப்புடலுங் கிராம்புசுக்குக்-கோரையாங்கிழங்குநிலவேம்புமல்லி, தண்டுமிண்டுசெய்யாதே சமனாய்க்கொண்டு-சாதகமாய் நீர்வார்த்து எட்டொன்றாக்கி, உண்டிடவே சொன்னதொருசுரங்களெல்லா-மோடுமடாவானெழிலிபோலுந்தானே. ()

சுரதோஷத்திற்கு.

தானென்ற சுரதோஷமெல்லாந்தீரச்-சாற்றுகிறே னின்னமொருவகையைக்கேளு, வானென்றவில்வவேர் விலாமிச்சம்வேர் - வண்ணெருஞ்சி நன்னாரிமதுரஞ்சோம்பு, கோனென்றவிளாவோடுமுத்தக்காசும்-குலவுமுந்திரிப்பழம்நெற்பொரியினோடே, வானென்றநெல்லிமுள்ளி யிலுப்பைப்பூவு - மழகார்ந்தசுக்கும்வகை சமனாய்க்கொண்டே. (௫௰௯)

கொண்டேதானீர்விட்டுக் கியாழந்தன்னைக் - கூர்மையுடனெட்டொன்றாய்க் குறுகக்காய்ச்சி, உண்டிடவேதாபசுர மயக்கந்தூக்க-

மோடாதபித்தசுரம் நாவரட்சி, அண்டிடாதையர்மே லாணேகண்டீர்-அடல்பெற்றகுருவின்மே லாணைகண்டீர், திண்டோளீரெந்தன்மே லாணைகண்டீர்-தீர்ந்துபோம்வயித்தியரே தேர்ந்துபாரே. (௩௬0)

பித்தத்திற்குக்கியாழம்.

பாரேநீபித்தவகை யெல்லாம்போகப்-பாடுகிறேன்பஞ்சதாரை கழஞ்சிரண்டு, சேரேநீயதிமதுரங் கழஞ்சுமூன்று-திகழிஞ்சிநாற்கழஞ்சு ஏலமொன்று, ஆரேநீதிப்பிலியோர் கழஞ்சுகூட்டு-யரைத்தாவின்பால்தனிலே யன்பாய்க்கொள்ளு, நேரேதான்வருகிறதோர் பித்தநோயும்-நிகரானவெள்ளிறக்க முஷ்ணம்வாய்வே. (௩௬௧)

வலிப்புக்குத்தயிலம்.

வாய்வோடுஅரோசிகங்க ளன்னதோஷம்-வளர்பித்தசுரத்தோடுப்பிசமுங்கூட, வாய்வுற்றநோயெல்லாம் போகுமன்றி - வலிப்புமுதல்வலிப்பெல்லா வற்றிற்குந்தான், தேய்வென்றதாளகந்தான் பலமும்ரண்டு-சிலையொன்றுகவரியொன்று வீரம்பாதி, நாயகமாய்வெடியுப்புக்கல்லுப்போடு-நவாச்சாரம்பூநீரும் பலமரையே. (௩௬௨)

பலமாகவிவையெல்லாஞ்சுத்திசெய்து-பாங்குடனேகல்வத்திலிட்டுப்பின்பு, விலமானமஞ்சளென்ற கருவாலாட்டி-வில்லைக்கட்டியுலர்த்திநன்றாய்த் தயிலம்வாங்கி, நலமான்சன்னிமுதல் வலிப்புக்கெல்லாம்-நாகவல்லிவெற்றிலையின் பணவெடைகொள்ள, பலமானபதின்மூன்று வலிப்புச்சந்நி-பறந்துபோமறுதேசம் புக்கிப்போமே. ()

கும்மட்டிக்காய்க்குழம்பு.

புக்கிப்போம்கும்மட்டிக்காய்க் குழம்புகேளு - புகலரியபேய்க்கும்மட்டிக் காயின்சாறு, தக்கியேபடியொன்று வடிகட்டித்தான் - தாழியிலிட் டடுப்பேற்றிக் குழம்பாய்க்காச்சி, துய்க்கவேசுரியசிரசங்கழஞ்ச-சுத்திசெய்தவாளமுமோர்கழஞ்சுகூட்டு,மெய்க்கவேகடுகுரோணி கடுக்காயிந்து-வெண்காரந்திப்பிலியோர் வகைவகைக்கே. ()

வகைவகைக்குக்கழஞ்சியொன்று கல்வத்திட்டு - வளமாககாயமொரு கழஞ்சுஇட்டு, தகையாகமைபோல அரைத்துப்பின்பு-சாற்றியதோர்குழம்பினிலே போட்டுக்கிண்டு, மிகையானவேப்பெண்ணெயோர்கழஞ்சு-வீறுனபனைவெல்லங் கழஞ்சுஒன்று, தொகையாகவிவையெல்லாஞ் சேர்த்துக்கிண்டு - சொல்லரியமெழுகுபதந் தன்னில்வாங்கே. (௩௬௫

வாங்கியேபரணிதனி லடைத்துக்கொண்டு-மகத்தானபெரியோர்க்குப் புளியம்வித்து, பாங்கியேசிறியோருக் கதிலும்பாதி-பங்கிட்டுப் பனைவெல்லந் தனிலேயூட்டு, வீங்கியேயலையாதே மயங்காதேநீ-வெகுபேதியாகுமடா விரைந்துபாரு, தேங்கியேகளைத்துவிழப்பேதியானல் செம்பியநீரினிலுமே ராசனம்பண்ணே. (௬சுசு)

பண்ணவேபேதிசிற்குந் தீரும்நோய்கள் பரிவான கௌசிகெண்டை யகுவைவெப்பு, நண்ணவேபெருவயிறு மகோதரந்தா னற்பீலியுண்மாந்தை புரைநீர்க்கோவை, வண்ணமாம்பாண்டோடு சோகை குன்மம் வலிவீக்கம்கிரிபுழு வாயுச்சூலை, புண்ணனவிவையெல்லாம் போகுஞ்சொன்னேம் பொய்யல்லவைத்தியரே கண்டிடீரே.(௬சுஎ)

சர்வசுரம் சந்நிமுதலியவற்றிற்குக் குளிகை.

கண்டிடுவீர்சர்வசுர சந்நிதோஷம்-காணுமலோடவொரு குளிகைசொல்வேன்,விண்டிடுவீர்*மால்தேவிகௌரிவெள்ளைமிருசமுங்கெந்திலிங்கங் கோரோசனையோடு, அண்டிடவேசுத்திசெய்து கல்வத்திட்டு அழகாகப்பாகலிலைச்சாற் சாமமாட்டு, கண்டிடவேயமனம்போலாகு நன்றாய்க் காம்பீரவெந்தயம்போற் குளிகைகட்டே. ()

* மால்தேவி - தாளகம்.

குளிகைகட்டிநிழலுலர்த்தி வைத்துக்கொண்டு குவலயத்தில்மாந்தருக்குக் கொடுத்தாயானல், ஒளியில்லாச்சந்நிசுர தோஷம்யாவுமோடியேபோவதற்கோ ரையமில்லை, அளிமுராலுங்குழன்மடவா ராசைதீர்க்கு மப்பனேபூவுலகில் சொல்லாதேநீ, களிகொண்டு அனுபான மறிந்துசேர்த்தால் கனமான நோயெல்லா மகன்றுபோமே.

விரைவாதத்துக் கெண்ணெய்.

அகன்றுபோம்விரைவாத மண்டவாத மகல்சிற்றேரண்டெண்ணெய் படிதானென்று, புகன்றிட்டமிளகுசுக்கு வசம்புவோமம் போற்றும்வெள்ளுள்ளி திப்பிலிகழற்சி, சகன்றிட்டவித்துந்தான் வகைவகைக்குச் சாற்றினேம்கழஞ்சுஎடை பொடித்துப்பின்பு, நகன்றிட்ட இளவறுப்பாய்ச் சூரணித்து நன்மையுடனெண்ணெயிலே கலக்கப்போட. (௬எ0)

கலந்துதான்சூரிபுட மொன்பதுநாள் கனிந்திட்டுக்குச்சியினாற் கிண்டுகிண்டு, நலம்பெறவேநாளொன்றுக் கந்திசந்தி நன்மையுடனேரமது கரண்டிகொள்ளு, அலம்பெறவேவிரைவாத மண்டவாத மறையுமோரண்டவீ ரண்டவாதம், பெலம்பொதிந்தலோகமெல்லாம் பிரமித்தோடும் பிரபலமாயிந்நூலை தேடிப்பாரே. (௬எக)

## தசதீட்சைக் குழம்பு.

பாரேனீவாதரோ யெல்லாந்தீரப் பாடுகிறேன் தசதீட்சைக் குழம்புதன்னை, காரேனீமுற்றினநற் றேங்காயொன்று கண்திறந்து னீர்போக்கி யதனுக்குள்ளே, வாரேனீகொடிக்கள்ளி சதுரக்கள்ளி வகைக்கொருகழஞ்செடையாய்ப் பாலும்வாங்கி,சேரேனீதேங்காயி னுள்ளே வார்த்துச் செப்புகிறேன் பின்புகடைச் சரக்குக்கேளே.

கேளப்பாகெந்திரசங் காந்தமோடு கெடியானதிரிகடுகு சதயங்காரம், வாளப்பா கடுகுரோகணியுங்கூட மகிமையுடன்மூடியேபொதிந்துகாணி, நாளப்பாபெரியதொரு புடத்தைப்போடு நலமானபுடமாறி யெடுத்துக்கொண்டு; மீளப்பாயதனுள்ளே மருந்தைப்போலாம் விதமாககத்திகொண்டு வழித்துவாங்கே. (௩௭௩)

வழித்தெடுத்துக்கல்வத்தி லெடுத்துநன்றாய்ப் பனைவெல்லங்காய்ச்சியந்தப் பாகுவார்த்து, செழித்திட்டமயனம்போ லாட்டிவாங்கிச் செயலாகவழித்துஒரு சிமிளில்வைத்து, விழித்திடவேகாசெடைதா னுள்ளேகொள்ளு மிகுபேதியாகுமிதற்கையமில்லை, தெழித்திடவேபேதியஃத்திகமானல் தேங்காதேமோரசன முண்ணுநண்ணே.

நண்ணவேயில்லாட்டால் வசம்புகூட்டு நன்மையுடன்கியாழந்தா னுண்ணத்தீரும், திண்ணமுடன்சுகபேதி யாகும்பாரு-தீராதரோய்தீருந் திருகொன்றில்லை, வண்ணமில்சீர்ப்பெருவயிறு பீலிபாண்டு மகோதரமுங்காமாலை சோகைபுண்ணு, கண்ணெரிவுகைம்முடக்குக் கால்முடக்குங் கதிர்கண்டபனிபோலப் பறக்குங்காணே. (௩௭௫)

## குமட்டிக்காய்க் குழம்பு.

காணவேகுமட்டிக்காய்க் குழம்புதன்னைக் காட்டுகிறேன் சர்வரோ யெல்லாந்தீர, ஊணவேபேய்க்குமட்டிக் காய்தானூறு உறுதியுடனிடித்துசாற் படிதான்பத்து, பேணவேபாண்டத்தி விட்டுப்பின்பு பெருங்காயங்கழஞ்செடைதா னைந்துபோடு, நாணவே வெண்காரம் வாளம் இந்து நவில் கருஞ்சீரகங் கடுகுரோகணியாமே. (௩௭௬)

ஆமேதான்வகைக்கு ஒரு கழஞ்சுவீத மரைத்துமைபோற்சாறு தன்னில்விட்டு, வாமேதானடுப்பேற்றிக் கிண்டிவற்று மட்டுமே யெரித்துமைபோல்சிற்றேரண்டம்,வேமேதானிருகழஞ்சு அதிலேவார்த்து மெழுகுபோல்திரண்டுவரும்பதத்தில்வாங்கு,தாமேதான்சிமிழில்வைத்துப் பதனம்பண்ணித்தன்மைகண்டு குன்றியள வுண்டைபோடே.

போட்டவுடன்பேதியதா மலக்கவேண்டாம் புகழாவின்மோர சஊ முண்ணத்தீரும்,!வாட்டஞ்செய் வாதமெண்பதுவுந்தீரும்-வாயு வொடு குன்மமெட்டுஞ் சூலேதீருர், பாட்டென்று முடக்கியதோர் சூலையெல்லாம் பஞ்சிலிடும் நெருப்பதுபோல் பற்றிப்போகும், தேட்டென்ற இந்நூல்போ லார்தான்சொன்னூர் செப்புகிறேன்சூலேபகை தீரக்கேளே. (௬௭அ)

சூலைக்குச் சூரணம்.

தீரவேகருவாகை பலமோபத்து சொல்லாட்டால்வெள்வாகை யாகுமாகும்,தீரவேபலம்பத்து ஐலிப்பட்டை சிறப்பானகொடிவேலி யழிஞ்சிவித்து, சேரவேசிறுபிரப்பங் கிழங்குபத்து செயலாகப்பேய்த்தேன்றூன்பட்டைபத்து,தூரவேகோப்பிரண்டை பலந்தான்பத்து தூதுவளைபத்தூதழு தாழைபத்தே. (௬௭௯)

பத்தோடுநொச்சியுத்தா மணியுஞ்சேரு பாங்கானவெள்ளைச்சாறடையுங்கூட்டு, கொத்தோடுமிளகுசங்கு கரணைசங்கு * கொடுக்கோடு கழற்சிக்கா சடச்சிக்காயும், அத்தோடுமுருங்கை நிம்பங் கரியசூரை அடலிண்டைமயிலாளி வெள்ளெருக்கு, சித்தகவமுக்குறு வகைவகைக்குச் செயலாகப்பத்துச்சேர்த்துக்கொள்ளே. (௬அ0)

* கொடுக்கு தேள்கொடுக்குமூலி.

சேர்த்தபின்பு பரங்கிப்பட்டை பலந்தான்பத்து திறமாகவிவை யெல்லாம் நிழலுலர்த்தி, ஆர்த்தபின்பு ஆவின்பா லதனூற்சுத்தி யன் புடனே செய்திடித்து வடிகட்டிக்கொண், டாத்திடவேமற்றுமொரு தாழிதன்னி லடைவாகப் பெய்துகடைச் சரக்கைக்கேளு, பார்த்த வொருவசம்புதிரி கடுகுகாயம்பாங்கான சதகுப்பைக்கார்போகியே.

போகியொடுமரமஞ்சள் தசமதாகம் புகலரியசீரகத்தோடின்றி எகியதோர்தாளிசைச வெட்பாலேகோஷ்ட மியலானதிருகுகள்ளிப் பொருக்குக்கூட, வாகியலாரனைத்திப்பிலியுமூலம்-குக்குடன் வாலுழுவை யரிசியாகி, யல்சேரிரசகற்பூ ரத்தோடெல்லாம் பரிந்துவகை வகைக்குஇரு பலந்தானன்றே. (௬அ௨)

அன்றூகவிள வறுப்பாய்ச் சூரணித்து அழகாக முன்மருந்தோடொக்கச்சேர்த்து, நன்றூகச்சருக்கரைதா னலத்தோன்று நல்கிவிடு வுதவாட்டால் பணிவெல்லமாம்,குன்றுபலந்திசந்தி வெருகடித்தூள் கொண்டிடவேமண்டலந்தான் தீராநோய்கேள், சென்றேடும் நலங்கெடுத்த வாதஞ்சூலே செப்பரியசூலேநோய் பதினெட்டோடே. ()

எட்டோடு அஷ்டகுன்மங் கிரந்திநோயு மெண்பதுவாதமும் வாயுவிருபத்தாறும், கெட்டோடுமரையாப்பு அண்டவாதம் கேடு கெட்ட பதினெட்டுக் குட்டரோகம், விட்டோடுந் தேகத்தைச்சிவப் புவெள்ளை மிகுமஞ்சள் மேகமோடு மண்டைச்சூலை,தட்டோடுங்கண் டமாலை *இருபான்மேகம் தன்னோடுசொறிசிரங்குகாப்பான்போமே.

* இருபான்-இருபது.

போமென்றபத்தியமா யுண்டுதேறு பொல்லாதவிஷக்கடிகளெல்லாம் போகும்,நாமென்றபத்தியஞ் சிறுபயறுதுவரை-நந்தாததூதுவளை வற்றலாகும், ஆமென்ற வெள்ளாட்டு வற்றலாகும் அயிரைவரால் கெளிறிவைகளுலர்ந்ததாகும், ஓமென்றமுபல்காடை கௌதாரியாகு மூர்க்குருவியாரணிய மானுமாமே. (௩௮௫)

மானோடுவருதலையு முருங்கையாகும் மாசார்ந்த அறுகீரை சிறுகீரையாகும், தேனோடு ஆவின்பால் நெய்யுமாகுஞ் ஜீனியொடுகதலியின்றன் பழமுமாகும், கானோடுவழூதலைக்காய்ப் பிஞ்சுமாகுங் கதலிக்காய்ப்பிஞ்சாங்கு மற்றொன்றுக, பானோடுதலைமுழுக ஏரண்டெண்ணெய் பகர்வெந்நீராமுப்பு வறுத்தேயுண்ணே. (௩௮௬)

உண்டவேமண்டலந்தா னேய்கடரு முறுதியப்பால் நினைத்ததெல்லா முண்ணலாகும், கண்ணமாம்நோய்தீர வேண்டுமென்றால்கடிதான்பத்தியந்தான் காக்கவேணும், கண்ணவேதவறச்செய்தால் நோய்தீராது தாணிதனிலுண்மையெனச் சாற்றினேன்காண், திண்ணமொடு பண்டிதரே முறைதான்தப்பிச் செய்வீரேல் பழிபாவமெய்தும்பாரே. (௩௮௭)

## கட்டிகெண்டைக்குக் குக்குடச்சூரணம்.

பாரேநீகெண்டையொடு காய்ச்சற்கட்டி பறக்கவேகுக்குடத்தின் சூரணந்தான், காரேநீமுற்றினதோர் சேவல்வாங்கிக் கால்தலையும் மயிர்போக்கி முதுகைக்கீறி, கோரேதான்குடலீர லெல்லாம்போக்கிக் குணமாக இந்துப்புக் காயமோமம், ஆநோதான் வெள்ளுள்ளி கரியசீர மடல்நவாச்சாரமொடு வளையதுப்பே. (௩௮௮)

உப்போடுகல்லுப்புச் சவட்டுப்புந்தான்-உள்ளதிரிகடுகுசுத்திசாரத்தோடு, தப்போடு சாதிக்காய் கிராம்புபத்திரி-தனியேலஞ்சிறுநாகப்பூவுந் தாளிசை உப்போடே வகைவகைக்குக் கழஞ்சுசொன்னேம் ஒருகல்வத்திட்டுக் கொடிவேலி பிரண்டை, கப்போடே பேய்க்குமட்டிச் சாறரைத்துக் கனமாகக்குக்குடத்தி லிவைகள்கூட்டே. ()

கூட்டியேசவுரியினு லதணமூடிக் குணமாகத்தாழியிட்டுப் பின்னுங்கேளு, நாட்டியேகரிசாலே யேனிச்சாறும் நலமானகோமயமுங் கலந்துநன்றாய், பாட்டியேபின்னுறு படிதான்வாரு பக்குவமாய்மேல்மூடிச் சீலேசெய்து, தாட்டிகமாயடுப்பேற்றி யோர்விறகுதன்னால் சாறெலாம்வற்றுமட்டு மெரித்துவாங்கே. (நுகூய)

வாங்கிமேசக்கையெல்லா மெடுத்துக்கொண்டு வளமாகவெயிலுலர்த்தி யிடித்துத் தூளாய், பாங்கியே கலசத்தி லிட்டடைத்துப் பக்குவமாய் நாளொன்றுக் கந்திசந்தி, ஒங்கியேமண்டலந்தா னுண்டாயானுல் ஓடாதநோயெல்லா மோடுமன்றித், தேங்கியேயலேயாமலதனேடேதான் திரிலோகம் சேர்ந்துக்கொள் பின்னுங்கேளே. ()

கேளப்பா அஷ்டகுன்மம் பீலிபாண்டு கொடியான காமாலே சோகைநோயும், வாளப்பாநீர்க்கோவை மகோதரந்தான் மகிமைபுள்ள விருமல்வெப்புக் காய்ச்சல்வாசம், நீளப்பாவருங்கெண்டைகட்டியோடும் நீடுற்றவாதமெல்லாங் கேடுற்றேடும், வேளப்பா ஒன்றும் பொய் யாமற்சொல்லி விட்டேன்கா ணென்னுலே நிசமாம்பாரே.

சிரவோட்டின் பற்பம்.

பாரேநீ சிரவோட்டின் பற்பந்தன்னேப் பச்சையுள்ள சிரவோடு பரிந்துவாங்கு, ஆரேநீதேசியிட நீரைவாங்கி அதிலூற்றியுலர்பூவைக்கலக்கிவைத்துப், பேரேநீகபால வோடுபோட்டுப் பெலத்துடனே தானுலர்த்திப் பெட்பதாக, ஆரேநீநெறுக்கியந்த வுவர்ப்பூவைத்தானரைத்துமே போந்துஒரு புடத்திற்போடே (நுகூந)

போட்டாறியெடுத்ததனேக்காடிவார்த்துப்பூரித்துக்கோமயத்தாற்கழுவிநன்றாய், ஆட்டியேகல்வத்திற் சுன்னநீரா லரைத்துமேவில்லே தட்டிக்காயப்போட்டு, சேட்டியே மேன்மூடிச்சீலேசெய்து திறமாக முழப்புடத்தி விட்டுவாங்கு, ஈட்டியேமறுபடியுங் கல்வத்திட்டு இளநீரோடாவின்பாலிசையவாட்டே. (நுகூச)

இசையவேமயனம்போ லரைத்துநன்று யின்பமுடன் வில்லே தட்டி ரவியுலர்த்தி, அசைவின்று போட்டினிலிட்டோடுமூடி அதட்டியே முன்போலப் புடத்தைப்போடு, பசையாதே யாறவிட்டு யெடுத்துப்பாரு பாரசங்கு வெள்ளியிதுக் கிணேயொவ்வாத வசையாதே தேவிபதப்பூசைபண்ணி மகத்தானபற்பத்தைப் பதனம்பண்ணே.

பண்ணவேபடிமுடியுமிதுவேயாச்சுபகரொண்ணுவாதியந்தமிதுவேயாச்சு, விண்ணவே ஆகாயமிதுவேயாச்சு விருதான நோய்க்கெ

ல்லாம் வயிரியாச்சு, நண்ணவே யனுபானமறிந்துபோடு நல்லிளைசம யந்தி யிருமல்காசம், வண்ணமிலா மேகவகை சூலைகுஷ்டம் மாருத கிரந்தி யரையாப்புப்போமே. (௩௯௯)

அரையாப்புச்சிரங்கு சொறிகரப்பான்போகு மப்பாலுமாருநோ யகன்றுபோகும், திரையானவனுபானந்திரிகடுகுத்தூளாந் தேனிள நீர் நெய்பாவின் பாலுமாகும், கரையான வெள்ளைச்சீ ரகமுமாகும் கண்டறிந்துவுண்டாலே ரோகந்தீரும், நரைபோகுமிளமைவரு முண் மைகண்டாய் நணுகாத வியாதியெல்லா மணுவாய் போமே. ()

ஆனையறுகம்வேரவிழ்தம்.

அணுகாமல் மேகவெட்டை பிரமேகங்க ளகலுதற்குவகையொ ன்றுபுகலக்கேளு, நணுகாமலானையிட அறுகம்வேரை நன்றாக ஒருசு மைதான் பிடிங்கிவந்து, குணுகாமலிடித்ததனைப் பாண்டத்திலிட்டு க் குணமாகச் சலமதிலே நிரம்பவார்த்து, புணுகாமற் பிசைந்துசிலை வடிகட்டிப் பின்பிழிந்துகொண்டு சக்கையெல்லா மெறிந்துபோடே.

எறிந்திட்டுப்பிழிந்தசலந் தெளியவைத்து இயல்பாக மூன்று நாள் சென்றிருந்து, அறிந்திட்டு அடிவண்ட லுறைந்தவற்றை யாதி த்தன் முன்னுலர்த்தியுண்டைசெய்து குறிந்திட்டப் பக்குவமாயெடு த்துக்கொண்டு குணமாகவுண்டுவர மஞ்சள்ரத்தம், தறிந்திட்டமயிர் மேகஞ்சீழ் விழுதலோடு தழலான மேகவகை விழலாய்ப் போமே.

அழிஞ்சித்தயிலம்.

போமென்ற அழிஞ்சியிட தயிலங்கேளு புகன்றிட்ட எறிழிஞ் சியானல்னன்று, ஆமென்றதில்லாட்டாற் சொல்லக்கேளு அவனி தனிலுள்ள அழிஞ்சியையேவாங்கி, ஓமின்றிநறுக்கிக்குழித்தயிலம் வாங்கிச் சுத்திசெய்த கர்ப்பூரம் பலங்கால்போட்டு, நேமமுடன் பத னமாய் வைத்துக்கொண்டு நிதமொருகாசெடை பதமாய்த்தயிலங் கொள்ளே. (௪00)

கொள்ளவே நோயறிந்து அனுபானஞ்செய் குடிகெடுத்த மேக வகைபிரமேகங்கள், மெள்ளவே மேகத்தாலெடுத்தவாயு விஷக்கடி நோயுள்ள வெல்லாம் விறிட்டோடும்,கள்ளமாஞ் சிரங்குசொறி கர ப்பானேயும் கண்காணுதோடிடா குஷ்டரோகம், வள்ளலேதீரும் பத்தியந்தான்கார்வாய் வாகையிடபட்டைமுன்போற் றயிலம்வாங்கே

வாங்கியே காசெடைதானுள்ளே கொள்ளு மைந்தனே மேல்பூ சப் புனலிதீரும், தாங்கியே நாண்மூன்று தயிலம்பூசிச் சாதகமாய் வேதுவிட்டுப் பிடிக்கவேண்டும், ஆங்கியே வாயுவென்ற தெண்பதுந்

தானதிலெடுத்த வாயுவெல்லாம் கெதிகெட்டோடும், பாங்கியே மேகத்தாலெடுத்த நோய்கள் பறந்தோடப்பாடுகிறேன் தயிலங்கேளே.

## பூதமாரணவிஷமுஷ்டித்தயிலம்.

தயிலங்கேள் வாதபித்த சிலேத்துமத்தால் தானெழுந்த ரோகமுதல்வலிப்புச் சந்நி, செயிருற்ற வாயுவென்ற திருபத்தாறுங் கோகுஷ்டம் பதினெட்டுக்குஷ்டங் குன்மம், அயிருற்றவிஷநோய்களறுபானுன்கு மடல்பூத பைசாச வேதாளங்கள், வியமில் சண்டாள பலரோகந்தீர விறல்சண்ட சர்வமாரணமிதாமே. (சO௩)

மாரணமாங் * குடோரிவிஷமுஷ்டித்தயிலம்வரிசைபெறச்சொல்லுகிறேன் வைத்தியரேகேள், மாரணமாம்விலிங்கை முருங்கைவேம்பு வாகையொடு கருவாகை யழிஞ்சிவெட்டி மாரணமாய்ப் பேய்த்தேற்றான் பேய்க்குமட்டி மருக்காரை தூதுவேளை கண்டங்காலி, மாரணமாங் கருங்குருந்து மாவிலுப்பை வன்னிகருஞ்சூரை செங்கத்தாரியோடே. (சO௪)

* குடோரி சண்டமாருதக்குடோரி.

தாரியொடு தேவதாரமருதோன்றித்தான் தழுதாழைவெள்ளிண்டு நொச்சிச்சங்கு, காரியமா மிளகரணை கருமுள்ளியுங் கருவான செம்முள்ளி வெள்ளைச்சாட்டரணை,சீரியசீர்ச்சத்திச்சாரணையினோடு திறமான முன்னையுங் கோட்டாத்தியயிலும், கூரியநற்கருங்காலிகோப்பிரண்டை கொடுவேலி யெருக்கோடு நாய்க்கோட்டானே. (சOரு)

ஆனேதான்புன்னையொடு பெருவிளாவு மழகானபெருங்குமிழி சேங்கந்தஞ்சேர், நானேதானுலரசு நாவலத்தி நாய்வேளை குப்பைமேனி சங்கங்குப்பி, தேனேதான் வெள்ளறுகோடமுக்கறு சங்குசிற்றாமுட்டி பேராமுட்டி விராலிக்கள்ளி,வானேதான் சதுரக்கள்ளி கொடிக்கள்ளியும் மகிமையுள நாயுருவி * தோடையாமே. (சO௬)

* தோடை-ஆடாதோடை.

தோடையொடு முசுமுசுக்கை கருங்கரந்தை சொல் * மத்தை வில்வவேர் சிந்தியன்றி, வாடையா மிருவேலி பங்கம்பாலை வண்மையுள்ள நீலக்கடம்பு தொடைவேர்க்காயின், சாடைமிகு நெல்லிபெருநெல்லியாகுந் தனியான சிறுகுறிஞ்சா முருக்காதண்டை, ஆடைமிகுங்கடலவினிமீதேமைந்தா ஆற்றரளிகற்கோட்டைகுறுக்காமென்னே

* மத்தை-ஊமத்தை.

குறுக்கோடுபேயத்திகிளுவைகாஞ்சி கோவையொடு நிலவாகை புனலித்தண்டு, வருக்கோடுஊழலாத்திவாதங்கொல்லி வாகுடனே பெருமருந்தாவாரை தேக்கு, அருக்கோடு வெட்பாலை சிவனார்வேம்பு ஐவேலி முடக்கற்றான் முத்தெருக்கன், வருக்கோடு மலைதாங்கி காக்கைவேரும் வளர்சிறிய பிரம்பு கிடங்குடன் துத்தியே. ()

துத்தியொடு வெட்பூலாவட்டத் திருப்பி தோமில்லா முந்திரி வேர் மரவள்ளியே, வித்தியுள *சலந்திரட்டி முடிவேரும் விருதான கறிகருணைக் காட்டுக்கருணை, கத்திமிகுபலையாலிகொக்கெருக்கு கவிழ்தும்பை யாளிவேர் ஞாளிநீலி, சித்திமிகு நிலவேம்புதுளசி நிம்பஞ் செழிய குருந்தோட்டை நன்னாரிதாமே. (௪௦௯)

* சலந்திரட்டி கொத்தான்.

நாரியொடு கஸ்தூரி பட்டையாகும் நற்சிற்றாமல்லியொடு பேராமல்லி, வீரியமாம் வெருகுமரல் மரகற்றாழை மிக்கமயிலாளி திருநாமப்பாலை, வாரிபதோர் கருநாணல் நற்கற்றாழை வளமான * நரிமிரட்டியானை நெரிஞ்சி, காரியமாங் கருவாழை தென்னம் வேரும் காட்டுமரமஞ்சளு மாற்றறுகுமாமே. (௪௧௦)

* நரிமிரட்டி-கிலுகிலுப்பை.

அறுகுமாம்பழுபாகல் தேவருக்கு அழகான அகிலகெந்தமிலங்கையாகும், குறுகுமரக்காளான் பேரிச்சம்பாளை குணமாகவகைக்கு வகைசொல்லக்கேளு, இறுகாமல் வேர்வகையு மூலியுந்தானிணையாகச் சமூலமெனச் சேர்த்துக்கொள்ளு, மறுகாமல் மைந்தனே மதிமாறாதே வகைக்குப்பலம் பத்தாகவாங்கிக்கொள்ளே. (௪௧௧)

பத்தாகவாங்கியெல்லாம் நிழலுலர்த்திப் பாங்காக இடித்தொரு பாண்டத்திட்டு, சத்தாகக்குழிப்புடத்திற் றயிலம்வாங்கிச் சார்வாக வைத்துப்பின் சாற்றக்கேளு, தித்தாகஆனை * யஸ்திகுதிரையஸ்தி சேர்மனு டஸ்தியொடு முயல்புழுக்கை, நத்தாக எலியும் வெள்ளாட்டுப் புழுக்கை நலமான புலிகரடி புல்வாயோடே. (௪௧௨)

* அஸ்தி-எலும்பு.

புல்வாயுமுதலையொடு மந்தியின்றன் புன்புலாலுலர்ந்ததாமுள்ளூப்பன்றி, நல்வாய் * அழுங்கெனருமக்கொம்புங்கூட நல்லபசுந்தவளை பச்சைப்பாம்பு விரியன், செல்வான வெண்ணாந்தை காக்கைகூகை திகழுமயிர்பீலி நண்டு சிப்பியாகும், வல்லான நாய்க்கட்டம் வெளுப்புடும்பு வலியதேவாங்கு பச்சோந்தியாமே. (௪௧௩)

* அழுங்கு ஆமை.

ஒக்திபொடுகுதிரைலத்தி யானைலத்தி உலராதகழுதைலத்திமுசு றுமுட்டை, சாந்தியுள்ளமலப்புளி * குக்குடமலமும்தயவான † அண் டத்தோல்மண்டையோடு, காத்தியுளபன்றிக்கொம்பெருமைக்கொம் பு * கந்துகத்தின் குளம்பு * சிவல் போத்து † வாலி, பூந்திமகிழ்கா டையஸ்திகழுகெலும்பு புகழ்வரியவண்டுடன்செங்குளவிக்கூடே. ()

† குக்குடம்-கோழி † அண்டத்தோல் முட்டையோடு
† கந்துகப்-குதிரை † சிவல்-கவுதாரி.
† போத்து-செம்போத்து † வாலி-கரிக்குருவி.

கூடோடுவகைவகைக்குப் பலந்தான்பத்து குலவியேயுலர்த்திய தைத்தாழியிட்டு, நீடோடுசெழித்தயிலம்வாங்கிப்பின்பு நீயெந்தமுத்தயி லத்துடனேசேரு, ஓடோடுசெய்க்கின்னம்வகைதான்கேளு ஓங்கியே பெருங்காயம்வசம்பிர்துப்பு' காடோடுகெரிசிரகமுமோமம் கருவானை த்திப்பிலிதிப்பிலி மூலம்மே. சாயரு

மூலமொடுகடல்நுரையுஞ் சமுத்திராப்பழமும் முடிவானதேசா வரஞ்சுக்குங்கூட்டு. வாலமிதுருக்கி லன்ன பேதியுமாம்வளமானமுசு ட்டைவித்துக்கார் போகிவித்து, ஏலமிருவெண்கடுகு இந்திரகோபம் எழிலானவாலுழுவைப்தகரம்வித்து, கோலமிருகாரகோசம்வெண்கா ரந்தான் கூர்சீனங்கெந்திரசகவச்சாரம்மே. (சாயசு)

சாறமிகுபாறையுப்புவளையலுப்பு தலைமையாமெவரச்சாரஞ்சத்தி ச்சாரம், பூரமாஞ்சாய்பிராணிகுதிரையோமம் கோரோசனைய மிரண் டுஅரத்தைரண்டு, விரமாம்வகைக்கிரண்டு பலமேசொன்னேன்வெண் காரங்காட்டுவச்சாதிக்காயும் ஈரமிகுவெள்ளுள்ளிபாதளமூலியிஞ்சி பலம்பத்தெட்டிவிரையும்பத்தே. (சாயஎ)

பத்தோடுசெங்கொட்டைபலம்பத்தன்றிப் பரிவானகார்த்திகை யின்கிழங்குபத்து, பத்தாணபின்னைபுங்கு வேப்பங்கொட்டை பலம்ப த்தாயிடித்துமுன்போற்றயிலம்வாங்கி.சத்தாகக்குன்றிவகைபெல்லா மொன்றாய்த்தான்கலப்பாயின்னமொருகருவைச்சொல்லுவேன்,சித்தா கத்தேவியைதிளமுப்பூசி செப்புகிறேனெப்பிலாக்கருவைக்கேளே.

கருவென்னரசமொடரிதாரபற்பம் கட்டியதோர்சாதிலிங்கம் வீ ரம்பூரம், திருவென்னமனோசிலையுங் கௌரிவெள்ளை சோதிலவகை க்குப்பலங்காலாக, உருவென்னபசமாட்டுக் கொட்டந்தன்னில் வார்த் துபுதைத்தேழுநாள்கஸ்தூரிகாண், திருவென்னதிங்களொன்றசென்று வாங்கு சிவசிவாகோயேதுசெபபக்கேளே. (சாயஅ)

கேளேபப்பிகைதனையன்கந்தன்பூசை கெடியானவடுகனையுஞ்சிங் கித்தேகில், வேளேநீபதமனமாய்வைத்துக்கொண்டு மேலாகத்துவா லேயிட்டுப்பிடிக்கச்சொல்லு, காளேரோகங்களுக்குக்காசெடையீசன மானகோயேதுபூதமாரணம், கோளேதானெமதுதாவந்தாரானல் கு ம்பிட்டுஅசலநிற்பார்குறித்துப்பாரே. (௪௨௰)

பாரேநீதயிலத்தின்பக்குவந்தான் பரிவானசிப்ப வெண்ணெய்ப் படிதான்ரண்டு, காரேநீயயிலிறகு வெட்டிப்போட்டுக் கமரவேக யச் சியதிற்கூடவாரு, ஆரேயெள் ளெண்ணெயுமோராழிவாரு அடைவாக வார்த்தெல்லாம் ரேசித்தொன்றாய். காரேநீதயிலங்கள்பிசகாமற்றன் கருவருணம்போலிதனைப்பதனம்பண்ணே! (௪௨௧)

பண்ணியேவிருதுசொல்லி வயித்தியப்பார் பெருமையுள்ளமேக வகையிருபத்தொன்றும். எண்ணியேவாத மென்பதுவுமோடு பித்தமா னபித்தநாற்பதுவும்போகும், நண்ணியேகயரோகஞ்சயரோகங்கள் ந லமழிந்தஅட்டகுன்மப்பதினெண்சூலை, சண்ணியே போகுமடாநப்பு ணம்புசந்நிபதின்மூன்றோடேந்தபவாய்ப்பாரே. (௪௨௨)

பாராதவலிப்புவகைகவண்ணவாதம் பாங்கானவாயுவெண்பத்தே டாறுங், கூரானசூலைமுட்டியந்திரம்போகுங் குலவியதோர்கைம்முட் க்குங்கால்முடக்குந், தாரானசந்நிடுப்புச்சூலைவாயு தனிக்கிவின்வாயும் பாரிசவாயும், ஏரானகழல்வாதமண்டவாதமேகாத அழிகரப்பானீங்கி ப்போமே. (௪௨௩)

போமடாசெங்கரப்பான்கருங்கரப்பான் போகாதசொறிகரப்பா ன்விஷஞ்சேர்பாண்டு. தாமடாநீர்க்கோவைப்பகுவைவெப்பு சடலத்தி ன்வீக்கங்கள்விஷக்கடிநோய், நாமடாபூதவேதாளமோடும் நலமில்லா ப்பில்லிவஞ்சனைசூனியம்போம் காமடாஅண்ணமார் தூர்க்கைகாளிக லங்கிடுவார்சண்டமாருதந்தான்கேளே. (௪௨௪)

சண்டமாருதக்குழம்பு.

மாருதமாங்கொடிவேலிமுருங்கை வகைமாவிலிங்கம் வேளையெ ருக்கம்வேர்மேனி, வாருதமாமழிஞ்சிவெட்டிவேம்புபுங்குமருக்கா ரைபொற்கையானையும்வேளை, சாருதமா நாய்ப்பாகல்விழி மூடக்கற் றுநெடுசிற்றேரண்டக்காட்டுக்கொட்டை, காருதமாமிளகருணைசங்க ங்குப்பி கருநொச்சிதழுதாழைவெண்ணொச்சியே. (௪௨௫)

கொச்சியொடு பூவரசுபெரியகொன்றை நுவலரிய பெருமருந்து காக்கைவேரும், கச்சியாங்கருஞ்சூரைசெங்கத்தாரி கரிசாலைவெள்ளி

ண்டுகற்றாழைபிரமி, நிச்சையாங்கழற்கொட்டி கருவேல்குன்றிநிலவா
கைபேய்க்குமட்டிதிருகுகள்ளி, சொச்சையாமூக்கிரட்டைசதுரங்கள்
ளிகொடிக்கள்ளியவுரிசிறுகுறிஞ்சிசாவாமே. (சஉசு)

குறிஞ்சாவாங்கீழ்காய்நெல்லிகுன்றி குலவுப்வேர்வேலிபின்
றன்பருத்திகோவை, சிறிஞ்சான சிற்றாமுட்டி பேராமுட்டி சேரத்
தைதூதுவளைகண்டங்காலி, கறிஞ்சானவளுதலைபின்சிறுகாஞ்சொறி
கனமான பேய்க்கருடனிடகிழங்கு, இறிவான விராலிமுதல்பலம்பத்
தாகஇடித்துநீழலுலர்த்திச்சூழித்தயிம்வாங்கே. (சஉஎ)

வாங்கியேதயிலமொருபாண்டற்றூட்டு வாகாகப்பேய்க்குமட்டி
ச்சாறுகாரு, தேங்கியேதிருகு கள்ளிப்பாலும் செயலாகவகைவகைக்
குநாழிவாரு, தீங்கில்லாத்தில்லம்பரல்படிதானகலாஞ்சேரவேதயில
த்தில்வார்த்துப்பின்பு, வாங்கியேரசலிங்கம்கெந்திதாரம் வாகானவெ
ண்காரம்கருநாவியிதே. (சஉஅ)

இந்தோடுகோந்தமுமாம் வீரம்பூரம் இயல்பெற்றதநிகுபெருங்கா
யம்கூடன், நந்தியேதூரிசுகடுக்காய்வெண்ணாவிநல்ல கருஞ்சீரகமுந்தி
ப்பிலிமூலம, வந்தியேசிறுநாகஞ்சிற்றரத்தை மதுரமொடுகோஷ்டம்
கடலுரைவாலுழுவை, சிந்தியேசிங்கிகடுகு ரோணிசாரம்செப்பு மெ
ழாச்சாரமத்திதிப்பிலியுமாமே. (சஉகூ)

ஆமடாபுரசம்வித்துமத்தமவித்து அழகானபேய்ப்புடலுமல்லிவி
த்தும், நாமடாவகைவகைக்கு கழஞ்சிரண்டு நலமாக மருந்தெல்லா
ம்நிறுத்துக்கொண்டு, தேமடாசுத்திசெயதுசேர்க்கங்கேளு சிற்றேர
ண்டப்பருப்புநாலிலொன்று, கோமில்லாப்பனைவெல்லங்கழஞ்சுபத்து
சொல்லரியதேங்காய்க் குடுக்கைக்கரியும்பதே. (சரும)

பத்தோடுதேங்காய்ப்பால்தன்றுலாட்டு பணபாகமபனம்போலா
கும்பின்பு. சத்தோடுதயிலத்திலூட்டிப் பின்னும் தனியதேப்பிலேற்றி
பொருவிரதுகொண்டு. உத்தோடுளரிமுட்டியபடிபற்றாமல் உவமையுட
ன்கருதாமல்கிண்டிகிண்டி. சித்தோடு மெழுகுபதமாகவாங்கிச் செய
லாகஅயச்சிமிளிலபதனம்செய்யே. (சஉக)

செய்தபின்னரெழுமைக்கொம்பினிலடைத்துத் திறமாகபண்ட
லத்தானியப்புடர்தான், செய்தவுடன்மையதனைப்பதனப்பண்ணு தே
சத்தில்பாளிடார்க்குக்காட்டாதேகீ, எய்தவிந்தசண்ட மாருதத்தினம
மெடவ்கேட்டாலும் நடுங்கிக்கலங்கிப்போலான், கைதவற்றதனுபான
மரிந்துசெய்தேகாணுநேநாயெல்லாமேடுடுக்தானே. (சருஉ)

ஓடுமேடாபதின் மூன்றுசந்நியெல்லா முற்றிவிஞ்சிகொசகிசாற்த் னிலூட்டு, வாடுமேடாசுரத்துக்குச்சுக்குநீராம் வனபித்தவெண்சுரத்து க்காநிகேளு, நீடுசேர்சிரதநீர் தானிலூட்டு நிலையானகடுக்குசுரப்கடுக் காய்நீராம, கூட்டுநீங்காச்சுரத்துக்குமுளகேலநீர் கூறேழுதோஷத்து க்கினைநீருட்டே. (சஙக)

ஊட்டவே தோஷமெல்லா மோடிப்போகு முற்றமூறைச்சுரம் போகும்காலாமாதல், காட்டவேமுரண்டாமெட்டாமாறல் மனதளசி தும்பைநாயுரிவிமோரும், ஆட்டவேபாத்தைசுக்கேடைந்தும்போது மப்பனேகிபாழுமது போட்டொன்றாக்கி, நீட்டமாய்க்குழம்புகுன்றி யிடைதான்போட்டு நீயிந்தனேயெல்லாம்வாராதென்றே. (சஙச)

வாதத்துக்கனுபானக்கியாழம்.

என்னவேவாதமென்பதும்போக இதமானவெள்ளருகுபரங்கிப் பட்டை, சொன்னவொரு திப்பிலிமூலம் சுக்கரத்தை நற்பிரப்பங்கிழ ஙகோடேழும், அன்னவேசமன்கொண்டுகியாழஞ்செய்து அதிலூட்டு குழம்பிலரைக்கழஞ்சியாக, பன்னவேயில்லாட்டால்தேசிநீராம் பரிநீ ததன்றன்பாலும்மாம்பாரிலாமே. (சஙரு)

ஆகுமேவிஷவாயு வேலிப்பருத்தி அறுபதுநால்விழத்துக்கெ ருக்கன்பழுப்பு, ஆகுமேசோகை காமாலைபாண்டுக் கடைவுகேள்ளாட் டினிடகோமயந்தான் ஆகுமேயரண்டத்தென்னையன்றி அழகான திரிபலைத்துளெல்லாமொக்க. ஆகுமேகுழப்பிலொருகாசுபோடு அகு வைவெப்புபாண்டுமூலதன்னைத்துமபே. (சஙசா)

அனைத்தும்போம் நீராம்பல் பெருவபித்ருேட் டல்பீலிநீர்நீகே வைவிழநீர்பிரநீர், அனைத்தும் போமுள்மாங்கையனுபானந்தா னறகி ன்றகரிசாலைநீரின்முள்ளி, கனத்தரிய கடுக்காயுமிளகுநீருங் கலந்திடி த்துஒருபாண்டத்திட், டடுப்பின்புவனைத்துமே யெட்டொன்றுய்க்கி யாழங்காய்ச்சி வாகாய்வெள்ளாட்டுநீர்சுத்திசெய்யே. (சஙஎ)

சுத்திசெய்து வழகாம் ரேசித்துபின் சொல்லரிய வெண்காரம் பொரியுபாரு, சித்தபெறவனுபானம்கடுகுரோணிதிரள்கடுக்காய்கூ ட்டியந்தகுழம்பில்மிக்க, யுத்தியுடனொருகாசெடைதானூட்ட ஒட்டருத ரோகவகைகாடாதோடும், புத்தியுடன்போகமுனி யருளிச்சொன்னா பூலோகத்தினிஸ்வைத்தியர்க் கிதைச்சொல்லாதே. (சஙஅ)

சொல்லாமற்குழம்பதனையுண்டாற்பின்புசொல்லரியசிரசுறுநோ ய்தொண்ணூற்றாறும், நில்லாதேநாய்ச்சன்முதனீங்கிப்போகும் நிலைச்

சிலந்திகைப்பிளவைப்புற்றும் போகும், பொல்லாதபுண்புரைகள்பவுத்திரப்புண்ணும் போகாதஆறாப்புண்தஷ்டப்போகும், புல்லாதபதினெட்டுச்சூலைகுன்மம் புரைகுறநோய்க்கனுபானம்புகலக்கேளே. ()

புகலக்கேள்சிவன்வேம்பு வாலுழுவைகூட போற்றுகருங்காலிகொல்லன்கோவைமூலி, சகலமுமேயிடித்தொன்றாய்த்தயிலங்காய்ச்சிசார்ந்துதில்லைப்பூக்கூட்டிப்பின்னுங்காய்ச்சி, சுகமுடனேயக்குழம்பில்காசெடைதான் றனைதந்துண்ணரோகவகைதொலைந்துபோகும, அகஆமேசகலவகைநோய்கட்கெல்லா மறைகிறேனனுபானமடைவாய்த்தானே. (சசய)

தானென்றவயித்தியர்தானென்செய்வாரோ தப்பினால்பாகமதுரோகந்திரா, ஏனென்றபவுசுகெட்டமாந்தர்காளே யிம்மருந்தையெவர்களுக்குஞ்சொல்லாதீர்கள், கோனென்றபாகமதுகுறிப்பாச்செய்தால் கூறுகெட்டநோயெல்லாமாறும்போடும், கானென்றகாசமதுபறந்தாற்போலக் கண்காணுந்தோமடாவேகம்பாரே.

## வில்வாதிலேகியம்.

பாரென்றகுழம்பாலேசர்வநோய்கள் பறப்பதற்குவில்வாதிலேகியங்கேள், ஆரென்றவில்வவேர்மேற்றோல்போக்கிஅழகானபலமொன்றுசிறுத்துக்கொண்டு, மேரென்றசங்கமவேர்முக்கருவேர்வெட்சாறநன்னாரிபிளகரணை, லாரென்றவிலாமிச்சமுட்காவேளை மணிவெம்புமறமுங்கற்றாழைவேரே. (சசஉ)

வேரானதழுதாழைகீழ்க்காய்நெல்லி விளாவேரும்வெள்ளறுகுநெல்லிப்பட்டை, கூரானதூதுவளைகுமரிவேலி குட்டிவிளாநொச்சிசிறுவழுதலையோடொக்க, ஏராகவகைக்குவகைபலந்தான்பத்து இயல்பாகவிருதூணிசலத்தைவிட்டு, மீராதேபெட்டொன்றாய்க் கியாழஞ்செய்து மிகவுமொருதாழிவடிகட்டிக்கொள்ளே. (சசங)

கட்டியேசாறுவகைசொல்லக்கேளு கரிசாலைவல்லாரைநெல்லிக்காயும், குட்டிபொடுபுளியாரைமணித்தக்காளி குமட்டிமாதுளையினிடபழத்தின்சாறும், கெட்டியாய் நாரத்தைப்பழத்தின்சாறும் கொடாமாம்பழச்சாறும்கிப்பழச்சாற், அதட்டியின்பிபுளித்தமாதுளையின்சாறும் ஆற்றுநீர்முள்ளிச்சாறிஞ்சிச்சாறே. (சசச)

சாருடுமுள்ளிலைச்சாருடாதோடைச் சாறுமுசுமுசுக்கைச்சாற்தானுமின்றி, ஆறோடுகடைச்சரக்குசொல்லக்கேளு அடலோமந்திப்பிலிபின்மூலந்தானும், காறோடுமஞ்சள்கஸ்தூரிமஞ்சள்கனத்தவிளவரி

சிலெட்பாலையரிசி, வாறேடுபெல்லியுந்தான்கூகைநீறு வளமானகாட்டாத்திப்பூவிளாவே. (௪௪௫)

விளாவேரடுவில்வோடுசிறுதேக்கிலுப்பை வீறுனகருவேம்புபூவகிலுந்தான், தளமானதுளோடுவகைவகைக்கு சார்ந்தபலங்கால்கொண்டுஇளவறுப்பாய், உளமகிழ்ந்துசூரணித்துக்கியாழத்தூட்டு உகந்தடுப்பிலேற்றியேதீயைமூட்டு வளமுடனேதானெரித்துப்பலமோர்சீனிவாகாசவதிற்போட்டுக்கிண்டிடாயே. (௪௪௬)

கிண்டிடவேபாகுபதமாகச்சேரு கிரமமுடன்பக்குவம்பார்த்தாவின்னெய்யைக், கொண்டிடவோர்படிவாருமெழுகைப்போலக் குணமாகுங்காலங்கண்டிறக்கிவைத்து, அண்டிடவேகோற்றேனையதன்பின்வார்த்து அடைவாகத்தூபாகியபதைச்சாடிக்குள்ளே, கண்டிடவேபோட்டைத்துத்தானியத்தில் கனபுடமிட்டேயெடுத்து வைத்துக்கொள்ளே. (௪௪௭)

வைத்துக்கொண்டுதினந்தோறு நாளொன்றுக்கு வாகாக அந்திசந்திதேனில்வார்த்து, சுத்திபெறக்கொட்டைப்பாக்களவுவீதந்துணிவாகவதிற்குழப்பிமனமகிழ்ந்து, துய்த்திடவேதீருகிறநோயைக்கேளு துரைந்தபித்தந றப்பதுவுஞ்சிறைநீதுபோகும், சத்தமுறுமுப்பிசமுமண்ணீர்மாந்தை சார்ந்தவூஷ்டணைவாய்வெல்லாந்தீர்ந்துப்போச்சே. ()

போச்சென்றகைகாலினெரிவுகாந்தல் பொல்லாதவரோசிகமுடின்னத்தோஷப், வச்சென்றதஸ்திவெட்டைக்கிறுகிறுப்பு, மயக்கமஸ்திசுரஞ்சூலையெரிவிசுன்மம், மாச்சென்றமேன்மூச்சுமேங்கல்தூங்கல்வாய்க்கசப்புவாந்திவிக்கல்வெள்ளோக்காளாம், ஆச்சென்றபித்தத்தாலெழீத்தரோகம் அதிலெடுத்தகிராணியெல்லாமகன்றுபோமே. ()

அகன்றுபோம்காமாலைசோகைப்பாண்டுறெலெடுத்தநீரிழிவு அந்தரவாயு, தொகையானவாதபித்தஞ்சேத்துமத்தாலே சூழ்ந்தெடுத்தநோயெல்லாந்தாழ்ந்துபோகும், இகலில்லாத்திரிலோகஞ்சேர்த்துமப்பாயீதோடேயீந்திட்டாலென்னசொல்வேன், பகையானபித்தமூகல்சருவநோயும் பகலவனைக்கண்டபனிபோலாகும்மே. (௪௫௰)

### சேத்துமந்தொண்ணூற்றுறுக்குஞ்சூரணம்.

பனியானசேத்துமநோய்தொண்ணூற்றுறும் பறக்கவொருமூலிகையின்பாகங்கேளு, தனியானகரியகாஞ்சோறியப்பா சமூலமங்கேயாதினாள்கொண்டுவந்து, அணியாகநிழலுலரத்திச்சூரணித்துஅழகா

னபவளபற்பஞ்சேர்த்துக்கொண்டு, கனிதமுடன்வெள்ளாட்டின்பாலில்மைந்தா கதியாகமண்டலந்தான்கொண்டுதேரே. (௪௱௧)

கொண்டிடவேசேத்துமநோய்தொண்ணூற்றாறும் சூடிபோக்கியின்னமொருகூறுகேளு, கண்டிடவேபெரியகாஞ்சோறிவாங்கி பரிகரிமுலுலர்த்திச்சூரணித்துப், பண்டிடனேநாகபற்பம்பரிந்துசேர்த்துவரப் பக்குவமாய்மண்டலந்தான்கொண்டாலீளை, அண்டாதுமந்தாரத்தக்காசம் ஆஆஆகைகண்டவித்தைகாணே. (௪௱௨)

காண்டபேங்கதுமுப்பிசமூமீளை காசவகைநாசமுறநருவைக்கேளு, காண்டாய்வெள்ளாட்டுடதப்பிவாங்கி கருதியதிரீதன்னைப்பிழிந்துப்போட்டு, காண்டாய்ப்புதச்சட்டியிட்டுவெஸ்திரக்காயங் கொண்டொருபலமாயுண்ணயுண்ண, காண்டாயிளைப்பிருமல்சிலேத்பனநோய் கட்கதிகெடவேதிரிகடுகுகடுகோப்பூவே. (௪௱௩)

பூவோடுகிராம்பேலம்பறங்கிப்பட்டை பொலிவானகடுக்காய்த்திப்பிலியின்மூலம், காவோடுதோடைவேர்தூதுவேளை கனமானகண்டங்கத்திரிப்பழந்தான், தாவோடுசிலவாரைசிறுகாஞ்சோறி சார்வாகவகைக்குவகைப்பலமொன்றாக, ஆவோடுபெசிவிநெய்விராவியிட்டு அழகாகஉலர்த்திவஸ்திரகாயஞ்செய்யே. (௪௱௪)

செய்துநன்றாய்ப்பதனமொடுவைத்துக்கொண்டு திறமாகவெருகடித்துள்ளவதாக, பெய்துமேதேனதனிற்கொஞ்சம்விட்டுப்பிரியமுடனாளொன்றுக்கந்திசந்தி, ஐதிடவேமண்டலந்தான்கொண்டாயாகில் அடல்பெற்றசயபெண்பத்தாறுந்தீரும், நைதமீறுபலகளமரிதாரபற்பம் கணுகிவரவிளைமாந்தாரம்போமே. (௪௱௫)

பேர்மடாகாசங்குத்திருமல்வாதம் போகாதவெட்டிருமல்கிறுகிறுப்பு, நாமென்றவாதமிகுமேகச்சூலை நந்தாதசால்சூடச்சல்கைகுடச்சல், சேமென்றபித்தவாய்வுசேஷ்மநோயும் தீராதவாதமெண்பதுவும்போகும், வாமென்றபித்தவாய்வு சொறிசிரங்கும் வாராதுகண்ணேக்கிப்பாராதெண்ணே. (௪௱௬)

நரித்தலைவாய்வுக்குமருந்து.

எண்ணவேநரித்தலையாமுழந்தாட்சூலை எகிறிவிடமலையாளிபீலையைக்கொண்டு, பண்ணவேராகியொருசிரங்கைவாங்கிப் பண்பகரிக்கிசுக்குநாற்கழஞ்சு, அண்ணவேயருளியிலைகூடவைத்து அம்மிப்பாலுண்ணவேபரைத்துநன்றாய், கண்ணவேகொதிப்பித்துபற்றுமேலேபோடுகெனிர்ந்தைந்துநாண்மருந்துள்ளுக்கூட்டிட. (௪௱௭)

மருந்தென்னபாஷாணசெந்தூரமிட்டு மாசற்றக்கர்ப்பூரம்வெல்லத்தூட்டு, பரிந்தென்னமேகவாய்வுசூலைக்கெல்லாம் பறங்கிப்பட்டையாவின்பால்சுத்திசெய்து, விரைந்தென்னபனைவெல்லமெள்ளுஞ்சேர்த்து விரைவியேயிடித்தொன்றுப்சூரணித்து, திருந்தவேகர்ப்பூரஞ்சேர்த்துநீயும் தினந்தோறும்வெருகடித்தூளருந்திக்கொள்ளே. ( )

மெற்றலைவாய்வுக்குஎண்ணெய்.

அருந்திடவேமண்டலங்காலடைவகையுண்டால் அடல்பெற்றவாய்வெல்லாமசடுற்றோடும், திருந்தியசீர்மெற்றலையின்வியாதிக்கெல்லாம்செப்புகிறேன்சூட்சமொருஎண்ணெய்க்குள்ளே, பொருந்தவேநல்லெண்ணெய்படிதானொன்று புகழாகப்பழமிளகுபலமுங்காலாம், விருந்துபெறத்தூதுவளை வேர்நாயுருவிவேர்பலமுங்கால்கூட்டிக்கருக்கிகொள்ளே. (௪௮௯)

கருக்கிப்பின்காணீச்சாற்நாழிவிட்டுக் கருவாகமெழுகுபதமாகக்காய்ச்சி, தருக்குடனேநாலுநாள்வட்டமூழ்கு தனியானகண்புகைச்சல்சலநீர்ப்பாய்ச்சல், சுருக்கியமெற்றலைவியாதிகபாலச்சூடு தோன்றுவுஷ்ணவாய்வுவெள் ளெழுத்துக்காணல், வருக்கமிருசொறிதினவோடிவைகளன்றிமயக்கம்போந்தேகமிகவலுக்குங்கேளே (௪௯௰)

கேளேநீநல்லெண்ணெய்தன்னிலப்பா கீழ்க்காயினெல்லி மூசுமூசுக்கைரண்டும், வாளேநீயெரித்தந்தஎண்ணெயிற்போட்டு வசுகாகரவிபுடமாய்வைத்துமூழ்கு, கோளேநீகுரலெரிவுமண்டைக்குத்து கூறுகெட்டவாய்க்கசப்புவாய்நீருறல், ஆளேநீசிரசிலுள்ளநோய்களெல்லாம் அகலுமென்ஞானியாரந்தப்பாரே. (௪௯௧)

சருவநோய்க்குக்கலிக்கம்.

ஆயந்துபார்சருவாங்கக்கலிக்கமொன்று அறைகிறேன்வயித்தியரேயன்பாக்கேளீர், தேய்த்துபார்திப்பிலியுந்துரிதுத்தம் செப்பரியகிராம்புசுக்குத்திப்பிலிமூலம், வாய்ந்தபுருவெச்சமாயக்கஷ்டம்வெளுப்பு வாகானகுக்குடவெண்மலமுங்கூட, ஏய்ந்தசாரணைமேனிவேரின்சாதி விளங்கபொடிவகைவகைக்குக்கழஞ்சிகூட்டே. (௪௯௨)

கூட்டியேபழச்சாற்றால்சாமமாட்டு குப்பைமேனிச்சாற்றாலேசாமமாட்டு, வரட்டமிலாத்தும்பைச்சாற்வெற்றிலைச்சாற்வகைவகைக்குச்சாமமொன்றாட்டிப்பின்பு, காட்டியேகயிறுகட்டிநிழலுலர்த்திக்கண்ணிலிட்டசந்நீபதின்மூன்றும்போகும், மூட்டியேமேனிச்சாற்வெற்றிலைச்சாற் மூருங்கைச்சாறிஞ்சிச்சார்தும்பைச்சாறே. (௪௯௩)

சாறுவகையனுபானங்கண்ணில்தீட்டு சண்டாளரோகமெல்லா ம்சணத்தில்தீரும், கூறுகெட்டசந்நிவகை வலிப்போடெல்லாம் குடி போகுஞ் சயித்தியநோய் குளிர்தோஷங்கள். வீறுமிகு பேயோடும் நோய்சடீறும்விஷக்கடிகளுள்ளவெல்லாம் வீறிட்டோடும், மாறுபெ ற்றதந்தநோய்மாரணங்கள் வனமோடும்கலிக்கமிகச்சண் ணுந்தானே.

* வச்சிரவல்லிச் சூரணம்.

சண்ணுமே வச்சிரவல்லிச்சூரணத்தைச் சாற்றுகிறேன்கோப்பி ரண்டைமெத்தநன்று, திண்ணமிகுகோப்பிரண்டையுதவாவிட்டால் செயலாகக்கறிப்பிரண்டைமுதியதாக, நண்ணவேநாலுபத்துப்பலந் தான்மைந்தா நறுக்கியேநரம்புதள்ளிக் கரணையாகப், பண்ணவே யொருபாண்டத் துள்ளேவிட்டுப் பக்குவமாய்ப் பகருகிறேன் பாக ங்கேளே. (சகூ௫)

* வச்சிரவல்லி பிரண்டை.

பாகமாங்கல்லுப்புக் கறியுப்போடு பாறையுப்புமிந்துப்பு வளை யலுப்பு, ஆகமாங் கெந்தியுப்பு சவுட்டுப்போடு அட்டுப்புவெடியுப் போ டொன்பதுப்பும், வேகமாம்வகையொன்றுக் கொருபலந்தான் விரவியேபொடித்துப் பிரண்டைச்சாறாட்டி, ஏகமாய்ப்பிசறியே யூ றவைத்து எழிலாவின்கொட்டத்தில்புதைத்திடாயே. (சகூசு)

புதைத்துமேபட்சமொன்று சென்றுவாங்கி பொலிவாகரவியி லிட்டே யூறவைத்து, புதைத்திட்டநீரெல்லாநன்றுய்வற்றிப் பொரி போலேயுலர்ந்தபின்பு புகலக்கேளு, புதைத்ததற்குத்திப்பிலியுங்கடு க்காய்சுக்கு பொன்றத்திதிப்பிலியின் மூலஞ்சேரு, புதைத்ததற்கு வெண்காயம் வசம்புமேலாம் புகலரியவாய்விளங்க நவாச்சாரம்மே.

சாரமிகுமெவாச்சார மன்னபேதி தாளிசையுஞ்சிரகமு மோம ங்கள்ளி, வீரவமாமாவிலிங்கு புளிப்பெருக்கு விறல்சித்திர மூலமொ டுமுருங்கைத்தோலும், ஆரமாம் மேனிவேர்த்தோல் வகைவகைக்கு அழகாகப் பலங்காலாய்ப் பிரண்டையோடு, சேரவேசேர்த்துமைந் தா விளப்பறுவாய்த் திறமாகச்சூரணந்தான் செய்வாய்நீயே. (சகூஅ)

செய்துமேயவ்வத்தூள் கலசத்திட்டுச் சிறப்பாகமேனிச்சார் வெள்ளாட்டுநீரும், ஐந்துமேயிஞ்சிச்சார்கரிசாலைச்சா றுமணக்கினி லைச்சார்பேய்க்குமட்டிச்சாறும், எய்துமேமுசுமுசுக்கைச்சதுரக்கள்

ளி யிதமான திருகுகள்ளிச் சாற்றேடொக்க, பெய்துமேசங்குநொச்சி தழுதாழைச்சார் பெட்புடனேவகைக்குவகைப் படியாழாக்கே.

அழக்கோடு சூரணத்தைப் பிசறிமைந்தா அடல்யிட்டுப் போலாக வுண்டைசெய்து, வழக்கமுடன்மேன்மூடிச் சீலைசெய்து வண்மையுடன்புடம்போட்டு ஆறவிட்டு, சமச்சின்றியெடுத்ததனைப் பதனம்பண்ணிச் சந்திமுதலந்திவெரு கடிதாள்கொண்டால், முழக்கமுடன் காய்ச்சல்கட்டி யட்டகுன்மம் மூதண்டவாய்வுமுத தீதண்டாதே. (சஎ௰)

அண்டாதுவாதமொடு வாய்வுசூலை ஆக்கிரமிகு நரிச்சூலைச் சந்திடுப்பும், அண்டாதுதிமிர்வாத முளைவுகுத்து அசடுற்றபித்தவாய்வு அக்கினிமந்தம், அண்டாதுஅரோசிகநோ யுப்பிசங்கள் அணுகாது சீதளமு மன்னதோஷம், அண்டாதுசந்நிகன்னப் புற்றும்போகும் ஆரூதனிராமைக் கௌசிபோமே. சஎக

அகாரகற்ப அட்சரந்தன்னுக்குளவிழ்தம்.

கௌசிபோமவிழ்தங்கள் தயிலங்கலிக்கம் கைம்முறையாய்க்குருதொட்டுச் செய்யவேண்டும், அவசியமாய் முறையறியார் மூடரப்பா அவனியிலே கெட்டலைந்து சாஸ்திரம்பொய்யென், றிவசமுடன் சிவயோகிசித்தரெல்லாம் என்னைவணங்கி யிம்முறைகள் கேட்டுச்செய்வார், தவசியெனு நீமகனே கருவாயார்க்கும் தாராதேதரணிதனில் வைத்தியஞ்செய்யே. (சஎஉ)

செய்யவே பதினெட்டுக் குட்டசூலை தீரவேசிறுநீரில் சூட்சங்கேளு, பையவேபேய்த்தேற்றான் வேரைவாங்கிப் பாத்திரந்தானென்றுசெய்து வைத்துக்கொண்டு, நையவேகாலைதனி லெழுந்திருந்து நன்மையுடன்சிறுநீரிலொருசேர்வாங்கி, உய்யவேகடுக்காய்தூள் படியொன்றேபோட்டுக்கொள் நாடொன்றுமண்டலந்தான்பாரே. ()

மண்டலந்தானிப்படியே கொள்ளும்போது மைந்தனேசாபத்தை நிவர்த்திசெய்னீ, மண்டலந்தான்வாசியங்கோ திறமதாகி வலுக்குமடா விந்துவிலேமருவிநிற்கும், மண்டலந்தானந்தவண்ணங் கொள்ளும்போது மாசற்றவாசிவா வென்றுகொள்ளு, மண்டலந்தான் சுழிமுனைகண்ணடிபாரு மகிமையுள்ளகாயசித்தி யாகும்பாரே. ()

பாரேனீகுட்டமொடுகுறைநோய்கட்டி பருங்கிரந்தியரையாப்புச்சூலைகுன்மம்பாரேனீசிரங்குசொறிகரப்பான்போகும்அழுகண்ணிவெடிசூலைபாருப்புண்ணும், சேரேசீர்புண்புரைகள் திமிரிச்சூலை தே

த்துமதகரித்தழுதனையுமூறல், காரேனீவாயுவொடுகெருமரோகங்கண் காணுதோடமடா கண்டுபாரே. (௬௭௫)

மநங்தேறல்.

கண்டுபார் சர்வநோயெல்லாந்தீரும் கனகமாங்தேகமது கற்ப காலம், உண்டுவரக்பசித்திசித்தனுவாய்ஒருவருக்குமிக்கருவையுரை க்கொணுது, விண்டுபார்தன்னுக்குளவிழ்தமெல்லாம் வீட்டில்வைத் துக்காட்டினியேயைலகின்றூர்கள்,பண்டுள்ளநோய்தீரவவிழ்தமெங்கே பகர்கற்பக்கருவெங்கேகண்டிடரே. (௬௭௬)

கருவானபஞ்சபூதச்சரக்குமெங்கே கல்லான அண்டமெங்கேவீ ரமெங்கே,கருவானவழலையெங்கேமுப்பூவெங்கேகரைகாணுக் * கரு விபுரக்கருவியெங்கே, கருவானபிண்டஅண்டரண்டமெங்கே காரமெ ங்கேசாரமெங்கே பூரமெங்கே, கருவானமனமெங்கே பாசமெங்கே காயத்தின்கருவெங்கேகண்டுபாரே. (௬௭௭)

* கருவி உட்கருவி.

பாரப்பாபஞ்சமெனுங் தேவரெங்கே பரையெங்கேசிவமெங்கே யொளிதானெங்கே, பாரப்பாபரனெக்கேபாதமெங்கே பகருமுதலெ ங்கேரவிமதியுமெங்கேபாரப்பாவாசியெங்கேகலைதானெங்கேபழுதில் லாஞானமெங்கேயோகமெங்கேபாரப்பாசரியையெங்கேகிரியையெங் கே பகராதியநாதிவஸ்துங்குறித்துப்பாரே. (௬௭அ)

குறித்துப்பாரிவையெல்லாந்தன்னுக்குள்ளே குறியறியாதுலகத் தில்திரிந்தாகெவிட்டார்குறித்துநின்றதன்னையுந்தானறியமாட்டார் குறியறிந்தோர்சிவயோகிசித்தராவார்குறித்துநின்றநாதவிந்தாலல்லா மாச்சு கோடானகோடிசித்துமாடலாச்சு, குறித்துநின்றவிந்துநிலைகா ணார்காணர் கூர்ந்துவரு நோய்களேநீ யோர்ந்துகேளே. (௬௭௯)

கேளப்பாநாதத்தில்விந்துபுக்கில் கெட்டியுடனுலாயிரங் கணித மாச்சுதாளப்பாகொட்டியதோர்விடங்கள்போலும்தசநாடியெழுபத் தீராயிரத்தில், வேளப்பாவடங்கிநின்றதேகமெல்லாம் விளைந்ததடா அவரவர்கள்வினையாற்காணுஞ், சூளப்பாநோய்விளைந்த விபரம்பாரு சுழுனைபற்றிநின்றநிலை நாடிப்பாரே. (௬அ0)

பாரானசகலகலைபறிந்தாற்போலேபண்டிதனுனென்றுபழிபாவ ஞ்செய்வான்கூரானநோயென்பான்பேய்தானென்பான்குலதெய்வக்

குறையென்பான் வாதமென்பான் ஆரானநோயறிந்து அவிழ்தஞ்செய்யான் அகப்பட்டமருந்தையெல்லாங்கொடுத்துப்பார்த்துதீராதநோயென்று சேரத்தூரஞ்சென்றிடுவான் னறிவுகெட்டகசடன்பாரே.()

பாரேநீவாதியென்ருலாபந்து பாரப்பான்பலவாம்நோயறிந்து பாகன்செய்வான், கூரேநீசகலசித்துமாடச்செய்வான் குறிப்பறிந்து வாதமுறைசெய்வான்பாரு, ஆரேநீமனமடங்கிப்போதம்பார்த்து அறிவுருபோதத்திலடங்கின்று, வாரேநீகுருபதத்திலடுத்தடுத்துமாயியெனுமாயிபதம் வணங்குவாயே. (சஅஉ)

பூரணுதிலேகியம்.

வணங்கியேபூரணுதிவழுத்தக்கேளு*மாசடையாவன்னியிடகற்பமப்பா, இணங்கியே விரைபோக்கியாவினெய்யில் எழுதரஞ்சுத்திசெய்துபலம்பத்தாகக்குணங் நிறுத்திளவறுப்பாய்ச்சூரணித்துக்குமுறவைத்துப்பின்கூரக்கேளுமைந்தாசுணங்கின்றிக்கடைச்சரக்குவகையின்சேதி சொல்லுகிறேன்வாகாகச்சூழ்ந்துகேளே. (சஅங)

* மாசடையாவன்னிகற்பம்-கஞ்சா.

கேளேநீ சாதிக்காய்சாதிப்பத்திரிகிராம்புடனேயேலமொடுலவங்கங்கோஷ்டம், சூளேநீதாளிசையும்நாகப்பூவுந் தூகைந்தரத்தைதிரிகடுகும்ஓமம்ரண்டும்,பாறேநீதிரிபலாதிவால்மிளகினேடுபெருங்கூகைநீரோடுகசகசாவும், மூளேநீவாலுழுவைகடகசிங்கி முடிவானகாமப்பூ மகரப்பூவே. (சஅச)

பூவோடுமோஞ்சியிருசீரமல்லிபுகழத்திதிப்பிலிதிப்பிலியின்மூலம், ஆனோடுஆல்மதுரமாசக்காயும்அபினேடுமெட்பாலைமுருங்கைவித்து மாவோடுநிலைப்பனைவேர்மருள்ஊமத்தை மதமுடையசடைக்கஞ்சாவித்துங்கூடத்,தேவோடுவாதுமியுமராட்டிமொக்குசெப்பியதோரிலுப்பைப்பூ மதனப்பூவே. (சஅரு)

மதமுமாமுந்திரிகைப்பேரீந்தோடு வகைக்குக்காற்பலங்கொண்டிளவறுப்பாய்ச்செல்லு, சிதமாகவிடித்துநன்றாய்ச்சூரணித்து திகழ்பெரியமுன்மருந்தோடொக்கச்சேரு, பதனமுறவாவின்பால்படிதானுலுபாண்டத்திலிட்டடுப்பிலேற்றிப்பின்பு,சுதமாகச்சீனிபலம்பத்தல்லாமல் கனமாகப்பனைவெல்லம் பலமும்பத்தே. (சஅசு)

பத்தாகபாலிலிட்டுக்கரைத்துக்காய்ச்சு பாகுவரில்சூரணத்தைக்கொட்டிக்கிண்டு, அத்தாகலேகியந்தான்சேரும்போது ஆவினெய்யு

மொருபடிதானளந்து முத்தாகக்கிண்டிடவேமெழுகைப்போலாம்முன்பதம்பார்த்திதக்கித்தேன்வார்த்துக்கிண்டு, ருத்தாசமயனம்போலாகுங்காணா நலமாகச்சாடிதனிலிட்டுமூடே. (சஅஎ)

மூடியேகணேசனடிகந்தன்பூசை முக்கியமாய்வடுகனடிதேவிபூசை,நாடியேசெய்துவரநன்மையுண்டாம்நலமுண்டாம்பலமுண்டாம்வாழ்நாளுண்டாம், கூடியேகழற்கொடிக்காயளவுவீதங்கொண்டுமிகவுண்டிடவேதங்கம்போலாம், வாடியேபுலம்பாமல்மௌனங்கொள்ளுமாபரத்தினொளிகாணும்பூரணந்தானுக்கே. (சஅஅ)

நோக்கியேபார்த்திட்டால்சகலந்தோன்றும்நுகரவரும்விந்துவிலேவாசியேறும், தாக்கியேவாசிகொண்டுவொளியைமீறிச் சஞ்சரிக்கிலாறுதலம்வெளியாய்காணும், பார்க்கவேபசுந்தங்கம்போலமேனிபழியானநோயெல்லாம்பறந்துபோகும், காக்கவேகுகைவாசல்கண்டாயானால் கனமானசித்தருன்னைக் காண்பார்பாரே. (சஅகூ)

கண்டுபார்பரமகுருசகலசித்துங்கைதருவார்சவனமொடுகுளிகையீவார், கொண்டுபார்கோரக்கர்மூலிவேகங்குறித்துரைக்கநாக்குண்டோநோக்குண்டோசொல், தண்டுமிண்டுபண்ணாமல்கொண்டுதேறுசரீரசுகமுண்டாகுந்தேகங்களெல்லாம், பண்டுபிருகுசாராயங்கஞ்சாகள்ளும் பலவருந்திமலைந்திட்டாரலைந்திட்டாரே. (சகூ௦)

சிவஞானம்.

அலையாமல்சாபங்கணிவர்த்திசெய்து அக்கரங்கள்சக்கரங்களறுந்திபார்த்து, கலையானவெட்டெட்டுமொன்றிற்சேரு கருவானஅவ்வோடுபுசழ்வுங்கண்டு, மலையாமலறிவிக்குளறிவையுன்னி மௌனமென்றசுழுனையிலேமனக்கண்ணாட்டி, அலையாமலிருக்கவென்றாலறையகேளு அடிமூலங்கண்டத்திலகாரமூன்றே. (சகூக)

அகாரமாம்நடுமையமுகாரமூன்று அண்ணாக்கில்மகாரமாமௌனமூன்று, ககரமாம்நாசியாங்காரமூன்று கண்மூக்குமத்தியிலேசிகாரமூன்று, வகாரமாஞ்சிகாரமிருபுறமுநாட்டுவாசிதனைபடிமூலநங்கென்றாது, அகாரமாமயூரகத்தோர்செய்யுமார்க்க மவைகடந்தஞானியென்றால்மௌனவித்தே. (சகூஉ)

மௌனமென்றால்விந்துவில்றீங்காரமிட்டு மகரத்தின்மேலிட்டு மவுனத்தூன்று. மௌனமெனவோங்காரம்வட்டமாச்சு வட்டத்திலூன்றியவெழுத்தோன்றேயாச்சு, மௌனமென்றதொன்றால்சீவ

சத்தியாச்சுமாசற்றாதாக்கள்மவுனங்கண்டார், மௌனந்தான்மனமுரைக்கஞானிக்கெய்தும்வாய்பேச்சால்திருட்டுகுருவாயாவாறே. ()

வாறானவ தமொரு ஞானமார்க்கம் மைந்தனேநாதாக்கள்சொல்லார்சொல்லார், கூறானவாலைமூன்றெழுத்தைச்சொல்லார்குருகாதவட்டாங்கமார்க்கஞ்சொல்லார், பேறானவாசிபிடகருவைச்சொல்லார்பெலத்தவெகுசுழிமுனையின்கண்ணூட்டஞ்சொல்லார், வீறானவிட்டகுறையாலேமென்றுவேதாந்தவழிகேட்டால்சொல்லுவாரே. ()

சொல்லுவார்நல்லோரைப் பன்னிரண்டு தொடர்வருஷங்காத்துத்தொண்டுசெய்துநின்றால், சொல்லுவார்ஞானவழியுள்ளதெல்லாந்தொல்லுலகில்மெய்கண்டாய்பொய்யல்லகாண், மல்லுவார்மானிடரையேந்திப்போற்றி மயங்கியேபொருள்பறித்துமாளுவாரே.(௪௯௫)

சித்தாந்திலேகியம்.

மாளாமற்பாண்டுகாமாலை தீர மகிமையுள்ளசித்தாதி வழுத்தக்கேளு, மாளாதபுளியவிலைபலந்தானாறுவளமானநீர்முள்ளி யுலர்ந்ததாக, மாளாமலைந்துபத்துப்பலமதாக மாகற்றகரிசாலைப்பலம்விதம், மாளாமற்கீழ்க்காயினெல்லியெல்லாம்வன்மையுடனிடித்துஒருபாண்டத்தூட்டே. (௪௯௬)

ஊட்டியேயிரெடுமரக்கானீர்தானுடன்வார்த்துத் துருப்பிடித்தஇரும்பைப்பார்த்து, ஈட்டியேபலநூறுகூடப்போட்டு எட்டொன்றாய்க்காச்சியேபிறுத்துக்கொண்டு, வீட்டியேநல்லெண்ணெய்படிதான்வாறு விதமாகப்பழச்சாறுபடிதான்வாறு, வாட்டியேநாரத்தம்பழச்சார்வாறுவாகாமவெள்ளாட்டுபால்தானென்றே. (௪௯௭)

ஒன்றானநெல்லிக்காய்ப்படிச்சாறென்றுஉகமையுள்ளமுசுமுசுக்கைப்படிச்சாறென்று, நன்றானபேய்க்கும்மட்டிச்சாறுமொன்றுநன்மையுளகும்மட்டிமாதுளையின்சாறு, நன்றாகப்படியொன்று அதிலேவாருகற்றாழைபிரமியிஞ்சிச்சாறுங்கூட, துன்றாமலிவையெல்லாமொக்கவிட்டுச் சொல்லுபனைவெல்லமோர்ப்பழையதாமே. (௪௯௮)

பழையனவாய்ப்பலம்பத்துகரைத்துப்பின்புபரிந்தடுப்பிலேற்றிவற்றத்தீயெரித்து, குழைபவேகுழம்புபோல்வருதல்பார்த்துகுணமாகத்திரிகடுகுதிரிபலாதி, தழையவேகரியசீரங்கிராம்புயேலம் தாளிசையுமோமமரமஞ்சள்*சிங்கி, விழையவேமதுரஞ்சாதிக்காய்*மாஞ்சிவிரைவாகநாகப்பூரோகணியுஞ்சேரே. (௪௯௯)

*சிங்கி-கற்கடகச்சிங்கி*மாஞ்சி-சடாமாஞ்சி.

கனிபோடிளாவரிசி காட்டாத்திப்பூ கருவானவெட்பாலை யரிசியோடு, அனியானசந்தனமு மத்திப்பிலி யடல்பெரிய நெற்பொரியுந்திப்பிலிமூலம், பணியான தூதுளைமுட்காவேளைபலவிதமாஞ்சரக்குகளின்வேருங்கூட, துணிவாகவகைக்கு பலங்காலாகச் சொல்லினேன்கூட்டுவாய் வேரெல்லாமே. (ருஎ)

வேரெல்லா மிளவருப்பாய்ச் சூரணித்து விரைவாகப்பாலிலிட்டாயிரமாண்டின், பேரெய்தபழையதானசிட்டந்தன்னைப் பெட்பாககாலுபலம்வாங்கிக்கொண்டு, தாரெனவேசுத்திசெய்து நன்மையாகச் சார்ந்திடித்துப்பொடிசெய்தருதிப்போட்டு, ஆரெனவேயடுப்பேற்றியாடிபற்று மரைவாகபெழுகுபதமாகக்கிண்டே. (ருஎச)

கிண்டியேலேகியமாய் பண்ணிக்கொண்டு கிரமமொடுகணேசனடிபூசைசெய்து, அண்டியேதானியபுடமிட்டுநாளு மந்திசந்திகொட்டைப்பாக்களவுவிதம், பண்டுடன்மண் டலங்கொண்டால் பறக்கும் நோய்கள் பண்டெங்கேகாமாலைசோகையெங்கே, அண்டிவரும்பெருவயறுபீலித்த மருங்கிராணிநோயுடனேயனைத்தும்போச்சே. ()

திரிலோகச்செந்தூரம்.

போச்சென்றதிரிலோகச்செந்தூரத்தைப் புகட்டிடவேநோயெல்லாம்பொடியாய்ப்போகும், வாச்சென்றகைகாலி னெறிவுகாந்தல் வாகானவயிற்றெரியசதிசத்தி, காச்சென்றகுன்மமெட்டுபறந்துபோகும் கனகமடாதிரிலோகசெந்தூரங்கேள், வாச்சென்றஅயப்பொடியுமுருகிச்சிட்டம்வகைவகைக்குச்சுத்திசெய்துபலந்தானென்றே. ()

ஒன்றாகக்கல்வத்திலிட்டுமைந்தா வுறுகாவற்பட்டையிடசாற்றால்சாமம், அன்றாகஆட்டிரவிபுடமாய்வைத்து ஐந்துமுறையிந்தவண்ணம்பாகஞ்செய்து, குன்றாதேசிற்றேரண்டிலைபொதிந்து கூறுகிறேனெய்ப்பாண்டத்திலிட்டுமூடி, நன்றாகச்செந்தூரமருணன்போலாம் நாயகனேசெப்பதனில்வைத்துமூடே. (ருஎசு)

மூடியேபணவெடை செந்தூரந்தேனில் முன்னருந்தப்பாண்டு காமாலைசோகை, நாடியதோர் பெருவயிறு பிறவிப்பாண்டு நலமான உப்பிசநோய்கிராணியாறும், நீடியதோர்சலக்கழிச்சல்நீரின்கோவை நில்லாதுயிளைப்பிருமலீளைகாசம், வாடியேக்ஷயகாச விஷக்கடிகள் வாயும்வாய்க்கசப்பும்நீர்வாந்திபோமே. (ருஎரு)

பவளபற்பம்.

போமென்றபவளபற்பஞ் சொல்லக்கேளு புதிதானநற்பவளங்கொண்டுவந்து, ஓமென்றசுத்தசலம்விட்டுநன்றாய் ஒருநாள்தானிரவு

பகலூரவைத்து, வேமென்றவதையெடுத்துக்கழுவித்தேய்த்து வீரு கஆவின்பாலதனிலிட்டு, வாமென்றநாளொன்றுதன்னூமூற வைத்து விட்டுவரிசைபெறவகைதான்கேளே. (நூசுஉ)

வகையென்ன தேள்கொடுக்குக்காயிடித்து வாகாகபுத்தோட்டி ல்பரப்பிக்கொண்டு, நகையென்னபவளத்தைப்பரப்பிமேலே நன்று கவிடித்தொருகாய்ப்பரப்பி, பகையாதேமேல்மூடிச்சீலைசெய்து பக் குவமாய்கெசபுடத்திற்போட்டெடுக்க, அசையாதேசங்குபோல்நீறி க்காணும் அரைத்துப்பிங்கானிட்டாவின்பாலூட்டே. (நூஎ)

ஊட்டியேகடுரவியில்சாமமொன்று உறுதிபெறவைத்தெடுத்தா லூட்பிணுப்பில், காட்டியேபொதிந்துகட்டிநெற்பாண்டத்திலகனமா கயிட்டுஒருநாள்மூன்றுசென்று, தாட்டிகமாய்வங்கபற்பந் தவளம் போலாம் சாதகமாய்ப்பாணைதனிலடைத்துவைத்து, ஆட்டியேபண வெடைதானெடுத்துக்கொண்டுஆவின்பால்நெய்தேனூலருந்திடாயே.

அருந்திடுவாய்தயிலபற்பலேகியங்களனுபானவகையறிந்துகொ ள்ளுகொள்ளு, வருந்தவருமீளைசயகாசம்ரோகம் மந்தாரசயரோகம் தொண்ணூற்றுறும், திருந்திவிடுஞ்சுரநோய்கள்சொறிகரப்பான்சிர ங்கோடுசேர்ப்போம்வைத்தியரே,தெரிந்திடுவீரெந்நூலையுண்மையெ ன்று தேர்ந்திடுவீர்மாய்ப்பிரே. (நூஅ)

அரிதாரபற்பம்.

பாரப்பாவரிதாரபற்பந்தன்னைப் பாடுகிறேன்மைந்தர்களே பரி ந்துகேளும், காரப்பாவரிதாரம்பலந்தானொன்று கட்டியால்வாங்கிய தைக்கிழியாற்கட்டி, சூரப்பாபுத்தோட்டிற்*கிழியவைத்துக் குறிப் பாகக்கற்சுண்ணங்கீழ்மேலிட்டு, ஏரப்பாரதசிநீர்வார்த்துமூடி யெடுத் துமேமுன்னீரைவார்த்துநீற்றே. (நூக)

* கிழி-கதை.

நீற்றிடவேயேழுதரஞ்சுத்திசெய்துநிலைபாகவாழையிடகிழங்கு தன்னை, ஆற்றிடவேகிழங்கு நடுக்குடைந்துயீயு மழகா க்கட்டியதி னுள்ளேவைத்து, மாற்றியேகுடைந்தக்கிழங்கான்மூடி மைந்தனேகி ழங்கின்மேலேமுசீலை, பார்த்துமேசெய்துலர்த்திக் குழிதான்வெட்டி ப்பாங்காகக்கெசபுடப்போட்டெடுத்திடாயே. (நுகக)

எடுத்திடவேயரிதாரஞ்சங்குபோலா மெழில்செப்பில்வைத்து ப்பணவெடையெடுத்து, அடுத்திட்டஆவின்பால்நெய்தேனுண்ணஆ ர்ந்தசயபிணிமந்தாரகாசம், தொடுத்திட்ட சிலேற்பனங்கள் தொண் ணூற்றுரும் சூலைமுதலழுகண்ணிகுஷ்டரோகம், கடுத்தகரப்பான்சி ரங்குசப்பேன்கிரந்தி கனத்தவரையாப்புமுதலனைத்தும்போமே. ()

தாம்பிரபற்பம்.

போமென்பதாம்பிரத்தின் பற்பங்கேளு புகலுகிறேன்வெள்ளை வங்கம்பாலைவாங்கி, தேமென்றதாம்பிரத்தைபதில்போட்டுத்தினகரன்முன்னொருநாள்தான்வைத்திட்டாக்கால், காமென்னபாலெல்லா மூறவற்றிக்காகம்போலேயிருக்குமதனைவாங்கி, நாமென்றதாம்பிரத்தைப்பொதிந்துமிக்கநன்புத்தோடிட்டுமேவோடுமூடே. (ருகங)

மூடியேகஜபுடந்தான்போட்டுவாங்க மொழிதவளம்போலாம்பணவிடையெடுத்து, நாடியேபாவினெய்பாலினாலே நன்குண்ணகுன்மமெட்டுமேசுச்சூலை, ஓடியேரதினெகடுக் குட்டம்போகும் உகலாதரோகவகையெல்லாமோடும், கூடியவோர்தேகமெல்லாம்வலுக்கும்பாருகுணமாகுங்கைகண்டவித்தைகூறே. (ருகச)

கூறவேநாகபற்பனுசொல்லக்கேளு குலவியவோர்நாகமொருகட்டிவாங்கி, ஆறவேஅயக்கரண்டிக்குள்ளேயிட்டு அடுப்பேற்றிக்கரிசாலைச்சாறுநாழி, வீறுடனேநாற்சாமம்சுருக்குப்போடுவிதமுடனேநாகமதுநீறிப்போகும், காறுடனேகரிசாலைசாறில்லாவிட்டால்கனவிருள்ளிச்சாற்றால் நீறுந்தானே. (ருகரு)

நீறுமடாஇல்லாட்டால்சிறியாநங்கை நிகழ்தரியகுகைதனிலேகீள்மேலும்வை, மாறுபடாநாகத்தைநடுவேவைத்து வாய்மூடிபுலையினிலூட்டுதவூது, ஊறுடனேபெருமியதுநீறிப்போகும்உற்பனமாமனுபானமறிந்தேயூட்ட, காறுமேயிளைப்பிருமலீளைகாசம் காணாது வைத்தியரேவிரைந்துபாரே. (ருகசு)

துருசுபற்பம்.

விரைந்துபகர்கிராணிவகையெல்லாந்தீர விளம்புகிறேன்துருசினிடபற்பமார்க்கம், கரைந்துபார்பேசியொருகட்டிவாங்கிக்குருந்துளசிச்சாற்றினிலேயூரிச்சாமம், இறைந்துமேயெடுத்தந்தஇலையரைத்துஇயல்பாகத்துருச்க்குக்கவசம்பூட்டி, கரைந்துமேபேமூசிலைமண்ணுசெய்து சாணீளஞ்சாணகலஞ்சதுரமாக்கே. (ருகஎ)

ஆக்கியேதரையளவுகண்டமட்டும் அழகாககுழிபுடந்தான்போட்டெடுத்து, நோக்கியேகருவூமத்தஞ்சாற்றாலேநு ணுக்கமுடன்சாமம்போட்டெடுத்தவ்விலையால், தேக்கியேயரைத்துழுப் புடந்தான்போட்டுசேர்ந்தெடுக்கப்பொருமியதுநீறிப்போகும், வீக்கியேதுரிசிதனைச்சிமிழில்வைத்துவிதமாகமூடிவைத்தால்குருவாம்பாரே. (ருகஅ)

குருவாகும்அதின்பெருமைபேசொண்ணுதுகுவலயத்தில்லைவத்தியர்க்கோகைகிட்டாது, மருவாகும்வாதியென்றுலறிந்துசெய்வார்

கசடானவைத்தியரேசெய்பார்செய்யார்,அருவானசன்னிசுரம்கெண்டைகட்டி அட்டகுன்மம்பல்லசைவுவாயுச்சூலை,தருவாகுமகுலைவகாமாலைசோகைசாராதுபாண்டுவிஷநீர்க்கோவையே. (௫௧௯)

## துருசுகுரு.

கோவையர்துருசினிலேகுருமுடிக்கக் கூறுகிறேன்நாதாக்கள்கூறுரப்பா, கோவையாம்பூநீறுமரக்காகோதியேமண்படாதெடுத்துவந்து, கோவையாம்வவ்வாலின்புழுக்கைதன்னைக் குழுறவேயீரிரண்டுமரக்கால்தானும், கோவையாங்குக்குடத்தின்வெண்மலந்தான்கூட்டியேரண்டுபடிகொண்டிடாயே. (௫௨௰)

கொண்டிடவேதுரிசிஞெடுகட்டிவாங்கிக் கூறுகச்சுண்ணம்புச்சீலைசுற்றி, யண்டியேகுகையிலிட்டுக்கடுவங்கமாக்கியதிலிட்டேயேழுதரம்வைத்துவாங்கி,கண்டிடவேகவசத்தைத்தள்ளிப்பாரு கட்டியதுபசந்துமிகவெளிறிக்காணும்,தண்டியேயரையளவுகுழிதான்வெட்டிச்சதுரமாய்ச்செய்துமதிற்பூநீர்சேளே. (௫௨௧)

பூநீறுமடியினிலேமரக்காலாறு போட்டதின்மேல்வவ்வாலின்புழுக்கைபோட்டு, தூநீறுபதக்கத்திலேயளந்துபோடு சுகமாகவதின்மேலேகுக்குடத்தின்மலந்தான், மாநீறும்படியொன்றுமளந்துபோடுவன்துருசுக்கடியதின்மேலேவைத்து, கானேறுங்குக்குடத்தின்மலம்பின்போடுகனவவ்வாலின்புழுக்கைமுன்போல்போடே. (௫௨௨)

போட்டுமேனோனீரையதன்மேலே குணமாகவுவர்ப்பூவைக்கொட்டிப்பின்பு, நாட்டியேயதின்மீதுதிரணைபோட்டு நனுக்கிரண்டுமுழமுயரம்நலமாய்ப்போடுவாட்டடனேயறுதிங்கள்செல்லுமட்டும்மழைபெய்தாலும்நனையாவண்ணஞ்செய்து காட்டுமேயாறுதிங்களானபின்புகனமாகத்திறந்துபார்கண்ணுற்றானே. (௫௨௩)

சாணவேகட்டியதுபொருந்தினீறுங் கனகமடாசிவசிவாவென்சொல்வேன்நாணவேநாதவிந்துமுதற்றரந்தான்நன்மையுடனேவாங்கிப்பீங்கான்றன்னில், ஊணவேபூரவீரங்கரியநாவியுறவோடுசூதமுந்தானுறுபுள்ளி,'காணவேவண்டுமுட்டைசூடன்கூடகருவானவான்குருவிவண்டுஞ்சேரே. (௫௨௪)

சேரப்பாவகைக்குப்பணவிடைதான் திறமாகமத்தித்துதுருசுச்சுன்னம்,எரப்பாமிகவூட்டிரவிபிலிட்டு எடுத்துமேபூசியிப்படியேழுநாள் ஆரப்பாசெய்தெடுக்கக்கடுங்காரச்சுன்ன மாச்சுதடாபுகழாகஇல்லாவிட்டால்,நேரப்பாவெந்துமிகனீறும்னீறும் நிலையானஎண்ணெய்முதல்தண்ணீருக்கே. (௫௨௫)

நீருக்குட்பட்டவிடமெல்லாநீறும் நேயமொடுபாஷாணமறுபத்துநாலும், பாருக்குள்நவலோகம்நவரத்னமும் பட்சமிப்படிசெயயக்குருவாமெழுகாம், யாருக்கும்வாடைபட்டாலந்தச்சூத மழகாகவிரைத்துப்போமண்ணுங்கல்லும், பேருக்குவெகுசுருக்குவேதைகோடிபேசொண்ணுதிதன்பெருமையுண்மைதானே. (௫௨௯)

உண்மைதானரகராவிதன்றன்வேகமூழியூழிகாலமெல்லாஞ்சித்தாடினேன்யான்,வண்மையாயண்டரண்டகடாகமெல்லாம்வாதாடிநீதமுறப்பின்னுமீண்டேன், திண்மைபெரமறைந்திட்டால்தோஷமென்றுசிந்தையுள்ளேநினையாதென்றுகேளீர்,। தண்மைபெறவெனைவணங்கியிணங்கிமிக்கசார்ந்தவர்க்குஞ்சீஷர்க்குஞ்சொன்னேன்பாரே. ()

சூதவெண்ணெய்.

சொன்னேன்பார்சூதவெண்ணெ யெடுக்குமார்க்கம் சொற்பெறியநாதாக்கள்செய்யுமார்க்கம்,அண்ணவேசூதமொருபலந்தான்பத்து அடிகனத்தபேருஞ்சாலிலிட்டுப்பின்பு, தன்னவேவேப்பிலைதானுருவிக்கொண்டு தாழிநிரம்பக்கொட்டி தண்ணீர்வார்த்து, பன்னவேமேல்மூடியடுப்பிலேற்றிப் பறுவிறகானெருப்பதனைமூட்டிடாயே.()

மூட்டியேவடுகனுக்கு ஈசானத்தில் முறைபோடேவஸ்துவொடுசுற்றிமிக்க, காட்டியேவைத்துவிட்டுச்சாயங்காலம் கனமானவடுகனை நீமனதிலோது,நாட்டியேயிரவுபகல் நல்லாறுமல்நலமாககாடாக்கினிமூட்டு,போட்டவேசலமெல்லாங்குறுகிவற்றும் பக்குவமாயடியில்நிற்கும்பதத்தைப்பாரீர (௫௨௯)

பதம்பார்த்துஇலையெல்லாமெடுத்துப்போட்டுப்பார்த்திட்டால்நீர்வற்றிசூதம்நிற்கும்,இதமாகவெடுத்துமறுசாலிலிட்டுஇயம்பியசால்நிறையநிம்பயிலையைப்போட்டு, அதமானசலமதிலே நிறையவிட்டு அடுப்பேற்றிமேல்மூடி()வன்னிமூட்டு, கதமாகவிரவுபகல்மாறுதேநீகனல்மூட்டநீர்சுருங்கும்பருவம்பாரே. (௫௩௰)

வன்னிநெருப்பு.

பருவமாய்க்கருகாமல்மறுபாண்டத்தில்பருந்திட்டிப்படியாகமுறைதப்பாமல், விருந்தென்னவெவ்வேறேசாலுமாற்றிவிதமாகக்கைம்முறைகள்வன்னிமூட்டு,மருவென்னகைம்முறையுநன்றாயப்பாமறவாமல்வடுகனையும்பூசைசெய்து,கருவீசாமண்டலந்தான்சாலுமாற்றிநாலுபத்துஓர்நாள்போய்சாலுமாற்றே. (௫௩௧)

மாற்றியேநாற்பத்துஓர்நாளப்பா மைந்தனேசூதவெண்ணெயரு ணன்போலாம்,காத்துமேபாத்தாட்கும்வடுகனுக்கும்கணேசனுக்கும் கந்தனுக்கும்பூசைசெய்தே,பாத்துமேநாதாக்கள்பூசைசெய்தேபஞ் சகர்த்தாக்கள்பூசைசெய்துபணிந்துநில்லு, நாத்துமேநவபாசந்திரச் செய்து ரசவெண்ணெய்தனையெடுத்துப்பதனம்பண்ணே. (௫௩௨)

பதனம்பார்த்தில்லையெல்லாமெடுத்துப்போட்டுப்பார்த்திட்டா ல்நீர்வற்றிச்சூதநிற்கும், இதமாகவெடுத்துமறுசாலிட்டுப்பார் இயம் பலொண்ணாரசவெண்ணெயார்தான்செய்வார்கதமுற்றகசடர்களோர் செய்யார்சித்தர் கைம்முறைகள்செய்முறைகள் யார்கண்டுய்வார், வி தமுற்றபோகரிஷியெனக்குச்சொன்னார் வேற்றோர்க்குச்சொன்னாலே பொய்யாம்வாறே. (௫௩௩)

வாறானரசவெண்ணெய் தனையெடுத்துமஞ்சாடிவெற்றிலையிற்ற டவியுண்ணு, ஆறானபனைவெல்லம்தனிலுண்ணுஆவின்பால்திரிகடுகு தேனிலுண்ணு, கூறாயில்லாட்டால்வெற்றிலையிலுண்ணுகுன்மகுட்ட ஞ்சூலைபதினெட்டும்போகும், ஆறானமேகவகையிருபத்தொன்றுமதி லெழுந்தநோய்வகைகளெல்லாம்போமே. (௫௩௪)

போகுமேகிரந்தியரையாப்புச்சூலை புண்புரைகளழுகண்ணிபிள வைப்புற்று ஆகுமேவாதமென்பதுவும்போகு மக்கிரமித்தமுடக்கு வகையிடுக்கண் போகும்,வேகுமேபக்கவாதம் பாரிசவாயு விழலாகும் வாதமென்றதிநபத்தாறும், நாகுமேகண்ணோசிகன்னப்புற்று கபால குட்டம்பவுத்ரமுங்கரப்பான்போமே. (௫௩௫)

கரப்பான்சொரிசிரங்கு வெடுமேகச்சூலை கடவண்டவாயுமுதல் யோனிப்புற்று, கரப்பானொடுபித்தவாயுஉஷ்ணவாயுசயரோகம்நீரிழி வும் க்ரிமிபோகும் கரப்பனொடுசூலைமுட்டியந்தரவாயு கருங்குட்டஞ் செங்குட்டம் வெண்குட்டமாமே. (௫௩௬)

குட்டமொடுசருவநோயெல்லாந்தீரும் குறைநோயும்பெருநோ யுங்குடிபோஞ்சொன்னோம்,கெட்டியாம்தேகமதுபிணிகடீருங்கிளர்த் தறியாதுவெல்லாமிருகிக்கட்டும், பட்டமாம்பாய்செறிந்தாற்போலே யப்பாபளபளக்குமுடம்பெல்லாம்பாலையாகுந்,திட்டமாய்ச்சொல்லி விட்டேன்சூதகற்பஞ்சேர்த்துண்ணச்சாவேதுதேகங்கல்லே (௫௩௭)

கல்லானகாயசித்தி கற்பமொடு ரசவாதமஞ்சனுக்குளிகைகல்லான கௌனமாங்குளிகையோடு கனமான சருவமோயெல்லாமைந்தா, சொல்லான சூதத்தை விட்டால்வேறு சொல்லுக்கும் வல்லவரார்சொல்லக்கேளு, செல்லவேசித்தர்கேடான் பதினென்பேரும் சிவவித்தைக்கட்டியல்லோ திறமானுரே. 538

திப்பிலிசாயனம்:

திறமானசயரோகந் தொண்ணூற்ருராம் தீரவேதிப்பிலிசாயனந்தான், கேளுதிறமானதிப்பிலியும் பலந்தான்ரண்டு சீரகமுஞ்சுக்கேலந் திப்பிலிமூலம். திறமானவாய்விளங்கக் கடுக்காய்மிளகுசெப்பமுடன்வகைக்குக் காற்பலந்தான், அறனுகவிவையெல்லாமிளவறுப்பா ஆக்கியேதேனில் விட்டப்பாற்கேளே. 539

கேளேநீதேனைவடிகொண்டுநன்ருய்க் கிரமமுடன்சட்டிலேவாருவாரு. கேளேநீபனைவெல்லமானல்கிடையாட்டால்* பஞ்சதாரைசூரணத்தில், வாளேநீதேனிலிட்டுப்பிலேற்றி வளமாகயாகுவரில் சூரணம்போட்டுக், கேளேநீமெழுகுபதமாகக்கிண்டிக்குணமாய்நாளொன்றுக்கிருநேரங்கொள்ளே, 540

* பஞ்சதாரை சர்க்கரை:

கொள்ளுவது பாக்களவு விதஞ்சொன்னேம் குலவியமண்டலந்தான்கொண்டானல்மெள்ளவோ சயரோகமெண்பத்தாறும்வீறிவருஞ்சோகைகுத்திருமலீளைகள்ள மிகுகுத்திருமல் நெட்டிருமல்காசமோடளைப்பிருமல்கிறுகிறுப்பு, துள்ளுபித்தவாயுமுதல் வறட்சியுஷ்ணம் தொலைந்துபோம் வைத்தியரேகூர்ந்துகேளே. 541

கூர்ந்துகேளறிதாரப்பர்பஞ்சேர்ந்து பகொண்டிடவேகுகுருக்குகுறிதிப்பாரு, தோய்ந்துபாரிதற்கிசைந்ததைதலமொன்று சொல்லுகிறேன் வைத்தியரே, கேளீர் ஆய்ந்து, பாரெள்ளெண்ணைபடிதான்ரண்டு அடைவாக இரண்டுபடி யிளநீராகும்; சேர்ந்திடவேமுசுமுசுக்கைகரந்தை குமரிதிரமாக நிம்பம்பழச்சாறுங்கூட்டே. 542

கூட்டடாகற்பூர வள்ளிச்சாறுகொடுப்பைச்சாற்*சீழ்க்காய்நெல்லிபுளியாரை, ஆட்டடாவகைக்குவொருபடிதானுக அளந்திட்டு இன்னம்வகையறையக்கேளு, வீட்டடாவில்லைவிலாமிச்சம்வேறும் வெட்டிவேர்கிளியூரல்தேவதாரம், மாட்டடாமரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள்வாலுழுவை சிறுதேக்குச்சீரமாமே, 543

* கொடுப்பை பொன்னுங்காணி.

சீரகமாஞ்சிங்கிலேகியம் கிராம்புசந்தனம் திறமானபச்சிலைபூ
லாங்கிழங்கு, சீரகமாக்குங்குமப்பூவகைக்குச்சோடா கழஞ்சிரண்டு
பாலலாட்டி, சீரகமாங்கலக்கியம் வெண்ணைவார்த்துத் தீயியெரிக்க
வொருவிறக்கால் மூட்டிநன்றாய் க்ஷீரகமெழுகுபதம் பார்த்தெடுத்
துச் செயலாக நாலுநாள்வட்டமூழ்கே. 544

மூகவேபசும்பயறு வெந்நீராலே மோர்தயிரும் புளிபுகையும்
பண்ணுந்தள்ளு, மூழ்கின்நாள்மறுபாண்டமாகாதன்றி முழுகிமறு
நாளெல்லாங்கூட்டுகூட்டு,மூழ்கினபின்பச்சைமாங்கிஷமுண்ணுதே
முனையானசயமெட்டும் தொண்ணூற்றாறும். மூழ்கிவரவிளைப்பிரும
லிளைகாசம் மூச்சேங்கலிப்பிசநோய்சுவாசம்போமே. 545

சுவாசமொடுநாவரட்சி உஷ்ணரோகம் தொலையாதசிரசநீர்கப
ம்பீநசம், கவாசயிவையெல்லாங் காணுதோடும் கண்ணிர்நீர்ப்பாய்
ச்சலொடுநேத்திரச்சூடு, தவாசமாஞ்சரீரத்தில் உள்ளசூடுதணிந்து
விடுந்தைலமது சாந்தமாகும், இவாசமாம்பின்னமொருசூட்சந்தன்
னை இயம்புகிறேன் சிரசுநீர் போகக்கேளே. 546

கேளப்பா சிரசுநீர் எல்லாமாறக் கிரியையொன்று சொல்லுகி
றேநல்லவெண்ணைதான், வாரப்பாபடியொன்று அளந்துவாறுவா
கானபசுபஞ்சட்சாறுநாழி, மூளப்பா ஆவின்சாணிப்பால்நாழிமோ
ரேனுந்தயிரேனும் படிகால்வாறே, வேளப்பாகுறுந்தோடி முள்ளி
சுண்டை வேளைவேர் மிளகுகோஷ்டம் பலமிரண்டே. 547

இரண்டோடுதேவதாரஞ் சேர்த்தரைத்து இயலாகச்சொக்கு
மொருகழஞ்சுகூட்டி, திரண்டோடக்கீழ்காயினெல்லிவேறும்திறமா
கங்கழஞ்சிரண்டுகூடப்போட்டு, மருண்டிடாத அடுப்பேற்றிமெழு
காய்க்காய்ச்சி மகிமையுடனாலுநாள்வட்டமூழ்கி, தெருண்டுள்ளசிரசு
றுநோய் சகலதோஷங்கள்சேராது வாராதுசிறந்துமூழ்கே. 548

மேகாதிக்குளிகை.

முழுகிவரமேகவகையாவுந்தீர மொழிகின்றேன்மேகாதிகுளி
கையொன்று, தொழுதரியவரிதாரங்கந்திரண்டு சுத்திசெய்துவகை
க்குக்கழஞ்சுபத்து, பழுதின்றியப்பிரேகச்செந்தூரந்தான் பலம்பத்
வதுங்கச்செந்தூரம்பத்தே. 559

பத்தான திரிகடுகு சாதிக்காய் கிராம்பு பகரரிய நிலப்பனைவேற்தேற்றான் கொட்டை. பத்தானசந்திமுதல் லவங்கமோடு கசகசா வலம்புரிக்காய்கரியசீரம், பொத்தானவாலுழுவைமோட்டரிசிபுளிய விரைத்தோலோடு மாதளையின் வித்து. வித்தானமுருங்கையோடு பூனைக்காலிவிரைவகைக்கு முக்கழஞ்சு வரிசைகேளே. 550

வரிசையாய் முன்மருந்தோ டொக்கச்சேரு வல்லொதியம்பட்டச்சாறுவின்பாலும், கரிசையாய்கொடிவேலி தேங்காய்ப்பாலும் கற்றாழைச்சாருடனேவகைக்குச்சாமம், உரிசையாயாட்டிமுன்போல்உண்டைசெய்து உகந்துநிழலுலர்த்தித் தாழிப்புடமிட்டு. அருமையாய் நாளொன்றுக்கிருநேரந்தான் அருந்திவர மண்டலந்தான் தன்பின்காணே. 551

காணவேமேகமென்ற இருபத்தொன்றுங்கபமான சயரோகந் தொண்ணூற்றாறம். கோணமுறு சீழிரத்தம் பிரமயம்நீறுகுட்டமொடுகிரந்தியரையாப்புச்சூலை, தோணரிய அழுகண்ணி எலும்புருக்கி சூலையொடி கன்னேசி கன்னப்புற்று. சேணமிகு பௌத்திரங்கள் கண்டமாலை சேர்ந்தனுகாக்கிராணி குன்மமெல்லாம்போமே.

அரிதாரபற்பம்.

போமென்ற தாதுவெல்லா மிருக்கட்டும் பொலிவாக நாடியெல்லாஞ் சிவந்துமின்னும். வேமென்ற விந்தாதிக்காதியாகும்மெய்யாகும் மெய்யாகச்சொல்லிவிட்டேன் விரைந்துபாரீர், காமென்ற அரிதாரப்பற்பந்தன்னைக் கலங்காமற்சொல்லுகிறேன் வென்றகரசுப்பார்த்து. வேமென்னவெட்டையதின் வேரலாதல் விதமானபூவாதல் சேர்த்துப்பின்னே. 553

பின்னமின்றித் தாளகத்திலரைத்துப்பூசி பெட்புடனே சீலைசெய்துகுக்குடம்போ, அன்னமுடநீறியது சுண்ணமாகும்அழகான வெள்ளிசெம்மல்பத்துக்கொன்று, தன்னமொடுகாட்டிடவேமாற்றேழாகும்சகலருக்குஞ்சொல்லாதே வேதைமார்க்கம், பின்னமிகுநோய்களெல்லாங்கெதிகெட்டோடும் பேரானசிரங்குசொரிகுலைபோமே.

பெரும்பாண்டுக்கு.

போமென்ற பெரும்பாண்டுக் கின்னங்கேளு புகலுகிறேன்வெகுசுருக்குச்சூட்சமாக, தேமென்றசுட்டசெங்கல் சிவந்ததாகசிறப்பாக எடுத்துவந் திடித்துநன்றாய். ஆமென்ற வேழுதரம்வடித்துக்கட்டியதிற்பாதிவங்காளச்சீனிசேர்த்து, வீமென்றநாளொன்றுக்கந்திசந்திவெருகடித்து ஐந்துநாள் கொள்ளுகொள்ளே. 555

## கலிக்கம்.

கொள்ளவே பெரும்பாடோடெல்லாந்தீரும்குடிகெடுத்தபுளிப்புகையும்பெண்ணுந்தள்ளு, மெள்ளவேவகைகொண்டவித்தைசொன்னேன் வீறாகவின்னமொரு கலிக்கங்கேளு, விள்ளவேபெருங்காயந்திப்பிலிமிளகுவெள்ளுள்ளி கிராம்புமுதலைந்துநேராய், அள்ளவே வெற்றிலைச்சாற் மேனிச்சாறு அடல்வெள்ளைச் சாரணைச்சாற் பழச்சாறூட்டே. 556

ஊட்டியேசாறொன்றிற்சாமமொன்று உற்பனமாயரைத்துநன்றாயுண்டைகட்டி, மாட்டியே நிழலுலர்த்திச் சந்நிதோஷமாறவேதும்பைசாற் வெற்றிலைச்சாற், வாட்டியே இஞ்சிச்சாறு மேனிச்சாறு வாகானபழச்சாறு முலைப்பாலோடு, கூட்டியே யஞ்சனத்தைத்தீட்டிமிக்கக்கூர்த்துன்ன நோயோடும் பாசாசும்போமே. 557

## சந்நிக்குப்பொட்டணம்.

போகுமடா சந்நிவகை பொட்டணத்தைப் புகலுகிறேன்வெண்ணொச்சி யிலையினோடு, போமென்றமுருங்கையிடபட்டைப்பூவும் புகழாகச்சீந்தியிலை சமனாய்க்கொண்டு, காமென்றவோமமொடுநவாச்சாரந்தான் கருஞ்சீரகம் வெப்பரிசிமாவிலிங்கும், தோமென்றபட்டையொடு வெள்ளையுள்ளி சொல்லரிய வெருக்கினொடு பழிப்புமெண்ணே. 558

எண்ணவே தெற்றாவின்விரைவசம்பு இடித்தொன்றாய்ப்பொட்டணந்தான் கட்டிவைத்து, தண்ணவே சந்நிவகை பதின்மூன்றிற்கும்தலைப்பாரம் பிடரிவலி சயித்தியநோய்க்கும், புண்ணவே ஆயக்கரண்டிகாயவைத்துப் பூணவே நிம்பெண்ணெய் குத்திக்காய்ச்சி உண்ணவே பொட்டணத்தைத் தோய்த்துதோய்த்து ஓடாதநோயோடும் புனிதமாமே. 559

## தாம்பிரகுருபற்பம்

பினிதமாந் தாம்பரகுருபற்பமொன்று புகலுகிறேனாதாக்கள்புகலாதெல்லாம், புனிதமாஞ் சதுரக்கள்ளிப் பாலிற்கொஞ்சம்புரிந்து மிகவாங்கியதிற்றாம் பிரத்தை. புனிதமொடுபோட்டுத்துணிசுற்றிப் புரட்டிபுகழாக மறுபடியும் பாலைவார்த்து, புனிதமாயிவ்வண்ணநாற்பதுநாள் புகட்டியதோர் பாலையெல்லாந் துணியிலூட்டே. 560

ஊட்டவேவெவ்வேறேதுணியிலூட்டு உத்தமனேவூரியதோர்
தாய்பிரத்தில்,ஊட்டுவதுபாலுண்டதுணிகளெல்லாம் ஒவ்வொன்று
ய்தாம்பிரத்தில் பொதிந்துசுற்றி!மாட்டுவது அதின்மேல்மண்சீலைசெ
ய்து'மாசற்றகெசப்புடம்போட்டு எடுத்துப்பாரு,தீட்டுவதுசங்குநீறி
தற்கொவ்வாது சிவசிவா வெகுசுறுக்குக்கண்டுபாரே. 561

கண்டுபார் சருவநோயெல்லாந்தீரும் கனமானசூதமிடக்கிடை
த்தான் சேர்த்து, கண்டுபாரண்டவெள்ளை யர்க்கம்பாலும்கலந்தொ
ன்றாய் ரேகிக்கச் சயரீராகும், கண்டுபாரிண்டோட்டில் வைத்துமூ
டிகருதியேசுண்ணும்புச்சீலைசெய்து, சொண்டுபார்க்குக் குடத்திற்சு
ண்ணமாகும் கொள்ளையிட ரசவாதங் கொண்டிடாரே. 592

அர்க்கம்பால் எர்க்கம்பால்.

கொண்டிடாரின்னமிதில் அநேகம்வித்தைகுறிப்பறிந்தவாதிஎ
ன்றாற் குறித்துச்செய்வான். கண்டிடார்மனமறிந்த பெரியோர்செ
ய்வார்கதிகெட்ட கசடர்களோசெய்யப்போறார், கண்டுபாரென்னூ
லில் வெளியாய்ச்சொன்னேன் கனகத்தைகண்டுநீ இச்சியாதே, அ
ண்டிடவேபூசைக்குங்கற்பத்துக்கும் அடைவாகச்செய்துமனமடங்
கிநில்லே. 503

கற்பம் நாய்கற்பம்.

மகாதிராவகம்.

அடங்கியதோர்மகத்தானதிராவகத்தை அரைகின்றேனனுந்
தானறிந்தமாத்திரம், விடங்கொண்ட கல்லுப்புப்பாறையுப்புவெடியு
ப்பு இந்துப்புவளையலுப்பு. தொடங்கியசீர்சவுட்டுப்பு அட்டுப்போ
டுசொல்லரியகரியுப்புங் கட்டுச்சாறு. மடங்காதஆனைநீர் குதிரை
நீரும்மணிதநீரு:ப் ரொட்டகநீர் கழுதைநீரே. 564

நீரோடு ஆவிநீர் வெள்ளாட்டுநீர் நீரான உவர்பூவுஞ்சிப்பிநீரு
ம்நோகவெவ்வேறே காய்ச்சவுப்பாவும் நிலையாக வெலிப்புழுக்கை
வவ்வாற்புழுக்கை, ஏராகமயற்புழுக்கைமறிப்புழுக்கையியலாக இ
ருமலங்குக்குடமலமும், பேராக விவையெல்லாம்வேறேசுட்டுப்பிர
பலமாய்ச்சாம்பலுறச் செய்துகேளே. 564

மறிவெள்ளாடு.

செய்துகேள் நீலிபோடி வேலியுருவிசெயலானமேனியொடுநா
ணல்புங்கு, எய்தவொரு எருக்கோடு தென்னங்கள்ளியியலானபுளி
பிராணி வாழைதாழை, வைத்தொருகுருக்கத்தி புரசுவள்ளிமாவிலி
ங்கைபிரண்டைபனைக் கொடிக்கள்ளியும், ஐதவொரு காசாவுங்கொ
ழுஞ்சிச்சாறும் அழகான வெள்ளைச்சாரணையோடன்றே. 566

அன்றாக நீர்முள்ளி பேய்க்குமட்டி ஆடுதோடமூலியொடுதிரு குகள்ளி, நன்றான சதுரக்கள்ளிக் காந்தாள்வாகைநலகானவிழியொ டுநண்டுநத்தை, நன்றாகச் சங்குசிப்பிக்குடத்தின் கண்மண்டையோ டடனே எல்லாஞ்சேர்த்து, துன்றாமல் இடித்துநன்றாக்கணேசன் றன்னைதொழுதுமிக வெவ்வேறே சாம்பலாக்கே. 567

சாம்பலெல்லாங் கரைத்ததனை யுப்பாய்காச்சிச் சாற்றியதோர் வகையெல்லாஞ் சமனாய்க்கொண்டு, சாம்பலாம்வெண்காரம்துரிசுசீ னஞ் சமர்த்தான பேதியொடுகாந்தலோகம், சாம்பலாஞ்சுடனொடு வீரம்பூரம் தனியான வெண்சவுரி நிமிளத்தொட்டி, தேம்பானமா ல்தேவி மிருதார்சிங்கி திறல்கெந்தி துத்தம் வெண்ணாவியோடே.

வெண்-கெடரி-வெள்ளைப் பாஷாணம் தொட்டி தொட்டிப் பாஷாணம்.

நாவியொடு உப்புநேர் சமனாய்க்கொண்டு காயுருவிமேனிச்சாற் மைபோலாட்டி, மேவியதோர் வில்லைசமமாகக்கட்டிவிரயவேயுலர்த் திநன்றாய் அஞ்சுபங்கு தாவியே வொருபங்கைப்பாண்டத்திட்டுசா ரேடுவாக்கரையும் போட்டுப்பின்பு மேவியசட்டிதனை மூடிச்சாற் றைமிகவூற்றி உளுந்தரைத்துச் சீலைசெய்யே. 569

சீலைசெய்து புற்றுமண்ணுகுருந்தகல்லுந் திறமாகப்புகட்டியே அரைத்துயேழு, சீலையிலக்கச்செய்து, சிறப்பாய்மைந்தாசெயலாக வாகையின் மேலேவைத்து, வாலையொடு வடுகனையுங்கந்தன்பூசைவ ளமான விக்கிநேசர்தேவிபூசை, ஆலைபத்துத்தேவர்முதல் அமரர் பூசை அழகாகச்செய்துவன்னி மூட்டிடாயே. 570

மூட்டியேசக்கரமாம் பானைச்சட்டிமூக்குநேர் பீங்கானுங்கிண் ணிவைத்து, ஆட்டியே சமலமாம் வன்னிமூட்டு அரகராதிராவகந் தானிறங்கும்பக்கு, பூட்டியே முந்திமுந்தி வெள்ளை நீர்தான்புகை யோடேயிறங்குமதை விசிறிப்போடு, வாட்டியேசிவந்தநீர்வருகுமக் காள்வாலுகையின் முன்போல் திராளகத்தை வாங்கே. 571

வாங்கியே மறுபங்கு சாற்றிலூட்டி வளமான முன்போலதிரா வகத்தைவாங்குவாங்கியே முன்போல் சரக்கிலூட்டுமைந்தனேஐந் துதரமடக்கியேற்றி தாங்கியே பார்த்தால்சடமவிர்ந்துபோகுமேசா தகமாய்க்கைம்முறை செய்ம்முறையாய்வாங்குவது சாராயப்புட்டியி லேவாங்குமற்றதொரு லோகமென்றால் கரைந்துபோமே. 572

கறையாமற் புதனமால் வைத்துமூடு கனகமாம் வாதவித்தை கைக்குளாச்சு, உசையார் காணுதாக்கள் ரிஷிகள் சித்தர் உற்றதொரு பிள்ளைகட்காய் வேண்டியானும், மறையாதே கருவெல்லாம் வெளியாய்ச்சொன்னேன் மைந்தனே திராவகத்தின் மகிமைபெத்த, புரையானபாஷாண மெல்லாம் வேகுப் போக்கோடு வுபசரங்களீயமாமே.

ஈயமாமனுபானந் தோடேசேர்த்து எள்ளளவுகொண்டிடவேயிரம்பக்கேளு, கோயவேவாதமென்ப துந்தானப்பா குன்மமெட்டும் வாய்வென்ற திருப்பத்தாறும், சேயவேதிரட்சிகுன்மங் கெண்டைக் கட்டிசெரியாமையுட்பிசங்கயக் ஷிமந்தம், பேயவே அகுவைவெப்பு பிறநீர்க்கோவை பெருவயிறு பீலிமுன்மாந்தைபோமே. 574

மாந்தமாமகோதரமுங் களசிசூலை மகத்தானசூலைமுட்டி ருத்திரவாயு, மாந்தையாம் பக்சவாயுபாரிசவாயுவலிவீக்கம் பெருமாந்தைபாண்டுசோகை, மாந்தையாங் கீலுவலியண்டவாதம் வளமுழந்தாள் சந்திடுப்புமுடக்குச்சூலை, மாந்தையாம் சங்காதசுரித்தலைவாதம் மற்றுமுள்ள ரோகமெல்லா மாண்டுபோமே, 575

கந்தகச்செந்தூரம்.

போமென்ற கந்தகச்செந்தூரங்கேளுபுகலுகிறேன்வாதியர்க்கும் வயித்தியற்கு, ஆமென்றநெல்லிக்காய்கிரந்திதன்னை அப்பனேசுத்திசெய்து பலந்தான்பத்து, காமென்றகல்வத்தி லிட்டுப்பின்பு கனமாகக் குமரிச்சாறதனாலாட்டி, வாமென்றதேழுநாள் மயனம்போல வலுவாக வாட்டிமூசை யிட்டுக்கேளே. 576

கேளெநீஅர்ப்தபாடிதான் பலமேநாலு கெட்டியாய்ச்சுத்திசெய்து முருக்கிலைசாற்றில், வாளேநீமுன்போல யேழுநாளாட்டிவளமாகவில்லைகட்டி மூசைமேலே, தாளேநீவைத்ததின்மேல் மண்ணுஞ்செய்து சரவுலையில் தைத்துநன்றாயூதித்திரு, ஆளேநீகுகைப்பழுக்கு மட்டுமூதி ஆறவிட்டு எடுத்துபார் செந்தூரமாமே. 577

செந்தூரமாதளம்பூப்போலாம்வண்ணம் சிவசிவாவெடுத்ததனை வேறேவைத்து, செந்தூரம்ஆயியிடநாதங்கந்தி செப்பரியகண்பார்த்தால்தோற்றுப்போகும், பந்தூரகந்தகச் செந்தூரந் தன்னைப்பரிட்சிக்கநவலோக மெல்லாம்பொன்னும், செந்தூரவேதைகண்டு மகிழ்ந்திடாறே சிவசிவாதியானம்பண்ணிதா னுண்டுதேறே. 578

உண்ணவேசருவரோயெல்லாந்தீரும் ஓகோகோவுகந்தவரையிருத்துந்தேகம், திண்ணமாமிம்முறைகள்யார்தான்செய்வார் சிவயோகிசித்தர்செய்வார் மற்றுரேது, பண்ணுனலோகச்செந்தூரந்தன்னைப் பணவெடைதானநுபானத் தோடேகொள்ள, மண்ணுனகாமலைசோகைபாண்டு மகோதரநீராமையொடு கௌசிபோமே. 579

கொசியோடு அருவைவெப்பு வலிவீக்கங்கற் கனமானகிராணிவகையெல்லாம்போகும், கௌசியாங்கழிச்சலொடு ரத்தம்போகுகருதரியபித்தவகை யூஷ்ணவாயு, கௌசியாம்வாய்நீரோடக்கினிமந்தம் கண்டித்தயேங்கலுப்பி சங்களெல்லாம், கௌசியாமிஞ்சிற்றேனிற்கூட்டிற் கருதியெவிவ்வகைநோய் காணுதென்னே. 580

பித்தவாயுக்கு.

காணுதபித்தவவைவாயுக்கொல்லாம் காட்டுகிறேன்சூட்சாதிசூட்சமாகப், பூணுதகிரிகடுகுவேர்மங்காய்ம் பொலிசெய்துநிம்பழந்தானுலுகீருய், பாணுதுபெடியையதினுள்ளேவிட்டு பனியில்வைத்துகாலையிதேசப்பியுண்ணு, கோணுமல்நாள்மூன்றுகொண்டுதாறுகுலைந்தோடும்பித்தவாயு வுஷ்ணவாய்வே. 581

வாய்வோடுகிருகிறும்பு மயக்கந்தூக்கம் மந்தமாங்செரியாமைநெஞ்சைரிப்பி, வாவோடுஅக்கினிமந்தம் அன்னதோஷம் வாய்க்கசப்புனீரூறல்வேள்ளோக்காளம், வாய்வோடுவிவையெல்லால் காணுதோடும் மைந்தனேகொண்டதின்மேலொருதேரிஞ்சி, வாய்வொன்றுநாள்மூன்றுமறவாதுண்ணுவாகானபித்தமெல்லாமாண்டுபோமே.

மாண்டுபோமின்னமிதிற் சூட்டமொன்று மைந்தனேநிம்பழந்தானுலுகீற்ருய், ஊண்டியகீறியதில்*வர்க்கபாலை யூட்டியேதலைமாட்டில் வைத்துற்றூங்கு, வேண்டியேயுதையாதிபைழுந்திருந்து விரும்பியேநிம்பழத்தையுண்ணவ்வண்ணம், வேண்டியேமூன்றுநாளருந்தவாயு வீறிட்டுப்போகிவிடுமெய்சொன்னேமே. 583

*வர்க்கம்-எருக்கம்பால்.

சொன்னதொருவாலைரசஞ் சொல்லக்கேளு துடியானசெந்தூரக்குளிகைப்பற்பம், வனனமொடுவாதங்கள்வயித்தியங்கள்மற்றுமுதலெல்வைகட்கும்மெத்தநன்று, கன்னமாஞ்சாதிலிங்கம் பலந்தானொன்றுகனமாகவாங்கிபழச்சாற்றினுலே, கன்னவேசுயம்பு ரசமாகவேண்டும்கடையிலுள்ளரசமேலுஞ்சுத்திசெய்யே. 584

செய்துமேசட்டி தனிற்கொடிவேலித்தூள் சிறப்பாகப்பரப்பியதி
ன்மேலேகேளு, பையவேசாதிலிங்கம்பொடித்துமேலே பரப்பியேச
ட்டியிலூமத்தஞ்சாற்றை, துய்யவேமூன்றுதாம்பூசிக்கவசம் துடியா
கச்செய்தடுப்பிலொரு விறகுதன்னால், ஐயவேநாற்சாம மெரிக்கும்
போது அப்பனேபதங்கித்துநிற்கும்பாரே. ௫௮௫

பதங்கித்தரசமெல்லா மெடுத்துவைத்துப் பரிவாநோயறிந்தனு
பானத்திலூட்டு, பதக்கித்தபதினெட்டுச்சூலைகுன்மம் பறங்கிப்புண்
ணரையாப்புண்கண்டமாலை, பதங்கித்தவாயுவென்ற திறுபத்தாறும்
பௌத்திரமூங்கிற்சூலைபிளவையுற்று, மதங்கித்த சிரங்குசொறிகை
கால்முடக்குப் பல்லூரல்மேகவெடிபறக்குங்காணே. ௫௮௬

வீரரசம்.

காணவேவீராசம்சொல்லக்கேளு கடியவொருசல்வீரம்பலங்கா
ணென்று, பூணவேசுத்திசெய்துபொடிதான்பண்ணிப் புகழாசப் பீங்
கானில்பனியில்வைக்க, காணவேமணியணியாமிறங்கிநிற்கும் கண்டுர
சம்வாங்கியேபதனம்பண்ணு, தானுவெனச்சருவரோயெல்லாந்தீரு
ஞ் சகலசித்துமிதனாலேயாடலாமே. ௫௮௭

காந்தரசம்.

ஆடவேகாந்தரசஞ்சொல்லக்கேளு அரகராவமூசிபிடிக்குங்காந்
தம்தேடிப், பலமொன்றுமண்கலசத்திலிட்டுக்சிறப்பாக () நீலிச்சாற்
றிறையவார்த்து, வாடவேயிரவிபடாதறைக்குள்வைத்து வண்மையு
டனுள்மூன்றுமூடிவைநீ, ஊடவேசாரெல்லாங் காந்தமூண்ணு முக
மையுடனயக்குரட்டாலெடுத்திடாயே. ௫௮௮

() நீலி-அவுரி.

எடுத்திட்டஅயக்குரட்டாற் பிடித்துக்கொண்டு இதமாகக்கிண
த்தில்தட்டுதட்டிக், அடுத்திட்டரசமெல்லாஞ் சாம்பல்போலே அப்ப
னேகாந்தரசமிறங்கும்பாரு, கடுத்திட்டகாந்தமொரு பலத்துக்சப்பா
கால்வாசியிறங்கிநிற்குந்திரட்டிவாங்ரு, வெடித்திடாக்குடக்கரியிலிட்
டுநீயும் வெண்காரமிட்டுருக்கக்கனகமாமே. ௫௮௯

கனகத்தைக்கண்டுநீமகிழ்ந்திடாதே கைச்செறவு சற்பத்துக்கில்
லாவிட்டால், கனகமாஞ்செலவுக்குக்கற்பத்துக்கு காணவே கொஞ்ச
மாச்செய்துகொண்டு, கனகமாமந்திசந்தி குருதன்பூசை கருதிநீசெய்
துகொண்டனுபவிப்பாய், கனகமாமுலகத்தில்வெளியிற்செய்யாமல்கண்
டவர்க்குமூமைபோலிருந்திடாயே. ௫௯௰

## வெடியுப்புச்சயநீர்.

இருந்திடவேவெடியுப்புச்சயநீர்கேளுஇதமாகவெடியுப்புஜந்தாங்காய்ச்சல், பரிந்திட்டபலம்பத்துக்கல்வத்திட்டுப் பழம் புளியும்பலம்நாலுகந்திரண்டு, அருந்துற்ற () ஏரலென்றசதையும்நாலு ஆகவொன்ருய்மனம்போலிடித்துச்சீலே, பரிந்திட்டுப்பத்தெருவில் புடத்தைப்போட்டுப் பக்குவமாயாறவிட்டேயெடுத்துப்பாரே. ௫௯௧

() ஏரல்-கிளிஞ்சல்.

பார்த்ததணைப்பொடித்திட்டு அந்நீர்தன்னில் பண்பாக அறுபத்துநாற்சரக்கும், சேர்த்திட்டுக்கல்வத்திலாட்டிப்பின்புதிறமாகத்தாழிபிலிட்டடுப்பிலேற்றி, ஆர்த்திட்டஒருவிரகால்தீயெரித்து அடிபற்றிக்கருகாமலன்பாய்ப்பாரு, கார்த்திட்டகட்டியது மெழுகுமாகும் கருவானவுபரசங்கள்சத்துமாமே. ௫௯௨

## கோஜபீசம்.

சந்தானவெடியுப்புச்சயநீர்விட்டால் சரக்குவகைகட்டாத வாதமேது, சித்தாகரசவாங் கைக்குள்ளாசுற் செயநீருந் திராவகமு முன்னேவேண்டும், முத்தானசவர்க்காரஞ்செய்யவேண்டும்மூப்பூவினமார்க்கத்தையறியவேண்டும், கத்தாகவுப்பைமுந்திங்கட்டவேண்டும் கர்ப்பூரவுப்பறிந்துசெய்தபின்னே. ௫௯௩

செய்தபின்புதுருசுகுரு முடிக்கவேண்டுந் திறமாக நாதவித்தையறியவேண்டும், எய்தபின்புவிடகலேபின்கலையறிந்து இயலானசுழுமுனையுமறியவேண்டும், எய்தபின்புமனம்வாக்குக்கட்டவேண்டுயறியாதவனுதித்தையறியவேண்டும், எய்தவென்றகோசமீசமறியவேண்டு மில்லாவிட்டால்ரசவாதமேதுசொல்லே. ௫௯௪

ஏதொன்றுசொல்லுவதற்காசான்வேண்டு மில்லாவிட்டாலென்னாலேசொல்லவேண்டும், நாதமாப்புனுகுகோரோசனையும்வேண்டும் நலமானபரிசூதமிரண்டும்வேண்டும், ஆதியா மைங்கோலத்துப்பு வேண்டுமரைக்கவேகுடமுடந்தநீரும்வேண்டு, கோதறவேகட்டிய வெங்காரங்கூட்டு குளிகைசெய்யக்கோசமுடன்பீசமாமே. ௫௯௫

பீசமாம்ரசவாதஞ்செய்யவேண்டில் பேய்ச்சணங்கன்போலத்தனலையாதேகேள், காசமாஞ்சரக்குகளைச்சுட்டுச்சுட்டுக் கண்கெட்டுஅலையாதே கருவைப்பாரு, வேசமாம்முடிவுக்குஒப்பாய்நின்ற வீரமெனுங்கவர்ச்சாரவெள்ளைபாரு, பேசாமேகடுஞ்சூல்பெற்றிதந்தபாலன் பேசெனும்புசமூலமொருதாளிசேரே. ௫௯௬

() கடுஞ்சூல்பெற்றிறந்தபாலஞ் தைமாசியில்பாலேநிலத்தில்பிறந்தபூநீறு அன்றியுமுப்பூவின்சூட்சம் பெரியோர்களன்றிமற்றோர்க்கில்லை

## ஐங்கோலச்சுண்ணம்.

தாளிசேர் சூடனெவீரம்பூரம்தளிகந்திரசமூலப்வெடியுப்புசீணம், காளிஞ்சேர் கௌரியுடனெட்டும்பின்பு சமமாக வகைக்கொரு பலந்தான்சொன்னேன், ஆளியாய்ப் பொடிசெய்து தாழியில் போட்டரைப்பொடி கானமுரியொடு சிப்பிநீரும், பாளியாம்வெடியுப்புச்சய நீரோடு, பனிக்குடநீர் தேசிநீவார்த்துமூடே. ௫௯௭

மூடியே மண்டலந்தான் புதைத்துவாங்கு முசியாதேகரைந் தெல்லாஞ் சலமாய்நிற்கும், ஆடியேரவியிலிடக் காய்ந்துஉப்பா மப்பனே கலுவத்திலிட்டு அண்ட, நாடியேவெள்ளைவர்க்கம்பாலரைத்து நலமாகவில்லைகட்டி ரவியுலர்த்தி, மூடியேமேலோடு குக்குடம்போட்டு முன்னுறவிட்டெடுப்பாய் சுண்ணமாமே. ௫௯௮

சுண்ணமாமும்முறைதான் போட்டுத்தீரு சகமான நாதவித்தில் முறைதான்மூன்று, சுண்ணமாம் நாதசிக்கி பூட்டியைந்து துரிதமொடுகுகைதனிலே படைத்துமூடி, வன்னமொருக்குடமாம் புடத்தைப் போடு வழலையிது கடுக்காரச்சுண்ணமாச்சு, மன்னமென்ற சவுக்காரமிதுவேயாச்சு வழலையென்ற முப்பூரு மிதுவேயாச்சு. ௫௯௯

ஆச்சென்றஅண்டபிண்டமிதுவேயாச்சு ஆகாயவெளியுப்புமிதுவேயாச்சு, காச்சென்றசகலவிதபிணிக்குள்ளாச்சுகைக்குள்ளேரசவாகஞ்சிக்கிப்போச்சு, மூச்சப்பாதொட்டதெல்லாம்குருவாம்பாருமூதுலகில்சொல்லாதேதலைதெறிக்கும், பாச்சானரண்டரண்ட மெல்லாம் வேகும் பாஷாணவர்க்கமெல்லாம்வெள்ளையாமே. ௬௱

## அட்டகுன்மத்துக் கவிழ்தம்.

வெள்ளையாமட்டகுன்மம்விட்டேயோட விளம்புகிறேன் கருவெல்லாம்வெளியதாக, கள்ளமின்றிமுன்புண்டம்வேறேவாங்கு கரையாமல்கதம்பத்தூரிலாசம், உள்ளதெல்லாம்வாங்கிரவியுலர்த்திநீதானுகமையுடன்வைத்துப்பின்கருமங்கட்கு, தெள்ளவேயீந்துநவ சிந்துமாடு செகமெலாங்கைவசமதாகும்பாரே. ௬௱௧

ஆகுமேயிதைவிட்டால்நாதவிந்தா மல்லாட்டால்முக்திறத்தான் கருச்சிலையாம்,பாகமாமாவோடுகொடியுமாகும் பாங்கறியா மூடரிதைவிட்டுவேறே, சாகமாய்க்கருவறியாவித்தையாளி சாதிப்பார்சண்டாளர்ரசவாதத்தை, வேகமாயறியாமற்கழுதைபோல வீணலைவார்வாதிவென்றுல்செய்வான்பாரே. ௬௱௨

## அஞ்சனம்.

செய்வதற்கு அஞ்சனத்தை சொல்லக்கேளு செப்பரியபிரமராகா சிப்பூத்தான், ஐவருக்குதனிந்து ஒரு மூலிபார்த்தாதியாம் வாரனிட காப்புக்கட்டி, கைவதற்குப்பழந் தேங்காய் சர்க்கரைபால் கர்ப்பூரம் பொங்கலாலாத்திதூபம், மெய்யாகவைத்திட்டு அனுமார்தோத்திரம் விளம்பியேயாயிரத்தெட்டுருந்தானேதே. சூ௱௩

ஓதியேவேராறுதெடுத்துவந்துஉண்மையுடனுலர்த்திநன்றாய்த்தூ ள்தான்செய்து, ஓதியேபின்னுமொரு விபரங்கேளு உற்பனமாங்கரு ச்சிலைதன்னிலூட்டி, சாதகமாய்த்திரியாக்கிவெள்ளிவாரம் தனிலாடு ஞ்செக்கினல்லெண்ணை வாங்கி, ஓதியேதிரியிட்டு யெண்ணை வார்த்து உற்பனமாஞ்சிரசோற்றில் தீபமேற்றே. சூ௱௪

ஏற்றியேயானைக்கண் சட்டிமூடி யியலாகமையெரித்து வாக்கும் போது, போற்றியேசோடசோபசாரத்தோடு புகலரிய அனுமானை ம னதிலுன்னி, சாற்றியே அதையெடுத்துவைத்துக்கொண்டுதனிக்கோ ரைபடாப்பூனைக்கண்ணங்கையில், ஆற்றியேவைத்துப்பின் னடைவ தாக அஞ்சனதேவியின்மந்திரமுஞ்செபியே. சூ௱௫

செபித்தந்த அனுமானிடபாதஞ்சேவிசெப்பரியவடுகனிடபாதஞ் சேவி, செபித்தந்தசத்தியின்றன்பாதஞ்சேவி ()சிந்துரனைக்கந்தனையுந் திறகால்ப்பூசி, செபித்திந்தப்படியாகச்செய்வாயானால்செயலாகமண் பிளந்துருவிநாடும், செபித்திந்தனமெடுக்கத் தந்திரஞ்சொன்னேன் தின்னமொடு இன்னமொருஅஞ்சனங்கேளே. சூ௱௬

() சிந்துரன்-யானைமுகன்.

## கீழ்க்காய் நெல்லியஞ்சனம்.

அஞ்சனங்கள்புற்றுமேல்கீழ்க்காய் நெல்லியப்பனே தரித்திருக் குமதனைப்பார்த்து, மஞ்சனூலாதிநூல்காப்புக்கட்டி மற்றுநாள் திரு வாணருபத்தோடே, கஞ்சிமாம்பலிகொடுத்துத்தூபதீபங் காட்டியே நாதாக்கள்சாபந்தீர்த்து, கொஞ்சியேசமூலந்தான்கொண்டுவந்துகுய வனிடசூளையிலேமலைந்தவோடே. சூ௱௭

மலைந்தவோடெடுத்தடுப்பில்வைத்துமூலி வளமாக அதிலிட்டு எ டுத்துநன்றாய், கலம்பெறஇவைகருக்கிக்கிஞ்சுகம்புற்றுத்தேன் காடாட் டால்பூளிநெய்காராவினெய், வடிவைபெறஇவைகளிலே குழைத்துப் போட்டு.வடுகனையுங்கந்தனையும்வணங்கிப்போற்று,தலைமையுள அனு மானைச்சாதித்தோதி தன்கையிலஞ்சினமூலியோடும்பாரே. சூ௱௮

() கிஞ்சுகம்-முருக்கு.

## தேவாங்குகை.

ஓடிமடாபொருளிருந்தபுதையநாடி உகந்தந்தனமெல்லா மெடுத்துக்கொள்ளி, நாடுமடா மனமகிழ்ந்து சொன்னேனப்பா நானிலத்தில்யாவர்கட்குஞ் சொல்லாதேநீ, தேடுமடாதேவாங்கின் மையைக்கேளுசெப்புகிறேன்தன்பித்தைதயெடுத்துக்கொண்டு, பாடுபடாமைசெய்துகையிலிட்டால் பாதாளமுருவுந்தன் மெடுக்கலாமே. ௬௱௬

## தேசிவித்தையஞ்சனம்.

எடுக்கலாந்தேசியிலேயனேகவித்தை யியம்புகிறேன்சித்தர்சொல்வாரப்பாற்கேளு, கடிந்திடுவார்கழுதையென்றுலகத்தோர்கள் கனமறியாரவினுடையபிறப்பின்காட்சி, தொடுத்தினிமேல் காசினியிற்பிறவியில்லை சொல்லரிய கழுதையிட பிறப்பைபோல, கொடுத்திட்டவேசரியென்றுற்சிவத்துக்கொக்கும் குவலயத்தில்கைகண்ட வித்தை பாரே. ௬௧௰

கண்டுபார்சரக்குவகைசுத்திக்கெல்லாம் கழுதைநீர்வெகுசுறுக்குமற்றொன்றுக, கண்டானகாரியங்கள் கட்டவேண்டின் காலானபிடிகுளம்பில்தைலம்வாங்கி, உண்டிடவேகாரீயமுருகிற் சாய்க்க வெட்டையாய்நொருங்கிய துகட்டிப்போகும், தண்டாமதன் கண்ணுலாத்திப்பொடியாய்ச்செய்து பகாரியகருச்சிலைகன்னிலூட்டே. ௬௧௧

ஊட்டியே காரெள்ளுத்தயிலத்தாலே உகந்துமையா யெரித்துக்கையிற்றடவிப்போட்டு, தீட்டவே பாதாளமுருவியோடும் செயலாக மண்ணிலிட்டபதையலெல்லாம் நாட்டமுடமெடுக்கலாமின்னமொன்று நவிலுகிறேன்கருங்கழுதைப் பித்துவாங்கி, காட்டவேகாணாது மறையும்பிச்சுக்காண வென்றால்வித்துளேஷணத்தையோதே. ௬௧௨

ஓதவேவெளிதோன்றும் பிச்சுவாங்கியுத்தமனேபேய்ப்பீர்க்கன்தயிலங்கூட்டி, ஓதவே * கறுப்பேரண்டத்தயில முள்ளபடிமத்தித்துத்திலதங்கூட்ட, ஆதவனுந்தேவர்களுங்காணமட்டாரதிநமிகுமருபியென்னுந்தாயைப்போற்று, நாதவெளிதனைப்போற்றித்தில்தங்கீட்டி நாடினலமார்முதல் காண்பார்கேளே. ௬௧௩

* கறுப்பேரண்டம்-கறுப்பாமணக்கு

ஆதவன்-சூரிற்ன்

சாணாய்நீதேசியிலே யின்னமொன்று காட்டுகிற னதனுடைய
கொழுப்பைவாங்கி, கேணதநெய்யுருக்கிவைத்துக்கொண்டு கூறுகி
றேன் கருச்சிலைதிரியாய்ச்செய்து, கோணது சிரசோட்டில் போட்டு
நெய்யைப் புகட்டியேவிளக்கேற்றிப் பதையல் முன்னே, ஆணவமா
யொடுக்கலாமட்டங்காப்பேயுமடல்காளிபைசாசம்பூதம்போமே.

பூதமுதல்வேதாளம்பசாசுசூனியம் புகலரிய தேவதைகளெல்லா
ம்போகும், நீநின்றிக்கனமெடுக்கலாஞ் சொன்னேன் சில்லவரயாங்
தேவதைகளொன்றுமில்லை, சாதகமாய்த்திரி யொன்று சொல்லக்கே
ளுதலைமைந்தன்கொடிமாவுங்கழுதைத்தண்டும், போதவே யேறழிஞ்
சிஎட்டிவித்து பொற்சதுரக்கள்ளிமூன்சூற்மேனிவேரே, ௨௧௫

மேனிவேர்மனிதரிட அஸ்திகூட்டி வீராகப்பொடிசெய்து கருச்
சிலையில், தானிதமாயூட்டியேமாதிரத்தம்சார்ந்தூட்டிக் காளிகுடத்து
திரமூட்டு, தானிலத்துக் கருஊரத்தஞ்சாறுஊட்டுளெர்க் கழுதைச்ச
டைதனிலேதிர்திரித்து, எனிலமாச்சிரசோட்டில் வேப்பெண்ணெயி
ட்டெரிதீபத்தைம்பத்தொரெழுத்தைநாட்டே. ௨௧௬

நாட்டுவது அறைகீறியக்கருத்தை நலமாகபாரியே முன்பே நின்
று, நீட்டுவாய்சிகாமுகலேந்தெழுக்கைச்சிரசோட்டில் ஐம்பத்தோரில
க்கம்போட்டு, காட்டுவதுசடாட்சரபீசாட்சரத்தை நாற்றிசையுமாறி
யேசுடலைமையா, யேற்றமுடன் கீறியேதம்பனத்தைத் திசைமாறிக்
கெட்டியாய்ப்போட்டிடாயே. ௨௧௭

கெட்டியாயடியிலே யானச்சாம்பல் கிரமமுடனீரதன்மேல் சிர
சோட்டைவைத், தெட்டியேகிட்பெண்ணைப்விட்டுத்தீபமேற்றியே நடு
மைச்சக்கரத்தின், ஒட்டியேருத்திரனைச்சேவித்துமாறிஓம் நமசிவாய
யெனவைந்தெழுத்துப், கெட்டியேமாறியையன் துர்க்கைகாளி நிகழ்
பூதவேதாளவராதிதானே. ௨௧௮

வராகியோடுவஞ்சனைபில்லிசூனியம்வாராதுசத்ராதி நடுங்கிப்போ
வான்,பராக்கிரமனைனைப்போலேயொருவரில்லை பாருலகிலுள்ளோர்க
ள்பயர்துதிற்பார்,தராதலத்தில்சக்கை தணமுள்ளபேரைத்தழைத்து
த்தீபமும் பார்க்கச்சொல்லு,உராக்கிரமாயிர்சிதுர்க்கை யிரிசிபெல்லா
ம்ஓடிப்போம்சர்வதேவதைதானே. ௨௧௯

## நாகக்கட்டு.

தானென்றதேசியிலே நாகங்கட்டச் சாற்றுகிறேனதனுடைய மண்டைவாங்கி, நானென்றகுழித்தயில மிறக்கிக்கொண்டுநவாச்சாரமிட்டதிலேசிறுகண்ணாகம், ஊனென்றமேழுதர முருக்கிக்காய்க்கஉற்பனமாய்நாகமதுகட்டிப்போகும், கானென்றதேவிவித்தை யின்னமுண்டு கருவாளியானுக்கால்கண்டுபாரே. ௬௨௰

## வசியம்.

கண்டுபார்தேசிவிந்து வேறேவாங்கி கனத்தசூழல்வண்டிகுழியானையோடு, கண்டிடாப் திலைப்பூண்டுபூச்சிபோடுகருதியேயீப்புலியுங் கூடப்போடு, விண்டுகோணைப்பாலுமருளூமத்தைவித்தப் ஐவிரதிபேக்கரும்பின்சாறும், கொண்டிடவேசெங்கெல்முளையரிசிகூட்டிக்குணமாகவகையெல்லாஞ்சமனாய்க்கொள்ளே. ௬௨௧

கொள்ளவேகுதங்கோரோசனைக்கூட கூட்டியே மற்கருவா லாட்டிவாங்கி,மெள்ளவேமயங்கிவேர்கூட்டியாட்டிவிருத்தாகக்குளிகை கட்டிவைத்துக்கொண்டு, உள்ளபடிபஞ்சமலைமைந்துக்கூட்டி யுன்னுடையவித்துவிலேயூட்டக்கேளு, தள்ளவேபாற்பழங்கள் கறிகள்சோறு தாம்பூலபலகாரவர்க்கத்தூட்டே. ௬௨௨

ஊட்டவே ஸ்திரீகளுக்குன் னாசையல்லால் உத்தமனே வேறேயொருஆசையுண்டோ,பாட்டிலேசொன்னேனென் றாலீயெண்ணெய்தே பஞ்சிலிநெருப்பதுபோல் பற்றும்பற்றும்,ஆட்டவேபுருடருக்குவேண்டுமென்றால் அவ்விதமாதிவாரமிதிலேயிட்டு, நட்டமுடன்ஊர்க்குருவியாண்பெண்சேர்த்து நலமாகவிடித்தாவின்சாணிகேளே. ௬௨௩

சாணிகேளீனாதகிடாரிச்சாணி தானெடுத்துப்பட்சிரண்டும் வெவ்வேறாக, சாணதனையதினுள்ளேபொதிந்திரண்டும் தானுலர்த்திட்டு ஆலநதுச்சி, ஊணியேயெடுப்பதுமூன் றாரிள்ள உலயாலவிறகெடுத்துக்கொண்டுவந்து, நாணியேமருவாதிவாரந்தன்னில்நலமானசுடலையிலேநெருப்பைமூட்டே. ௬௨௪

மூட்டியேசிருவாணத்தோடேநீயும் முனையானசோடசோபசாரம்வைத்து, ஆட்டியேமூன் றாரிலைவிறகை அடைவாகக்கீழ்மேலுந்தணலைமூட்டிக், காட்டியேயுண்டைநீறித்திருநீறாகுங் கனமானபட்சியுந்தானீறிநிற்கும், தீட்டியேயெடுத்ததனைவெவ்வேறாகச் செப்பிலேபிசைந்தமிழ்த்திவைத்துமூடே. ௬௨௫

வைத்துமேசோடசோபசாரத்தோடே வசியமாமோகினியாக்ருஷ்ணமோது, அயந்துமேநிருவாணத்தோடேநின்று ஆயிரத்தெட்டுருவோதியானபின்பு,உய்ந்துமேகர்ப்பூரதீபம் தூபம்உபசாரமனைத்துமுதலுறுதியாக, எய்ந்துமே தோத்திரங்கள்செய் துநன்று யெடுத்துநீறிட்டசிமிழ்பதனம்பண்ணே. ௬௨௬

பண்ணியேவேண்டியவள் தன்னைப்பார்த்துபரிவானஆண்பட்சிசுட்டநீறை, துண்ணியேபண வெடைதா னெடுத்துமேலே தூவிடவேபின்றொடர்ந்துவருவாள்பாரு,புண்ணியனேபுருடரைத்தானழைக்கவென்றால் போடடாபெண்குருவினீறெடுத்து, நண்ணியே பெண்மேலேமயக்கங்கொண்டு நானிலத்தில்புருடரெல்லாந்தொடருவாரே.

ஆவாரையிற்பொன்வண்டுவசியம்.

தொடருவார்மோகினிமந்திரத்தையோதுசொல்லுகிறேனுவரைமேற்பொன்னின்வண்டு, அடருமேபூச்சிகண்டுபிடித்துவந்து ஆதிநாள்முன்போலேபொதிந்துசாணி, படரவேசுடலையிலே செய்தாற்போலே பரித்துசெய்து தூவவேவருவார்பெண்கள், அடைவுடனேசருவமாம்வசியமொன்று அறைகிறேன்வெகுசுருக்கு அறிந்துபாரே.

பாரேநீவெள்ளெருக்காவாரைதன்னைப் பரிவாகவட வேரைக்காப்புகட்டி, சேரேநீதிங்களிலேயுதயாதிதன்னில் தீபமுடன் தூபமும் நைவேத்தியஞ்செய்து, வேரேநீ யெடுத்துவெள்ளை விஷ்ணுகிராந்திவேரையுமுன்போலக் காப்பிட்டெடுத்துவந்து, சேரேநீ யிந்திரமாங்கோபம்பூச்சி திகழ்புழுகுரோசனையாவுங்கூட்டே. ௬௨௬

கூட்டடாமுற்கருவுமிளநீரோலாட்டிக் குன்றிபோலுண்டைசெய்துநிழலுலர்த்தி, தீட்டுவதுமுலைப்பாலில்மயக்கம்நீரில் தேனில்நிராவின்பால்தன்னிலொன்று, ஊட்டியேமோகினிமந்திரத்தையோதி யுமைகையுடன்புருவத்தில் திலதந்தீட்டு,நிட்டியேயரசனுங்கைவசமாவான் நிளாவமிருகபூதம்வணங்குந்தானே. ௬௩௰

வில்வவேர் வசியம்.

வணங்கவே யாதிநா ளம்மாவாசி திருவாதிரைநாள்மூன்றுமொன்றாய், இணங்குநாள்தனில்வில்வவடவேர்தன்னில் இதமான கன்னிநூல்காப்புக்கட்டி, பிணங்காமனிருவாண ரூபங்கொண்டு பெட்புடனேதீபமொடுதூபங்காட்டி, மணங்காமவிலட்சமுருவசியமோதி மைந்தனேவேர்தூக்கி வ -வேர்வாங்கே. ௬௩௧

## வெள்ளெருக்கம்வேர் வசியம்.

வாங்கவேபறிகுளிச மாறிக்கட்டி மகத்தானவசியமெலா மாடும்பாரு, தேங்காதேவெள்ளெருக்கில் இன்னமொன்று செப்புகிறேன்சித்தர்கள்தான் செய்யுமார்க்கம், தாங்கியேவெள்ளெருக்குமூவாண்டேகித் தனித்துநின்றமூலவேர் தேடிப்பார்த்து, ஆங்கியேயதைசுற்றிக் குழிதான்வெட்டி அப்பனே குழிநிறப்பத் தண்ணீர்வாரே.

தண்ணீர்வார் புனர்பூசம் பூசமாதல் தருவான ஆதிநாள் பார்த்துநன்றாய், தண்ணீராமாணிவேர் கண்டமட்டும் சாதகமாய்வெட்டியடி மூலங்கண்டு, அண்ணவே தேங்காய்போல் கிழங்குதோன்றி அடியினிற்கு மாணிவேர்முன்மையத்தில், திண்ணமாநாற்றிசையும் போகும்வேரைத் திறமாகசேர்த்துப்பின் செப்பக்கேளே. (௬௩௩)

கேளப்பாகன்னிநூல் காப்புகாட்டி கீழ்முகத்தில் பாற்பொங்கல் தூபந்தீபம், வாளப்பாவெண்காவல் பலிதானிட்டு வசியமுதல் மாரணத்தை மாறுமாற, ஆளப்பாதம்பனத்தி லிலட்சமுருவோது அளப்பென்ற ஆகருஷணத்தை யோதஓது, தேளப்பாநிருவாணங் கொண்டேயோதி திகழ்வேரை வெவ்வேறாய்ப் பிரித்துவாங்கே. ()

வெவ்வேறேவாங்கியே குளிசங்கட்டு விதமாக அடியினிற்குங் கிழங்கைவாங்கி, செவ்வையுடன் விநாயகனைப் போலேசெய்து, சிறப்பானபரிதகட்டில் அறுகோணமாக்கி, ஒவ்வியே முக்கோணத்துள்ளேயிட்டு ஓங்காரம்சுற்றிமேல் வட்டமாக, நவ்வாக ஓங்காரமேலேமைந்தா நாற்கோணமிட்டினிமேல் நவிலக்கேளே. (௬௩௫)

நவிலவேநடுநின்ற முக்கோணத்தின் நலமானவட்டமதில் றீங்காரமிட்டு, நவிலவேயறுகோணம் ஓம்நமசிவாய நற்சமிரக்கோணத்தி லங்கங்கென்று, நவிலவேகேசரியா மூலமப்பா நல்ல ஐயுங்கிலியுஞ்சவ் வோடுநாட்டி, நவிலவே இப்படியே தகடுசெய்து நலமான விபூதிமேல் பாத்திடாயே. (௬௩௬)

பாத்தியதின் மேலேகணபதியைவைத்துப் பாங்கான சோடசோபசாரத்தோடே, உரத்தியேசுத்திசெய்து நாளொன்றுக்கு உச்

சிமுதல் அந்திசந்தி மூன்றுகாலே, கரத்தினிமேல சிவபுட்பமெடுத்து ச்சாத்திக் காட்சிபெற வாயிரத்தெட் டுருத்தானோது, பரத்தியே மண்டலந்தான் ஓதினாலே பாரியதோர் பகையெல்லாம் நசிந்து ப்போமே. (௬௫௭)

போமென்றபூதிதனை எடுத்துப்பாரு பொன்மாதளம்பூப்போ ல்வன்னமாகும், ஓமென்ற உதயாதி எடுத்துநெற்றில் உத்தமனே யதிலணிய வசியமாகும், வேமென்றவாறுபத்துச் சித்துமாடும்மெல் லியர்கள் மேல்விழுந்து மயங்குவார்கள், வாமென்ற அரசருபசார ஞ்செய்வார் வணங்காததேவதைகள் வணங்கும்பாரே. (௬௫௮)

வணங்காதசத்துருக்கள் உன்னைக்கண்டால் வந்தடியில்வீழ் ந்துகரங் குவித்துநிற்பார், இணங்காதபேர்களெல்லா மிணங்குவா ர்கள் எமதூதரஞ்சிநிற்பா ரின்னங்கேளு, பிணங்காமல் மேல்நின்ற வெள்ளெருக்குப் பிசகாமல்நிழலுலர்த்தித் தயிலம்வாங்கி, இணங் கியேநவாச்சாரந் தோய்த்துத்தோய்த்து இளரவியிலிட்டெடுக்கக் கட்டிப்போமே. (௬௫௯)

கட்டியேபாஷாண சுருக்குப்போடு கட்டியதுமெழுகாகுந் துரி சுநீறும், தட்டியேசூதத்தைக் கல்வத்திட்டு தயிலத்திற் காசெடை விட் டாட்டிவில்லே, கட்டியேகாயவைத் தோடுமூடிக் கனமாகக்குக் குடமாம் புடத்தைப்போடு, மட்டில்லா வதையெடுத்து வைத்துக் கொண்டு வன்னேய்போ மென்னாலே மருவிப்பாரே. (௬௬0)

ஆவாரையில் சாரக்கட்டுத் திலதம்.

பாரேநீயாவாரை பருவேருகப் பாங்குடனே கொண்டுவந்து நிழலுலர்த்தி, வாரேநீ குழுத்தயில மிரக்கிக்கொண்டு வடிகலசத் துட்கேள் நவாச்சாரங்கட்டி, வேறேநீயொருபலந்தான் கட்டிவா ங்கி விட்டதிலேதயிலத்தை வாங்குவாங்கு, தோராத தயிலந்தான் சுருக்கிட்டாற்போல் தோளாந்தரமாய்ச்சாரங் கட்டிப்போமே. ()

கட்டியந்தசாரத்தா லனேகவித்தை கரைகாணதாடினார் மூவர் தேவர், தெட்டியதோர்தயிலத்தி லின்னமொன்று சேவலிடகருக் கூட்டி திலதமாக, மட்டமாய் ஸ்திரீகளுக்கு திலதந்தீட்ட மயங்கி டுவார் புருடரவள் முகத்தைப்பார்த்து, கொட்டிதயிலத்திற்முற் கருவைக்கூட்டிக் கோரோசனை புனுகதிலே கூட்டிடாயே. (௬௬௨)

ஆயமென்றதயிலத்துள் கருவைச்சேர்த்து ஆரிழைமார்க் கீந்தாலே ஆசையாவார், மாயமென்ற புருடர்களுக் கீயவென்றால் மைந்தனே யவர்கருவிற் கொடுத்துப்பாரு, பேய்போலேயலையாதே வாசல்காப்பார் பிரபலமாம் வித்தையிது பேணிப்பாரு, நாய்போலேமகளிரிட வாசல்காப்பார் நாடாதேதங்கபற்பம் பேசுரேனே. ()

## தங்கபற்பம்.

பேசுகிறேன் தங்கமொரு பலந்தான்வாங்கிப் பெலக்கவே தகடுசெய்து வில்லையாக, வீசுகிறேனுறுதியதின் மேலேநன்றாய் விருதானவிலையரைத்துப் பொதிந்துபூசை, தேசியுடன்கட்டிநா லெழுவிற்போட்டால் செப்பரியதங்கபுட முருகிநீறும், ஆசியாம் வியாதிகளுக் காகச்சொன்னே னதின்முக்காற்பலம்போடப் பதமாம்நீறே.

பதமானநீற்றாலே ரோகமெல்லாம் பறக்குமே பருதிகண்ட பனியைப்போலே, பதமாகநாளொன்றுக் கந்திசந்தி பணவெடைதான் மாறுமலுண்டுதேறு, இதமாம்பால் நெய்தேன் சர்க்கரையாமோறில் இதமாகமண்டலந்தான் கொண்டாலுண்டால், கதமானசருவரோ யெல்லாந்தீருங் கனகம்போலாகுமடா தேகம்பாரே. ()

## கருவங்கபற்பம்.

தேகமாங்காரீய பற்பங்கேளு சிறப்பாக அந்தகடோர்பலந்தான்வாங்கி, தாகமாஞ்சுத்திசெய்து அதனுடப் பத்தாம்பிரசிகையரைத்துமேல் கவசங்கட்டி, ஏகமாயோட்டிலிட்டு ஓடுமூடியெழுசிலைமண்செய்து கச்சுமட்டும், ஆகமாங்குழிவெட்டிச் சதுரமாக அப்பனேகெசபுடத்துக் கதீதம்போடே. (௯௪௬)

போட்டிடவேகாரீயம் பற்பமாகும் புகழானவெள்வங்க மிப்படியேசெய்து, ஆட்டிடவேவெள்ளீயம் பற்பமாகும் அவ்வப்பற்பத்துக்கனு பானஞ்சேர்த்து, மூட்டிடவேசருவரோ யெல்லாம்போகும் மூவேழாண்டரையாப்புக் கிரந்திமேகம், நாட்டமுடனீரிழிவோடிலோகாசம் நாடாதுகயரோகங் கண்டுபாரே. (௯௪௭)

## காரீயச்செந்தூரம்.

கண்டுபார்காரீயச் செந்தூரந்தான் காரீயம்பலம்பத்துக் குடத்துக்குள்ளே, செண்டுடனே னுறத்துக்கொண் டதனுள்ளே தாண

சிறுகீரை வேரைநாற் பிடுதான்போட்டு, குன்றுமேதகுடைத் தூரில் போட்டுநன்றாய்க் குணமான அயக்கரண்டி கொண்டுகிண்டு, நன்றாகவடுப்பேற்றிவன்னிமூட்டிக் கைம்மாறுநாற்சாமங்கிண்டிடாயே.

சாமம்நால் கிண்டியேயெடுத்துப்பாரு சமர்த்தான மாதளம் பூப்போலிருக்கும், காமமுடனெழுந்தெடுத்தால் செந்தூரம்பார் தளுக்கில்லாதிருக்கவென்று வுருக்கிப்பாரு, சாமந்தான் தளுக்கிருந்தா வுடற்கேறாது தளுக்கில்லாதிருந்தாக்கால் தீதமாகும், ஆமமாம்மேகவகை யிரண்டுபத்து மதிற்பிறந்த நீரிழிவுரோகம்போமே.

போமென்றவனுபானம் புகலக்கேளு புகலறியஆவாரைத் தயிலமாகும், ஆமேதானுவின்பால் நெய்யுமாகு மடைவான திரிகடுகுத் தூளுமாகும், வேமேதானனுபான மறியாவிட்டால் வியாதிகளை ஏய்க்குமடா விளம்பக்கேளு, நாமேதான்வெள்ளீய மிவ்வண்ணமாம் நாகச்செந்தூரமினி நவிலக்கேளே. (௬௰)

நாகசெந்தூரம்.

நவிலவேகேளப்பா சிறுகண்ணாகம் நன்றாய்நீ நிறுத்துஅயச்சட்டியிட்டு, நவிளக்கேளரிதாரஞ் சிலைதான்கந்தி நலமான அயப்பொடியும் பலமரைதான், நவிலக்கேள் பொடித்ததிலே யொக்கப்போட்டு நன்றாகவடுப்பேற்றி யாவாரைவிறகால், நவிளக்கேளரிமூட்டி செங்காயுருவி நல்வேருங்கற்றாழை வேருங்கூட்டே. (௬௧)

கூட்டியேயொன்றாக விடித்துக்கொண்டு குமுறவே நாற்சாமஞ்சேர்த்துக்கிண்டு, ஆட்டியேமஞ்சணிற மாகும்பாரு அதன்பின்பு மாதளையின் பூப்போலாகும், காட்டாத்த சிமிளினிதே பதனம்பண்ணு கட்டினதோர்நாகநவ லோகம்பொன்னும், ஆட்டியதோர் திரிகடுகு நெய்தேன்பாலில் அறிந்துதானனுபானம் போடுபோடே.

போடவேசருவரோ யெல்லாங்கீரப் புகலுகிறேன் காந்தச்செந்தூரங்கேளு, ஓடியேதிறமான ஊசிக்காந்த முடைத்துமே வெள்ளாட்டி னுதிரமூட்டி, மூடியேகுழிவெட்டிப் புதைத்துமூடு முசியாதுபட்சமொன்று சென்றுவாங்கு, ஆட்வேகந்திபல மொன்றேயன்றி யரப்பொடிபலமொன்று சூதமறைபலமே. (௬௩)

பலமாகவிவையெல்லாங் கல்வத்திட்டுப் பாங்காகப்பொடிபண்ணி சட்டிக்குள்ளே, நலமாகவைத்துமூடித் தீயெரித்தால் நன்மையு

டன்செந்தூர முருக்கம்பூவாம், சூலமாகவெள்ளாட்டுப் பாலிலீந் தால் குலையெரியுவாயுசலக் கழிச்சல்தீரும், அலமானகாமாலைபாண் டுசோகைக் காட்டின்கோமயமுந்திரி பலையுங்கூட்டே. (சூ௫௪)

## காந்தமாத்திரை.

கூட்டுவதுகாந்தமொரு பலந்தான்வாங்கிக் குணமானமேனி யிலை குகைபிடித்து, காட்டுவது எருக்கம்பால் நிறையவிட்டுக் காந் தத்தை யதற்குள்ளே வைத்துமூடு, ஆட்டியே பெரியவொரு புடத் தைப்போடு அழகானகாந்தமது நொறுங்கிநிற்கும், தீட்டியேகாந்த த்தில் பாதிலிங்கம் சேர்த்துமேகல்வத்தில் முலைப்பாலூட்டே ()

பாலாலேநாற்சாம மாட்டிமைபோல் பக்குவமாய்வில்லைதட்டி உலர்த்திப்பின்பு, சேவானசிவப்போட்டில் வைத்துமூடிச் செப்ப ரிய கெஜபுடத்தைப் போட்டுவாங்கு, மேலானசெந்தூரம் பவளம் போலாம் வெண்காரங்கருநாவி மிளகுதிப்பிலி, பாலாகவிரைகூட் டிப் பாலாலாட்டிப் பருகவுண்டைமாத்திரையாய்ச் செய்திடாயே.

செய்துமேபதின்மூன்று சந்நிவாதம் சீர்க்கிராணிகுன்மமிவைக் கனுபானத்தோ, டெய்துமேசருவநோ யெல்லாந்தீர வெழிலவிழ் தம் செந்தூரத தயிலம்கற்பம், கைகண்ட மெழுகுபற்பம் கிருதம் லேகியம் கசடின்றிச் சொல்லிவிட்டேன் பத்தியங்காரு, செய்யவே குருபற்பஞ் சேர்ந்ததானால் தீராதநோயுண்டோ செப்பக்கேளே.

## பத்தியமுறை.

செப்பக்கேளவிழ்தங்கள் கொள்ளும்போது திறமாகப்பத்தி யங்கள் காக்கவேண்டும், தூப்புரவாய்ப்பத்தியங்கள் காத்திட்டாக் கால் தொன்னையுமுன்னேபோ மில்லாவிட்டால், கொப்புடனே மண்டலமே கொள்ளுவாய்முன் கொண்டாலும்நாட்செல்லும் நோ ய்கள்தீர, தப்பாதேபத்தியந்தான் சொல்லக்கேளு சாதியறிந்தின மறிந்து சொல்லாய்சொல்லே. (சூ௫அ)

சொல்லுவதுமாசார முள்ளபேர்க்குத் துவரைசிறு பயறுந்தூ துளைசமூலம், புல்லுவதுசிறுகீரை பொன்னாங்காணி புளியாரை யரைக்கீரை பசரையாரை, கல்லானவழுதுளங்காய் முருங்கைப்பி ஞ்சு கதலிப்பிஞ்சரகுமிகு மணத்தக்காளி, நல்லவொரு பழையநெ ல்லி வடகமாகும் நாரத்தங்காய்க்கச்சல் பழையதாமே. (சூ௫௯)

ஆமென்றமற்றோர்க்கு வெள்ளாட்டுவற்ற லாதண்டைக்காய் வற்றலவரைப்பிஞ்சு, வேமென்றபுடலங்காய் பீர்க்கங்காய்விதமான *ஞானியண்டம் வெள்ளரியாம், தாமென்றமுயலாகு முடும்புமாகும் தப்பாதுகாடைகவு தாரியாகும், நாதென்றசிறுமீனு மாகுஞ் சொன்னேம் நலமாகத்தளியொடு யுளுவையாமே. (௬௬0)

* ஞானியண்டங் - கோழிமுட்டை.

உளுவையாமுக்குருவி மாகுஞ்சொன்னே முயிராவிநெய்பாலாங் கருவேம்பாதும், பழுதில்லா சர்க்கரைதேன் கற்கண்டாகும் பருவமாக் கதலிப்பழமாகும்பின்பு, வழுதிளைமிளகுசீரம் வறுத்தவுப்பு மகிமைவெள்ளுள்ளி யாகுமன்றி, கழுவியேதலைமுழுகத் தயிலங்கேளு தயலானவிளக்கெண்ணை தானுமாமே. (௬௬௧)

தானுமாம்பத்தியா யுண்டுபார்த்துத் தனிமையுள சருவநோய்க்குணமறிந்து, மானமுடன் பத்தியங்கள் முறையாய்ச்சொல்லு வழுவாமலந்தமுறை செய்தாயானால், பானுவின்முன் பணியோடும் பான்மைபோலப் பறக்குமடாதீராத நோய்களெல்லாம், ஏனமின்றி யனுபானஞ்செய்யாவிட்டால் இவ்வுலகில் வயித்தியன்தான் மதிகெட்டானே. (௬௬௨)

மதிகெட்டசுரதோஷ மானால்தாகம் மகிதமடாமடங்குதற்கு விவரங்கேளு, அதிகமாஞ்சீனியென்ற படிதானொன்று அடிகனத்த தாழியிலிட் டடுப்பிலேற்றி, சதிருடனேசிவக்குமட்டும் வன்னிமூட்டித் தனித்தமணல் பொறிபறக்கவறுத்தரிகின், இதமானகொழுந்துபிடி பறித்ததின்மேல் இட்டிடவேசாம்பலாம்பின் பின்புகேளே.

பின்பதன்மேல் காசெடைதானோமம்போடு பெட்புடனேபொரியுமப்போ சலத்தைவாரு, துன்பமறஅறைத்தூணி நீரேயன்றிச் சொல்லரியதாழிவாய் வேடுகட்டி, இன்பமுறவெடுக்கப் பானைகூடா மிதங்கண்டுமுறிவருந் தாகத்துக்கு, அன்புடனே யோர்செம்பு கலத்தைக்கொள்ளு அன்னமுண்டாய்பரிமாறு வந்நீராமே. (௬௬௪)

## பத்தியமுறிவுக்கு.

அந்நீராம்பத்தியங்கள் முறிவுகண்டால் அப்பனேசகுலைமுடக்குக்கண்டாய், தென்னீராமகத்தி மிதிபாகலிரண்டும் கியாழம்வைத்துண்டிடவே முறிடி தீரும், அந்நீரமுதைவிட்டால் வேறேயில்லை

ய்வுக்கவேர் மிளகுதாமரைக்கிழங்கு, முன்னமேகத்திரிவேர் பாஷாணங்கெந்தம் முறிந்துநோய் தீர்ந்துபோமே. (௬௬௫)

## வேம்புக்கற்பம்.

தீர்ந்துபோஞ்சருவநோ யெல்லாந்தீரச் செப்புகிறேனுண்டு சென்றவேப்பு, ஆய்ந்துநன்று யடிமரத்தின்பட்டைவாங்கி யப்பனேநிழலுலர்த்திச் சூரணம்செய்து, வாய்ந்தந்தி சந்திவெருகடித்தூளாக மண்டலங்கொள் பத்தியங்கார் நோய்தானேது, நேர்ந்துதானிப்படியே கொண்டானன்று நேராட்டால் சீனிசமன்சேர்த்துமுண்ணே
(௬௬௬)

உண்ணவேவாதமெங்கே பித்தமெங்கே ஒடுங்காத சூலையெங்கே கபங்களெங்கே, திண்ணமுறும்பட்டையிலே தயிலம்வாங்கிச் செப்பும் வெள்ளுள்ளியண்ட முசுறுமுட்டை, வண்ணமுடன்வகைக்குநாற் கழஞ்சுவீதம் வாங்கியே வசம்புபெருங் காயத்தோடு, நண்ணுநல்ல ஓமமுந்தான் சேர்த்துக்கொண்டு நலமாகமேனுக்கும் பூசியுண்ணே.
(௬௬௭)

உண்டிடவே யதின்மூன்று சன்னிப்பிடரி யுனைவலிப்பு மிசப்புப்புறவீச்சுப்புற்று, கண்டிடாக் கைமுடக்குக் கால்முடக்குக் கனசூலையண்டவாதப் பச்சைவாதம், திண்டிறலார் தேகத்திலுளைவுக்குத்து தீராதகடுப்பெல்லாந் தீருந்தேகம், சுண்டையும்நடுங்கச்செயயுமதிற்சார்வந்தால் சத்தற்றோருலகத்தி லுண்டோசொல்லே.

## சூதகச்செந்தூரம்.

சொல்லவேசூதகசெந் தூரங்கேளு சொற்பெரிய வாதமொடு வயித்தியமாகும், வெல்லவேவெண்குன்றி வேரறுமல் வெண்சேவல் பலிகொடுத்துப் பிடுங்கிவந்து, அல்லவேயாதிநா ளெடுப்பாய்நீயும், அயச்சட்டி தன்னில்வொரு பலமாஞ்சூதம், மெல்லவேவிட்டடுப்பிலேற்றிநீயும் விறகென்றபூவரசு விறகால்மாட்டே, (௬௭௧)

மாட்டுவது தீபம்போல்முந்திமுந்தி மறுபடி தான்கமலம்போல்வன்னிமூட்டு, நாட்டுவதுகளியடைக்காய்வெள்ளிலையும் நன்றாகக் கர்ப்பூரச்சுண்ணமூட்டி, மாட்டியே யருந்தியந்தப் பக்கத்தெல்லாம், வாய்மாறுமென்றமிழ்ந்து சூதந்தன்னில், காட்டியேவெண்குன்றி நீரால்தேய்த்துக் கனிந்தாட்டித் தாம்பூலநீரால்கிண்டே. ()

கிண்டுவதுகடிகையொரு மூன்றுபத்துக் கிண்டிடவேமஞ்சணிறம்வெள்ளையாகும். கொண்டுபார் மாதளம்பூப்போல்செந்தூர மிரு

க்குமடாரசவாதம் கைக்குள்ளாச்சு, தண்டுமிண்டுபண்ணாதே பணி விடைகொள் சண்டாளரோகமெல்லாந் தகர்ந்தேயோடும், கண்டு பார்மண்டலந்தான் கொண்டாயாணு காயசித்திதேகத்திற் காணுங் காணே. (சூளக)

காணவேவெள்ளிசெம்பி லீந்தாயானல் கைகண்டகனகமாற் றேன்பதாகும், காணுதுமிகச்சொலிக்கும் புடத்துக்கேற்கும் நல மானவங்கத்தைச் சண்ணும்சண்ணும், பூணுதேபொருடன்னே இச் சிக்காதே புகழானநிருவாணி சோதிப்பான்பார், ஆணவமாயலேயா தேநரகந்தன்னி லழுந்துவா னுண்மைசொல்லிப் போட்டேன்பாரே.

## இரசமணி.

போட்டேனென்றுசொல்லாமலகன்றுநின்று புகழானரசமணி தான் புகலக்கேளு, தேட்டேநீராமத்தை வாங்குதன்னிச் சிறப்பா கப்பிடித்துவொரு பாண்டத்திட்டு, நீட்டேமேனிச்சாற்றில் முழு த்திவாயை நீமூடியடுப்பேற்றிக் கனலேமூட்டி, ஆட்டேயுள்ளிருக் கஞ்சா ரெல்லாஞ்சுண்டி யடியினிற்கும்பதமறிந் தெடுத்திடாயே.

எடுத்துமேரவிதனி லுலர்த்திநன்று யிடித்துவால் கல்லூரற் கற்பாரைகொண்டு, அடுத்துமேசமூலமாய் வஸ்திரகாயம் ஆக்கியே புதுகலசத்திட்டுமூடு, கடுத்துமே தருவொன்று ஆதளேயின்முத் தைக் களித்திடித்த நாலுபடிக்கொப்பா, மடுத்துமேகால்படிகல் லுப்புச்சேர்த்து வடித்திடுவாய் எண்ணெய்ரசம் வகைதான்கேளே.

வகையென்னபுதுச்சட்டி நீர்தான்கேளு வைத்திட்ட எண்ணே யது படிகால்வாரு, வகையென்ன வதின்மேல்தே வாங்குத்தூள் தான் மைந்தனே எண்ணெயள வதின்மேற்போடு, வகையுடனே சுத்திசெய்தரசந்தன்னையே வார்த்திடுவாய்பலமொன்று அதின்மே லன்றி, வகையென்னமுன்போலப் பொடியைப்போட்டு வாகான எண்ணெய்முன்போ லதன்மேல்வாரே. (சூளரு)

வார்த்துமேமேல்மூடிச் சீலேசெய்து வாகாகவடுப்பேற்றித் தீப ம்போல, பார்த்துமேகடிகையொரு மூன்றுபத்து பக்குவமாயெடு த்தாற வைத்தருதம், நீத்துசிலவட்டுப்போல் கட்டிநிற்கும் நிலேயா கச்சொல்லிவிட்டேன் வெகுசுருக்கு, காத்துமேசாரணேயால் வாயி லிட்டால் கனநோய்போ மிரும்பில்வந்தால் கனகமாமே. (சூளசு)

கனகமேயாவதற்கு விவரங்கேளு கல்லுப்பு அரைவாகச்சுட்டுக்கிட்டு, கனகமாங்கொட்டையென்ற கல்லுக்குங்கி காய்ந்து*புரையூரல்போலிருக்குந் தூள்தான், கனகமென்றவுப்பதின்மேல் தூளைப்போட்டுக்கட்டியதோர் சூதந்தை யதின்மேலிட்டு, கனகமாமேலுமந்தத் தூளைமூடிக் கல்லுப்பு மேல்நிறைத்து அவைத்துமூடே. ()

* புகையூரல்-ஒட்டறை.

மூட்டியே சீலைசெய்து அடுப்பிலேற்றி மூன்றுபத்துக் கடிகைதான் தீபவன்னி, ஆட்டியே யெடுத்தாறி யெடுசெந்தூர மருணன்போ னிற்குநவ லோகம்பொன்னும், மாட்டியேபுடத்துக்கு நிலைக்கும்பாரு வடுகனுக்கும் ஆத்தாட்கும் பூசைபண்ணு, சாட்டியே யுண்ணநோயெல்லாந்தீரும், சங்கற்ப விகற்பமென்ற சட்டைபோக்கே.

போக்கான வுலகத்தோ ருன்னைக்கண்டால் போற்றியடிவணங்கவொரு புதுமைகேளு, போக்கான இந்திரமாங்கோபப்பூச்சிபுகல்வல்லூறின்கண்ணுந் தலையான்மெய்யும், போக்கான திவைசமணம்கல்வத்திட்டுப் புகட்டியரைத்துமினியா ணுதங்கூட்டி, தாக்கான பசிபிடித்துத் தீமூட்டிச் சாரித்துர்கருச்சீலை தன்னிலூட்டே. ()

ஊட்டியே யுலர்த்திநன்றாய்க் கபாலவோட்டி லூறதிபெறச்சிற்றேரண்டத் தெண்ணெய் விட்டு, நாட்டியே யானைக்கண் சட்டிமூடி நலமானபாங்கினத்தில் விட்டம்போட்டு, காட்டியேயந்தரபாயுரிதான்ரெண்டு கட்டிவொருவுறி மீதிருந்து, மாட்டியின்னமொருபரியிற்கட்டிவைத்து மைந்தனேமையெரித்து வாங்கியோதே. ()

ஓதடாவசியமுதல்காரணத்தை உற்றமைக்கைதேறச் சட்டியோடே, தீதில்லாதெடுத்துநடுச் சாமவேளை சென்றிடுநீ மயானத்திற்சுடலைசாம்பல், கோதிலாபசப்பியறுகோணமிட்டுக்குடிலமில்லா வறுகோணச் சடாட்சரம்போட்டு, வாதில்லாவதின்மேல்முப் பலியுமீந்து மாதீபதூபமொடு உருத்திரனையோதே. (கூஅக)

உருத்திரனை லட்சமுரு வோதித்தீரு நுணுக்கமாயுபசாரத்தோடேகேளு, பத்திரமாய்மையெடுத்துச் சிமிழில்வைத்துப்பரிவாகவறுகோணமிட்டுச்சாம்பல்-வித்திரித்துமுச்சந்தி வேம்பின்மேவும் வெண்காக்கைக்கூட்டை வுயிரோடேகொண்டு-முத்திரமாயிருகண்ணிக்கழுதைலத்திமுன்சொன்ன சாம்பல்வைத்துச்சுட்டுநீற்றே. ()

நீற்றியேசுடலையிட்ட சாம்பலோடு நேசித்து எடுத்ததனை வேறேவைத்து, சேர்த்ததொருமையதனைத் திலதந்தீட்டச்செப்பிடுநீ

தம்பனத்தில் வசியமூலம், பார்த்திடவே யரசர்களு மூலகுள்ளோ ரும் பயமறியா மிருகமுதல் சர்ப்பங்கூட, காத்துமேகைகட்டி வா ய்புதைத்து காலடியில் வீழ்ந்திறைஞ்சி நீளும்பாரே. (சுஅங)

பார்த்திட்ட பகையாளி சத்திராதி பலகாலுமுனக்கிடரேசெ ய்வானாகில், சேர்த்திட்டவென்மேலே குற்றமில்லைதெய்வமேசாட்சி யெனச்சொல்லிச் சாம்பல், வாய்த்திட்ட அவன்வீட்டில் வாயுமூ லைவந்து நின்றுச் சாடனத்தை யோதிப்போடு, காத்திட்ட சாமப ல்தான் வீட்டின்மேலே காட்டிடவேகாகம்போல்பறப்பான்தானே.

பறப்பானேயவனில்லம் பற்றிவேகும் பதிவிட்டு மறுதேசம்பு க்கிப்போவான், பிறப்பானே கழுதையென்ற ஜன்மமாகப் பெரும் பூடுபுல்லுமுதல் முளையாதப்பா மறைப்பானஎதிராளியுன்னைக்கொ ல்லவந்தானேயாமாகி லவனைக்கொன்று, சிறப்பாக எதிராளி மார ணந்தானென்று செப்புகிறேன் முப்பிழைதான் பொறுத்துச் செய்யே. (சுஅரு)

மாரணம்.

செய்யவேதனித்தமண்டை வவ்வாலோடு சிக்காவிட்டால்கழு கினிட மண்டையோடு, துய்யவேதலைமைந் ஞேடுமூன்றில்துடியாக வொன்றுவாங்கிகொண்டுமைந்தா, செய்யவேயுடற்கரு சக்கரத்தை க்கீறிச்செய்திடுவாயாள்ரூபம் போலச்செய்து எய்யவேமுன்னகரு வைத்தொட்டு எதிரிக்குக் கூட்டியைங்காயம்பூசே. (சுஅசு)

பூசியேபுதவார நாள்தானப்பா புக்கிரவில்நடுச்சாம மயானமே கிவீசிடயேகருவதனைப் பூசிமுன்னே விதமாமாரணத்தைக்கால்மா திப்போடு, தேசுபெற அவன்பெயர்நட்சத்திரம்பார்த்துத்திறமரம ருக்காரைமுள்ளு வாங்கியேதான், ஆசுசெற உயிர்நிலைபார்த்தைங் காயத்தை அன்றணிந்து எருக்கரளி நிம்பெண்ணெயே. (சுஅஎ)

எண்ணெயொடு சமித்தோம்பு வேப்பெண்ணெ யிட்டோமந் தான்செய்து மாரணமோது, நன்றாகக் கடையிலின்னான் சியமோதி நலமாகச்சரக்கொன்று தீயிற்போடு, திண்ணமுடன் சணத்திலே மாரணஞ்செய்வாய் திருகுமுதல்பழிபாவஞ் செய்யொண்ணாது, வண் ணமுடனுனைவருத்தி னாலேநீயும் மற்றவனைமாரணஞ்செய் சாகு வானே. (சுஅஅ)

சாகாதேதலைதெறிக்கும் விவரங்கேளு சாம்பலென்ற சுடுகாட் டுச் சாம்பல்நிற்கும், சாகாதசுடலையா வாரைவேரைத் தானறிந்து வெள்ளியன்று காப்புகட்டி, சாகாதேமறுவெள்ளி வாரந்தன்னில்

தான்பொங்கல்பலியிட்டு நிருவாணமாய், சாகாதேதேசிகனே மாரணாந்தன்னைச் சதிருடனேலட்சமுரு மாருமோதே. (கூஅகூ)

ஓதியேவேரரு தெடுத்துவந்து வுற்றதொருகுளிசத்தி லடைத்துமூடு, வாதாடபேசியே யடைத்துவைத்த மச்சமுதிர்க்கள்ளர்கள் தலைகள்பூட்டுஞ், சேதமின்றிகாட்டிடவே திறக்கும்பாரு சிவசிவாயிக்குளிச மெடுத்துநீயும், கோதின்றிப்பத்திரமா யெடுத்துப் போற்று கூறுவேனம்மூலி இலையைவாங்கே. (கூகூ0)

கருடன்குஞ்சுவித்தை.

வாங்கியேமந்திரத்தி னாலேமைந்தா மகத்தானயிலைகசக்கி விலங்காணிதன்னில், ஒங்கியேபிழிந்திடவே தெறிக்குமின்னம் உரைக்கின்றேன்கருடனிட குஞ்சுபார்த்து, ஓங்கியதன்கால்விலங்கிட் டப்புறம்போனால் உள்ளபெருக்கருடன்வந்து மூலிகொண்டு, தாங்கியேயெடுத்துவந்து கூட்டில்வைக்க தலைதெறிக்குங் குஞ்செல்லாம் பறந்துபோமே. (கூகூக)

பறந்துபோமக்கூண்டை யெடுத்துவந்து பாங்கானதணல்மூட்டிப் பார்த்தாயானால், சிறந்ததொரு மூலிகைதான் வேகாதிற்கும் சிவசிவாவெடுத்ததனைப் பதனம்பண்ணு, கறந்திட்டப் பால்போல வெளியாய்ச் சொன்னேன் காட்டாதேதலைதெறிக்கு மின்னமொன்று, மலந்திடாதாதிவாபுங் தன்னையோர்ந்து மைந்தனேகல்லெலி யின்னலைதானேக்கே. (கூகூஉ)

கல்லெலிச்செய்கை

வளைநோக்கியாதிரா ளிரவுதன்னில் மைந்தனேயவ்விடத்திற் சென்றேநீதான், வளைதேடிதீபத்தை யேற்றிவைத்து மறைந்திருக்கக்கல்லெலிதான் மேய்ச்சல்தேடி, வளைநோக்கிப் படுக்கையிலேயிருக்குமூலி வாயிலேகவ்விக்கொண் டோடும்போது, வளைமூடியடைத்திருந்த கற்களெல்லாம் மைந்தனே திறந்துமே லோடிப்போமே. (கூகூங)

போமென்ற கல்லெலிதான் வெளியில்வந்து புகழ்பெரியவோர்தனைக் கக்கிவைக்கும், ஆமென்றயிரைதேடி மேயப்போகும் அச்சமயந்தீபத்தை வெளியிற்காட்டி, தாமென்றவதையெடுத்துச் சாம்பிராணியின் தனித்தூபங்காட்டிவே ரதனைக்கொண்டு, காமென்ற தாள்பூட்டுங் கதவின்முன்னே காட்டினால் தாள்திறக்கும் புதுமை தானே. (கூகூச)

## இரசக்குளிகை.

புதுமையாஞ் சோதியென்ற மூலிவாங்கி பொடியாக்கிகந்த பொடி கலந்துநேராய், மதுமையாமொருகழஞ்சு சூதங்கூட்டி மத்திக்கவண்டையாம் பூட்டிலூத, நதுமையாம்பொடியெல்லாந் தெறித்துவீழும் கனசூதவெள்ளிவித்தை கருதிப்பாரு, புதுமையாம்பீங்கானில் சூதமிட்டுப் புகட்டிவாயோரிதத்தா மரையின்சாறே. ()

## இரசவெள்ளி.

சாறதனைவார்த்துரச மூழ்கவிட்டு தானதிலேயிந்திரமாங்கோபப்பூச்சி, வாறுவகதிற்போட்டு மூடிவைத்து மற்றுநாளச்சாற்றிலுலேமூடு, கூறுகிறேன்ரசந்திரண்டு குழம்பாய்நிற்கும் கூர்ந்ததனைக்குகையிட்டு காரம்விட்டு, வீறுடனேயுருக்கிப்பார் வெள்ளியாகும் வெள்ளையாகச்சொல்லினேன் வித்தையாமே. (௫௯௫)

## நாகரசகுரு.

வித்தையென்னநாகரச குருதானென்று விளம்புகிறேன்வெகுதூரமெட்டியோடும், வித்தையென்ன நாதாக்கள் செய்யுமார்க்கம் விள்ளாதேயொருவருக்கு மடக்கியாடு, வித்தையாம் சிறுகன்னி நாகம்வாங்கி விதமான விலுப்பைநெய்ச் சாரம்போட்டு, சத்தியமாம் நாகத்தைக் குகையிலிட்டுச் சார்வாகவேமூதர முருக்கிச்சாயே. (௫௯௭)

சாய்க்கவேசத்தியாஞ் சிறுகண்ணுகம் தானதிலே பணம்நாலுதூக்கிக்கொண்டு, காய்க்கவே குருக்கனிட சாற்றிப்பத்து கசங்காமலுருக்கவே கட்டிப்போகும், வாய்க்கவேதேசிநீர் வெள்ளெருக்குவகைபலந்தான் சாரம்கால் தோடாமூலி, ஏய்க்கவேயச் சாற்றிலிட்டடுப்பிலேற்றி யெரிக்கவற்றும் குழம்பாகும் பதத்தில்வாங்கே. ()

வாங்கியேகுகைதனிலே கீழ்மேலிட்டு வளமானநாகத்தை நடுவேவைத்து, வாங்கியேசீலைசெய்து கெசப்புடந்தான் மகிழ்ந்திட்டேயெடுக்கவது கட்டிநிற்கும், வாங்கியே நாகமணி குகையிலிட்டு வைத்துருக்க நாலிலொன்றுசூதங்கந்தி, ஓங்கியேலிங்கம்வெண்காரம்விட்டு உருக்கவுற்பனலோகப் பொடியைக்கேளே. (௫௯௯)

கேளப்பாபலமொன்று சுத்திசெய்து கெடியான பழச்சாற்றுலரைத்துநன்றாய், கேளப்பாமணிதனக்கு அடங்கமூட்டிக் குகையிலிட்டுமேல்மூடி யூதிவாங்கி, வாளப்பாஉருகியொருமணிதானிற்கும்,

வளமாக வதையெடுத்துக் கல்வதிட்டு, கேளப்பா மல்லியின் சாற்றாலேயாட்டிக் குப்பிவைத்து வாலுகையு லெறித்திடாயே. (எ00)

எரித்திட்டநாற்சாம முந்திமாட்டி யெடுக்கவே செந்தூரமருணன்போலாம், தெரித்திடவேயாத்தாட்கும் வடுகனுக்கும் சிந்தித்துநவலோக வாயிரத்தொன்றில், பிரித்தீயவதிலாறுமாத்துங்காணும்பிரபலமாய் ரசவாதஞ்சித்தித்தென்று, பரிந்திட்ட வகங்கொள்ளாதிருந்தேயுண்ணு பளபளக்குமுடம்பெல்லாம் பாலையாமே. ()

அயச்செம்புசெந்தூரம்.

பாலையாம் சருவநோ யெல்லாந்தீரும் பாவிகளுக்கிந் நூலைக் காட்டவேண்டாம், ஆலையமாய்ச்செம்புசொல்லக்கேளு, அரப்பொடி தான்பலமொன் றுசுத்திசெய்து, வாலையாங்கலசத்தில் கோவைசாற்றைவார்த்துமூன் றுநாள்வைக்கச்சா றுசுண்டும், வேலையாம்பதம்பார்த்துக்குழம்போடொக்கவிதமாகவழித்துஒருகுகையிலூட்டே. ()

ஊட்டியேகாரமிட்டுக் குகைபழுக்கமீட்டு உருக்கியேதானெடுக்கவயச்செம்பாகும், ஏட்டிடவே அயச்செம்பு சுயமாம்பாருகடியதொரு*துய்யானிலீராக, நாட்டமுடன் மாற்றைந்து காணுங்காணும், நலமானவித்தையிது எளிதாம்பாரு, ஊட்டிடவே யொளித்தார்கள்வாதவித்தைவுலகார்த்தோக் கிரும்புவெகு லேசாம்பாரே.()

* துய்யான் - வெள்ளி.

வெகுவாகமுந்தியிரும்பாடிப்பாரு மிகவாகநினைத்ததெல்லாம் பின்னேதேறு, லகுவாகயின்னமொரு அயச்செம்புகேள் நவிலுகிறேன் அயத்தகடு லேசாய்த்தட்டி, சுகமாக *வாடியிலை யரைத்துமேலேபூசி ஐந்தாறுகடிகைசென்று யெருவைம்பத்து, சகமாகப் புடம்போட் டெடுத்துப்பார்த்து, சார்வாகமும்முறையப் படிதான் போடே. (எ0௪)

* வாடி - தொட்டால்வாடி.

போட்டெடுக்கச் செம்பாகுங் காரம்போட்டுப் புரிந்துருக்கப் பொன்போலா மந்தச்செம்பு, தேட்டவே அரப்பொடியி லிந்திரகோபம் சேர்த்துருக்கச் செம்பாகும்வேதையாகும், ஆட்டவேகற்றாமரைக்கிழங்கிறேடு, அரைப்பொடியுஞ் சேர்த்தரைத்துருக்கச் செம்பாம், காட்டவேகெம்பினிலே சூதங்கந்தி தங்கமுமிட்டுருக்கியே கல்வத்தாட்டே. (எ0௫)

ஆட்டிவதுமல்லிகையின் சாற்றாலப்பா அரைத்ததனைப்பொடி
யாக்கிக் கடுப்பிக்கேற்றி மாட்டிடுவாய்வாலுகையின் மேலுவைத்து
மறவாமல்முத்தீபன் னிரண்டுஜாமம், மூட்டியேமகிழ்ந்திருக்க வரு
ணன்போல முயங்குமடாசெந்தூர நவலோகங்கள், தீட்டவேபத்
தரைமாற் றுகுஞ்சொன்னேம் தினம்பணந்தா னுள்ளுக்குக்கொ
ண்டுதேறே. (எ0சு)

தேறவேதேகமது இரும்பைப்போலாம் செத்தவர்களில்லையப்
பாகற்பகாலம், ஆறவேநோயெல்லா மகன்றுபோகும் அப்பனேபா
ண்டுகாமாலைசோகை, மீறிவரும்பித்தநாற் பதுவும்போகும் வீ‌ன
ல்லவாதருமமாம் வயித்தியம்பாரு, கூறுகிறேன்வாதிசெய்யும் வயித்
தியமீது கூறுகெட்டலையாதேநீ குறித்துப்பாரே. (எ0எ)

## இலிங்கச்செந்தூரம்.

பாரப்பாவிலிங்கச்செந் தூரமொன்று பாடுகிறேன்லிங்கமொ
ருபலந்தான்வாங்கி, நேரப்பாபழச்சாற்றிற் சுத்திசெய்து நேர்பாக
வயக்கரண்டிக் குள்ளேவைத்து, ஆறப்பாவடுப்பேற்றிக் கொம்புத்
தேனை அழகாக ஒருபடிதான் சுருக்குத்தாக்கு, பாரப்பாவிலிங்க
மது கட்டிப்போகும் பச்சரிசிமூலிகைதா னரைத்துப்பூட்டே. ()

பூட்டியேயுலர்த்திநன்றாய்ச் சீலைசெய்து பொலிவாகக் காடை
மிதம்புடைத்துப்போடு, ஆட்டியேஆறவிட் டெடுத்துமுன்போல்
அம்மருந்து தொதிந்துமேன் சீலைசெய்து, காட்டியேயிரண்டெரு
வில் புடத்தைப்போடு கனலறி எடுத்துமுன்போல் மருந்தைப்பூசி,
முட்டியேமுன்றெருவில் புடத்தைப்போட்டு முசியாமலாறிமுன்
மருந்தைபூசே. (எ0கூ)

பூசியேபுடத்துக்கோர் வரட்டியேற்றிப் புடமென்னநவபுடந்
தான் போட்டுதீரு, மாசியேகட்டியது செந்தூரமாகும் மாட்டிட
வேநவலோக மாற்றெட்டாகும், ஆகியேவெகுதூர மெட்டியோடு
அறைகிறே னதின்மேல்பரித் தகடுசுற்றிப், பாசியேவெடியுப்புச்
செயநீர்தோய்த்து பரிவாகச்சூடனிட நியால்வாட்டே. (எக0)

வாட்டிடவேயெழுதாரந்தோய்ந்துவாட்ட வளமானபரியுள்ளே
வாங்கும்பாரு, நீட்டிடவேபரியோடு லிங்கமொன்றாய் ரேசிக்கமய
னம்போல் செந்தூரமாகும், ஊட்டிடவேழெழுகாகும் நூற்றுக்கொ
ன்று வுகந்தியநவலோகம் பத்துமாற்று, தாட்டிகமாய் நான்திறவா
னென்றேபேசு சாகாதேதினம்பணந்தா னுண்டுதேறே. (களக)

## கற்பமூலியோகமார்க்கம்.

உண்டிடவேசருவநோ யெல்லாந்தீரும்உற்றுநின்றதிரோதாயி மாய்கைதள்ளு, உண்டிடவேசரமாலிருக்கவென்றால் ஓகோகோவா சிகொண்டு பேலேயேறு, உண்டிடவேசரிதையிலே யொருபோது ண்ணு வுரைத்தபின்பு கிரியையிலேவுப்புத்தள்ளு, உண்டவே கரு ங்குருவையரிசியப்பா வொருபோது ஆவின்பால்பொங்கியுண்ணே.

பொங்கியேபஞ்சகற்பந் தேய்த்துமூழ்கு புகைகள்ளுஞ்சாரா யமற்றென்றுகா, பொக்கியேகற்பங்க ளுண்ணும்போதுபுகலுகிறே னிம்முறைதா னறியவேண்டும், பொங்கியேபுலியுப்புட் பெண்ணுந் தள்ளு போற்றரியகற்பங்கட் குறுதியாகும், பொங்கியேவாதமு றைஞானமார்க்கம் புகலாதஅஞ்சனமும் வசியங்காணே. (எகங)

வசியமொடுதத்துவங்கள் தொண்ணூற்றாறும் மகத்தானசரக் குவகை முறைதப்பாமல், வசியமாமக்கரஞ்சக் கரமுநன்றாய் மாந் திரியக்கருக்குருவும் வயித்தியம்வாதம், வசியமாய்ப் பாடிவைத்தே னெட்டுக்காண்டம், மைந்தனேயதைக்குறிக்கி யெழுநூறாக, வசிய மாய் வெளிசெய்தே னிந்நூலைநீ வழுங்காமல் கைபாக மறிந்து செய்யே. (எகச)

செய்யவேயாசானையடுத்துக்காரு செப்பரியபலநூலுந் தெளி ந்துபாரு, மெய்யாகவாதமொடு வயித்தியஞ்சொன்னேன் வேதா ந்தசிரோமணிதாள் வேண்டிப்பாரு, சையானவென்னுடைய சாஸ் திரம்பாரு சவர்க்காரவரலைவர்க்க முதலாய்ச்சொன்னேன், பைய வேயடிமுடியு மண்டபிண்டம் பாடிவைத்தேன் முப்பூவின் பாகந் தானே. (எகரு)

பாகமாமஷ்டாங்க வாசியோகம் பாடினேன்குருநிலையின்ஞான மார்க்கம், ஆகமாந்தயிலங்கள் லேகியங்கற்பம் அடலானபற்பங் கள் கியாழமூலம், வ[illegible]ானவசியமஞ் சனமுந்திலதம் மைந்தனே யாள்மறைப்பு மட்டகன்மம், பாகமாங்கிடையாத பொருள்களெல் லாம் பகுத்தீர்ந்தேன் சகலசித்துங் கைக்குள்ளாமே. (எகசு)

கைக்குள்ளாஞ் சித்தர்மெய்க்குஞ் சித்தனுவாய் காசினியிலெ ன்னைவந்து கண்டுகொள்வாய், கைக்குள்ளாங் கேட்டதெல்லாந் தந்தேயுன்னைக் கன்னூன்றன் சிஷனென்றே யெண்ணிக்கொள்வே ன், கைக்குள்ளாம் குளிகைசித்தி கெவுனசித்தி காயசித்தியோக சித்தி காட்சிபெற்று, கைக்குள்ளார்நெல்லியங் கனிபோல்நின்ற காரணமாங்குருபதத்தைக் காணுவாயே. (எகஎ)

## உருக்கினங்களுக்குக்குடோரி.

காணுவாய்ரசவையுருக் கினத்துக்கெல்லாம் கறவெட்டிநீல மாங் கனலிட்டாட, காணவேயுருக்கினத்துக் காதியான கருவொன்றுகுடோரியொன்று கருதிக்கேளு, காணவேதாளகமோர் பலந்தானு கரையானவெண்காரம் பலந்தானென்று, காணவேகருவாங்கியண்டத்தோடு சதுப்பானகுக்கிலொடு சீனமாமே. (எகஅ)

குக்கிலொடுசீலமுடனுருக்குத்தொட்டி குறையாதேவகைக்கு ஒருபலந்தானென்று, செய்க்கவேகலசத்தில் வர்க்கமேபாலும் சுப்பிரீர்னார்சாமமரைத்துக்கட்டி, உய்க்கவேவில்லைதட்டி யுலர்த்திநன்போடிட்டு மேலோடுமூடிக்கூடும், பைக்கவே மும்முறைதான் புடத்தைப்போடு பகரரியவுருக்கினத்துக் காதியாமே. (எககூ)

ஆதியாம் யான்சொன்ன விந்தநூலை அவனியுள்ளவாதிமகன் வபித்தியனென்றால், கோதில்லாக்கைபாகஞ் செய்பாகங்கள் குறையாமற்செய்துபிணி யனைத்துந்தீர்ப்பான், தீதுற்றக்கசடர்களோவறியார்செய்யார் சிவகுருவினணைகண்டு ருண்மையாக, சோதியெனும்போகரிஷி மகிழ்வுகூர்ந்து சொல்லிவைத்தவெழுநூறு கவியுமுற்றே. (எஉ0)

**போகரெழுநூறு முற்றிற்று.**